கல்வி கரையில

NIKOTAGALA TAMIL MAHA VIDYALAYAM KOTAGALA

# கவின் பேழை



## வருடாந்த சஞ்சிகை - 2016

மமா/நு/கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம்

கொட்டகலை




DEVI JEWELLERS

*A different kind of jeweller*

REMEMBER THAT 18 CARAT GOLD CONTAINS 75% GOLD AND 25% OTHER METALS MOST COMMONLY COPPER OR SILVER.

Buyers & Sellers of Bullion
(Gold, Silver, Platinum & Palldium)
Diamonds, Gems & Cubic Zirconia

Devi Jewellers (Pvt) Ltd
131 Sea street, Colombo 11 Sri Lanka
T +94 112 395001-5 F +94 112 327101
info@devijewellers.lk www.devijewellers.lk

# கவின் பேழை



## வருடாந்த சஞ்சிகை - 2016

மமா /நு /கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம்

கொட்டகலை

தலைப்பு : கவின் பேழை
பதிப்பு : மார்கழி. 04. 2016
நூலாசிரியர் : நூலாக்க குழு 2016
வெளியீடு : மமா/நு/கொட்டகலை த.ம.வி
அச்சுப்பதிப்பு : ABC Communication
No, 143 Main street Kotagala
051 2244101

Title : Kavin Pezhai
Edition : December 4, 2016
Published By : Magazine Committee
Publisher : CP/N/Kotagala T.M.V
Printed By : ABC Communication
No, 143 Main street, Kotagala
051 2244101



# பாடசாலை கீதம்

வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்கவே! வளமுடனே பல்லாண்டு
காலம் வாழ்க வாழ்கவே! எழில் மிகுந்த
மலையகத்தின் எல்லையில்லா புகழுடனே
கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம்
வாழ்க வாழ்கவே!
வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்கவே! II
சாதி சமய பேதமின்றி சமத்துவமாய் வாழ்ந்திடவே
சேர்ந்து ஒனறாய் கூடி நாங்கள் சிறுமைதனை
நீக்கிடுவோம்! குறையில்லாத கல்விதனை
கருத்துடன் நாம் பயின்றிடுவோம்!
வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்கவே! II
அறிவு வாய்மை நல்லொழுக்கம் உறுதிகொண்ட
நெஞ்சுடனே! பல்கலையும் பல்துறையும்
பழுதறவே கற்றிடுவோம்! நிறையுடைமை
கொண்ட எங்கள் கலையகத்தை
வளர்த்திடுவோம்!
வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்கவே! II

கல்வி கரையில

N/KOTAGALA TAMIL MAHA VIDYALAYAM KOTAGALA

## தூரநோக்கு

விளைத்திறன் மிக்க பாடசாலை ஊடாக
தேர்ச்சி மிக்க சமூகத்தை
உருவாக்குவோம்.

## பணிக்கூற்று

எல்லா மாணவர்களையும் எண்ணறிவு
எழுத்தறிவு மிக்கவர் ஆக்குதல்.
உயர்ந்த பாரம்பரியங்களையும் பழக்க
வழக்கங்களையும் பேணுதல்.
எதிர்கால சவால்களை எதிர்க்கொள்ளல்
பல்திறன் ஆளுமையுள்ள மாணவர்களை
உருவாக்குதல்



## வாழ்த்துரை

பாடசாலை பரிசளிப்பு விழாவை வெற்றிகரமாக கொண்டாட தயாராகி வருகின்ற கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். கல்விச் செயற்பாடுகளிலே வெற்றிகரமாக தொழிற்பட்டு வருகின்ற பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரோடு பிள்ளைகளின் கற்றலுக்கு ஆதரவளித்து வருகின்ற பெற்றோர் மற்றும் பாடசாலையின் பழைய மாணவர், நலன் விரும்பிகள் என அனைத்து தரப்பினரையும் மனதார வாழ்த்திப் பாராட்டுகின்றேன்.
அபிவிருத்திக்கு பிரதான உந்துதலாக அமைவதே கல்வியாகும். அதுவே அதனது பிரதான வகிபாகமும் ஆகும். மேலும் கல்வியினால் மானுட வாழ்க்கையை மாற்றமுறச் செய்யமுடியும். ஆதலால் வாழ்க்கை நீடித்த கற்றலும் அவசியமானதாகின்றது. பாடசாலைகளிலே நடைபெற்று வருகின்ற கற்றல்,கற்பித்தல் செயற்பாடுகள் ஆரோக்கியமானதாக அமையும்போது கல்வி கற்பித்த ஆசிரியர் வெற்றி பெறுகின்றார். கல்வி கற்ற மாணவர் வெற்றி பெறுகின்றார். இதனால் பாடசாலைகளின் வினைத்திறனும், விளைத்திறனும் மேம்படுகின்றன. சமூகமும் ஆரோக்கியமாக, நிலைபேறுடைய சமூக அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்க வழியேற்படுகின்றது. இதுவே நாம் அனைவரும் வேண்டி நிற்கின்ற சமூகமாற்றமும் ஆகும். எனவே எவரொருவரும் கல்வி பெறுவதிலிருந்து விடுபட்டு விடக்கூடாது என்பதில் நாம் ஒவ்வொருவரும் அக்கறை செலுத்த வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம்.

மேலும், வறுமையை ஒழிப்பதற்கும், முழு அளவில் வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கும், வழி மூலமாக அமைந்துள்ள கல்வியை சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் வாழ்க்கை நீடித்ததான கற்றலுக்கூடாகப் பெற்றுக்கொள்ள முனைய வேண்டுமென இச்சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்ளவிரும்புகின்றேன்.

உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்கள்

பாடசாலை பரிசளிப்புவிழா சிறக்க வாழ்த்துக்கள்

ஆறுமுகன் தொண்டமான்,
பாராளுமன்ற உறுப்பினர்,
நுவரெலியா மாவட்டம்.



# வாழ்த்துச் செய்தி

கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெறுகின்ற பரிசளிப்பு மற்றும் பாராட்டு விழாவினையொட்டி வெளியிடப்படுகின்ற வருடாந்த சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆக்கமும், ஊக்கமும் நிறைந்த மனித சமுதாயத்தை உருவாக்குவதில் பாடசாலைகள் முக்கிய இடத்தினை பெறுகின்றன. அந்தவகையில் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம் நுவரெலியா மாவட்டத்திலே கல்விப் பணியாற்றுகின்ற பாடசாலைகளில் மிக முக்கிய இடத்தினை வகிக்கின்றது. பேச்சினை மெருகூட்ட தெளிவும், பாட்டினை மெருகூட்ட இசையும் எவ்வளவு முக்கியமோ அதுபோன்று மனிதனை மெருகூட்ட பாராட்டுகளும் அத்தியாவசியமாகின்றன. பாராட்டப்படுகின்ற, புகழப்படுகின்ற மனிதர்கள் வெற்றியின் உச்சங்களை வெகுவிரைவில் எட்டிவிடுகின்றனர்.

பாடசாலை வாழ்க்கையிலே மாணவர்கள், தமது அயராத முயற்சியாலும், ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும், சிறந்த வழிகாட்டல்களினாலும், கல்வித் துறையிலும், கலைத்துறையிலும், விளையாட்டுத்துறையிலும் பல்வேறு அனுபவங்களைப் பெற்று சாதனைகளை செய்து வெற்றிகளைத் தொடுக்கின்றனர். அவர்கள் பாராட்டப்படுகின்ற ஒவ்வொரு வேளையிலும் அவர்களின் திறன்கள் மென்மேலும் வளர வழியேற்படுகின்றது. அவ்வாறானதொரு உயரிய செயற்பாட்டினை மேற்கொள்ளும் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர்,ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினர் வாழ்த்தப்படவேண்டியவர்களே.

இவ்விழா சிறப்புறவும், அதன் நோக்கங்கள் நிறைவேறவும் இவ் வித்தியாலயத்தின் கல்விப் பணி மென்மேலும் தொடரவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துரைப்பதில் அகமகிழ்கின்றேன்.

எம். ராமேஸ்வரன் - மாகாண அமைச்சர்
மத்திய மாகாண விவசாய, சிறிய நீரப்பாசன, விலங்கு உற்பத்தி
மற்றும் அபிவிருத்தி, கமநல அபிவிருத்தி,
நன்னீர் மீன்பிடி, சுற்றாடல் விவகாரம், இந்துகலாசாரம்



## Message from the Secretary

It is warmest greetings that I look forward to appreciate the effort taken by the Principal and the Staff of Kotagala Tamil Maha Vidyalaya to hold the Annual Prize Giving. At this colourful ceremony the students successful in the various fields will be awarded and felicitated. School system should be a place for the students to excel in their inborn talents through curricular and co-curricular activities. Students those who have performed and achieved well and high will be recognized by the school and the society. This would definitely help to build positive and balanced leadership and enjoyment realizing them their social responsibility. Furthermore it is our utmost duty to contribute to realize the objective of transforming Sri Lanka, to the Knowledge Hub in Asia. Hence, events of this kind would be of much importance in empowering the other students also to perform their best paving the way for them to encourage and motivate themselves to show their best.

Your endeavour is highly appreciated as the Secretary to the Chief Ministry and Ministry of Education.

P. B. Wijeyarathne
Secretary,
Chief Ministry and Ministry of Education
Central Province



# Message from the Provincial Director of Education

I Consider it is a great privilege to issue my message on this event of the Annual Prize Giving of CP/NE/Kotagala Tamil Maha Vidyalaya. I am impressed that, this is a prominent school in the area which conducts numerous co-curricular activities with many innovating projects. Annual prize giving is one of the greatest events in a school calendar. I am so delighted to hear that you are going to conduct it in near future.

As responsible persons in this system of education, we are to impart knowledge, guidance and experience to the students and the teachers for the betterment oftheir future and these events would provide that golden opportunity to mould their personality.

According to my point cif view it is not adequate enough to conduct only learning teaching process in the classroom. There should be a way of evaluation and praise the students which can be a great motivation. This event will encourage the school society including the principal, teachers, parents and the students to show their commitment, dedication, talents and skills.
I wish you all the success for oncoming event and congratulations.

E. P.T.K.Ekanayake,
Provincial Director of Education,
Provincial Department of education,
Kandy



# வாழ்த்துச் செய்தி

1947 தொடக்கம் 1960 வரையான காலப்பகுதியில் கொட்டகலை என்பது இலங்கையின் ஒரு தனித் தேர்தல் தொகுதி. கே.குமாரவேலு (1947 -1952) ஐக்கிய தேசிய கட்சி சார்பிலும் யூ.பி. உனம்பூவே (1952 -1956) மற்றும் ஜே.டி. வீரசேகர (1956-1960) ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பிலும் கொட்டகலை தேர்தல் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார்கள் என அறியக்கூடியதாக இருக்கின்றது.

ஒரு காலத்தில் ஒப்பளவில் எழுச்சி பெற்ற மலையக நகரமாக இருந்த கொட்டகலை பின் இந்திய வம்சாவளியினரின் வாக்குரிமை பறிப்பு மற்றும் தாயகம் திரும்புதல் போன்ற காரணங்களால் சோபை இழந்து போயிருக்கலாம் எனலாம். 1977ம் ஆண்டு கொட்டகலையும் உள்ளடக்கப்பட்ட நுவரெலியா-மஸ்கெலியா எனும் மூன்று அங்கத்தவர்கள் கொண்ட தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டு அதில் சௌமியமூர்த்தி தொண்டைமான் அவர்களும் ஓர் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு அமைச்சரான பின் கொட்டகலைக்கான அங்கீகாரம் மீட்டெடுக்கப்பட்டது.

கொட்டகலை பின் பல்வேறு வகையில் மலையகத்துக்குரிய தலைமைத்துவ அரசியல் அரவணைப்பில் எழுச்சி பயணம் மேற்கொள்ள விளைந்த போது அதற்கான ஓர் அடிப்படை களமாக விளங்கிய பெருமை கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தைச் சாரும். ஜெர்மன் நாட்டு அனுசரணையோடு கட்டிட வளங்களை பெற்று தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளும் மத்திய தர வகுப்பினர்களின் பிள்ளைகளும் ஒரே கூரையின் கீழ் சுமுகமாக கல்வி கற்கும் சூழலையும் உருவாக்கி மலையகத்தின் கவனத்தை ஈர்க்கும் பாடசாலையாக இன்றளவிலும் இயங்கிவருகின்றது.

அவ்வாறான இயக்கத்துக்கு மூலகாரணம் அர்ப்பணிப்போடு செயலாற்றிய பாடசாலை சமூகமும் அதற்கு தோள் கொடுத்த பாடசாலைத் தலைமைகளும் ஆகும். ஆகவே நல்லதொரு சம்பிரதாயத்தை கொண்டிருக்கும் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் உன்னதம் மேம்பட உங்கள் கைகளில் தவழும் இந்த மலரும் வழிவகுக்கும் எனலாம்.
மலர் வெளிவர காரணமாக இருந்த அதிபர் மற்றும் ஆசிரிய குழு மேலும் பங்களித்த அனைவருக்கும் வாழத்துகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எஸ்.முரளிதரன்
கல்வி பணிப்பாளர்
தமிழ் பாடசாலைகள் அபிவிருத்தி பிரிவு
கல்வி அமைச்சு



# வாழ்த்துச் செய்தி

கொட்டகலை தமிழ் மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவினையொட்டி வெளியிடும் இச்சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். மத்திய மாகாணத்திலுள்ள பெருந்தோட்டப் பாடசாலைகளில் மாணவர்களின் கல்வித் தரத்தை அதிகரிக்கும் நோக்கில் செயற்பாடுகளை முன்னெடுக்கும் தனித்துவமான பாடசாலையாக இப்பாடசாலை விளங்குகின்றது. இப்பாடசாலையின் அதிபரின் தலைமைத்துவமும் நிர்வாக முறைமையும வழிகாட்டலும் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டுக்கு பக்கபலமாக இருப்பதுடன் மாணவர்களின் கற்றற்பேறுகளையும் அதிகரிக்க வாய்ப்பாக அமைகிறது.

பெருந்தோட்ட பிரதேச மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு கல்வியே உறுதுணையென பறைசாற்றி நிற்கும் இப்பாடசாலையின் தரம் மேலும் அதிகரிக்கவும் சகல பௌதீக மனித வளங்களும் கிடைக்கப்பெற்று இப்பாடசாலையின் புகழ் நாடளாவிய ரீதியில் பரவ வாழ்த்துகின்றேன்.

திருமதி. மகேஸ்வரி சபாரஞ்சன்
கல்விப் பணிப்பாளர்,
பெருந்தோட்டப் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவு
கல்வி அமைச்சு - இசுருபாய



# வாழ்த்துச் செய்தி

நுவரெலியா கல்வி வலய கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம் தனது வருடாந்த பரிசளிப்பு விழாவை முன்னிட்டு வெளியிடும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

சாதித்தவர்கள் பாராட்டப்பட வேண்டும். பாராட்டு அவர்களை மென்மேலும் உயர் நிலைக்கு இட்டுச் செல்லும். சாதிக்கத் தவறியவர்களை சாதிக்கத் தூண்டும். எனவே பாடசாலைகள் ஒவ்வொரு வருடமும் மாணவர்களின் சாதனைகளை பாராட்டு முகமாக பரிசளிப்பு விழாவினை நடாத்த வேண்டியது அவசியமாகும்.

அந்த வகையில் இக்கல்லூரி தவறாது மாணவர்களை ஊக்குவித்து வருவது பாராட்டுக்குரியதாகும். இப்பரிசளிப்பு விழாவினை ஏற்பாடு செய்த அதிபர் ஆசிரியர்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவிப்பதோடு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டுக்களையும் வெற்றி பெற முயற்சிக்கும் மாணவர்களுக்கு நல்வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

இவ்விழா சிறக்கவும் கல்லூரி நற்பெயருடன் நாளும் வளர்ச்சி பெற்றோங்கவும் நல்வாழ்த்துக்கள்.

P.S.சதீஸ்
மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்
மாகாண கல்வித்திணைக்களம்,
கண்டி.



# உதவி கல்விச் செயலாளர் வாழ்த்துச் செய்தி

நு /கொட்டகலைதமிழ் மகா வித்தியாலயத்தின் வருடா வருடம் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறுவதை நானறிவேன். எல்லா நிகழ்வுகளும் மிகச்சிறப்பாக அமையப் பெற்றிருக்கும்.

இவ்வருடம் வெளியிடப்படும் இச்சஞ்சிகையானது மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் ஆக்கங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு மாற்றத்திற்கான செயற்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த இவ்வாறான செயற்பாடுகள் உறுதுணையாக இருக்கும் என்பது எனது நம்பிக்கையாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுடன் இவ்வாறான செயற்பாடுகளையும் உள்ளடக்கி மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளும் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

திருமதி. A.R.சத்தியேந்திரா,
உதவி கல்விச் செயலாளர்,
கல்வி அமைச்சு,
மத்திய மாகாணம்.



# අධ්‍යක්ෂතුමාගේ සුභ පැතුම් පණිවිඩය

කොටගල දෙමළ මහා විද්‍යාලයේ ගුරු භවතුන්හා සිසු දරුදැරියන් එක්ව එළි දක්වන ඉතිහාසය සඟරාව සඳහා සුභපැතීමට ලැබීම අතිශය සතුටට කරුණකි

පාසල් දරුවන්ගේ ගුණ, නැණ, නුවණ මෙන්ම රටේ ඉතිහාසය පිළිබඳ දරුවන්ගේ දැනුම වරධනය කිරීමෙ හිලා අධ්‍යාපන විද්‍යස්ථානයක් වශයෙන් නිරමාණාත්මක කුසලතා ඔප නැංවීම සඳහා සිදු කරන මෙවැනි කරතව්‍යයන් අගය කල හැකි උත්සහයකි.

පෞරාණික ඉතිහාසයකින් පන්නරය ලැබූ අභිමානවත් පුරවැසියන් ලෙස අනාගත ලොව ජය ගැනීමට මෙවැනි උත්සහයන් තුලින් සිසු දරු දැරියන්ට ධෛර්‍යය හාශක්තිය ලැබේවායි ප්‍රාර්ථනා කරන අතර මෙවැනි සඟරාවක් එළි දැක්වීම පිළිබඳව විදුහල්පති ප්‍රමුඛ ආචාරය මණ්ඩලයටත් සිසු දරුදැරියන්ටත් මාගේ ස්තුතිය පුදකරමග.

අමරසිරි පියදාසල
කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂල
නුවරඑළිය



## Message from the Divisional Director of Education

Message from the Divisional Director of education Zonal education office Nuwara Eliya.

It is my great pleasure and privilege to send this message to the principal, staff and the students of Kotagala Tamil MahaVidyalaya, Kotagala for their Souvenir.

Kotagala Tamil MahaVidyalaya is moving ahead towards success in all spears of education and continues to make great strides towards becoming the stable. Providing total integral formation to the students this kind of major event will give a recognition to the school.

I welcome the bringing out of a souvenir and extend my greetings and wishes for the success.

S.Mohanraj

Divisional Director of education - Div 2

Zonal education office

Nuwara Eliya



## அதிபரின் அகத்திலிருந்து...

வருடாந்த பாடசாலை பரிசளிப்பை மேலும் சிறப்பிக்கும் முகமாக கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தினால் இவ்வருடமும் வெளியிடப்படும் பாடசாலை சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடையகின்றேன்.

கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு 85 வருடங்கள் ஆகின்றன. வூட்டன் தோட்டப் பாடசாலையாக 39 மணவர்களாலும் ஒரு ஆசிரியராலும் தொடங்கப்பட்ட இப்பாடசாலை இன்று 2200 இற்கு மேற்பட்ட மாணவர்களையும் 100 ஆசிரியர்களையும் கொண்ட மகா வித்தியாலயமாக வளர்ச்சியடைந்துள்ளது. மத்திய மாகாணத்தில் ஒரு சிறந்த பாடசாலையாக வளர்ச்சியடைந்து வரும் இப்பாடசாலையிலிருந்து கடந்த காலங்களில் பல வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், அரச உயர் பதவிக்கான நிருவாகிகள், கல்வி அதிகாரிகள், அதிபர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், சிறப்பான பிரஜைகள் என பல்வேறு துறைகளிலும் பரிணமித்துள்ளார்கள்.

இப்பாடசாலைசாலையானது தற்போது பூரண கலைத்திட்டத்தைச் செயற்படுத்தும் ஒரு கலைக்கூடமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. (பரீட்சைப் பெறுபேறுகள், இணைப்பாட விதானச் செயற்பாடுகள், மறைக்கலைத்திட்டம்). அத்துடன் சிநேக பூர்வ வகுப்பறைகளைக் கொண்ட ஆரம்பப் பிரிவானது மிகச் சிறப்பாக செயற்பட்டுவருகின்றது.

பாடசாலையின் உன்னத வளர்ச்சிக்காய் அத்திபாரமிட்டு, கடந்த காலங்களில் இப்பாடசாலையின் அதிபர்களாக கடமையாற்றியவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாகாண கல்வி செயலாளர், மாகாண கல்வி பணிப்பாளர், மேலதிக கல்வி பணிப்பாளர், வலய, கோட்ட கல்வி பணிப்பாளர்களுக்கும், ஏனைய கல்வி அதிகாரிகளுக்கும் கல்வி அதிகாரிகளுக்கும், கலவி சார், கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இச்சஞ்சிகையானது பல கல்வியியலாளர்களினதும், ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் ஆக்கங்களை தாங்கி மிகச் சிறப்பாக வெளிவந்துள்ளது. இச் சஞ்சிகையை வெளியிடுவதற்கு முயற்சி செய்த நூலாக்க குழுவினருக்கும், உதவி, ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் உளமார வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறுதியாக இச்சஞ்சிகையின் ஊடாக மாணவர்களின் எழுத்தாற்றல்களை வெளிக்கொணர்வதற்கு அயராது உழைத்த எமது பாடசாலையின் நூலாக்க குழுவின் தலைவர், இணைத்தலைவர், செயலாளர், பொருளாளர், இணைப்பொருளாளர், இதழாசிரியர் மற்றும் உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இச்சஞ்சிகை வெளியீடு சிறப்பாக அமைவதற்கு வாழ்த்துகின்றேன்.

இரா.சிவலிங்கம்
அதிபர்




# பிரதி அதிபரின்
# ஆசிச் செய்தி

எமது கல்லூரியில் இரண்டாவது வருடமாக வெளிவரும் இச்சஞ்சிகையானது கல்லூரி வரலாற்றில் ஒரு மைல்கலாகும். மாணவர்களினதும், ஆசிரியர்களினதும், முகாமைத்துவகுழுவினர்களது ஆக்கங்களோடு கல்விப்புலத்தில் பணியாற்றும் கல்வியியலாளர்களினதும் அரசியல் பிரமுகர்களினதும் பாடசாலைக்கு பலவழிகளில் உதவி செய்துவரும் நல்உள்ளங்களினதும் ஆசிச்செய்திகளோடு நூலாக்ககுழுவினரின் குறுகியகால உழைப்பின் பயனாக இந்நூல் வெளிவருவதையிட்டு பெரும் உவகையடைகின்றேன்.

பூகோளமயமாகியுள்ள இக்காலக்கட்டத்தில் எமது பிள்ளைகளினதும் சமுதாயத்தினதும் விழுமியங்களை தொடர்ந்து பேணவைப்பதும், அதை நிலைத்து நிற்கவைப்பதும் காலத்தின் கட்டாயமாகவுள்ளது. இத்தருணத்தில் எமது கல்லூரியில் இருந்து இவ்வாறு ஒரு நூல் வெளிவருவது பாராட்டத்தக்கது.

இன்று சமூக அழிவையும், கலாசார அழிவையும் எதிர்நோக்கி வரும் காலக்கட்டத்தில் மாணவர்களின் சிந்தனைக்கு வளமூட்டும் வகையில் அவர்களின் ஆக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களை இயங்க வைக்கும் ஒரு தூண்டுகோலாக இவ்விதழையை அமைத்துள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்.

விஞ்ஞான வளர்ச்சியின் வேகத்தினால் புத்தகங்களை வாசிப்பது இன்று மிக வேகமாக குறைவடைந்து வருகின்றது. வாசிப்பு என்றாலே வெறுத்து நோக்கும் இக்காலக்கட்டத்தில் ஏனைய நடவடிக்கைகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றார்கள். அந்தவகையில் மாணவர்களை திசை திருப்பி அறிவுபூர்வமான ஆக்கங்களை தரவேண்டும் என்ற அந்த உயரிய சிந்தனையுடன், பாடசாலை வரலாற்றில் ஒரு மைல்கல்லாக இச் சஞ்சிகை வெளிவர காரணமாக அமைந்த கல்லூரியின் முதல்வர் திரு.இரா.சிவலிங்கம் ஐயா அவர்களுக்கும், அவரோடு இணைந்த பாடசாலை முகாமைத்துவக்குழுவுக்கும், நூலாக்கக்குழுவின் தலைவர் திருமதி S. முரளிதரன், இணைத்தலைவர் திருமதி M. விக்ரமசிங்க, செயலாளர் S.துரையப்பா, பொருளாளர் திரு.சாய்பிரகாஷ், இதழாசிரியர் திருமதி.ஏ.சசிகலா ஆகியோருக்கு எனது இதயப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு.சன்முகம் சிவக்குமார் (சன்குமார்) BA.PGDE .SLPS 2. Med®
பிரதி அதிபர்

## Vice Principal's Message




Once again I am proud in Forwarding the message to the second edition of the college magazine.

The impact of communication skills and especially the writing skill in equalizing an individual is vast the old communication used to make famous an individual match with the culture is known as traditional communication, with the technological development these traditional methods are vanished from most of these societies instead modern communication methods are emerging in the place of traditional methods. These methods could the divided into two categories an print media and electronic media .all these media are capital of influencing the thoughts ideas and activities of insipid.

The magazine is in one way contributes to develop our students creative thinking writing.

It also makes our students to do little research in producing a creation to this magazine on the other hand to archive the national aims in education of our country.

I would like to congratulate the editorial board teachers and the management committee who were behind the screen encouraging and guiding in making this effort a success

Mrs. M. Pathmanathan
Vice principal
( Teacher of English)




## வாழ்த்துச் செய்தி

எமது பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அதனோடு இணைந்ததான வருடாந்த சஞ்சிகை வெளியீடு என்பன இணைந்த இந்நிகழ்வு பாடசாலையின் வரலாற்றில் தடம் பதிக்கும் ஓர் பதிப்பாகும்.

தொலைத்தொடர்பாடல், தொழிநுட்ப விருத்தி, சமூக வலைத்தளங்களின் அதீத கவனக்குவிப்பு என்பனவற்றால் பிள்ளைகளிடம் வாசிப்பு, மற்றும் எழுத்தாற்றல் என்பன குறைவடைந்து செல்லும் இக்காலக்கட்டத்தில் மாணவர்களின் ஆக்கங்கள் சுமந்து வரும் இச்சஞ்சிகையின் வெளியீடானது காலத்தின் தேவையை உணர்த்துவதாக அமைகின்றது. இதன் உருவாக்கத்தில் துணை கொண்ட நூல் உருவாக்க குழுவினரையும் மனமுவர்ந்து வாழ்த்துகின்றோம்.

மாணவர்களின் வாசிப்புத்தேடல், எழுத்தாற்றல் போன்றவற்றின் வளர்ச்சியை அடிப்படையாக கொண்டதாக சஞ்சிகையின் ஆக்கங்கள் அமைகின்றன. அவ்வாக்கங்களை எழுதிய மாணவர்களுக்கும், எழுதுவதற்கு வழிகாட்டிய ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

P.பரமஜோதி
உப அதிபர்



## உதவி அதிபரின் வாழ்த்துச்செய்தி

கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்புவிழா 2016 ஆம் ஆண்டு வெற்றிகரமாக நடாத்தப்படுவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். எதிர்கால தலைமுறையினரை சிறந்த முறையில் உருவாக்கி சமூகத்திற்கு தருகின்ற பொறுப்பை பாடசாலைகள் கொண்டுள்ளன. அதனை செவ்வனே பூர்த்தி செய்யவேண்டியது பாடசாலை சமூகத்தை சேர்ந்த சகலரினதும் பொறுப்பாகும். இந்த பணியை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்வதற்கு இது போன்ற பரிசளிப்பு விழாக்களும் பங்களிப்புச் செய்கின்றன. இப்பாடசாலையின் வரலாற்று மிக்க வெற்றிகளை உருவாக்கி தருவதில் எமது கல்லூரி அதிபர் திரு.இரா.சிவலிங்கம் அவர்களுக்கும், இதற்காக முன்னின்று உழைக்கும் ஆசிரியர் குழாத்துக்கும், உறுப்பினர்களுக்கும் இத்தருணத்தில் நன்றி பாராட்டுகின்றேன். இந்த பாடசாலையின் எதிர்காலம் சிறப்பாக அமைய நல்வாழ்த்துக்கள்.

P.Sathivel B.B.A (Spl), PGDE, PGDSNE
DSM.med (Rea)
உபஅதிபர்



## உதவி அதிபரின் உள்ளத்திலிருந்து

எமது பாடசாலையில் வருடாவருடம் வெளிவரும் வருடாந்த சஞ்சிகைக்கு வாழ்த்துக்கள் வழங்குவதில் பெருமை கொள்கின்றேன். சஞ்சிகையானது காலத்தின் தேவைகளை மனங் கொண்டு புதிய ஆக்கங்களுடன் வெளிவர வேண்டும். இச்சஞ்சிகையிலும் புதுமைகள் பல புகுத்தப்பட்டிருக்கும். காலத்தின் தேவைகளை பூர்த்தி செய்கின்றது. எனவே இவ்வாறான இதழ்கள் இன்னும் மெருகூட்டப்பட்டு சமூகத்துக்கு பயன்தரக் கூடியவகையில் எதிர்வரும் காலங்களில் வெளிவர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இத்தகைய அரிய முயற்சிக்கு அனுமதி வழங்கிய அதிபர், நூலாக்க குழு, அனுசரணையாளர்கள், ஒத்துழைத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"பயனுள செய்"

திருமதி. கார்மேகம்
உதவி அதிபர்



## ஆசிச்செய்தி

எமது பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அதனோடு இணைந்ததான சஞ்சிகை வெளியீடு என்பவற்றிற்கு வாழ்த்து கூறுவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

இப்பாடசாலையின் சகல வகுப்புக்களிலும் கற்கும் மாணவர்களின் ஆக்கங்கள் மற்றும் ஆசிரியர்கள் கல்வியலாளர்கள என்போரது ஆக்கங்களை உள்ளடக்கி வெளிவருகின்ற இச்சஞ்சிகை மாணவர்களிடத்தில் எழுத்தாற்றல் திறனை மேம்படுத்துவதற்கு ஊக்கலாக அமையும் என்பதில் ஐயமில்லை. குறிப்பாக ஆரம்பக்கல்வியில் அப்பிரிவைச்சேர்ந்த மாணவர்களுடைய ஆக்கங்கள் அம்மாணவர்கள் அடைய வேண்டிய அத்தியாவசிய கற்றல் தேர்ச்சியை அடையப்பெற்றனவாக அமையப்பெற்றுள்ளன. இம்மாணவர்களின் ஆக்கங்களை வெளிக்காட்டுவதற்கு இச்சஞ்சிகை களமாக அமைந்துள்ளமை சிறப்பானது.

எதிர்வரும் காலங்களிலும் தொடர்ச்சியாக எமது பாடசாலை பல்வேறு ஆளுமைக்கொண்ட மாணவர் சமூதாயத்தை உருவாக்குவதற்கும் இப்பாடசாலையின் இலக்கு, நோக்கு என்பவற்றை மையமாகக்கொண்டு சகல விதமான செயற்பாடுகளும் வெற்றிகரமானதாக செயற்படுத்துவதற்கு இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு இந்நூலாக்க குழுவிற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி S.கண்ணன்

## MESSAGE FROM THE SENIOR PREFECTS

As the Senior prefects of CP/N/Kotagala Tamil Maha Vidyalayam .We are very proud to submit our benediction on this page. Our school is known as a leading school which places a major part in uplifting the knowledge of the students. In the hill country of Sri Lanka towards their behavior altitudes. Our students always score the best results not only in exams but also in other co curricular activities.

This imagination is one of the proof to speak about the talent of our children. They lovely souvenir. It may bring proud to our school as well as for the society. we pray at this step for the success of our school in near future too

S.Thilushan & R.Luxmila
Senior Prefects

## வாழ்த்துரை



வற்றாத நதிவளமும் வளமான தேயிலையும், ஓங்கியுயர்ந்த மலைத்தொடர்களும், அழகு செய்யும் கலைமணக்கும் கொட்டகலையில், அறிவாலயமாக விளங்கும் கொட்டகலை தமிழ் மகாவித்தியாலயத்தின் சிறப்புமலர் வெளியிடும் முயற்சியை மனமார வாழ்த்துகின்றேன்.

மாணவர்களுக்கு கல்வியும் அறிவும் போதனை செய்வதோடு நின்றுவிடாது அவர்களின் பல்வேறு திறன்களையும், அவற்றை மெருகேற்றி அரங்கேற்றி, அழகுபார்க்கும் நற்செயலுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

இப்பாடசாலையின் சாதனையாளர்களாக ஒவ்வொரு துறையிலும் மிளிரும் மாணவர்களுக்கு பரிசு வழங்கி அவர்களை உற்சாகப்படுத்தும் நோக்கோடு பரிசளிப்பு விழாவினை ஏற்பாடு செய்தமைக்கு வாழ்த்துகின்றேன்.

அத்துடன் நின்றுவிடாமல் இவ்விழாவின் பதிவாக ஒரு மலர் வெளியிடும் முயற்சி பாராட்டத்தக்கது. மாணவர்களின் பல்வேறு ஆக்கங்களை இம்மலர் சுமந்து வருவது வரவேற்கத்தக்கது. தொடர்ந்து இவ்வாறான முயற்சிகள் இப்பாடசாலையின் வரலாற்றுப் பதிவாக நிலைபெறும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

"முயற்சி திருவினையாக்கும்"
'மாணவர் தம் உயர்ச்சி, உயர் சமூகத்தின் வளர்ச்சி"

செந்தூரன்
செயலாளர்

## வாழ்த்துரை



ஆரம்பங்கள் எப்படி வேண்டுமானாலும் அமையலாம். ஆனால் முடிவுகள் எல்லோராலும் ஏற்கும் வண்ணமும் போற்றும் வண்ணமும் அமைந்து வேண்டும் இதுவே நிகழ்வுக்கு சொந்தகாரர்களினதும் அதன் எமது எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

இதற்கு உதாரணமாக எந்த ஒரு உற்பத்தி துறையினை எடுத்து கொண்டாலும் கூட எமது உள்ளீடுகளை பற்றி எதுவும் தேடி பார்ப்பதில்லை ஆனால் வெளியீடுகள் தரமானதாய் பயனுள்ளதாய் அமைந்துவிட வேண்டும் என அனைவருமே எதிர்பார்க்கின்றனர்.

இதனடிப்படையில் ஒரு பாடசாலையின் பௌதீக தோற்றம் உள்ளார்ந்த நடவடிக்கைகளுக்கு அப்பால் அதன் வெளியீடுகள் பயனுள்ளதாய் அனைவரும் மெச்சத்தக்க வகையில் அமைந்திருக்க வேண்டும் என்பதே ஒரு சமூகத்தின் தேவைப்பாடாக உள்ளது.

எமது கொட்டகலை த.ம.வி பாடசாலையை பொருத்தவகையில் பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மட்டுமன்றி ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகள் மற்றும் பாடசாலை ஒழுக்க விழுமிய செயற்பாடுகளும் சிறந்த முன்னுதாரணமாக திகழ்கின்றமை அனைவரும் அறிந்ததே. அந்த வகையில் எமது பாடசாலையை உயர்த்துவதற்கு பாடுபடும் அதிபர் முதல் சகல நல்லாசான்களுக்கும் வாழ்த்து தெரிவிப்பதோடு இந்த சஞ்சிகை வெளியீடு மற்றும் பரிசளிப்பு விழா வெற்றிபெற பழைய மாணவர் ஒன்றியத்தின் சார்பில் வாழ்த்து தெரிவித்துக் கொள்கின்றேன்.
நன்றி

இப்படிக்கு
S.கிருஷ்ணராஜா



## நம்பிக்கையுடன் உலகை வெல்வோம்.

வசதிகளை ஏற்படுத்துவதற்கு முன் மக்களுடைய மனப்பாங்குகளை கட்டியெழுப்புதல். பரம்பரை, பரம்பரையாக அசைக்க முடியாத பிற்போக்கு சிந்தனை போன்ற விடயங்களை மாற்றி அமைக்க தன்னகத்தைக் கொண்டு பாரிய தேசியத்தை வெல்லும் ஆற்றல் மிக்க சமூகத்தை கட்டியெழுப்பும் பாரிய பங்களிப்பினை கொட்டகலை தமிழ் மகா வித்தியாலய முதல்வர், ஆசிரியர் குழாமும் இணைந்து புரிந்துணர்வுடனும் நம்பிக்கையுடனும் செயலூற்றுகளை முன் நிறுத்தி வீறு நடை போற்று நம்பிக்கையுடன் உலகை வெல்வோம் என்ற திடமனதுடன் வீறு நடை போற்று முன்னேற துடிக்கும் சமூகத்திற்கு தெளிவான பாதையை காட்டும் வல்லமைமிக்க மனிதர்களை உங்கள் பாடசாலையில் காண்கின்றோம். நம்பிக்கையுடன் சிறந்த, புதிய உலகத்தினை கட்டியெழுப்பும் சிந்தனை ஊற்றுக்களை அதிகரித்து அயராத திடமனதுடன் முன்னெடுத்து வருவதை இட்டு பாடசாலை முதல்வர், ஆசிரியர்கள், மாணவர் தலைவர்கள், மாணவர்கள் அனைவருக்கும் பிரிடோ நிறுவனத்தின் சார்பிலும் இச்சமூகத்தின் சார்பிலும் மனம் நிறைந்த வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். நீங்கள் நினைப்பதை விட தேசத்தை கட்டியெழுப்புவது மிக எளிதானது. வாய்ப்புகள் நிறைந்த உலகை உருவாக்குவோம்.

தேசாபிமான தேசபந்து எஸ்.கே. சந்திரசேகரம்
திட்ட இயக்குனர் - பிரிடோ.

# பாடசாலை வரலாறு

ஹூட்டன் தோட்ட பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை அன்று மத்திய மாகாணத்தில் 1931 ஆம் ஆண்டு கோவில்பிள்ளை அவர்களை ஆசிரியராக கொண்டு 80 மாணவர்களுடன் நுவரெலியா கல்வி வலயம் கோட்டம் 2 ல் நிலைக் கொண்டுள்ளது.

1956 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திரு.சிற்றம்பலம் அவர்கள் அதிபராக பொறுப்பேற்க திரு.சோமஸ்கந்த சர்மா அவர்கள் அவருக்கு உதவியாக பணியாற்றியுள்ளார். 1976 ஆம் ஆண்டு திரு.R.A.பசுபதி அவர்கள் பொறுபபேற்றதுடன் 1977 இல் அரசாங்கம் இப்பாடசாலையை பொறுப்பேற்றது. இதன்போது மறைந்த அமைச்சர் கௌரவ சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலமாக பாடசாலைக்கான கட்டடமொன்று அமைக்கப்பட்டது.
1984 இல் பாடசாலை தரம் 10 வரை தரம் உயர்த்தப்பட்டதுடன் திரு.கணபதிபிள்ளை அவர்கள் அதிபராக பொறுப்பேற்ற காலத்தில் க.பொ.த சாதாரண தரம் ஆரம்பிக்கப்பட்டது.

திரு.N.பாலசுந்தரம் அதிபராக பொறுப்பேற்கப்பட்ட காலத்தில் இப்பாடசாலையானது மற்றவர்கள் போற்றும் அளவிற்கு எழுச்சி கண்டது. இக்காலத்தில் க.பொ.த உயர்தர கலை, வர்த்தக பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டமை, GTZ நிறுவன உதவியுடன் மூன்று மாடி கட்டடம் பெற்றுக்கொள்ளப்பட்டமை, தமிழ் தினப் போட்டியில் முதன்முறையாக தங்கப்பதக்கம் பெற்றமை போன்ற விடயங்கள் சிறப்பிடம் பெறத்தக்கது.

திரு.T.வடிவேல் அவர்கள் அதிபராக பொறுப்பேற்ற காலத்தில் ஜனாதிபதியின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கட்டில் இருந்து மூன்று மாடி கட்டிடம் ,மனைப்பொருளியல் கூடம், விஞ்ஞான ஆய்வு கூடம், வாசிகசாலை போன்றன பெற்றுக்கொள்ளப்பட்டன.
திரு.C.மகாலிங்கம் அவர்கள் அதிபராக பொறுப்பேற்ற காலத்தில் மூன்று மாடிக் கட்டிட திறப்பு விழா இடம்பெற்றதுடன் பாடசாலைக்கென கிணறு அமைக்கப்பட்டு நீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து J.D.வேதநாயகம் அவர்கள் பொறுப்பேற்ற காலத்தில் இருந்து பௌதீக வளம் சார்ந்து பல கட்டுமான அபிவிருத்திகள் ஏற்பட்டன. குறிப்பாக பாடசாலைக்கான கலையரங்கம், வகுப்பறைக் கட்டடங்கள், அன்னை கோதை மணடபம் போன்றவற்றுடன் பல்வேறு விதமாக மேம்பாடடைந்தது.

தற்போது கடமையாற்றும் அதிபர் திரு.R.சிவலிங்கம் அவர்கள் பதவியேற்றதிலிருந்து இப்பாடசாலை பண்புரீதியாகவும், தரரீதியிலும் பௌதீக மனித வள விருத்தியில் மேல் எழுச்சி கொண்டு வருகின்றது. 21ஆம் நூற்றாண்டின் எண்ம புரட்சி அறிவின் பிரவாகம் என்பவற்றுக்கு எங்களுடைய பிளளைகளும் எதிர்கொள்ளும் வகையில் தூர தரிசன நோக்குடன் திட்டமிடல்களுடன் செயன்முறைகளும் இடம்பெற்றுவருகின்றன. “வெற்றியாளர்கள் வித்தியாசமான செயல்களைச் செய்வதில்லை. அவர்கள் தாங்கள் செய்வதை வித்தியாசமாக செய்கின்றார்கள் என்ற Shiv khera என்பவரின் கூற்றின் படி இவருடைய காலத்தில் மிகவும் போற்றதற்குரிய இடமாக க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களை கௌரவ. ஆறுமுக தொண்டமான் அவர்களின் நெறிப்படுத்தலில் முன்னாள் ஜனாதிபதி அவர்களையும், கல்வி அமைச்சர் உட்பட ஏனைய அமைச்சர்களை பாராளுமன்ற கட்டத்தில் சந்தித்தமை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது.

கௌரவ.ஆறுமுக தொண்டமான் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூன்று வகுப்பறைகளுடனான பல்லூடக அறை திறந்து வைக்கப்பட்டதுடன் அன்னை கோதை மண்டபத்தின் முதலாம் மாடிக்கான அடிக்கல் நாட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் மடிக்கணினி, கிறீன் போர்ட், வைட் போர்ட், விளையாட்டு உபகரணங்கள் நடனக் குழுவினருக்கான பெறுமதி வாய்ந்த உடைகள், கனிஸ்ட மாணவர்களுக்கான மேலைத்தேய வாத்தியக் கருவிகள் போன்றன பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாகாண சபையின் கௌரவ உறுப்பினர் கௌரவ. கணபதி கனகராஜ் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் கலையரங்கத்திற்கான மின்னினைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது. இந்திய உதவி தூதுவர் மேதகு. நடராஜ் அவர்களின் ஊடாக விளையாட்டு உபகரணங்களும் மலையக மகளிர் சங்கத்தால் மனைப்பொருளியல் அலகிற்கான உபகரணங்களும் பெற்றுக்கொள்ளபட்டுள்ளது.

க.பொ.த உயர்தரப் பிரிவில் புதிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பாடசாலையில் 25 இற்கும் மேற்பட்ட இணைப்பாடவிதான துறைசார்ந்த கழகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பிள்ளை நேய அணுகுமுறையிலான வகுப்பறைகள் நவீன மயப்படுத்தப்பட்டுள்ளன. பாடங்களுக்கு தேவையான தனியான அலகுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு பௌதீக வள அபிவிருத்தியும் அவை முகாமைத்துவம் சார்ந்த செயற்பாடுகளும் இடம்பெற்று வருகிறன.

மேற்குறிப்பிட்ட அபிவிருத்தி காரணமாக க.பொ.த உயர்தரம், சாதாரண தரம், தரம் 5 புலமை பரீட்சை போன்ற தேசிய பரீட்சைகளில் குறிப்பிடத்தக்க அளவு சிறந்த பெறுபேறுகள் அதிகரித்து வருகின்றன. மேலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் தேசிய மட்டத்தில் சாதனைகளை நிகழ்த்தி வருகின்றன.

பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கம் என்பன ஸ்தாபிக்கப்பட்டு சிறந்த முறையில் அதன் செயற்பாடுகள் இடம்பெற்று வருகிறன. இவரது காலத்தில் வருடாந்தம் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா மட்டுமின்றி தேசிய பரீட்சைகளுக்கும் ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் மாணவர்களை தயார்படுத்தி ஒத்துழைப்பு நல்குகின்ற ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வுகளும் இட்பெற்று வருகிறன.

பாடசாலை மட்டத்தில் பல்வேறுபட்ட பொறுப்புகள், கடமைகள், குறிப்பாக உப அதிபர்கள், தர இணைப்பாளர்கள், பாடஇணைப்பாளர்கள், திட்டங்களுக்கு பொறுப்பானவர்கள் நியமித்து அவர்களுக்கு பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டு அச்செயற்பாடுகளும் கிரமமாக இடம்பெற்று வருகிறன. அத்துடன் பாடசாலை மட்டத்திலான முகாமைத்துவம், மேற்பார்வை, ஆசிரியர் அபிவிருத்தி செயற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவற்றினுடாக பாடசாலை மட்டத்தில் எல்லா நிலைகளிலும் தர மேம்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் முழுமைத்தர முகாமைத்துவ செயன்முறைகளும் இடம்பெறுகின்றன.

இப்பாடசாலையின் கல்வி அடைவு மட்டங்கள், விளையாட்டு, ஒழுக்கம், பௌதீக வளங்கள், மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள், இணைப்பாட விதானச் செயற்பாடுகள், சிநேகபூர்வ வகுப்பறைகள், விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான வகுப்பறை, க.பொ.த. உயர்தரத்தில் மனைப்பொருளியல், சித்திரம், விவசாய விஞ்ஞானம், போன்ற பாடங்களின் அறிமுகம் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



## நூலாக்கக்குழுவின் எண்ணங்களாக ...

உலகமயமாக்கல் சிந்தனை அதன் வினைப்பாடுகள் என்பன மேலோங்கியதன் விளைவாக இன்றைய சமூகத்தில் வாசிப்பு, எழுத்தாற்றல், மற்றும் தேடல் குறைவடைந்து செல்கின்றதோடு, அறிவுப் பொருளாதாரம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப புரட்சியானது இன்று சகல துறைகளிலும் பரிமாணம் பெற்றுள்ள நிலையில் அதற்கு ஏற்றவகையில் அறிவையும், அறிவாற்றலையும் உடனுக்குடன் இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவையின் பின்னணியில், மாணவர்களிடம் எழுத்தாற்றல், வாசிப்பு, தேடல் என்பவற்றை முகிழ்ந்தெழச் செய்யும் நோக்கில் எமது பாடசாலையின் வருடாந்த சஞ்சிகை இரண்டாவது வருடத்தில் இன்று தவழ்கின்றது.

ஒரு பாடசாலையின் வரலாறு மற்றும் நிகழ்கால சம்பவங்களின் ஆவணப்படுத்தலை துணைகொண்டு இச்சஞ்சிகை மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள் ஆகியோரின் ஆக்கங்கள் உள்ளடக்கியதாவும், சிறப்பான தரமுடையதாகவும் அமைய வேண்டும் என்ற எமது அதிபரின் சிந்தனை, எண்ணப்பாடு என்பவற்றின் அடிப்படையில் அவரின் வழிகாட்டலுடன் உருவாக்கம் பெற்றுள்ளது. இச்சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்கிய இப்பாடசாலையை கண்ணென கரு கொண்டுள்ள கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களுக்கும் இப்பாடசாலையின் சகல செயற்பாடுகளிலும் பங்களிப்பு நல்கும் மத்திய மாகாண அமைச்சர் ம.ராமேஸ்வரன் அவர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அதே போன்று கல்வியமைச்சின் தமிழ் பாடசாலைகள் பிரிவு பணிப்பாளர் திரு. சு.முரளிதரன் அவர்களுக்கும் பெருந்தோட்ட பாடசாலைகள் அபிவிருத்தி பணிப்பாளர் திருமதி சபாரஞ்சன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதுடன் மத்திய மாகாண கல்வியமைச்சின் செயலாளர், கல்வி பணிப்பாளர், மேலதிக கல்வி பணிப்பாளர், கல்வியமைச்சின் உதவிச்செயலாளர் ஆகியோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

நுவரெலியா வலய கல்வி பணிப்பாளர் மற்றும் மேலதிக கல்வி பணிப்பாளர் அவர்களுடன் பாடசாலையின் சகல விடயங்களிலும் அர்ப்பணிப்புடன் அனுசரணையாளராக செயற்படும் திரு ஜெயராஜன் மற்றும் பிரிடோ இணைப்பாளர் திரு. சந்திரசேகரன், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் ஒன்றியம், நலன் விரும்பிகள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் கட்டுரைகளை தந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரன், கலாநிதி.பொன்.சிங்கரட்ணம், இலங்கை திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளரகளான். திரு.பொன்.இராமதாஸ், திரு N.சஞ்சீவி மற்றும் பிரதி அதிபர், உப அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் புத்தகத்தை மிகக்குறுகிய காலத்தில் அச்சிட்டு வழங்கிய கொட்டகலை ABC நிறுவன உரிமையாளர், ஊழியர்கள் ஆகியோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

**S.**துரையப்பா
செயலாளர்
நூலாக்கக் குழு

# நூலாக்ககுழுவின் தலைவர் உள்ளத்திலிருந்து ...

எழுச்சி பெறும் மலையகம் என்பது கனவினைக் கடந்து யதார்த்தமானதாகி வருவதன் தடைகளை உடைக்க கல்வி என்பது உன்னதமான கருவி என்பது நாம் புரிந்து கொள்வோம். கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம் இதுவரை காலமும் இந்த மண்ணுக்கு செயலாற்றம் கொண்ட உணர்வு பூர்வமான ஆளுமைகளை உருவாக்கி இருக்கின்றது உலகறிந்த ஒன்றாகிவிட்டது என்பதற்கு இன்று வர்த்தக முகாமைத்துவ, நிர்வாக, மருத்துவ, பொறியியல் திட்டமிடல் கல்வியின் புலங்களில் கோபிக்கும் பலர் இருக்கின்றார்கள்.

மலையக மண்ணில் கொட்டகலைக்கு வரலாற்று பெயருண்டு என்பது போல எதிர்கால மலையகத்தை மட்டுமல்ல நம் தேசத்தையே வடிவமைக்கக்கூடிய நிர்மாண சிற்பிகள் இப்பாடசாலை உருவாக்கிய பிரவாகம் தொடரும் என்ற எழுச்சிமிக்க உணர்வில் இந்த மலர் உங்கள் கரங்களால் ஸ்பரிசிக்கப்படுகின்றது. கடந்த வருட மலர் ஒரு தலைப்பெயல் என கல்லூரி வரலாறு சொல்லும். அதைத் தொடர்ந்து தேர்ச்சி இந்த மலர் இதில் எங்கள் மாணவர்களின் ஆக்க சிந்தனைகள் மற்றும் அபிலாசைகளை காண்பீர்கள். இத்தகு பருவநிலைக்கு ஏற்ப படைப்புக்கள் தருவதற்கு இம்மலர் களமாகின்றது. இது ஓர் ஆரம்பம் மட்டுமே. இன்று தொடங்கும் எங்கள் முயற்சி தொடர்ந்து பேணப்பட வேண்டும் என்பதற்கு சான்றாக அமையும் வண்ணம் இதனை செதுக்குவதில் நாங்கள் மிகுந்த அக்கறை கொண்டோம். இதற்கு கடமை பளுவிலும் ஆற்றுப்படுத்திய பாடசாலை அதிபருக்கும், உப அதிபர்கள், பிரதி அதிபர்களுக்கும் எங்கள் பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முழு நிறைவான Smart (திறன்) பாடசாலை என்பதை இன்றைய நல்லாட்சி அரசாங்கம் அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலையை வேலைத்திட்டமூடாக முன்னெடுக்கின்றது. இதனூடாக நவீன இலத்திரனியல் அம்சங்களை கற்பித்தல் மற்றும் முகாமைத்துவ அம்சங்களில் புகுத்தி அதிபர், ஆசிரியர்கள், மற்றும் மாணவ செயலாற்றல்களை கண்காணித்து ஊக்குவிக்கின்ற செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.

எங்கள் பாடசாலை இன்றைய நவீனத்துவ சவால்களுக்கு முகங்கொடுக்க தயார் என்பதை இந்த மலரூடாக சொல்லிக் கொள்ள தலைப்படுகின்றோம். யார் எவர் தடுத்தாலும் நாங்கள் எதிர்காலத்தை உணர்கின்றோம். அதற்கு நாம் உணர்ந்ததை எங்கள் உத்தியோகத்தின் பற்று மீதும் இந்த பாட்டாளிகளினதும் பணியாளர்களின் பிள்ளைகளின் மேம்பாட்டுக்காக மேலும் அர்ப்பணிப்போம் என்பதனை எங்கள் ஆசிரியர் குழாம் சார்பாக இந்த மலர் மூலம் சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம்.

இந்த பதிவு உங்கள் கரங்களில் தவழ உழைத்தவர்கள் வெறுமனே செயற்பட்டவர்கள் அல்ல என்பதை உணர்வுபூர்வமாக உணர்வீர்கள் என்று நினைக்கின்றோம்.

திருமதி S.முரளிதரன்,
தலைவர் - நூலாக்கக்குழு 2016

# BOARD OF MANAGEMENT



# TUTORIAL STAFF (PRIMARY)



# TUTORIAL STAFF (06 - 13)



# TUTORIAL STAFF (06 - 13)




Board of Prefects


Board of Prefects



Non Academic Staff

# PAST PUPILS ASSOCIATION N/KOTAGALA T.M.V 2016



Seated L-R : Mr.S.V.Sundharalingam (Patron), Mr.S.Pushpa Kumar (Vice President), S.Krishnarajah (Secratery), Mr.K.Sivalingam (President), Mr.M.Yogalingam(Tresurer), Mr.P.Gunasegaran (Vice Secretary)

1st Row L-R : Mr.S.Somasundaram, Mr.M.Vigneshwaran, Mr.A.Sivakumar, Mr.S.Partheeban, Mr.T.Gunaseelan

2nd Row L-R: Mr.C.Rozalin, Mr.S.Sivakumar

# EDITORIAL BOARD



**Mr. R. Sivalingam**
**(Principal)**



**Mrs. S. Muralitharan**
**(President)**



**Mrs. M. Wikramasingha**
**(Joined President)**



**Mr. S. Thuraiyappa**
**(Secretary)**



**Ms. V. Sasikala**
**(Editor)**



**Mr. T. Saiepragash**
**(Tresurer)**



**Mrs. G. Wasantha Kogilam**
**(Member)**



**Mr. A. Abiran**
**(Member)**

# New Constructions












# இணையவழி உயர்கல்வி அண்மைக்கால முன்னேற்றங்கள்

**பேராசிரியர் சோ.சந்திரசேகரன்**

உயர்கல்வித்துறையில் புத்தாக்கங்களை அறிமுகம் செய்துவரும் வளர்ச்சியடைந்த நாடுகளைப் பின்பற்றி இலங்கை போன்ற வளர்முக நாடுகளும் இணைய வழிக்கல்வி ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. ஆங்கிலத்தில் இணையவழியில் கற்பதை Online Education, Virtual Learning எனப் பலவாறு அழைப்பதைத் தமிழில் இப்போதைக்கு இணையவழிக்கல்வி என அழைப்போம். இலங்கையில் உயர்கல்வி அமைச்சின் ஒரு செயற்றிட்டமான தொலைக்கல்வியை நவீனமயமாக்கும் செயற்றிட்டமானது 2003 தொடக்கம் பல இணையவழிப் பட்டப்படிப்புக்களை தொடங்கியது. இச்செயற்றிட்டத்தின் நோக்கம் நாடெங்கும் இணையவழியில் தொலைக்கல்வி வசதிகளை ஏற்படுத்துவதாகும்.

இலங்கையில் பல அரசாங்கப் பல்கலைக்கழகங்களும், உயர் தொழில் சங்கங்களும், தனியார்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களும் பல இணையவழிக் கற்கைநெறிகளை நடாத்திவருகின்றன. கொழும்புப் பல்கலைக்கழகமும், ரஜரட்டை பல்கலைக்கழகமும் இத்துறையில் முதலில் அடியெடுத்து வைத்தன. முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், விஞ்ஞானம், பொறியியல், தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் இணைய வழிக்கற்கை நெறிகள் நடாத்தப்படுகின்றன.

பல்கலைக்கழகங்கள் இளநிலையிலும், முதுநிலையிலும் பட்டக் கற்கைநெறிகளை நடாத்துகின்றன. கொழும்புப் பல்கலைக்கழகம் இடர்முகாமைத்துவம், பிரயோக இரசாயனம், சூழல் விஞ்ஞானம் போன்ற துறைகளில் இக்கற்கைநெறிகளை ( M.Sc) நடாத்தி வருகின்றது. ரஜரட்டை பல்கலைக்கழகம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம், யாழ் பல்கலைக்கழகம் போன்றன விஞ்ஞானம், வியாபார முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இளநிலைக் கற்கை நெறிகளை இணையவழியில் நடாத்திவருகின்றன. ( மேலும் விபரங்களுக்கு பார்க்க Studentlanka.com – Online degree)

**இணையவழிக்கல்வி என்பது...**

இணையவழிக்கல்வி என்பதும் ஒருவகைத் தொலைக்கல்வி முறையாகும். பல்கலைக்கழக வகுப்பறைக்குச் செல்லாது இணையவழியில் மாணவர்கள் பாடங்களைக் கற்றல், அவ்வழியில் ஆசிரியர் - மாணவர் தொடர்புகள் இடம் பெறல், இவை ஒரு நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் நிகழ்தல் என்பன இணையவழிக்கல்வியின் அம்சங்களாகும்.

தொலைக்கல்வி பற்றிய விளக்கங்களும், இணையவழிக்கல்விக்குப் பொருந்தும். தொலைக்கல்வி என்பது திட்டமிடப்பட்ட ஒரு கற்றல் - கற்பித்தல் ஏற்பாடு, கருத்துக்களைப் பரிமாறவும், பலருக்கு வாய்ப்புகளை வழங்கவும், பல தொழில் நுட்பங்களைக் கையாள்வதும், கணினி, கட்புல, செவிப்புலசாதனங்கள், வலைத்தொகுதித் தொழில் நுட்பம் என்பன இணைந்து ஒரு பன்முக போதனாமுறை

ஏற்படுத்தப்படுகின்றது. வலைத்தொகுதியினூடாக தொலைக்கல்வி ஆசிரியரும் மாணவரும் இணைக்கப்படுகின்றனர்.

இன்று இணையக்கல்வியானது மேலைநாடுகளில் நன்கு பழக்கத்தில் வந்துவிட்டது. எனவே இணையவழிக்கல்வி சிறந்ததா? வகுப்பறைக்கல்வி சிறந்ததா? என்ற கேள்விக்கு அதிக இடமில்லை. இணையவழிக்கல்வியானது, கற்போரை மகிழ்விக்கின்றது. கற்றதை கற்போன் நிலைநிறுத்திக் கொள்ளவும், அதனை பயன்படுத்திக் கொள்ளவும் உதவுகின்றது என்பது அறிஞர் கருத்தாகும்.

ஐக்கிய அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளில் இடைநிலைப் பள்ளிமாணவர்களும் தாம் சித்தியடையத் தவறிய பாடங்களை இணையவழியில் கற்கின்றனர். மரபுவழிப் பாடசாலைகளுக்கு மாற்றாக இவ்வாறான ஏற்பாடு உண்டு. ஐக்கிய அமெரிக்காவில் பாடசாலைமட்டத்தில் 13 .லட்சம் மாணவர்கள் இவ்வாறான தொலைக்கல்விக் கற்கை நெறிகளைப் பயின்றனர். (2015), 2013/14 இல் 29 அமெரிக்க மாநிலங்கள் இக்கல்வி ஏற்பாடுகளைக் கொண்டிருந்தன. இப்பாடசாலைகள் அரசாங்கத்தாலும், தனியாராலும் வழங்கப்படுபவை. முழுமையாக இணையவழியிலும் கலப்புமுறையிலும் ( இணைய வழியிலும் நேரடி வகுப்புக்களும்) கல்வி பயிலலாம்.

பாடசாலை செல்லாது வீட்டில் கல்வி பெறும் மாணவர்கள், பாடசாலையில் தொந்தரவுக்குள்ளாகும் மாணவர்கள், ஆற்றல் கூடிய மீத்திறனுள்ள மாணவர்கள், ஆகியோர் இணையவழிக் கல்வியை நாடுகின்றனர். (ஐக்கிய அமெரிக்காவில் 13 மில்லியன் மாணவர்கள் தொந்தரவுக்குள்ளாகின்றனர்).

**இந்தியா**

மரபுவழிப் பாடசாலையை விரும்பாத மாணவர்களும், பாடசாலைகளில் சமூக மற்றும் நடத்தைப் பிரச்சினைக்களை எதிர் நோக்கும் மாணவர்களும் இணையவழிக் கல்வியை நாடுகின்றனர். கணினியிலும், தொழிநுட்பத்திலும் விருப்புடையவர்களுக்கும் தொலைக்கல்வி உதவுகின்றது. விளையாட்டில் ஈடுபடுபவர்கள் வீட்டிலேயே கற்பவர்கள், விசேட சுகாதாரப் பிரச்சினைகளை கொண்டவர்கள் நாடக்கூடிய நூறுக்கணக்கான இணையவழிக் கற்கைநெறிகள் இந்தியாவில் உண்டு. இந்திய திறந்த பாடசாலைக்கான தேசிய நிறுவனத்தில் 2015 ஆம் ஆண்டில் 5 இலட்சம் மாணவர்கள் சேர்ந்திருந்தனர். இந்த நிறுவனம் இணையவழிக் கற்கைநெறிகளைக் கொண்டுள்ளது.

**சீனா**

சீனாவில் மரபுவழிக் கல்விநிலையங்கள் சமூகத்தில் பெரிதும் மதிக்கப்பெற்றவை. இணையவழிக்கல்வியினூடாக பாடசாலைக் கல்வியில் புரட்சிக்கரமான மாற்றங்களை ஏற்படுத்த சீனா கருதுகின்றது. அதற்கு நகர்புறப்பாடசாலைகளுக்கும் கிராமப் புறப்பாடசாலைகளுக்கும் இடையில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை குறைக்க இவ்வகையான கல்வி உதவும் என சீனா கருதுகின்றது. 13 இலட்சம் பாடசாலைகள் ஆசிரியர்களை கல்வித்தொழில் நுட்பத்திறன்களில் பயிற்சி வழங்க இணையவழிக் கல்வியைப் பயன்படுத்துவதுசீனாவின் நோக்கமாகும்.

## இணையவழி உயர்கல்வி

### ஐக்கிய அமெரிக்கா

அமெரிக்க ஆய்வாளர்கள் 18ஆம் நூற்றாண்டிலேயே தொலைக்கல்வி ஏற்பாடுகள் ஆரம்பமாயின என்பர். 1873 இல் முதலாவது தொலைத்தொடர்புக் கல்வி நிலையங்கள் ஆரம்பமாயின. 1892 இல் சிக்காகோ பல்கலைக்கழகம் இக்கற்கைநெறிகளைத் தொடங்கியது. 1900–1950 காலப்பகுதியில் வானொலியும், 1953 இல் தொலைக்காட்சி என்பன பயன்படுத்தப்பட்டன. 1965 இல் விஸ்கொன்சின் பல்கலைக்கழகம் தொலைபேசியையும் பயன்படுத்தியது. மருத்துவர்களுக்கான கற்கைநெறிக்கு இது பயன்படுத்தப்பட்டது. 1976 ஆம் ஆண்டில் தான் கட்டடங்களற்ற மெய்நிலை ( Virtual) பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. எல்லாருமே உயர்கல்வி நிலையங்களின் அருகில் வசிக்கமுடியாது. அவற்றை நாடிச் செல்லவும் முடியாது என்பதால் தொலைக்கல்வி ஏற்பாடுகள் விரிவுசெய்யப்பட்டன. விரைவில் இணையத்தளங்கள் தொலைக்கல்விக்கும் பயன்படுத்தப்படலாயின.

இணையத்தளங்களுக்கான அடிப்படை ஏற்பாடுகள் 1969 இல் செய்யப்பட்டடிருந்தது. ஆனால் 1980 களில் தான் இத்தொழிநுட்பம் தொலைக்கல்வியைப் புரட்சிக்கரமாக மாற்றியது.

1981 இல் மேற்கத்தைய நடத்தை விஞ்ஞான நிறுவகம் 1982 நியூ ஹெமிஸ்பயலில் கணினிக்கல்வி நிலையம், 1985 இல் நோவா தென்கிழக்கு பல்கலைக்கழகம் என்பன உயர் கல்வித்துறையில் இணையவழியில் கற்கைநெறிகளை வழங்கின. 1990களில் உயர் கல்விநிலையங்கள் விரிவாக இணையவழித் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தத் தொடங்கின. இதன் பின்னர் தொலைக்கல்விக் கற்கைநெறிகள் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் விரிவடைந்தன.

2013 ஆம் ஆண்டில் 53 இலட்சம் மாணவர்கள் ஏதேனும் ஒரு இணையவழிக் கற்கைநெறியைக் கற்றனர். மற்றொரு மதிப்பீட்டின்படி இத்தொகை 67 இலட்சமாகும். மாணவர் சேர்வு ஆண்டுக்கு 9.3 சதவீதத்தால் அதிகரித்து வருகின்றது. உயர்கல்வி பயிலும் மாணவர்களில் 32 சதவீனமானவர்கள் ஏதேனும் ஒரு கற்கைநெறியையாவது பயிலுகின்றனர்.

(இக்கற்கைநெறிகள் Moocs – Massiva Open Online Courses எனப்படும்). இத்தகைய கற்கைநெறிகளில் உயர் கல்வி நிலையங்களில் 2.6 சதவீதமானவை நடாத்துகின்றன. மற்றொரு 9.4 சதவீத நிறுவனங்கள் இக்கற்கைநெறிகளைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளன. (2013)

மேலும் சில ஆய்வுமுடிவுகள்

- 67 சதவீதமான கல்வித்தலைவர்கள் இணையவழிக் கல்வியானது வகுப்பறைக்கல்விக்குச் சமமானது. அல்லது மேலானது என நம்புகின்றனர்.

- எனினும் 33 சதவீதமானவர்கள் இணையவழிக் கல்வி வகுப்பறைக்கல்வியை விட மட்டமானது எனக் கருதுகின்றனர்.
- இணையவழிக் கற்கைநெறிகளை நடாத்துவோர், அதனை நடாத்துபவர்களை விட சாதகமான கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

இக்கற்கைநெறிகள் தொடர்ச்சியாக விரிவடைந்து செல்லமுடியாது. ஒரு கட்டத்தில் உயர்கல்வி நிலையங்கள் " இத்தோடு போதும்" என்ற நிலையை அடையலாம் எனத் தெரிகின்றது.

| ஐக்கிய அமெரிக்காவில் உயர்கல்வி 2010 | |
|---|---|
| 1. மொத்த மக்கள் தொகை | 31,800000 |
| 2. உயர்கல்வி மாணவர் மொத்த தொகை | 1,960000 |
| 3. ஒரு இணையத்தளக் கற்கைநெறியை யாவது கற்போர் | 61,42000 |
| 4. முன்னைய ஆண்டை விட அதிகரிப்பு | 5,63000 |
| 5. மொத்த உயர்கல்வி மாணவர்களில் இணையவழிக் மாணவர்கள் | 31.3% |

**இந்தியா**

தூரப்பிரதேசங்களிலும், கஷ்டப்பிரதேசங்களிலும் வாழும் பெருந்தொகையான மாணவர்களுக்குப் பட்டப்படிப்பை வழங்கத் தொலைக்கல்வி ஏற்பாடுகள் பேருதவி புரிகின்றது. உயர்கல்வி பயிலும் மொத்த மாணவர்களில் 12.5 %மானவர்கள் ( 35, 60000 பேர்) தொலைக்கல்வி மாணவராவர், அவர்களில் பெண்கள் 40% பட்டமேற் படிப்பு பயிலுவோர் 13 இலட்சம் பெறாதவர்

| இந்தியாவில் உயர்கல்வி | |
|---|---|
| 1, உயர் கல்வி பயிலும், மாணவர் ( மொத்தம்) | 2,8500000 |
| 2, மாணவர் சேர்வு சதவீதம் ( GER) | 20.4 % |
| 3, தொலைக்ல்வி மாணவர் தொகை | 35,60000 |
| 4, உயர்கல்வி பயிலும் மாணவர்களில் தொலைக்கல்வி மாணவர்கள் % | 12.5% |
| அதில் பெண்கள் % | 40% |

இந்திய உயர்கல்வி முறை இந்த அளவுக்கு விரிவு பெறுவதற்கு தகவல் தொழிநுட்பம் பயன்பாடே காரணமாகும். மேலதிகமான தொலைக்கல்வி மாணவர்களை (ஏறத்தாழ 35 இலட்சம் பேர் பார்க்க அட்டவணை) உள்ளடக்க இந்தியா கடந்த 20 மாதங்களில் மாதந்தோறும் 6 பல்கலைக்கழகங்களையும் 270 கல்லூரிகளையும் கட்டியிருக்கவேண்டும் என ஒரு மதிப்பீடு கூறுகின்றது. இது சாத்தியமானதல்ல என்பதால் தொலைக்கல்வி (Moocs) ஏற்பாடுகளை இந்தியா நாடவேண்டியதாயிற்று.

ஏற்கனவே உயர்கல்வி வாய்ப்புக்களை பெறாத தூரப் பிரதேச மாணவர்களுக்கு இணையவழி உயர்கல்வி புதிய வாய்ப்புக்களை வழங்கியுள்ளது. தற்போது அவர்கள் சிறந்த பேராசிரியர்களிடம் கல்வி பெறும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இதுவரை காலமும் இணையவழிக்கல்வியை வழங்காதிருந்த கிழக்காசிய நாடுகள், தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் தற்போது அதி மிகுந்த ஆர்வம் காட்டுகினறன. சீனாவின் Tsinghua பல்கலைக்கழகம் (2013) 60 இணையவழிக்கற்கைநெறிகளை வழங்குகின்றது. தென்னாபிரிக்காவிலும் குறைந்த செலவில் உயர்கல்வியை விரிவுசெய்ய இவ்வழிமுறை கையாளப்படுகின்றது. தென்னாபிரிக்காவில் 23 பல்கலைக்கழகங்களும் தற்போது இணையவழியில் கல்வி வழங்குகின்றன. இத்தகைய புத்தாக்கம் காரணமாக ஆபிரிக்காக் கண்டத்தில் உயர்கல்வி மாணவர் தொகை தற்போதைய 20 கோடியிலிருந்து 2045 இல் 40 கோடியாக அதிகரிக்க உள்ளது. இவ்வதிகரிப்புக்கு இணையவழி உயர்கல்வியே காரணமாக அமையும்.

எவ்வாறாயினும் இணையவழிக்கல்வி (Moocs) ஆரம்பித்து பல ஆண்டுகள் கழிந்த பின்னர் தற்போது உற்சாகம் சற்றுகுறைய ஆரம்பித்துள்ளதாக ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மாணவர் சேர்வு அதிகமாக இருந்தாலும் அவர்களைத் தொடர்ந்து வைத்திருப்பதும் அவர்கள் கல்வியை கற்றுமுடித்துக் கொள்வதும் குறைவாக உள்ளது. 2013 இல் செய்யப்பட்ட ஒரு ஆய்வின்படி 17 கற்கைநெறிகளைப் பயின்றவர்களில் 5 சதவீனமானவர்களே கற்று முடித்துப்பட்டம் பெற்றனர்.

இதில் நன்றாக சித்திப்பெற்றவர்களும் ஏற்கனவே உயர்கல்வியை முறையாகக் கற்றவர்களே, இணையவழிக் கல்வி இவர்களை இலக்காகக் கொண்டதல்ல. பல்கலைக்கழக ஆசிரியர்களும் இவ்வழிமுறையைப் பயன்படுத்துவதில் தயக்கம் காட்டுகின்றனர்.

| இணையவழிக் கல்வி | |
|---|---|
| அனுகூலங்கள் | பிரதிகூலங்கள் |
| 1, உயர்கல்வி வாய்ப்புக் கிட்டாதவர்களுக்கு சிறந்த மாற்றுவழி | 1, மாணவர்களோடும் ஆசிரியர்களோடும் தொடர்பின்மை |
| 2, எந்நேரமும் எவ்விடத்திலிருந்தும் கற்க வாய்ப்பு | 2, செயல்முறைக் கற்கை நெறிகள் பொருந்தாது |
| 3, தொழில் புரிந்து கொண்டும் கற்கும் வாய்ப்பு | 3, மாணவருக்கு அதிக சுயக் கட்டுப்பாடு தேவை |
| 4, இத்துறையையும் கற்கலாம் | 4, கற்க அதிகநேரம் செலவிட நேரிடும் |
| 5, வகுப்பறையிலிருந்து கற்கும் சிரமம் இல்லை | 5, எவருடைய உதவியுமில்லை |
| 6, மாணவர் சுயமாக கற்று முடிக்கும் காலத்தைத் தெரிவு செய்யலாம். | 6, கற்று முடிப்போர் சதவீதம் குறைவு |
| 7, மரபுவழிக் கல்வியை விடச் செலவு குறைவு | |

# பாடசாலை மாணவரிடையே ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்தல்

**கலாநிதி பொன்னம்பலம் சிங்கரத்தினம்,**
**பாத்தியபுர, கொட்டகலை.**

மாணவரிடையே சமநிலை ஆளுமையை (Balance Personality) விருத்தி செய்வதே பாடசாலைக் கல்வியின் மூலம் எதிர்பார்க்கப்படும் அடிப்படை நோக்கமாகும். இதனை எவ்வாறு ஏற்படுத்தலாம் என்பது பற்றியே இக்கட்டுரை கவனஞ் செலுத்துகிறது.

ஆளுமை என்பது ஒரு நபரிடமுள்ள நிலையாகத் திரட்டப்பட்டுள்ள நடத்தைப் பண்புகளின் தொகுப்பு எனலாம். ஒவ்வொரு நபரிடமும் நன்கு வெளிப்படும் சுபாவம் ஆளுமை எனப்படும். எண்ணங்கள், கருத்துக்கள், ஈடுபாடு, விருப்புக்ள், திறமைகள் போன்ற இவை யாவற்றிலிருந்தும் தனி நபருக்கு உரித்தான சிறப்புக்களைக் காணமுடியும். ஆளுமையானது ஒருவர் கொண்டுள்ள ஒட்டு மொத்தமான இயல்புகள் குணாதிசயங்களை உள்ளடக்கிய ஒன்றாகும். ஆளுமை தொடர்பில் உளவியலாளர்களால் கூறப்பட்ட வரைவிலக்கணங்கள் கட்டுரையின் சுருக்கம் கருதி இங்கு கூறப்படவில்லை. பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் எல்லா வேலைத்திட்டங்களும் மாணவர்களது பூரண விருத்தியை (Total Development) இலக்காகக் கொண்டவை. அதன் மூலம் மாணவரிடத்தே சமநிலையான ஆளுமையை விருத்தி செய்ய / பரிபூரணமான ஆளுமை விருத்தியுள்ள ஒரு பிரசையை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

ஆளுமைப் பண்புகள் ஒருவரது ஆளுமைத் தற்றிறன்கள் (Personality Traits) எனப்படுகின்றன. அத்தகைய ஆளுமைப் பண்புகள் சில வருமாறு.

| | |
|---|---|
| ஒழுக்கம் பேணுதல் | செயல்களில் செம்மை |
| மரியாதை உணர்வு | நேர்மை |
| உண்மை பேசுதல் | கூட்டுணர்வு |
| நுணுக்கமான சிந்தனையுடைமை | நம்பகத்தன்மை |
| பொறுப்புகளை வகித்தல் | மலர்ச்சி |
| ஆக்கத்திறன் | பணிவு |
| நன்றி பாராட்டுதல் | நியாயம் பேணுதல் |
| தலைமை தாங்குதல் | பொறுப்புணர்வுடன கருமமாற்றுதல் |

சமநிலை ஆளுமையை விருத்தி செய்யும் பொறுப்பை தனியே ஆசிரியர் மீது மட்டும் சுமத்தி விட முடியாது. எனினும் அப்பொறுப்பின் பெரும் பகுதி ஆசிரியரையே சாரும் என்பது கவனிக்கத்தக்கது. மாணவரின் சமநிலை ஆளுமை விருத்தியுடன் தொடர்பான காரணிகளாகப் பின்வருவன வரையறுக்கப்பட்டுள்ளன.

1. அறிவுசார் திறன்கள்
2. மனவெழுச்சிப் பண்புகள்
3. உளவியக்கத் திறன்கள்
4. சமூகமயத் திறன்கள்
5. கற்றலோடு தொடர்பான ஆளுமைப் பண்புகள்

இவற்றினூடாக மாணவரிடையே ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்யலாம்.

**அறிவுசார் திறன்களை விருத்தி செய்தல்**

அறிவுசார் திறன்கள் என்பதனால் கருதப்படுவது மாணவரிடத்தே கட்டியெழுப்பப்படும் அறிவும் தகவல்களும் அத்தகவல்கள் தொடர்பான அறிவாற்றல்களுமாகும். அறிவும் அதனைக் கையாள்வதனால் ஏற்படும் நுண்ணறிவுத்திறன ரீதியான ஆற்றலும் அறிவுசார் புலத்தில் இடம்பெறும். பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஒவ்வொரு வகுப்புகளுக்கும் ஒதுக்கப்பட்ட பாடங்களினூடாக இந்த அறிவு மாணவர்களுக்கு ஊட்டப்படுகிறது. இதனை ஒவ்வொரு ஆசிரியர்களும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் தரம் - 1 (Grade - 1 ) தரம்-2 (Grade - 2) தரம்-3 (Grade - 3) என வகுப்பு மட்டங்கள் அதிகரிப்புக்கு ஏற்ப பாடங்களின் உள்ளடக்கமும் அவற்றினூடாக மாணவரது அறிவு மட்டமும் அனுபவங்களும் அதிகரித்துச் செல்வதால் அந்தந்த வகுப்புகளுக்கு உரிய விடயங்கள் தவறாமல் கொடுக்கப்படவேண்டியது கட்டாயமானது. இது அந்தந்தப் பாடங்களுக்குரிய ஆசிரியர்களுக்குரிய பொறுப்பாகும். ஆளுமையின் அடிப்படையே அறிவு விருத்தியில்தான் தங்கியுள்ளது. இது முழுவதுமாக ஆசிரியரின் கையில்தான் தங்கியுள்ளது.

அறிவுசார் புலத்தின் கீழ் அறிவுத் திறன்கள், கல்வித்துறை உளச்சார்பு, கற்கும் திறமை, பிரசினங்களைத் தீர்க்கும் திறமை, சவால்களை வெற்றி கொள்ளும் திறமை, என்பவற்றுடன் **பெஞ்சமின் புளும்** என்பாரால் வகைப்படுத்தப்பட்ட கீழ்வரும் அறிவின் கூறுகளும் இடம்பெறுகின்றன.

1. அறிவு – மீட்டறியும் திறன்
2. விளக்கம் /கிரகித்தல் - கிரகித்துத் தனது சொந்த வார்த்தைகளில் கூறும் திறன்
3. பிரயோகம் - கற்ற தத்துவங்களை வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தும் திறமை
4. பகுப்பு – தெரிந்தவற்றைப் பகுத்துணரும் திறமை
5. தொகுப்பு – முழுமையைக் கட்டியெழுப்பும் திறமை
6. மதிப்பீடு– குறித்த அளவுகோல்களுக்கேற்ப தீர்மானம் எடுக்கும் திறமை

மேலே உள்ளவாறு அறிவிலிருந்து மதிப்பீடு வரை இலகுவிலிருந்து இருந்து கடினம் வரை உளத்திறன்கள் விருத்தியடைந்து செல்கின்றன. இதற்கான பயிற்சிகளை வகுப்பறையில் கற்றல் - கற்பித்தல் இடம்பெறும் வேளையில் ஆசிரியர் திட்டமிட்டு செயற்படுத்த தவறக் கூடாது. இதனூடாக மாணவரது அறிவாற்றல் விருத்தியடைவதுடன் பரீட்சைக்கு முகங்கொடுக்கும் ஆற்றலும் வளர்ச்சியடையும்.

இதற்காக ஆசிரியரது கற்பித்தல் அணுகு முறைகள், மாணவரது கற்றல் நுட்பங்கள் என்பவற்றை வினைத்திறனாக முன்னெடுப்பதன் மூலம் அறிவுசார் திறன்கள் மாணவரிடையே விருத்தியடையும். பல்வேறு கற்றல் நுட்பங்களாகக் கீழ்வருவனவற்றை மாணவர்களுக்கு எடுத்துரைக்க முடியும்.

- குறிப்பெடுத்துக் கற்றல் - முக்கிய விடயங்களைக் குறிப்பெடுத்தலாகும்
- கருத்தூன்றிக் கற்றல் - முக்கிய கருத்துக்களை உன்னிப்பாக விளங்கிக் கொள்ளுதல்.
- கண்டறிதல் மூலம் கற்றல் - உண்மை நிலையைக் கணடுபிடித்துக் கற்றல்.
- ரேப் றெக்காடர் முறையைப் பின்பற்றிக் கற்றல் - முக்கிய விடயங்களைச் சொந்தக் குரலில் பேசி ரேப்றெக்கார்டரில் பதிவு செய்து பின்னர் அதனைக் கேட்டுக் கற்றலாகும்.
- குரலில் ஏற்ற இறக்கத்துடன் கற்றல் - இதனால் குரல் மென்மையாகிக் கற்க உதவுகிறது.
- ரியூன் முறையைப் பயன்படுத்திக் கற்றல் - பாடங்களைப் பாடல் வடிவில் இசையமைத்தக் கற்றல்
- மனவரை படமுறையில் கற்றல் - வட்டம் அல்லது சட்டம் அமைத்து அதனுள் முக்கிய விடயங்களை எழத் மனதில் பதித்தல்
- பிரதிபலித்தல் மூலம் கற்றல் - ஏற்கனவே பெற்ற அறிவுடன் தொடர்புபடுத்தி கற்றலாகும்.
- வினாக்களை எழுப்பிக் கற்றல் - ஒரு அலகில் வரும் முக்கிய விடயங்கள் விடையாக வருமாறு வினாக்களைக் கேட்டுக் கற்றல்
- மீட்டிப் பார்ப்பதன் மூலம் கற்றல் - கற்றவற்றை மீட்டி மீட்டி ஞாபகப்படுத்திக் கற்றல்
- விளங்கிக் கொண்டு கற்றல் - கோட்பாடுகள் முக்கிய எண்ணக் கருக்களை விளங்கிக் கொள்ளல்
- நின்று நடந்து கற்றல் - இதன் மூலம் விளங்கும் தன்மை அதிகரிக்கும்.

இவை போன்ற பல்வேறு கற்றல் நுட்பங்களை மாணவர்களுக்கு சொல்லிக் காட்டிக் கற்றலைத் தூண்ட வேண்டும்.

இதே போல ஆசிரியர் மாணவரை மையமாகக் கொண்டு மாணவர்களின் பல்வகையைப் பரிந்து கொண்டு கவர்ச்சிகரமான கற்பித்தல் அணுகுமுறைகளைக் கையாள வேண்டும். எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளின் அறிவுமட்ட விருத்திக்கு எங்களது முழு இயலுமையையும் பயன்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும்.

**மனவெழுச்சிப் பண்புகளை விருத்தி செய்தல்**

வகுப்பறையில் ஆசிரியரினால் கற்பிக்கப்படும் தகவல்கள், கற்பிப்பதற்காக பயன்படுத்தப்படும் முறைகள், நுட்பங்கள், ஆசிரியரது செயற்பாடுகள், ஆகியன காரணமாக மாணவருள் விருத்தியடையும் மனப்பாங்குகள், நற்பண்புகள், பழக்க வழக்கங்கள், ஆசாரங்கள், விழுமியங்கள் போன்ற நல்ல மனிதர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய பண்புகளே மனவெழுச்சிப் பண்புகளாகும். ஒரு சிறந்த மனிதராக சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான நற்பண்புகளே இவையாகும். இப்பண்புகள் ஆளுமையின் பிரதான அம்சமாகும். இப்பண்புகளினூடாக நற்பிரசைகளை உருவாக்கி ஆளுமை மிக்கவர்களாக சமூகத்திற்கு ஒப்படைத்தல் கல்வியின் ஓர் நோக்கமாகக் கொள்ளப்படுகிறது.

இந்த நற்பண்புகளை வளர்ப்பதற்காக ஆசிரியர்கள் கடும் பிரயத்தனத்தை மேற்கொள்வதை யாவரும் அறிவர். வேறுபட்ட குடும்பச் சூழலிலும் சமூகச் சூழலிலுமிருந்து வரும் பிள்ளைகளிடத்தே இப்பண்புகளில் வேறுபாட்டை நன்கு அவதானிக்கலாம். பிறழ்வான குணாம்சங்களும் சில பிள்ளைகளிடத்தில் காண முடிகிறது. இவை பெற்றோரின் பழக்கவழக்கங்கள், வாழும் சூழலிருந்து கொண்டு வரப்பட்டவனவாகும். இப்பண்புகளை வளரவிடும் போதே பிற்காலத்தில் சமூகச் சீர்கேடுகள் இடம்பெற வழிவகுக்கின்றன. தீய குணாம்சங்களை நீக்கி நற்பண்புகளை வளர்ப்பதற்காக பாடசாலையில் மேற்கொள்ளக் கூடிய வழிமுறைகள் கீழ்வருவனவாகும்.

- காலை ஒன்றுக்கூடலின் போது மாணவரைக் கொண்டே நற்சிந்தனைகளை நாளாந்தம் ஒழுங்குமுறைப்படி நடைமுறைப்படுத்துதல்.
- மன்றச் செயற்பாடுகளில் நற்பண்புகளை வளர்க்கக் கூடிய நாடகங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை செய்து காட்டலின் ஊடாக உணர வைத்தல்
- வருடாந்த விளையாட்டுப்போட்டி நிகழ்ச்சியின் போது இல்லங்களினூடாக நற்பண்புகளை எடுத்தரைத்தல்
- கல்விச் சுற்றலாக்களின் போது மற்ற மாணவருடன் நடந்து கொள்ளவேண்டிய முறைகளை மாணவர்களுக்கு விளக்கிக் கூறுதல்
- நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ளும் மாணவர்களை வருடந்தோறும் இனங்கண்டு தெரிவு செய்து அவர்களின் முன்மாதிரிகளைப் பாராட்டிக் கௌரவித்தல்

**உளவியக்கத் திறன்களை விருத்தி செய்தல்**

இது மாணவரது உடலியக்கத் திறமைகளைக் குறிக்கும். ஒருவரது தசைநார் இயக்கத்துடன் தொடர்புடைய உடற் செயற்பாடுகள் இவையாகும். ஓடுதல், ஆடுதல், வெட்டுதல், கொத்துதல், எறிதல், பொருளொன்றை ஆக்குதல் போன்ற உடற்செயற்பாடுகள் யாவும் இதில் அடங்கும். மாணவர்களிடத்தில் காணப்படும் பல்வேறு இவ்வகைத் திறமைகளை இனங்கண்டு வளர்த்தல் முக்கியமானதாகும். பாடசாலைக் கலைத்திட்டத்தில் செய்முறைப் பாடங்கள் ஊடாக இத்திறன்களை வளர்க்கும்

செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதைக் காணலாம். செயல்முறை சார்ந்த பாடங்கள் பெரும்பாலும் உள இயக்கம் சார் திறன்களை இலக்காகக் கொண்டே கற்பிக்கப்படுகின்றன. மனையியல், கைவினை, மரவேலை, தையல், விவசாயம் உலோக வேலை, வாழ்க்கைத் திறன் கல்வி, கணனிக் கல்வி, போன்ற பாடங்களில் மாணவர்களுக்கு உள இயக்கம் சார் திறன்களுக்கான வாய்ப்புக் கிடைக்கிறது. விஞ்ஞானம், சித்திரம், சங்கீதம், நடனம், போன்ற பாடங்கள் மூலமாகவும் அத்துறை சார்ந்த ஆற்றல்கள் வளர்க்கப்படுகின்றன. புதிய கலைத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயற்றிட்டத்தின் மூலமும் உள இயக்க ஆற்றல் விருத்திக்கு வழியேற்படுகிறது. மாணவர்களிடையே காணப்படும் பல்வேறுபட்ட இத்தகைய ஆற்றல்கள் அவர்களது உளச்சார்பாகும். (Aptitude) செயல்முறைப் பாடங்களினுடாகவும் அவர்களின் தனிப்பட்ட திறமைகளை இனங்கண்டும் வளர்க்கவேண்டியது அவசியமானது.

மாணவரிடையே உளவியக்கத் திறன்களை வளர்க்கும் முறைகள் வருமாறு:

- மாணவரிடையே பொதிந்துள்ள உளச்சார்புகளை இனங்காணும் பயிற்சிகளை ஏற்பாடு செய்து இயல்பான திறமைகளை இனங்காணுதல் (பாடுதல், நடனம், நடித்தல், விளையாட்டு, கனணி இயக்கம், பொன்றன)
- இனங்கண்ட திறமைகளில் மாணவரகளை ஈடுபடுத்தி வளர்ப்பதற்கான பயிற்சிகளை ஒழுங்குப்படுத்திச் செயற்படுத்துதல்
- புத்தாக்கச் செயற்பாடுகளில் ஒவ்வொரு பாடத்துறைகளிலும் ஈடுபடுவதற்கு வழிகாட்டி நெறிப்படுத்துதல். மாணவர்களின் புத்தாக்கங்களைக் கணித்தல், பரிசு வழங்குதல், பாராட்டிக் கௌரவித்தல்.
- செயற்றிட்டங்களுக்கான சந்தர்ப்பங்களை வழங்கி அவற்றை வழிகாட்டி நெறிப்படுத்தி ஊக்குவித்தல்
- தேசியரீதியிலான போட்டிச் சந்தர்ப்பங்களை நழுவவிடாது கலந்து கொள்ள வழியேற்படுத்துதல்
- கலை விழாக்கள் மற்றம் மன்றச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் போது இயன்றளவு எல்லா மாணவர்களும் பங்குபற்றச் சந்தர்ப்பம் வழங்குதல்

இவை போன்ற செயற்பாடுகள் மூலம் மாணவரிடையே ஆளுமையை விருத்தி செய்யலாம்.

**சமூகத்திறன்களை விருத்தி செய்தல்**

யாதாயினும் சமூகத்தில் அங்கத்தவராக இணைந்து செயற்படத் தேவையான திறன்களே இவையாகும். அத்தகைய சமூகத் திறன்கள் வருமாறு:

- பொறுமையுடன் செயற்படுதல்
- மற்றையோர் கருத்தை மதித்தல்
- தலைமைத்துவத்தை ஏற்றல்

- தலைமையை மதித்தல்
- புதிய நிலைமைக்கேற்றாற் போல் இசைவடைதல்
- குழுவாகச் சேர்ந்து இயங்குதல்
- குழுவின் வெற்றிக்காகப் பாடுபடுதல்

இத்தகைய பண்புகள் சமூகப்பிராணி என்ற வகையில் சமூகத்தில் ஏனையோருடன் இணைந்து வாழ்வதற்கு அவசியமானவையாகும். இதற்கான அடித்தளத்தைப் பாடசாலைகளிலேயே சரியாக இட வேண்டும். சமாதானமாகவும், ஒற்றுமையாகவும், மற்றவர்களுடன் சேர்ந்து வாழ்வதற்குரிய பயிற்சியையும், முன்மாதிரியையும் பாடசாலைகளில் வழங்க வேண்டியது அவசியமாகும். இது வாழப்போகும் சமூகத்தில் ஆளுமைமிக்க ஒருவராக நடந்து கொள்வதற்கு வேண்டிய பண்பாகும். இதற்கான பயிற்சி சந்தர்ப்பங்கள் பாடசாலையில் நிறைய உள்ளன. ஆயினும் இவற்றில் ஆசிரியரது பங்களிப்பு மகத்தானது.

சமூகத் திறன்களை வளர்க்கக் கூடிய முறைகள் வருமாறு:

- வகுப்பறையில் கற்றல – கற்பித்தற் செயற்பாட்டின் போது குழுச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்தல். இதன் மூலம் குழுவாக இயங்குதல் மற்றயோர் கருத்துக்களை மதித்தல் ஏற்றுக் கொள்ளல் தலைமையை மதித்தல், குழுவை சேர்ந்தவர்களை வெற்றியடையச் செய்தல் என்னும் பண்புகள் வளர்ச்சியடைகின்றன.
- குழு ஒப்படை, குழுச் செயற்றிட்டங்களை ஏற்பாடு செய்து நடைமுறைப்படுத்தும் போது மேற்படி பண்புகள் விருத்தியடைகின்றன.
- களச்சுற்றுலாவை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்தல். இதன்போது ஏனையோருக்கு உதவி செய்தல், கூட்டாகப் பொறுப்புகளை வகித்தல் என்னும் பண்புகள் வளர்கின்றன.
- மன்றச்செயற்பாடுகளின் பொது சமூகச் சிந்தனை எண்ணக்கருவை மையமாகக் கொண்ட நாடகங்கள் போன்ற நிகழ்ச்சிகளை நடாத்துதல்
- சமூக நல நிறுவனங்கள், அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள், சிறுவர் இல்லங்கள் போன்றவற்றை மாணவர்கள் தரிசிப்பதற்கான சந்தர்ப்பங்களை எற்பாடு செய்து அனுதாப உணர்வு, உதவி செய்யும் மனப்பான்மை என்பவற்றை ஏற்படுத்ததல்

இத்தகைய செயற்பாடுகள் மூலம் மாணவரிடையே சமூகத் திறன்களை விருத்தி செய்து ஆளுமையை விருத்தி செய்யலாம்.

**கற்றலோடு தொடர்புடைய ஆளுமைப் பண்பை விருத்தி செய்தல்**

கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டின் போது மாணவரது கற்றல் செயல் முறையில் ஆளுமைப் பண்புகள் வெளிப்படுகின்றன. அத்தகைய ஆளுமைப்பண்புகள் வருமாறு:

- குழுவாக இயங்குவதில் விருப்பங் காட்டுதல்
- எவ்வேளையிலும் முகத்தில் களையுடன் /சிரித்த முகத்துடன் துலங்குதல்
- வாயாடித்தனம் புலப்படும்படியாகச் செயற்படுதல்
- மற்றையோரின் கருத்துக்களைச் செவிமெடுக்க விரும்புதல்
- தமது சொல் செயல்களில் திருப்தியடைதல்
- பெரும்பாலான வேலைகளில் முன்னிற்றல்
- உற்சாகத்தோடு கடமைகளில் ஈடுபடுதல்
- மனமகிழ்ச்சியோடு கடமை செய்தல்

இத்தகைய நிலைமைகளை வகுப்பறைச் செயற்பாட்டின்போது இனங்காண முடியும். இப்பண்புகளை மேலும் விருத்தி செய்வதற்கு வகுப்பறைச் சூழல், ஆசிரியர் செயற்பாடு தொடர்பில் பின்பற்றவேண்டிய வழிகள் வருமாறு:

- கற்றலுக்குப் பொருத்தமான வகுப்பறை ஒழுங்கமைப்பை ஏற்படுத்துதல்
- கவர்ச்சிகரமான வகுப்பறைச் சூழலை ஒழங்குபடுத்துதல் (தர உள்ளீடுகள் உட்பட)
- பொருத்தமான கற்பித்தல் அணுகுமுறைகளைக் கையாளுதல்
- ஆசிரியர் – மாணவர், மாணவர் -- மாணவர் இடைத்தொடர்பை நல்ல முறையில் பேணுதல்
- வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துதல்
- கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் போது மாணவர்களுக்கான கருத்துச் சுதந்திரத்திற்கு அதிக சந்தர்ப்பம் வழங்குதல்
- ஆசிரியர் சிறந்த மொழித் தொடர்பாடலைக் கையாள்தல்
- ஆசிரியரின் நடத்தைகள், நடை, உடை பாவனை தொடர்பில் சிறந்த ஆசிரியருக்குரிய பண்புகளை வெளிப்படுத்துதல்
- அறிக்கைகளைத் தயாரித்து முன்வைப்பதற்கான செயற்பாடுகள் சந்தர்ப்பங்களை அதிகளவில் மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல்

இத்தகைய நடைமுறைகளைக் கையாளும்போது கற்றலில் மாணவரது ஈடுபாடும் ஆர்வமும் பாடசாலை வரவும் அதிகரித்து கற்றலோடு தொடர்பான ஆளுமைப் பண்புகள் மாணவரிடையே விருத்தியடையும்.

இவ்வாறாக மாணவரிடையே அறிவுசார் திறன்கள், எழுச்சிசார் பண்புகள், உளவியக்கத் திறன்கள், சமூகமயத்திறன்கள், கற்றலோடு தொடர்புடைய ஆளுமைப் பண்புகள், என்பவற்றை மாணவரிடையே விருத்தி செய்வதன் மூலம் மாணவரது ஆளுமைப்பண்புகள் விருத்தியடையும். இதற்குப் பாடசாலையின் ஒட்டுமொத்த ஆளணியினரின் புரிந்து கொள்ளலும் அர்ப்பணிப்பான சிந்தனையுடன் கூடிய மனப்பாங்கும் அவசியமாகும்.

# பாடசாலைகளில் தொழில் வழிகாட்டல்

**பொன் இராமதாஸ்,**
விரிவுரையாளர்
கல்விபீடம்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

தொழில் வழிகாட்டல் எனப்படுவது தனியாள் ஒருவர் வாழ்க்கையில் எந்தவொரு கட்டத்திலும் தமது வாழ்க்கைக்காக தொழில் ஒன்றினை பெற்றுக் கொள்வதற்காக கல்வியூட்டுதல், பயிற்றுவித்தல், மற்றும் தொழில் ஒன்றை தெரிவுசெய்துக் கொள்ளல் என்பவற்றுக்காக வழங்கப்படும் சேவைகள் மற்றும் செயற்பாடுகளை குறிக்கும். இத்தகைய சேவைகளை பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள், பயிற்சி நிறுவனங்கள், பொது தொழில் வழங்கும் சேவைப்பகுதியினர், தொழில் இடங்கள், சமூகத்தின் தொணடர் அமைப்புகள், மற்றும் தனியார் துறையினர் போன்ற தரப்பினர்களால் வழங்க முடியும் .

போட்டி மிகுந்த பொருளாதாரத்தில் பொருளுள்ளதும் செயலாற்றுகை மிக்கதுமான வாழ்க்கையை வாழ்வதற்கு, தொழில் உலகு வேண்டி நிற்கின்ற தொழில் திறன்களை மாணவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதில் பாடசாலை தொழில் வழிகாட்டல் ஒரு பிரதான பிரச்சினை வகிக்க முடியும், பாடசாலை தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மாணவர்களின் கல்வி, மற்றும் தொழில் தீர்மானங்கள் அவர்களுடைய கல்வி அடைவு என்பவற்றை மேம்படுத்துவதில் ஒரு நேரான தாக்கத்தை செலுத்த முடியும்.

**பாடசாலை கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல்**

தொழில்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலைகளில் விசேடமாக தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக் கூறுதல் முக்கியத்துவம் பெறுகின்றது. பாடசாலை மட்டத்தில் போதுமானளவு தொழில் வழிகாட்டல் கிடைக்காமையினால் பெருமளவு மாணவர்கள் அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கான தொழில் ஒன்றினை தெரிவு செய்வதிலும் அதற்கான தொடர் பயிற்சிகளை பெற்றுக் கொள்வதிலும் இடர்படுகின்றனர். (EFA, UNESCO, 2010) பொருத்தமான தொழில் வழிகாட்டல் ஆலோசனைக் கூறல் மூலம் மாணவர்களுக்கு தொழிலுக்கான மேலதிக கல்வி மற்றும் பயிற்சி ஆரம்பக் கட்டத்திலேயே வாழ்க்கைக்கான பொருத்தமான தொழில் ஒன்றினை தெரிவு செய்து கொள்ளுதல் போன்றவற்றுக்கு உதவ முடியும். இதன் மூலம் தொழில் பற்றிய நேர மனப்பாங்கு திறன் மற்றும் அறிவு தொழில் வாய்ப்புகள் மற்றும் தொழில் தெரிவுகள் தொழில் பற்றிய தீர்மானங்கள், எதிர்கால வாழ்க்கைக்கான தொழில்களை திட்டமிடுதல் என்பவற்றினை மாணவர்களிடத்தில் மேம்படுத்தலாம். மேலும் மாணவர்கள் தொழில் நுட்பப் பாடங்களை பொருத்தமாக தெரிவு செய்தல், உயர் தரத்தில் பாடநெறிகளை தெரிவு செய்தல், மற்றும் பொருத்தமான தொழில் இடப்படுத்தலை தெரிவு செய்தல் என்பவற்றுக்கும் வழிகாட்டல் முக்கியமானது. இவ்வாறு பொருத்தமான பாடங்கள், பாடநெறிகளை தெரிவு செய்வதன் ஊடாக எதிர்கால வாழ்க்கையில் தொழில் தொடர்பாக தான் செல்ல வேண்டிய தொழில் பாதையை ( Career bath) தீர்மானிப்பதற்கும் உதவும்.

**தொழில் வழிகாட்டல் ஏன் தேவைப்படுகின்றது**

தொழில் வழிகாட்டல் மாணவர்கள் தமது வாழ்க்கை இலட்சியம், ஆர்வங்கள், தகைமைகள், மற்றும் இயலுமைகள் பற்றிய சுய பிரதிபலிப்பினை பெற்றுக் கொள்வதற்கும் உதவும். இது அவர்களுக்கு தொழில் மற்றும் கல்வி முறைமை பற்றிய விளக்கத்தினைப் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக தம்மை தொழில் கற்கை நிலைமைகளோடு தொடர்புபடுத்தி சிந்திப்பதற்கு தூண்டும், தொழில் வழிகாட்டும்

ஆசிரியர் மாணவர்கள் தொழில் தொடர்பான திட்டமிடுதலை செய்வதற்கும், தொழில் மற்றும் கல்வி தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் கற்பிப்பார். இந்த விளக்கத்தின் அடிப்படையில் மாணவர்கள் தொழில் சந்தை பற்றிய தகவல்களையும் அத்தொழில்களுக்கான கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

பாடசாலை தொழில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை மூலம் கல்வி முறைமையில் இருந்து கல்வியை நிறைவு செய்து வெளியேறும் மாணவர்களை தொழில் சந்தையுடன் பொருத்தப்பாடு அடையச் செய்வதனூடாக கல்வியின் வினைத்திறனை மேம்படுத்தலாம். இளைஞர்கள் மத்தியில் நிலவும் தொழில் இல்லாமை பிரச்சினைக்கு, அவர்களது தனியாள் திறமைகள், தகைமைகள், திறன்கள் என்பவற்றை தொழில் வழங்குனர் எதிர்பார்க்கும் எதிர்பார்ப்புக்களுடன் தொடர்புப்படுத்துவதனூடாக தொழில் இல்லாமை பிரச்சினையை குறைக்கலாம்.

ஒரு சிறப்பான வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மாணவர் இடைவிலகளை குறைக்கலாம். மாணவர்களிடத்தில் அவர்களது இயலுமைகள், ஆற்றல்கள், பற்றி ஒரு ஆழமான விளக்கத்தினை வழிகாட்டல் ஆலோசனை கூறும் ஆசிரியர் ஏற்படுத்துவதன் மூலம் மாணவர் தமது கல்வி தொடர்பில் தைரியமான முடிவுகளை மேற்கொள்வதற்கு இட்டுச் செல்ல முடியும்.

இலங்கையில் இளைஞர்கள் மத்தியில் உயர் தொழில் இல்லாமை பிரச்சினை காணப்படுகின்றது. இது கல்வி கற்காதவர்களை விட, கல்வி கற்ற இளைஞர்களிடத்தில் உயர்வாகவுள்ளது. இதில் மூன்று முக்கிய காரணங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றது. முதலாவது கல்வி முறைமை தொழில் உலகு எதிர்பார்க்கும் திறன்களை பெற்றுக் கொடுக்காமையாகும். இரண்டாவது கல்வி முறைமையில் இருந்து வெளியேறும் இளைஞர்களை உள்ளீர்க்கக்கூடிய விதத்தில் தொழில் சந்தை விரிவடையாமையாகும். இதற்கு காரணம் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதமானது மிகவும் மந்தகதியிலேயே வளர்ச்சியடைகின்றமையாகும். இத்தகைய நிலைமையில் அதிகமான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவது சிரமமானதாகும். மூன்றாவது இளைஞர்களின் எதிர்ப்பார்ப்புகளும் தொழில் சந்தையில் கிடைக்க கூடியதாகவுள்ள தொழில்களும் ஆகும். பெரும்பாலான கல்விக்கற்ற இளைஞர்கள் தனியார் துறை தொழில்கள் மற்றும் சுய தொழில்களை விட குறைவான சம்பளமாயினும் அரச துறைசார்ந்த தொழில்களையே எதிர்பார்க்கின்றனர்.

**தொழில் வழிகாட்டலின் இலக்குகள்**

பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை கூறலுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள், மாணவர்கள் தமது பலங்கள், பலவீனங்கள் தொழில் சந்தை தொடர்பான தகவல் பற்றிய விழிப்புணர்வை பெற்றுக்கொள்வதற்கான தேர்ச்சிகளை பெற்றுக் கொடுக்க வேண்டும். பார்ஸன் என்பவர் 1909 ஆம் ஆண்டு தொழில் வழிகாட்டலின் இலக்குகளாக பின்வருவனவற்றை முன்வைத்துள்ளார்.

1. தனியாள் தன்னைப்பற்றியும் தனது உளச்சார்பு இயலுமைகள், ஆர்வங்கள், இலட்சியங்கள், வளங்கள், மட்டுப்பாடுகள் மற்றும் அவற்றுக்கான காரணங்கள் பற்றி தெளிவான விளக்கத்தினைப் பெற்றுக் கொடுத்தல். ( தனியார் பற்றிய பகுப்பாய்வு)
2. தொழில் சந்தையில் கிடைக்கக்கூடியதாகவுள்ள வேலை வாய்ப்புகள் அவற்றை பெற்றுக் கொள்வதற்கான தேவைப்பாடுகள் மற்றும் அத்தொழில் வெற்றிப் பெறுவதற்கான நிபந்தனைகள், அனுகூலங்கள், பிரதிகூலங்கள் பணிக் கொடைகள், சந்தர்ப்பங்கள் போன்றன பற்றிய விளக்கத்தினை பெற்றுக் கொடுத்தல். ( தொழில் பற்றிய பகுப்பாய்வு)

3. தனியாளின் பண்புக்கூறுகள் மற்றும் தொழில்களின் தன்மைகள் என்பவற்றுக்கிடையில் பகுப்பாய்வினை செய்வதன் ஊடாக தனியாள் தனக்குப் பொருத்தமான தொழிலை தெரிவு செய்வதற்கான வழிகாட்டல்( தனியாள் மற்றும் தொழில் பற்றிய இயைபின் அடிப்படையில் தொழில் தீர்மானத்தினை மேற்கொள்ளல்)

சர்வதேச தொழிலாளர் அமைப்பு 2004 ஆம் ஆண்டு தொழில் வழிகாட்டலுக்கான இலக்குகளாக பின்வருவனவற்றை முன்வைத்துள்ளது. இதில் தொழில் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொடுத்தல் தொழில் வழிகாட்டல் சேவையின் அடிப்படை விடயமாகவுள்ளது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

1. தொழில்கள் தொடர்பான மிகவும் சரியானதும் செம்மையானதுமான தகவல்களை வழங்குவதன் ஊடாக தனியாள் (மாணவர்) வேறுபட்ட கல்வி மற்றும் தொழில் தெரிவுகளை மேற்கொள்ளல் :
   பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைக் கூறல் ஆசிரியர் மாணவர்களுக்கு முறைசார் மற்றும் முறைசாரா தொழில் சந்தைப்பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இத்தகைய தகவல்கள் நாட்டின் பொருளாதாரம் மற்றும் தொழில்கள் தொடர்பான போக்குகள், தொழில் உள்ளடக்கம் மற்றும் தேவைப்படும் தேர்ச்சிகள், தொழில்களை நோக்கி நகர்தல், போன்றன பற்றியதாக இருக்க வேண்டும். மேலும் ஆசிரியர்களால் வழங்கப்படும் தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டதாகவும், மாணவர்களால் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் தேவையான போது சுயமாக பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.
2. ஒருவரின் சுய விழிப்புணர்வு, சுய வழிப்படுத்தல் மற்றும் வாழ்க்கைத் திறன்கள் அடிப்படையில் இலக்குகளை அமைத்துக் கொள்ளல், தொடர்ந்து கற்றல், எதிர்கால வேலை தொடர்பான விழுமியங்களை விருத்தி செய்தல் :
   வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக சில தொழில் திறன்கள் பெற்றுக்கொடுக்கப்படுதல் வேண்டும். இத்தகைய அடிப்படை தொழில் திறன்கள் தொழிலை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அத்தியாவசியமானவை. பெரும்பாலும் சுட்டிக்காட்டப்படும் அடிப்படைத்தொழில் திறன்களாக எவ்வாறு கற்பது என்பதை கற்றல் ( கற்றலுக்காக கற்றல்) வாசிப்பு, எழுத்து மற்றும் கனணி சார் தேர்ச்சிகள், வினைத்திறன் மிக்க செவிமடுத்தல் மற்றும் வாய் மொழிமூல தொடர்பாடல் திறன்கள், ஆக்கபூர்வமான சிந்தனைக்கூடாக தழுவிக்கொள்ளல் மற்றும் பிரச்சினைத் தீர்த்தல், தன்னடைவு மற்றும் தான் தொடங்காற்றல் தொடர்பான தனியாள் முகாமைத்துவம், ஆளிடைத்தொடர்புசார், திறன்கள், குழுவாக செயற்படுவதற்கான இயலுமை, அடிப்படையான தொழிநுட்பத் திறன்கள் மற்றும் வினைத்திறன்மிக்க தலைமைத்துவம் போன்றவற்றை Riordan மற்றும் Rosas ( 2003) போன்றோர் சுட்டி காட்டியுள்ளனர்.
3. தொழில் உலகில் காணப்படும் சகலவிதமான தொழில்களும் சமூகத்தின் நிலவுகை மற்றும் நிலைப்பேற்றிற்கு அத்தியாவசியமானவை என்னும் நேர் மனப்பாங்கினையும், விழுமியங்களையும் பாடசாலை மாணவர்களிடத்தில் விருத்தி செய்தல் வேண்டும்.
4. மாணவர்கள் தமது பெற்றோர் மற்றும் தொழில் வழங்குனர்கள் எதிர்பார்க்கும் திறன்கள் மற்றும் மனப்பாங்குகளை நேரானதாக விருத்தி செய்துக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல் வேண்டும்.

**வழிகாட்டல் ஆலோசனை கூறும் ஆசிரியர்களின் வகிபாகமும் இயலுமைகளும்**
பொதுக்கல்வி தேசியக்கொள்கை சட்டகம் (2003) அறிக்கையில் கூறப்பட்டவாறு பாடசாலை முறைமை மற்றும் வழிகாட்டல் ஆலோசனைக் கூறும் ஆசிரியர்கள் மாணவர்கள் பின்வரும் தேவைகளை நிறைவு செய்யக்கூடியவாறு ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

1. பாடசாலை கலைத்திட்ட மாற்றங்கள், கற்றல் சூழல் மற்றும் மதிப்பீட்டு வழிமுறைகள், கற்றல் இடர்பாடுகள் மற்றும் கற்றலுக்கு கற்றல், மற்றும் முழுமையான அபிவிருத்திக்கான கேள்விகள் என்பவற்றை பூர்த்தி செய்தல்.
2. தனியாள் பிரச்சினைகள் மற்றும் மன அழுத்தங்களும் செயலிழந்த குடும்பங்களின் அதிகரிப்பினால் ஏற்படும் மனவெழுச்சி தளம்பல்கள், பெற்றார்களுக்கு இடையிலான முரண்பாடுகளும், வீட்டு வன்முறைகளும், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர்களை புறக்கணித்தல், பாடசாலை மற்றும் பொது இடங்களில் இடம்பெறும் பாலியல் துஷ்பிரயோகங்கள் பொருளாதார மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் கட்டிளமைப்பருவத்தினருக்கும் முதியோருக்கும் இடையில் நிலவும் பரம்பரை இடைவெளி முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் பிள்ளைகளிடத்தில் நிலவும் மனமுறிவுகள் போன்றவற்றுக்கான ஆலோசனைக்கூறல்
3. தொழில் சந்தைக்கான கேள்வியில் ஏற்பட்டு வரும் மாற்றங்களும் தொழில் வாய்ப்பின்மையினால் ஏற்படும் மனப்பாதிப்புக்களுக்கமான வழிகாட்டல்கள்

இத்தகைய தேவைகளின் அடிப்படையில் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் ஒரு பாடசாலையின் தேவைக்கு ஏற்ப ஒன்று அல்லது இரண்டு ஆசிரியர்கள் பாடசாலை ஆலோசகர்களாக நியமிக்க வேண்டும் என ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. பாடசாலை ஆலோசகர்கள் பல்வேறு வகிபாகங்களை ஆற்ற வேண்டியவர்களாக உள்ளனர். அவர்கள் வகுப்பறை மட்டங்களில் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் ஆலோசனை கூறுதல், வலய மட்டங்களில் காணப்படும் ஆசிரிய நிலையங்களின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளல் தனியார் மற்றம் குழு ஆலோசனை அமர்வுகள், நடத்துதல் போன்ற செயற்பாடுகளை செய்தல் வேண்டும். இதன்படி பாடசாலையின் ஆலோசகரின் சுய ஆர்வம் அர்ப்பணிப்பு இயலுமை என்பவற்றிலேயே பெரும்பாலும் பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையின் வெற்றி தங்கியுள்ளது.

பாடசாலை தொழில் வழிகாட்டல் நடவடிக்கைக்கான கைந்நூல் (2011) பாடசாலை தொழில் வழிகாட்டலுக்குப் பொறுப்பான ஆசிரியர் பரந்தளவிலான திறன்களையும், இயலுமைகளையும் விருத்தி செய்துக் கொள்ளுதல் வேண்டும் என குறிப்பிடுகின்றது. அந்த வகையில் நிறுவனத்தின் வகிபாகமும் நோக்கங்களும் எவ்வாறு தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளுக்கு உதவும் என்பது தொடர்பான விளக்கம், பரந்தளவிலான செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், திட்டமிடல் மற்றும் ஒழுங்கமைத்தலுக்கான இயலுமைகள், பரந்தளவிலான மக்களுடன் இடைத்தொடர்பு கொள்வதங்கான இயலுமை, மற்றவர்களுக்கு இசைவாக்கம் அடைவதோடு தழுவிக்கொள்வதற்கான இயலுமை, தொழில்கள் தொடர்பான தகவல்களை பெற்று பகுப்பாய்தல், கிடைக்க கூடியதாகவுள்ள உபகரணங்கள் மற்றும் வசதிகளில் உச்சளவிலான வினைத்திறன் மிக்க பயனை பெறுதல், சுயமாக செயலாற்றுகையை முகாமை செய்து சுய ஊக்கலை விருத்தி செய்துக் கொள்ளல், வாடிக்கையாளர்களின் (மாணவர்கள்) தேவைகளை இனங்காணல், ஒட்டுணர்வினையும் புரிந்துக் கொள்ளலையும் வெளிக்காட்டல், உள்ளூர் மட்டங்களில் காணப்படும் தொழில் சந்தைப் பற்றிய அறிவு, வழிகாட்டல் ஆலோசனை கூறலுக்குத் தேவையான தகைமைகளை பெற்றுக்கொள்ளல் போன்ற ஆற்றல்களை பாடசாலை ஆலோசகர்கள் வளர்ந்துக் கொள்ளல் வேண்டும்.

**பாடசாலை மட்டத்தில் தொழில் வழிகாட்டலுக்கான தகவல்கள்**

பாடசாலைகளில் தொழில் வழிகாட்டல் ஆலோசனை கூறல் சேவையினை திட்டமிட்டு ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்துவதற்கான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளை ஆசிரியர்கள் அறிந்திருத்தல் வேண்டும். அந்தவகையில் இலங்கையில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்கள், அவற்றில் காணப்படும் பாடநெறிகள், அவற்றைப் பின்பற்றுவதற்கு தேவையான அடிப்படைத்

தகைமைகள், பயிற்சியின் இறுதியில் பெற்றுக்கொள்ளக் கூடிய தொழில் வாய்ப்புக்கள் போன்ற தகவல்கள் தேவைப்படுகின்றன. அதனால் இப்பகுதியில் இத்தகைய தகவல்களை பெற்றுககொள்வதற்குத் தேவையான வழிகாட்டல் குறிப்புகள் தரப்பட்டுள்ளன

1. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு ( Tertiary and Vocational Education Commission) 1990 ஆம் ஆண்டு 20 இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் ஊடாக உருவாக்கப்பட்டது. மாறுகின்ற தொழில் சந்தை நிலைமைகளுக்கு அமைவாக தொழிற்கல்வி தொடர்பான கொள்கை அடிப்படைகளை உருவாக்கி அதன் தரத்தைப் பேணுதல் இவ்வமைப்பின் குறிக்கோள் ஆகும். இவ்வாணைக்குழு தொழிற்கல்வி பாடநெறிகளை வழங்கும் நிறுவனங்களை பதிவு செய்வதற்கான நியமங்களை விருத்தி செய்தல், நிறுவனங்களையும் பாடநெறிகளையும் பதிவு செய்து அங்கீகரித்தல், பாடநெறிகளுக்கான மதிப்பீட்டு நியமங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல், தேசிய தொழில்தகைமை ( National Vocational Qualification – NVQ) சான்றிதழ்கள் வழங்குதலை சான்றுப்படுத்தல் என்பவற்றை மேற்கொள்கின்றது. பாடசாலைகளில் தொழில் வழிகாட்டல்களை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் தங்களது மாணவர்களை தொழில் கல்விப் பயிற்சிக்காக வழிப்படுத்தும் போது குறிப்பிட்ட நிறுவனம் TVEC இல் பதிவு செய்யப்பட்டுள்ளதா? NVQ தரச்சான்றிதழை பெற்றுள்ளதா என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். காரணம் NVQ இலங்கையிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் தொழில்களை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான தகைமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் தொடர்பான மேலதிகத் தகவல்களை info@tves.gov.lk என்னும் மின்னஞ்சல் ஊடாக தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

2. தொழிநுட்பக் கல்விக்கும் பயிற்சிக்குமான திணைக்களம் ( Deperrtment of Technical Education and Training – DTET) 1893 ஆம் ஆண்டு மருதானை தொழிநுட்பக் கல்லூரியின் தோற்றத்துடன் உருவாக்கப்பட்டது. தற்போது இத்திணைக்களத்தின் கீழ் செயற்படும் 38 தொழிநுட்பக் கல்லூரிகள் நாட்டில் காணப்படுகின்றன. இவற்றில் 90 இற்கும் அதிகமான தொழில்கல்விப் பாடநெறிகள் காணப்படுகின்றன. இதற்கான மின்னஞ்சல் dtetinf@sltnet.lk என்பதாகும்.

3. தொழில் பயிற்சி அதிகாரசபை ( Vocational Training Authority – VTA) 1995 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தொழில் பயிற்சி அதிகாரசபை சட்டத்தினூடாக ஆரம்பிக்கப்பட்டது. தேசிய மட்டத்தில் ஏழு நிலையங்களும், மாவட்ட மட்டத்தில் 22 நிலையங்களும் காணப்படுகின்றன. 83 துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மேலதிக தகவல்களை info@vtasl.gov.lk மின்னஞ்சல் ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம். நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா மவுண்ட்மேரி கட்டடம், நோர்வூட் நீயுவெலி, வலப்பனை, ஹெல்பொட கட்டுகித்துலை, ஹங்குரங்கெத்த போன்ற இடங்களில் இதன் கிளை நிறுவனங்கள் இயங்குகின்றன.

4. தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகம் (University of Vacational Technotogy – UNIVOIEO) தொழில்சார் மற்றும் தொழிநுட்பப் பயிற்சி அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. இது இரத்மலானையில்

அமைந்துள்ளது. தொழில்நுட்ப கல்வியை பயிலும் மாணவர்களின் உயர்ச்சிக்கு உதவுவதற்காக இரணடு பீடங்களில் 8 துறைகளில் பட்டப்படிப்புகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் டிப்ளோமா கற்கைகளும் உள்ளன. univotec@univotec.ac.il என்னும் மின்னஞ்சல் ஊடாக மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

5. தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபை ( National Apprentice and Industrial Training Authourity – NAITA) தேசிய பயிலுனர் சபையாக 1971 இல் ஆரம்பிக்கப்பட்டு 1990 ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் ஊடாக தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையாக மாற்றப்பட்டது. நாடுதழுவிய ரீதியில் 40 ற்கும் அதிகமான கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது. நுவரெலியா மாவட்டத்தில் ஹாவாஎலிய, ஹட்டன் போன்ற இடங்களில் கிளைகள் உள்ளன. info@naita.gov,lk என்னும் மின்னஞ்சல் மூலம் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

6. வணிக முகாமைத்துவத்திற்கான தேசிய நிறுவகம் National Institute of Bisness Management NIBM) 1968 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் கூட்டுருவமாக்கப்பட்டது. கொழும்பு, காலி, குருநாகல், மற்றும் கண்டி ஆகிய இடங்களில் வியாபார முகாமைத்துவம் தொடர்பான பாடநெறிகளை நடத்தவருகின்றது. info@nibm.ik என்னும் மின்னஞ்சலில் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

7. சிலோன் ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம;( Ceylon Gernman Technical Training Institution – CGTTI) தானியங்கி மற்றும் தொழில்நுட்ப துறைகள் சார்ந்த பயிற்சிகைளை வழங்குவதாகும். பொரளை மற்றும் ரத்மலானையில் உள்ள இரு நிலையங்களிலும் 28 கற்கை நெறிகள் வழங்கப்படுகின்றன. மேலதிக தகவல்களை cgtti@sltnet.lk மின்னஞ்சல் ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம்.

8. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ( National Youth Service Councial – NYSC) 1979 ஆம் ஆண்டு 69 ஆம் ஆண்டு இலக்க சட்டத்தின் ஊடாக உருவாக்கப்பட்டது. இளைஞர்களின் கலைத்திறன் ஆக்கப்படைப்பு பண்பாட்டுத்திறன்களை வளர்ப்பதற்கும் தலைமைத்துவ பண்புகளை மேம்படுத்தவும் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஏனைய கைத்தொழில் மற்றும் வெளிநாட்டு மொழிகளும் கற்பிக்கப்படுகின்றன. info@ srilankayouth.lk மின்னஞ்சல் மூலம் தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

இன்றைய பாடசாலை கல்வி முறைமையினுள் சேர்ந்து கொள்ளும் சகல மாணவர்களும் கல்வியை பூரணமாகவும் வெற்றிகரமாகவும் நிறைவு செய்வது இல்லை. அவர்கள் பல்வேறு சமூக பொருளாதாரக் காரணிகளால் இடைவிலகுகின்றனர். அத்துடன் க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர் தரம் ஆகிய பரீட்சைகளில் சித்தியடைந்தவர்கள் அனைவருக்கும் இலகுவாக தொழில்கள் கிடைப்பதும் இல்லை. அவர்கள் அனைவரும் பல்கலைக்கழக உயர் கல்வியை நோக்கிச் செல்வதும் இல்லை. இவ்வாறு சித்தியடைந்தவர்களுக்கும் மேற்படி

பரீட்சைகளில் சித்தியடையத் தவறியவர்களுக்கும் வாழ்க்கைக்கான தொழில் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான தொழிற்கல்விக்கான வழிகாட்டல்கள் தேவைப்படுகின்றன. இத்தகையவர்களுக்கு பாடசாலை வழிகாட்டல் அலகினால் தேவையான தகவல்களை வழங்குவதற்கு அடிப்படைத் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு மேற்படி மூலங்கள் உதவி செய்யும். பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையை வழங்கும் ஆசிரியர்கள் TVEC இல் பதிவு செய்த NVQ தகைமைகள் கொண்டதான பாடநெறிகளை பின்பற்றுவதற்கு வழிகாட்டுதல் வேண்டும். NVQ தகைமைகள் இன்று அரச மற்றும் தனியாள் துறை தொழில்களுக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்களுக்கும் வேண்டப்படுகின்ற ஓர் அத்தியாவசியத் தகைமையாகவுள்ளது.

பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவைப்பிரிவு எதிர்நோக்கும் சவால்கள்

1. கல்வி அமைச்சு மட்டத்தில் தொழில் வழிகாட்டல் மற்றும் தொழிற்கல்விக்கான தெளிவான கொள்கைத்திட்டங்கள் இல்லாமை.
2. தேசிய, மாகாண வலய மட்டங்களில் சிறப்பாக செயற்படுத்துவதங்கான ஒழுங்கமைப்பு கட்டமைப்பு மற்றும் தொழில் கல்வி தகவல்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் போதுமானளவு இல்லாமை.
3. தொழிற்கல்வி தொடர்பான தகவல்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், பகிர்வு செய்தல், என்பவற்றுக்கு தேசியமட்டத்திலான வழிமுறைகள் காணப்படாமை.
4. பாடசாலை மட்டத்திலான தொழில் வழிகாட்டல் செயற்பாடுகள் முறையாக ஒழுங்கமைக்கப்படாமை.
5. தெளிவாக வரையறுக்கப்பட்ட தொழில்வழிகாட்டலுக்கான கட்டமைப்பு இல்லாமை, அதிபர்களின் நெறிப்படுத்தல் மற்றும் அர்ப்பணிப்பு, பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் கிடைப்பனவு, ஏனைய நிறுவனங்கள் உடனான தொடர்புகள், பொருத்தமாக தயாரிக்கப்பட்ட சாதனங்கள் போன்றவை விளைத்திறன் மிக்க தொழில் வழிகாட்டலுக்கு அத்தியாவசியமானவை.
6. தொழில் வழிகாட்டலுக்குப் பொறுப்பான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கானதும் அவர்களது தேர்ச்சிகளை இற்றைப்படுத்தி விருத்தி செய்வதற்குமான பொறிமுறைகள் இல்லாமை. தொழில் வழிகாட்டும் ஆசிரியர் மாணவர்கள், பெற்றோர் மற்றும் தொடர்புப்பட்ட வெளிவாரியான முகவர்களோடு தொடர்புக்கொள்வதில் முக்கியமான வளமாக இருப்பார்.
7. தொழில் வழிகாட்டலில் பெற்றோரின் ஈடுபாடு மிக குறைவாகும். ஆனால் பிள்ளையின் தொழில் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதில் பெற்றோரே முக்கிய பங்கினை வகிக்கின்றனர்.
8. பெற்றோர்களையும், மாணவர்களையும் வழிப்படுத்துவதற்கான நன்கு திட்டமிட்டு தயாரிக்கப்பட்ட வாசிப்போர் நேயமான வழிகாட்டல் கையேடுகள் கிடைப்பது குறைவாகும். இத்தகைய அச்சு மற்றும் இலத்திரனியல் வடிவத்திலான சாதனங்கள் தொழில் வழிகாட்டலுக்கு அத்தியாவசியமானவைகளாகும். தொழில் வழிகாட்டலுக்கு சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவதும் இன்னும் போதுமானளவு விரிவாக்கம் செய்யப்படவில்லை.

**பாடசாலை தொழில் வழிகாட்டலை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்**

1. பொதுக்கல்வியின் ஊடாக தொழில் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டலுக்கான கொள்கைகளை உருவாக்குதல் வேண்டும். இது உயர்கல்வி, தொழிநுட்பக்கல்வி மற்றும் தொழில் கல்வி பரப்புகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படல் வேண்டும். பாடசாலையின் வழக்கமான செயற்பாடுகளில் ஒன்றாக தொழிற்கல்வி வழிகாட்டலை கொண்டுவருதல் வேண்டும்.

2. கல்வி அமைச்சின் தகுதிவாய்ந்த ஓர் அதிகாரியின் பொறுப்பில் வரக்கூடியதாக தொழில் வழிகாட்டல் அலகினை தாபித்தல் வேண்டும். இவ்வலகு தகவல்களை சேகரித்து பகுப்பாய்வு செய்து தேவையான நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு பகிர்ந்தளித்தல் வேண்டும்.
3. வலய மட்டத்தில் வழிகாட்டல் ஆலோசனை கூறலுக்கு பொறுப்பாக இருக்கும் ஆசிரியர் ஆலோசகர் வலுவூட்டப்படுதல் வேண்டும். அதன் மூலம் தேவையான வழிகாட்டல், தகவல்கள் தொடர்புகள் என்பவற்றை பாடசாலை ஆலோசனைக்குப் பெற்றுக் கொடுக்கலாம்.
4. பாடசாலை மட்டத்தில் தொழில் வழிகாட்டல் தொடர்பில் அதிபர் ஆலோசகர் தொழில் வழிகாட்டலில் ஈடுபடும் ஆசிரியர்களின் பொறுப்புகள் மீள ஒழுங்கமைக்கப்படுவதோடு இவர்களுக்காக ஓர் செயலாற்றுகை தரங்கணிப்பீடு ஒன்றினை அறிமுகம் செய்தல் வேண்டும்.
5. ஆசிரியர்களுக்கு தொழில் வழிகாட்டல் தொடர்பான பயிற்சி பெற்றுக் கொடுக்கப்படுவதோடு ஒவ்வொரு பாடசாலையிலும் போதுமானளவு தொழில் வழிகாட்டுனர் இருப்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இவர்களுக்கு காலத்திற்குக் காலம் தொடர் பயிற்சிகள் வழங்கப்பட்டு தொழில் வழிகாட்டல் தொடர்பான வாண்மைத்துவ தேர்ச்சிகள் மேம்படுத்தப்படல் வேண்டும்.
6. பிள்ளைகளின் தொழில் வழிகாட்டலில் ஆசிய பிராந்திய நாடுகளைச் சேர்ந்த பெற்றோர்கள் முக்கியமான பங்கினை வகிப்பதால் பாடசாலை தொழில் வழிகாட்டலில் பெற்றோரின் பங்குபற்றுதலை ஊக்குவிக்க வேண்டும் இதற்காக பொதுசன ஊடகங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.
7. பாடசாலைக்கு வெளியில் உள்ள பல்கலைக்கழகங்கள், TVET பழைய மாணவர்கள் கைத்தொழில் நிறுவனங்களைக் கொண்டு முகவர்களை கொண்டு தொழில் வழிகாட்டல் செயலமர்வுகளை மேற்கொள்ளலாம்.

முடிவுரை

பாடசாலை மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் பொதுக்கல்வி அவர்கள் எதிர்காலத்தில் ஈடுபடவுள்ள தொழில் தொடர்பான உளச்சார்பினையும் தொழிலுக்குத் தேவையான அடிப்படைத்திறன்களையும் விருத்தி செய்து கொள்வதற்கு உதவுதல் வேண்டும். இதற்கு அத்தியாவசியமான பாடங்களையும் பாடநெறிகளையும் தெரிவு செய்து கற்பதற்கான வழிகாட்டலினை ஓர் வாண்மைத்துவ தேர்ச்சிமிக்க ஆலோசகரினாலேயே வழங்க முடியும். இதற்கேற்றவாறு பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் அடிப்படைகளையும் அதன் முக்கியத்துவத்தையும் விளங்கிக் கொள்வதற்கும் வழிகாட்டல் நேவையினை முறையாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கும் பாடசாலை ஆளணியினருக்கு போதுமானளவு வாய்ப்புக்கள் வழங்கப்படுவதோடு, இவ்விடயம் சார்ந்த உள்ளடக்க அறிவினையும் விருத்தி செய்துக் கொள்வதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதன் மூலம் பாடசாலை தொழில் வழிகாட்டல் சேவையை வெற்றிப் பெறச் செய்ய முடியும்.

*ஒரு மனிதன் செய்யக்கூடிய செயல்கள் அனைத்திலும் மிகமிகச் சிறந்தது, தனக்குத்தானே முற்றிலும் நல்லவனாக இருப்பதுதான்*

*சிக்மண்ட் பிராய்ட்*

*அவநம்பிக்கை பலவீனத்துக்கு வழிவகுக்கின்றது: நம்பிக்கை ஆற்றலுக்கு வழி வகுக்கின்றது.*

*வில்லியம் ஜேம்ஸ்*

# கணிதவாற்றல் இயலாமையுடைய மாணவர்களுக்கான கற்பித்தலுக்கான தந்திரோபாயங்கள்

**திரு என்.சஞ்சீவி,**
உப பீடாதிபதி,
ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி
பத்தனை

மாணவர்களின் கற்றலில் பெரும் பிரச்சினையாகக் காணப்படுவது கணிதம் தொடர்பான இயலாமையாகும் இலங்கையில் பிரதான பரீட்சையாகக் காணப்படும் க.பொ.த சா/த பரீட்சையில் மாணவர்களின் கணித அடைவு மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது அதற்கு பிரதான காரணமாக அமைவது மாணவர்களிடத்தில் கணிதம் தொடர்பாகக் காணப்படும் எதிர்மறை மனப்பாங்காகும். அத்துடன் ஆசிரியர்களின் கற்பித்தலில் காணப்படும் கற்பித்தல் முறைகளும் செல்வாக்கு செலுத்துகின்றது மாணவர்களுக்கு பொருத்தமான வகையில் கற்பிப்பதுடன் மாணவர்களின் நிலையை அறிந்து கற்பிப்பது பெரும் துணையாக அமையும் இவ்வகையில் கணிதம் தொடர்பான இயலாமையுடைய மாணவர் எவ்வாறான தன்மையைக் கொண்டு காணப்படுவர். அவர்களுக்க எவ்வாறான நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் அவர்களை கணிதத்திறன் கொண்டவர்களாக மாற்ற முடியும் என்பதே இக் கட்டுரையின் நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது.

கணிதவாற்றல் இயலாமை என்பது எல்லாவிதமான கணித குறைபாடுகளையும் உள்ளடக்கியது. அதாவது எண்களை விளங்கிக்கொள்ள முடியாமை, கணித செயற்பாடுகளை செய்வதற்கு அவசியமான கணித எண்ணக்கருக்களை பாவிக்க முடியாமை ஆகியவற்றை உள்ளடக்கியது. கணிதவாற்றல் இயலாமை என்பது விசேட கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் உதவி அளிக்கக் கூடிய ஒரு வகையான கற்றல் இயலாமையாகும். கணிதவாற்றல் இயலாமை என்பது கணிதம் தொடர்பான சரியான மற்றும் பொருத்தமான தேர்ச்சியை பெற்றுக் கொள்வதற்கான இயலாமை என Butterworth (2003) உம் கணித்ததுடன் தொடர்பினை வெற்றிகரமாக கட்டியெழுப்ப முடியாமை என Beachman & trott (2005) உம் குறிப்பிடுகின்றனர். அமெரிக்காவில் கற்றல் இயலாமை தொடர்பிலான தேசிய மத்திய நிலையம் குறிப்பிடுவதாவது கணிதவாற்றல் இயலாமை என்பது வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியாக பரந்திருக்க கூடிய கணித்துறையுடன் தொடர்புடைய கற்றல் இயலாமையாகும். இவ்வாறு கற்றல் இயலாமை தொடர்பாக பல்வேறு வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

கணிதவாற்றல் இயலாமையானது ஒருவனது எண்களை விளங்கிக் கொள்ளும் தன்மை, எண்களைக் கையாளும் தன்மை என்பவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. அத்துடன் இது கண்பார்வைக் குறைபாட்டினால் அல்லது மொழியியல் செயன்முறைக் குறைபாட்டினால் ஏற்படலாம். இவ்வியலாமைக்கான அறிகுறிகளாக.

- ஒரு ஆய்வு அறிக்கையினை சமப்படுத்த முடியாமை.
- நேரம் மற்றும் செலவினைக் கணிப்பிட முடியாமை.
- திசைகள் தொடர்பான அறிவின்மை
- எண்கள் எவ்வாறு அவ்வுலகத்தில் தொடர்பு கொண்டுள்ளன என்பதை விளங்கிக் கொள்ள முடியாமை.
- எண்களை எண்ணுதல்
- அட்சர கணிதத்துடன் தொடர்பான பிரச்சினைகள். கணிதக் குறியீடுகளுடன் தொடர்பாக குழப்பநிலைக்குள்ளாதல்
- எண்களுடன் வேலை செய்வதில் கடினத் தன்மையை எதிர்நோக்கல்
- அடிக்கடி எண்களை தலைகீழாக அல்லது மாற்றி எழுதுதல்
- மானசீகமாக கணிதச் செயற்பாடுகளை மேற்கொள்வதில் கடினத் தன்மையை எதிர்நோக்கல்
- நேரத்தினைச் சொல்வதில் நேரத்தினைப் புரிந்துக் கொள்வதில் செலவிடப்பட்ட நேரத்தினை உணர்வதில் கடினத்தன்மையை எதிர்நோக்கல்.

- கணித எண்ணக்கருக்கள், விதிகள், சமன்பாடுகள், தொடர்புகள் என்பவற்றை ஞாபகம் வைத்திருப்பதிலும் அவற்றை உள்வாங்கிக் கொள்வதிலும் கடினத்தன்மையை எதிர்நோக்கல்.
- உபாயங்களை திட்டமிடுவதில் வரையறுக்கப்பட்ட திறன்.
- கிரகித்து ஒரு நிதித்திட்டமிடலினை ஒரு பாதீட்டினை மேற்கொள்ள முடியாமை
- குறிப்பாக இடது பக்கம் வலது பக்கம் ஆகியவற்றைப் பிரித்தறிவதில் பிரச்சினைகளைக் கொண்டிருத்தல்.
- குறிப்பாக ஒரு தூரத்தில் அல்லது ஒரு விடயத்தின் அளவினை மானசீகமாக அல்லது அண்ணளவாகக் கணித்துக் கூறுவதில் சிக்கல் தன்மை
- விளையாட்டின் போது பெற்ற புள்ளிளை ஞாபகத்தில் வைத்திருக்க முடியாமை

கணிதவாற்றல் இயலாமை பின்வரும் காரணிகளினாலும் ஏற்படக் கூடும்

**அறிகை ரீதியான காரணிகள்.**
தரக்குறைவான அல்லது பொருத்தமற்ற கற்பித்தல் முறைக்கும் ஒரு மாணவனுடைய கணித்திறன் கற்கும் ஆளுமைக்குமிடையில் ஒத்துப் போகாத தன்மை.

கணித்தினை கற்றுக் கொள்ள தேவையான இயல்பான திறனின்மை

கணித மொழியினை சொல்லாடலினை கணித இலக்கங்களை விருத்தி செய்வதில் தாமதம் மற்றும் கணித்திலிருந்து சாதாரண மொழிக்கும் சாதாரண மொழியிலிருந்து கணித மொழிக்கும் மொழி பெயர்க்கும் இயலுமையில் தாமதம்

கணிதவாற்றல் இயலாமையுடைய மாணவர்களுக்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அவர்களிடத்தில் கணிதம் தொடர்பான ஆற்றலினை விருத்திசெய்யக் கூடியதாக இருக்கும் Tortt என்பவர் 2003 இல் கணிதவாற்றல் இயலாமையுடைய பிள்ளைகளுக்கு உதவுவதனை உறுதி செய்யக்கூடிய தந்திரோபாயப் பட்டியல் ஒன்றினை உருவாக்கினார் இப்பட்டியலானது வாசித்தல் திறனை அதிகரிப்பதற்கான தந்திரோபாயங்கள், கணிதப்பிரச்சிகைளைத் தீர்ப்பதற்கான திறன்களை வளர்ப்பதற்கான தந்திரோபாயங்கள், பொதுவான அறிவுறுத்தல் வடிவமைப்பு என்பன வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**வாசித்தல் திறனை அதிகரித்தல்**

- பெரிய பந்திகளை சிறிய பகுதிகளாக்கி அவற்றிலிருந்து முக்கிய கருத்துக்களை வெளிக்கொணர்தல்
- கணிதவாற்றல் இயலாமையுடைய பிள்ளைகளுக்கு இலகுவான முறையில் தெளிவானதும் ஓரளவிற்குப் பெரிய எழுத்தினையும் எண்களையும் பாவிப்பது பந்திகளை கனணியில் தட்டச்சு செய்யும் போது அதனை பந்தியின் தொடக்க இடத்திலிருந்து கடைசி இடம் வரும் வகையில் வடிவமைப்பு செய்யும் போது சொற்களுக்கிடையில் ஏற்படும் ஒழுங்கற்ற இடைவெளியானது வாசித்தலில் சிரமத்தினை ஏற்படுத்தவல்லது ஆகவே அவ்வாறன வடிவமைக்காமல் விடுவது சிறந்தது.
- வெள்ளைத்தாளில் கறுப்புநிற தட்டச்சானது கடுமையானதாக தெரிவதனைத் தடுக்கும் விதத்தில் நிறங்களைப் பாவிப்பதானது சிறந்தது. பெரும்பாலான நேரங்களில் பார்வைச் சிக்கலுடைய மாணவர்களுக்கு இது ஒரு பிரச்சினையாக காணப்படுகின்றது.

**கணிதப் பிரச்சினைகளைக் தீர்ப்பதற்கான திறன்களை வளர்த்தல்**

- கணிதப் புத்தகங்களை பிரதி செய்யும் போது அட்டவணைகள், வரைபடங்கள், வரைபுகள் என்பன ஒரு குறிப்பிட்ட தலைப்பபுகளுடன் தொடர்ச்சியாக வரிசைப்படுத்தப்படாத வண்ணம் அச்சிடப்படலாம். எனவே குறித்த பகுதியிலேயே பிரதி செய்தல் மற்றும் சீராக ஒழுங்குபடுத்தல் அவசியம்.
- பல படிமுறைகளைக் கொண்ட பிரச்சினைகளை படிமறைகளுக்கு ஏற்ப சிறிய சிறிய பகுதிகளாக கையாளக் கூடிய முறையில் பிரித்தல்

- ஒரு செயற்பாட்டின் முக்கிய பகுதியினைக் கோடிட்டு காட்டுவதற்கு கோடிடும் இயந்திரங்களைப் பாவித்தல். நிறப் பேனையைப் பாவித்தல்.
- ஒரு கேள்வியினுடைய பல்வேறு பகுதிகளை வெளிக்காட்டத்தக்க வகையில் பேனாக்களையும் நிறமூட்டும் பேனாக்களையும் பாவித்தல்

**பொதுவான அறிவுறுத்தல் வடிவமைப்பு**

- பூரணமற்ற அல்லது சில விடயங்கள் தவறுதலாக தவிர்க்கப்பட்ட குறிப்புகளுக்கு பதிலாக புதிய குறிப்புக்களை வழங்குதல்.
- குறுகிய கால அறிவினால் இலகுவாக ஞாபகப்படுத்த முடியாத எண்ணக்கருக்களை பெரிய சுவர்களில் எழுதி தொங்கவிடல்.
- ஞாபகப்படுத்தல் தொடர்பிலான சிக்கல்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு System cards களைப் பயன்படுத்துதல்.
- நிகழ்வுகளின் தொடர்பினை இலகுவாக விளங்கிக் கொள்ள மரவடிவமுறை அல்லது தொடர் வடிவ முறைகளை அவர்களுக்கு வழங்குதல்.
- ஒரு நீண்டகால தொழிற்பாட்டினை விருத்தி செய்வதற்கு உதவும் வகையில் மானசீக வரைபட (mind map) வடிவ முறைப்பற்றி சொல்லித் தருதல்.
- ஒவ்வொரு பிள்ளையினதும் வேகத்திற்கேற்ப பாடத்தினை ஒழுங்குபடுத்தி கற்பித்தல.
- ஒழுங்கமைத்தல், கற்றல் மற்றும் நேரமுகாமை தொடர்பான திறன்களைக் கற்பித்தல்.
- பரீட்சைகளுக்கு முன்னரான மீளாய்வுகளில் கவனம் செலுத்துதல்
- கணித பாட இலக்குகளை மாணவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக்குதல்.
- மாணவர்களுக்கு கற்பிக்கும் போது அவர்களின் பார்வையில் படும்படி செயற்பாட்டினை அருகில் வைத்து அவர்களுக்கு எல்லாப் புலன்களும் பாடவிதானத்தில் ஊக்கமுடன் பங்குபற்ற ஒப்புவித்தல்.
- எண்ணக்கருக்களையும் திறன்களையும் பிரதி செய்வதற்குரிய படங்களையும் வரைபுகளையும் பாவித்தல்.
- மாணவர்கள் போதிய அவகாசத்துடன் கிரகித்து விடையளிக்க அனுமதித்தல் வேண்டும். கணித பாடத்தில் சிறந்த மாணவர்கள் அவ்வாறு செய்ய வேண்டிய தேவை காணப்பட்டாலும் இவர்களுக்கு முக்கியமாகும்.
- கணிதப்பாடச் சொற்கள் குறியீடுகள் வடிவங்கள் என்பவற்றினை சிறந்த உதாரணங்களுடன் கற்பித்தல் வேண்டும். சொற்களை பாடமாக்குவதிலும் பார்க்க அதன் அர்த்தங்களை அழுத்தி விளங்கிக் கொள்வது சாலச்சிறந்தது.
- ஞாபகம் வைத்துக் கொள்வதற்கான உத்திகளைப் பாவிப்பதன் மூலம் மாணவர்களது ஞாபகச் சக்தியை விருத்தி செய்தல்.
- கையெழுத்துப் பயிற்சியில் எண்ணியல் மற்றும் கணிதவியல் குறியீடுகளை உள்ளடக்குதல்.

மேற்கூறப்பட்ட விடயங்களை மாணவர்களிடத்தில் செயற்படுத்தும் போது கணிதவாற்றல் இயலாமையை போக்கக் கூடியதாக இருக்கும் எனவே ஆசிரியர்கள் தமது கற்பித்தலில் புதிய அணுகுமுறைகளைப் பயன்படுத்துவது மிக இன்றியமையாததாகும்.

*எதிலும் குருட்டு நம்பிக்கை என்பது ஆபத்தானது. அது மனிதனின் மூளையை முடமாக்கி, அவனைப் பிற்போக்கில் தள்ளி விடும்.*

*பகத் சிங்*

# காலைக்காட்சி

**N. ஹரிசுதன் தரம் 3B**

1. கிழக்கில் செவ்வானம் வர்ண ஜாலம் காட்டியது. குங்குமமும், சந்தனமும் சேர்ந்துக் குழைத்துத் தெளித்து விட்டது போல் வானம் முழுவதும் ஒரே வர்ண ஜாலம்.
2. இதுவரை இரவிரவாய் கண்சிமிட்டியதால் களைப்படைந்த விண்மீன்கள் ஓய்வெடுப்பதற்காக ஓடி ஒளிந்துக் கொண்டன.
3. இதனாலே நிலவும் ஓடிப்போய் மேற்குத்திசை வானில் நீந்தத் தொடங்கியது.
4. கீழ்வானம் கிழித்துக்கொண்டு பகலவன் புறப்படுவதை அறிந்த குயில்களும், சேவல்களும், குருவிகளும், புள்ளினங்களும் தத்தம் பாஷையில் கூவியும், கரைந்தும் சந்தோசத்தில் ஆரவாரித்து வரவேற்புக்கீதம் வாசித்துக்கொண்டிருந்தது.
5. புள்ளினங்கள் இசை கேட்டு அயர்ந்து, தூங்கிக்கொண்டிருந்த தாமரை மொட்டுக்கள் ஆதவனை வரவேற்று, சத்தமின்றி கண் விழித்தன.
6. அதுவரை உலகை குளிரின் பிடியில் நடுங்கி ஒடுங்க வைத்திருந்த பனிமூட்டம் பயந்து மறைந்து போனது.
7. ஆயிரம் கோடி மின்னல்கள் ஒன்று சேர்ந்து திரண்டு மின்னுவது போல் ஜெகஜோதியாய் தங்கத்தாம்பூலம் போல ஒளித்திரளாய் ஒளிவீசிய ஆதவன் மெல்ல மெல்ல மேலெழுந்தான்.
8. வானமகள் நெற்றியில் வட்டமாய் ஒரு பொட்டு இட்டுக்கொண்டாள் என எண்ணத்தோன்றியது. அவளது நீல நிற வதனம் சிவப்பு நிறமானது.
9. கண் விழித்தெழுந்த மக்களது நடமாட்டம் அதிகரிக்கத் தொடங்க, உலகம் உற்சாகத்தை பெற்றுக்கொண்டது.
10. உயிர் கொடுக்கவென உதித்து வந்த ஆதவன் இந்த பெருமிதத்தில் மேலெழுந்து கொண்டிருந்தான்.

*பெரும் பொறுப்புக்களை ஏற்க முதன்மையாகத் தேவைப்படுவது தன்னம்பிக்கையே*

*சாமுவேல் ஜான்சன்*

*நல்ல நண்பர்களைப் பெறுவதற்கான வழி நீங்கள் ஒருவருக்கு நல்ல நண்பனாக முதலில் மாறுவதே*

*எல்பர்ட் ஹப்பர்ட்*

## எமது நாடு இலங்கை

**R.சருபன், தரம் 3D**

எமது நாடு இலங்கை ஆகும். இது இந்து சமுத்திரத்தில் உள்ள ஓர் அழகிய தீவு ஆகும். இதனால் எமது நாட்டை இந்து சமுத்திரத்தின் முத்து எனவும் அழைப்பார்கள். எமது நாட்டுக்கு ஈழமண்டலம், ஸ்ரீ லங்கா, இரத்தின தீபம் என்னும் பல பெயர்கள் உண்டு.

இலங்கையின் மத்திய பகுதி மலைவளம் கொண்ட பகுதியாகும். அங்கே உயரமான மலைகள் உண்டு. அவற்றில் சிவனொளிபாதமலை சரித்திர பெருமை வாய்ந்தது. மத்திய பகுதியிலே மழை அதிகமாக பெய்யும். அப்பகுதியில் இருந்து பல ஆறுகள் ஊற்றெடுத்து ஓடுகின்றன. அவற்றில் மகாவலி கங்கை மிக முக்கியமானதாகும். மலைநாடு எப்போது செழிப்பு மிக்கதாக இருக்கும் மலைநாட்டில் தேயிலை தோட்டமும் இறப்பர் தோட்டமும் உண்டு.

எமது நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் பறங்கியர் என பல இன மக்கள் வாழ்கின்றனர். சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவை இங்கு பேசப்படும் முக்கியமான மொழிகள் ஆகும். பௌத்தம், சைவம், இஸ்லாம், கிருஸ்தவம் என்பன பின்பற்றப்படும் மதங்களாகும்.

இலங்கை மக்களின் முக்கியமான உணவுப்பொருள் நெல் அரிசி சோறு ஆகும். அதனால் எமது மக்களின் முக்கியமான தொழில் விவசாயமாகும். சிலர் வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். இலங்கையின் தலைநகரம் ஸ்ரீஜயவர்த்தனபுர கோட்டை ஆகும்.

## மாலைக்காட்சி

**M.L.M. உமர் , தரம் 3A**

1. மாலைக்காட்சி மக்கள் மனங்கவரும் காட்சியாகும்.
2. மாலை வேளையில் சூரியன் மேற்கு வானில் **'தங்கத் தகடுபோல்' ' தக தக'** எனக் காட்சி தருவான்.
3. பகல் முழுவதும் பாடுபட்டு உழைக்கும் உழைப்பாளிகள் தத்தம் இல்லங்களுக்கு திரும்புவர்.
4. விலங்குகள் யாவும் தத்தம் உறைவிடங்களை நாடி செல்லும்.
5. கடற்கரையில் உலாவரும் மக்கள், சூரியன் மறையும் காட்சியை கண்டு மகிழ்வர்.
6. பகல் முழுவதும் இரை தேடி அங்கும் இங்கும் பறந்து திரிந்த பறவைகள், தத்தம் உறைவிடங்களுக்குத் திரும்பும்.
7. மாலை வேளையில் ஆலயங்களில் பூசை வழிபாடுகள் இடம்பெறும்.
8. மனிதர்கள் தம் வேலைகளை முடித்துவிட்டு தத்தம் வீடுகளுக்கு செல்வர்
9. வீதிகளில் நிலவிய போக்குவரத்து நெருக்கடி படிப்படியாகக் குறையும்.
10. பகல் நேரக் கலகலப்பு அடங்கி அமைதி நிலவும்.

## மாணவர்களின் நற்பழக்க வழக்கங்கள்

**C.சாகிட் தரம் 3C**

1. மாணவர் எனும் சொல் மாண்பினை உடையவர் என பொருள் படும்.
2. அவ்வாறான மாண்புமிக்க மாணவர்களாகிய நாம் நற்பழக்க வழக்கங்களை பழக வேண்டும்.
3. சிறுவயதிலேயே பிறருக்கு உதவி செய்ய வேண்டும்.
4. மாதா, பிதா, குரு, தெய்வம் போன்றோரை மதித்து அவர்கள் சொற்படி நடக்க வேண்டும்.
5. மாணவர்களாகிய நாம் எமது பாடசாலைக்குப் பெருமைத் தேடித் தர வேண்டும்.
6. ஏழை, எளியவர்களுக்கு இரங்க வேண்டும்.
7. எழுத்தறிவு இல்லாதவர்களுக்கு எழுத்தறிவை ஊட்ட உதவ வேண்டும்.
8. இவ்வாறான நற்பழக்க வழக்கங்கள் சிறு வயதிலேயே கடைபிடிக்க வேண்டும்.
9. எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் மாணவர்களாகிய நாம் நற்பழக்க வழக்கம் உடையவராகத் திகழ்வோம்.
10. முதியவர்களை கனம் பண்ணுதல் வேண்டும்.
11. மாணவர்களாகிய நாம் சிரமதானப் பணிகளில் ஈடுபடவேண்டும்.
12. எங்களது எதிர்கால வளர்ச்சிக்கு தேவையான விடயங்களை பெரியோர்களிடம் இருந்து அறிந்து கொள்ளல் அவசியமானதாகும்.
13. மாணவர்களாகிய நாம் பயன்தரும் விடயங்களை கற்று மற்றைய மாணவர்களுக்கு கற்பித்துக் கொடுக்கலாம்.
14. நாம் எமது கலாசார விழுமியங்களை மதித்து நடத்தல் முக்கியமானது.
15. பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு வருகைத்தரல் வேண்டும்.
16. இயற்கைச்சூழல், காடுகள் போன்ற இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டும்.
17. பொது சொத்துக்களை பாதுகாப்பதுடன், வீண் விரயமாகாது பாதுகாத்தல் எமது பொறுப்பாகும்.
18. மேற்கூறிய நற்பண்புகள் நம்மில் வளர வேண்டுமாயின் பள்ளி என்னும் ஆலயத்தை நாம் போற்ற வேண்டும்.
19. இக்குணங்கள் நம் வாழ்க்கையில் பசுமரத்து ஆணிபோல் தாக்கத்தை உருவாக்க நாம் தொடர்ந்து முயல்வோமாக.

> *விளக்கம் அளிப்பது போன்ற நேரத்தை வீணடிக்கும் செயல் வாழ்க்கையில் வேறு எதுவுமில்லை.*
>
> *டிஸ்ரேலி*

# முதியவர்களை கனம் பண்ணுவோம்

**A. கியானு ஸ்ருதி, தரம் 4C**

1. அறிவு, ஆற்றல், அனுபவம், வயது ஆகியவற்றால் முதிர்ந்தவர்களை சான்றோரென்றும் பெரியோரென்றும் போற்றுகின்றோம்.
2. எமது தாய் தந்தையர் எமக்கு மூத்த சகோதர சகோதரியர் எமக்கு வழிகாட்டும் ஆசான்கள், சமூகத்திலே எம்மோடு உறவுடைய பெரியவர்கள், சான்றோர்கள், எல்லோரையும் நாம் கனம் பண்ணவேண்டும்.
3. அவர்களிடமிருந்து நல்ல அறிவுரைகளைப் பெற நாம் முயல வேண்டும்.
4. 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' என்று எம் முன்னோர்கள் எம்மை அறிவுறுத்தியுள்ளார்கள்.
5. பணிவு என்ற பண்புக்கு அடையாளம் பெரியவர்களுக்கு அடங்கி மரியாதை செய்வது தான்
6. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்ற மூதுரைகள் எமக்குச் சொல்லும் செய்தி நாம் பெற்றோர்களை மதித்தும் பேணி நடக்க வேண்டும் என்பதே ஆகும்.
7. பெற்றோர்கள் பிள்ளைகளின் கண்கணட தெய்வங்கள் ஆவர்
8. பிள்ளைகள் முதியவர்களை நன்கு அனுசரித்து நடக்கத் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.
9. அன்பு என்பது அள்ளி அள்ளிக் கொடுக்க, குறையாத செல்வமாகும்.
10. மூத்தோர்களாகிய எமது பெற்றோர், உற்றார், உறவினரை மாத்திரமன்றி ஏனையோரையும் நேசித்துக் கனம் பண்ணப் பழகிக் கொள்ள வேண்டும்.
11. பொறுமை, அன்பு, சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு போன்ற நற்பண்புகளுடன் முதியோர்களை அணுக வேண்டும்.
12. தந்தையும், தாயும் செய்த தியாகத்தால் தான் இவ்விதம் வளர்ந்து உலகில் வாழ்கின்றோம் என்பதை நாம் உணர்தல் வேண்டும்.
13. பெரியவர்கள் செய்யும் காரியங்களைக் கண்டு அவர்கள் மனம் நோகும்படி சிரிக்கவோ நகையாடவோ கூடாது.
14. எனவே முதியவர்களைப் பேணி அவர்களை அனுசரித்து அவர்களோடு அன்புடன் பழகுவோம்.

*மனிதனின் கண்கள் மைக்ரோஸ்கோப் போன்றது. இந்த உலகை உண்மையை விட பெரிதாகவே காட்டும்*
*கலீல் ஜிப்ரான்*

*மனிதன் தன் எண்ணங்களை நல்ல வழியில் செலுத்தினால் அவனது போக்கு உலகின் போக்குடன் பொருந்தும். அப்போது அவன் வாழ்வில் இனிமையும் அமைதியும் அழகும் மிளிரும்.*
*தாகூர்*

*நகைச்சுவை உணர்ச்சி இல்லாதவர்களுக்கு வாழ்க்கை ஒரு பெருஞ்சுமை ஆகிவிடும்.*
*ஜோர்ஜ் பெர்னாட்ஷா*

# பாரதியார்

**M. கவிசன், தரம் 4D**

*01.* இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் என போற்றப்படுகின்றார் பாரதியார்.

*02.* இவர் தென் இந்தியாவின் நெல்லை மாவட்டத்தில் அமைந்துள்ள எட்டயப்புரத்திலே 1892 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் திகதி பிறந்தார்

*03.* இவரது தந்தையின் பெயர் சின்னசாமி ஐயர், தாயின் பெயர் லட்சுமி அம்மாள் ஆகும்.

*04.* இவர் பிறந்தபோது இவரது பெற்றோர் இவருக்கு, சுப்பிரமணியன் என பெயரிட்டாலும் செல்லமாக சுப்பையா என்றே அழைத்தனர்.

*05.* இவர்களது குல மரபுக்கமைய சுப்பிரமணியனுக்கு 1889ம் ஆண்டு பூணூல் அணிவிக்கப்பட்டது.

*06.* கவி புனையும் இயல்பு இவருக்கு இளமையிலேயே இருந்தது. இவர் 11 வயதாக இருக்கும்போது இவரது கவித்திறனை வியந்த எட்டயப்புரத்து மன்னன், சமஸ்தானப் புலவர்களின் சபையிலே இவரை பாராட்டி “ பாரதி” என்னும் பட்டம் சூட்டி இவரைக் கௌரவித்தான்.

*07.* கல்வி பயிலும் காலத்திலேயே ( தனது 15 வது வயதில்) ஏழு வயதுடைய செல்லம்மாள் என்னும் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தனர்.

*08.* பாரதியார் தன் தந்தையின் மரணத்திற்குப்பின் தனது அத்தை குப்பம்மாளின் ஆதரவில் காசி இந்து கல்லூரியில் கல்வி பயின்றார்.

*09.* இவர் ‘சுதேசமித்திரன்’ பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும் ‘சக்கரவர்த்தினி; பத்திரிக்கையின் பொறுப்பாசிரியராகவும் பணி புரிந்தார்.

*10.* பகவத்கீதையை தமிழில் மொழிப்பெயர்த்தார். கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகிய முப்பெரும் பாடல்களை எழுதியுள்ளார்.

*11.* ஆங்கில ஆட்சியின் அடிமைத்தனம் அறுத்தெறியப்பட வேண்டும், தாய் மொழிப்பற்று மக்களிடத்தே வேரூன்ற செய்ய வேண்டும், பெண்ணினம் விடுதலைப்பெற வேண்டும், தமிழன் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும், சகலரும் தேசிய பற்றுடன் வாழ வேண்டும் என்ற உணர்வுகளையெல்லாம் கொப்பளிக்கும் கவிதைகளாக எழுதுவித்தார்.

*12.* **நாடு விடுதலை பெற வேண்டும்** என்ற ஒரே நோக்கு இவரது பேச்சிலும் மூச்சிலும் காணப்பட்டது.

*13.* 1921ம் ஆண்டு ஜீலை மாதம் திருவல்லிக்கேணி கோயில் யானை தாக்கியதால் நோயுற்று செப்டம்பர் 11ம் திகதி மரணமடைந்தார்.

*நண்பர்களை பெற்றிருக்கும் யாரும் பயனில்லாத மனிதனில்லை.*

*ஜார்ஜ் ஸ்டீபென்சன்*

# அப்துல்கலாம்

**P.கவின்யா, தரம் 4B**

1. நான் விரும்பும் பெரியார் இந்தியாவின் 11வது குடியரசு தலைவரான அப்துல்கலாம் ஆவார்.
2. அவரின் தந்தையார் அவுல் பஷீர் ஜெயினுலாவுதீன் ஆவார்.
3. இந்தியாவின் மூன்று கடலோரங்களிலும் வாழ்ந்த இவர் எளிமையான வாழ்க்கை முறையைக் கொண்ட மீனவக் குடும்பத்தை சார்ந்தவர்.
4. மிகவும் ஏழ்மையாகவும், நேர்மையாகவும் வாழ்ந்த ஒருவராவார்.
5. உலக அரங்கில் இந்தியா பெருமிதத்துடன் தலை நிமிர அப்துல்கலாமின் அரிய உழைப்பும் ஒரு முக்கிய காரணமாகும்.
6. அவரது சூழலில் புத்தகங்கள் கிடைப்பது அரிதாயினும், மாணிக்கம் என்கின்ற அண்டை வீட்டுக்காரர் சேமித்து வைத்திருந்த புத்தககங்களை ஒன்று விடாமல் படித்திருக்கின்றார்.
7. தம்முடைய தாயிடமிருந்து நல்லனவற்றில் நம்பிக்கை வைக்கவும், இரக்கத்தோடு நடந்து கொள்ளவும் கற்றார்.
8. அவர் ராமேஸ்வரத்தில் உள்ள ஸ்வார்ட் உயர் நிலைப்பள்ளிக்கூடத்தில் படித்தார்.
9. அப்துல்கலாம் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்தார்.
10. பிருத்தவி, நாக், ஆகாஷ், திரிசூல், அக்னி இவை ஏவுகணைகளுக்கு அவர் வைத்த சங்கேதப்பெயர்களாகும்.
11. இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகராகவும் அவர் நியமிக்கப்பட்டார்.
12. செயற்கைக் கோள்களைச் செலுத்துவதிலும் அவருடைய பங்களிப்பு கணிசமானதாகும்.
13. அப்துல்கலாம் தனது சுயசரிதையை அக்னிச் சிறகுகள் என்ற பெயரில் எழுதியுள்ளார்.
14. அப்துல்கலாம் மேகாலயா ஐ.ஐ.எம்மில் மாணவர்களிடையே உரையாற்றிக்கொண்டிருக்கும்போது மாரடைப்பால் பாதிக்கப்பட்டு உயிர் நீத்தார்.

*புதிய யோசனைகளை உருவாக்குவதில் இருக்கும் சிரமத்தை விட பழைய யோசனைகளில் இருந்து வெளியே வருவதில் இருக்கும் சிரமமே அதிகம்.*

*ஜான் மேனார்ட்கீன்ஸ்*

*கடினமான வேலைகளுக்கு சோம்பேறியான ஆட்களைத் தெரிவு செய்கின்றேன். ஏனென்றால் அவர்களால் அந்த வேலையை செய்து முடிக்க சுலபமான வழியை கண்டுப்பிடிக்க முடியும்.*

*பில்கேட்ஸ்*

*தயங்குபவர் கை தட்டுகிறார், துணிந்தவர் கைதட்டல் பெறுகிறார்.*

*பிடல் காஸ்ட்ரோ*

# எங்கள் தாய்மொழி

**M.டிலோஸ் 4A**

1. பத்துமாதம் சுமந்து பெற்ற நமது அன்னை தன் பாலோடு கலந்து நமக்கு பருக்கிய மொழியே எம் தாய்மொழி ஆகும்.
2. எமது தாய்மொழி தமிழ் என்பதில் நாம் பெருமை கொள்ள வேண்டும்.
3. தமிழ்மொழி கல் தோன்றி மன் தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மூத்த மொழி ஆகும்.
4. இளமை குன்றா வளம் பொருந்திய கன்னித் தமிழ், இன்மை குன்றா இன்தமிழ், தெவிட்டாத தீந்தமிழ், மென்கிளியும் மென்று ஜீரணிக்க தக்க மென்தமிழ் எங்கள் தாய் மொழி ஆகும்.
5. எங்கள் தாய்மொழியை எந்தவொரு சுவைக்கும் ஒப்பிட முடியாது. அது இனியதும் அரியதுமான எனது உயிர் போன்றது.
6. தமிழை பாரதிதாசன் 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்றார்.
7. அரசர்கள் மதுரை மாநகரத்திலே தமிழ் சங்கம் அமைத்து அதற்கு வலுவூட்டி தமிழுக்கு வளம் சேர்த்தனர்
8. பல மொழிகளை படித்தவர்களுக்கு தமிழ் மொழியின் இனிமை எத்தகையது என்பது சொல்லித் தெரியவேண்டியதொன்றல்ல.
9. பாவேந்தர் பாரதிதாசன் மனிதனின் உயிரிலும் மேலானதாக உயிரிலும் இனிமையானதாகவும் தமிழ் மொழியை குறிப்பிடுகின்றார்.
10. ஔவை முதல் வைரமுத்து வரை இன்தமிழில் பாடிவைத்த கவிதைகள் பல வந்து கொண்டிருக்கின்றன.
11. அவற்றை ஒவ்வொன்றாய் எடுத்துப்படித்து பார்த்தால் தமிழின் மென்மையும், தன்மையும் தெளிவாகும்.
12. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை 'தமிழில் இசையை கேட்டால் நெருப்புத் தழல் நீராக மாறும் எலும்புக்கூடு உயிர் பெற்றெழும் மதம் கொண்ட யானையும் மயங்க வணங்கும்' என்கின்றனர்.
13. இத்தகைய பெருமை வாய்ந்த தமிழ் மொழி எமது தாய் மொழியாக எனக்கு கிடைத்தது நாம் பெற்ற பாக்கியமே ஆகும்.

# ஆறுமுகநாவலர்

**R. மதுசாலினி தரம் 5B**

1. 1822 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ந் திகதி பிறந்தார்.
2. இவர் பிறந்த இடம் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆகும்.
3. கந்தப்பிள்ளை என்பவர் இவரின் தந்தை ஆவார்.
4. இவரின் தாயார் பெயர் சிவகாமி அம்மையர்.
5. இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் ஆறுமுகம் என்பதாகும்.
6. தமிழ்நாட்டின் புகழ்மிக்க ஆதினமான திருவாவடுதுறை இவரின் சைவ சமயப் பணிகளை பாராட்டியது.
7. ஆறுமுகநாவர் பணியாற்றிய காலம் ஆங்கிலேயர் ஆட்சிக்காலமாகும்.
8. மேற்கத்தேய கலாசாரம், ஆங்கிலக்கல்வி முறை வேற்றுமதச் செல்வாக்கு என்பன மக்களிடையே பரவியிருந்தன.
9. சைவசமயம், தமிழ்மொழி, சைவமரபுக் கல்வி, சைவத்தமிழ்க் கலாசாரம் சிறப்பிழந்த நிலையில் காணப்பட்டது.
10. ஆறுமுகநாவலர் வாழ்ந்த காலச்சூழ்நிலையே சைவசமயத்தையும், தமிழ்மொழியையம் வளர்ப்பதற்கு அவரைத் தூண்டியது.
11. இளமைப்பருவத்திலேயே கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்து விளங்கிய நாவலர் சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்கு அவர் செய்த தியாகங்கள் அளப்பரியவையாகும்.
12. சைவப்பிள்ளைகள் கற்பதற்கு ஏற்ற சமய நூல்களையும், பாடநூல்களையும் எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார்.
13. தம் வாழ்நாள் பூராவும் தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டு செய்த நாவலர் 1879ம் ஆண்டு இறை பதம் அடைந்தார்.

உண்மை எப்போதும் எளிமையிலிருந்தே கண்டறியப்பட வேண்டும், குழப்பத்திருந்து அல்ல.

ஐசாக் நியூட்டன்

புரட்சி என்பது தானாக மரத்திலிருந்து விழும் ஆப்பிள் அல்ல. நாம்தான் அதை விழச் செய்ய வேண்டும்.

சே குவேரா

நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல்லுங்கள் , நீங்கள் உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம் கூட சக்தியற்றதாகி விடும்.

சுவாமி விவேகானந்தர்

## ஆதர்.சி.கிளார்க்

**P.கவிஷாரஜி, தரம் 5^A**

1. நான் விரும்பும் பெரியார் ஆதர்.சி. கிளார்க் ஆவார்.
2. இவர் 1917ஆம் ஆண்டு 12ம் மாதம் 16ந் திகதி பிறந்த இவர் 1956ம் ஆண்டு இலங்கையில் குடியேறினார்.
3. அவர் விஞ்ஞான புனைக்கதை எழுத்தாளரான இவருக்கு 38 பட்டங்களும் , விருதுகளும் கிடைத்துள்ளன.
4. இவரது புனைப்பெயர் சார்ல்ஸ் வில்லிஸ், ஈ.ஜீ.ஓ பிறையன் என்பனவாகும். இவர் ஏறத்தாழ 100 புத்தகங்களை எழுதியுள்ளார்.
5. இவரது தந்தை ஒரு உழவர் ஆவார். இவரது தாய் தபாலகத்தில் பணிபுரிந்தார்.
6. மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் வேந்தராக கடமையாற்றிய இவரது பெயரில் ஆதர். சி.கிளார்க் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.
7. இவர் 1945ம் ஆண்டு வயர்லஸ் வேர்ட் என்ற சஞ்சிகையில் எழுதிய கட்டுரை மூலம் பிரபல்யமடைந்தார்.
8. இவர் உலக சாதனை பெற்ற ஒருவரான இவருக்கு " நையிற்" பதவியும் கிடைத்துள்ளது. இவர் உயிர் நீங்கும் வரை நேர்மையாகவே வாழ்ந்தார்.
9. 2008ம் ஆண்டு 03ம் மாதம் 19ம் திகதி தனது 90 ஆவது வயதில் உயிர் நீத்தார்.

## சூழலை பாதுகாப்போம்

**L. தனுஷா தரம் 5^D**

1. இறைவன் கொடுத்த கொடை இயற்கை சூழலாகும்.
2. இந்த சூழலில் மனிதன் உட்பட எல்லா உயிரினங்களும் வாழ்ந்து வருகின்றன..
3. ஆரம்பக் காலத்திலிருந்த இயற்கை சூழல், மனித செயற்பாடுகளால் இன்று அழிவடைந்து வருகின்றது.
4. மனித இனம், மற்ற உயிர் வாழ் இனங்களும் இனி உலகில் வாழ வேண்டும்.
5. மரங்களையோ, செடி, கொடிகளையோ எல்லா இடத்திலும் வளர்க்க வேண்டும்.
6. கடலிலோ பூமியிலோ உயிரினங்களை வாழ விட வேண்டும்.
7. ஓசோன் படலம் சிதைவடைந்து வருவதால் அதனை நாம் பாதுகாக்க வேண்டும்.
8. மரங்களை வெட்டினால் மழை கிடைக்காமல் சூழலை பாதுகாக்க முடியாது.
9. மனிதனின் வேலைகளால் சூழலை பாதுகாக்க முடியாது உள்ளான்.
10. சூழலை பாதுகாப்பதன் மூலம் நல்ல இயற்கைச் சூழலைப் பெறலாம்.
11. நாங்கள் சூழலை பாதுகாப்பதன் மூலம் நல்ல வளத்தை பெறலாம்.
12. சூழலை நாம் போசனை உள்ளதாகவும், பெறுமதி மிக்கதாகவும் கருதுவோம்.
13. மரம் நடுவோம் , காடு வளர்ப்போம் போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்போம்.
14. சூழலில் உள்ள மரஞ்செடி கொடிகளை பாதுகாக்க வேண்டும்.
15. சூழலை பாதுகாப்பது மட்டுமல்லாது அழகாய் வைத்திருந்து எதிர்கால எம் உறவுகளுக்கு கொடுப்போம்.

# எங்கள் தாய் மொழி

கி. பிரசீதன் ,தரம் $5^{C}$

1. எனது தாய் மொழி தமிழ் மொழியாகும்.
2. கல்தோன்றி மன் தோன்றா காலத்தில் தோற்றம் பெற்றது நம் தமிழ் மொழியாகும்.
3. தமிழ்மொழியானது அகத்தியமுனிவரால் பொதிகை மலையில் தோற்றுவிக்கப்பட்டது என்பது ஐதீகமாகும்.
4. தமிழானது சங்கங்கள் அமைந்து வளர்க்கப்பட்ட மொழியாகும்.
5. தமிழ்மொழியில் இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவுகள் காணப்படுகின்றன.
6. உலகில் மிகவும் தொன்மையான, பழமையான மொழி தாய்மொழியான தமிழாகும்.
7. தமிழ்மொழியில் பல்வேறு காப்பியங்களும், இலக்கியங்களும் காணப்படுகின்றன.
8. தமிழை தேன்தமிழ், அழகுத்தமிழ், நற்றமிழ் என்று பலவாறு போற்றுவர்.
9. இதனாலேயே பாரதியார் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று பாடினார்.
10. தமிழின் சிறப்பைப் பற்றி வேற்று மொழியியலாளர்களும் போற்றியுள்ளனர்.
11. தமிழைத் தாயாக போற்றி பல வாழ்த்துப் பாடல்களும் தோற்றம் பெற்றுள்ளன.
12. செம்மொழியான தமிழின் சிறப்பை வளர்க்கவே இன்று நாடளாவிய ரீதியில் தமிழ் மொழி தினம் கொண்டாடப்படுகின்றது.
13. அமுதென்ற தமிழ்மொழியை போற்றிப் புகழாத அறிஞர்கள் உலகினிலில்லை என்ற அளவுக்கு தமிழின் அருமையை பலரும் போற்றியுள்ளனர்.

நல்ல எண்ணத்தோடு இரு. அது உன் நடத்தையைப் பாதுகாக்கும்.

வள்ளலார்.

ஒழுக்கமே, இலக்குகளுக்கும் சாதனைகளுக்கும் இடையேயான பாலமாகும்.

ஜிம் ரோஹன்

தனி மனிதனின் தனி உரிமையான சிந்தனையால் சாதிக்க முடியாதது என்று எதுவுமில்லை.

ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

# நானோர் உடைந்த குடை

**R. மதுருக்ஷன் தரம் 6A**

நான் பல நிற வர்ணங்களுடனும் பல்வேறு வடிவ அலங்காரத்துடனும் உற்பத்தியாகினேன். அப்போது என்னை பார்க்கும் போது எனக்கே ஆசையாக இருந்தது. என்னுடன் வேறு பலரும் இருந்தனர். நாங்கள் அனைவரும் ஒரு அறையில் அழகாக காட்சிப்படுத்தப்பட்டிருந்தோம். அன்றொரு நாள் பெரியவர் ஒருவர் வந்து, எமது கடை உரிமையாளரிடம் எம்மை பார்த்து பாரத்து ஏதோ கதைத்து, பணத்தொகையும் கொடுத்தார்.

அடுத்த நொடி லொறியில் வந்த வேறொருவர் என்னையும் என்னுடன் இருந்த மற்றவர்களையும் பெட்டியில் அடுக்கி லொறியில் ஏற்றி எங்கோ அழைத்துச் சென்றனர். எனது முதல் நாள் பணயம் அது என்பதால் நான் மிகவும் குதூகலமாக இருந்தேன். வேகமாக சென்ற லொறி வேறு ஒரு பிரதேசத்தில் உள்ள கடையின் முன் நிறுத்தப்பட்டது. பின் லொறியில் இருந்து நாங்கள் அனைவரும் கடைக்குள் எடுத்துச் செல்லப்பட்டோம்.

முன்பு நாம் இருந்த இடத்தை விட இப்போது இருக்கின்ற இடம் அழகாக இருந்தது. எனவே எம்மை அழகாக காட்சிப்படுத்தியிருந்தார்கள். மூன்று நாட்கள் மட்டுமே அக்கடையில் இருக்க வாய்ப்பு கிடைத்தது. கடைக்கு வந்த பெரியோர் ஒருவர் தனது மகனுக்கு பிறந்தநாள் பரிசாக கொடுக்க என்னை வாங்கினார்.

வீட்டிற்கு கொண்டு சென்றார். அவரது மகனுக்கு பரிசாக என்னை கொடுத்தார். அவரது மகன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். அவன் என்னை கண்ணை இமை காப்பது போல கவனமாக பாதுகாத்து வந்தான். எல்லோரிடமும் என்னை காட்டி மகிழ்ந்தான். படுக்கும் போதும் அவனது அருகில் வைத்து கொண்டுதான் தூங்குவான். அவன் மறுநாள் என்னை அவனது பாடசாலைக்கு கொண்டு சென்று எல்லோரிடமும் காட்டி மகிழ்ந்தான். ஆஅப்பொழுது எனக்கும் சந்தோஷமாகவும், பெருமையாகவும் இருந்தது. அவன் தினமும் என்னை பாடசாலைக்கு கொண்டு செல்வான்.

நான் இறுதி மூச்சுவரை அவனுக்காக உழைத்தேன். ஒரு நாள் இடியுடன் கூடிய மழையும், பலத்த காற்றும் வீசியது. அப்பொழுது எனது கம்பிகள் அனைத்தும் முறிந்து உடைந்தன. எனக்கு வேதனை தாங்க முடியவில்லை. அவனது வீட்டிற்குச் சென்றான் அம்மாவிடம் கூறி அழுதான். நானும் அழுதேன். அவனது தந்தையிடம் காட்டி காட்டி அழுதான். அவனுக்கு ஆறுதலாக அவனது அப்பா நாளை உனக்கு புதிய குடை ஒன்று வாங்கி வருகின்றேன் எனக் கூறினார். அதே போல் அடுத்த நாள் புதிய குடையுடன் வீட்டிற்கு வந்தார்.

அன்றிலிருந்து நான் கவனிப்பார் அற்று தனியாக கதவோரங்களில் ஒதுங்கி இருக்கின்றேன். எனக்கு இனியாராவது விமோசனம் தர மாட்டார்களா? என மிகவும் கவலையுடனும், எதிர்பார்ப்புடனும் காத்திருக்கின்றேன்.

# லூசியின் கதை

**S.லதுர்சன், தரம் $6^D$**

நான் இப்போது அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்ட உங்களின் மூதாதை லூசி ஆவேன். (ஒஸ்த்ரோப்பிதிக்கலஸ் எ.ஃ.ப்ரிகானஸ் மானிட இனம் ஆவேன்) நான் மரணித்த ஒரு ஆதியினமாவேன். எனது எலும்பு புதை படிமங்கள் எத்தியோப்பியாவில் கண்டெடுக்கப்பட்டன. என் எலும்பு புதை படிமங்களை வைத்துக்கொண்டு ஆய்வாளர்கள் மூன்று தசம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்துள்ளேன் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். எனது இந்த அழகான பெயர் வரக்காரணம் இருபதாம் நூற்றாண்டில் மேற்கொண்ட மிக முக்கியமான கண்டுபிடிப்பாக விஞ்ஞானிகள் இதனை கருதுகின்றனர்.

எனது மண்டை ஓடும், எலும்புகளின் பகுதிகளும் ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தி நான்காம் ஆண்டளவில் கண்டுபிடித்தனர். ஆய்வாளர்கள் இந்த காலத்தில் வானொலியில் ஒளிபரப்பான “ பீட்டிஸ்” என்ற பாடல் குழுவினரின் பாடல் ஒன்றின் வரியைக்கொண்டே எனது பெயரை ஆய்வாளர்கள் வைத்தனர். என் எலும்புகளை வைத்து சீ.டி.ஸ்கேன் மூலம் 10 நாட்கள் மேற்கொண்ட பரிசோதனையின் மூலம் கிடைத்த தரவுகளை கணிணி பயன்படுத்தி நான் எப்படி விழுந்திருப்பேன் என நிர்மாணித்துள்ளனர் விஞ்ஞானிகள் இவை அனைத்தையும், எனது மொத்த நாற்பது வீத என் எலும்புகளை கொண்டு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

என்னைப் பற்றிய குறித்த ஆய்வுகளிலிருந்து இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டு முதல் மேற்கொண்டுவருகின்றனர். என்னை போன்ற நிறைய பேரும் இருக்கின்றனர். நான் வாழ்ந்த காலத்தில் நான்கு இனங்கள் வாழ்ந்துள்ளனர்.

இந்த மனித இனங்கள் ஒன்றோடொன்று புரிந்துணர்வுடன் வாழ்ந்திருக்கலாம்என எண்ணுகின்றனர் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். பல தசாப்தங்களாக சேகரிக்கப்பட்ட எச்சங்களை சான்றாக கொண்டே என்னுடன் மற்றும் அதனுடன் தொடர்புப்பட்ட மனித இனங்களின் தகவல்களின் படி விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். எனக்கு மிகவும் கவலையான ஒரு நாள் அதுதான் என் மரணம். நான் நாற்பது அடி உயரத்தில் இருந்து வீழ்ந்தேன். ஏன் வீழ்ந்தேன் என்றால் நான் வாழ்ந்த ஒருநாளில் வறட்சி ஏற்பட்டது இதையடுத்து உணவு இல்லாமல் கீழே வீழ்ந்ததால் என் உடல் சிதைவுற்று துண்டு துண்டாக பிழந்தது.

நான் என் வாழ்நாளில் மிகவும் பார்த்த கவலை மரணம். இப்போதுள்ள தொழிநுட்ப வசதியால் என்னை உயிர்பிழைக்க வைக்குமாறு விஞ்ஞானிகளை தாழ்மையுடன் கேட்கின்றேன். அடுத்ததாக என்னுடன் இருந்த நான்கு இனத்தவர்களையும் கண்டுபிடிக்கவேண்டும். என் வாழ்நாளில் இறந்தவுடன் நடைபெற்ற சம்பவங்கள் ஆகும். நான் ஒரு சாதாரண வானரமாக இருந்தாலும் எனக்கும் ஒரு புரிந்துணர்வு உண்டு. என் சிதைவுற்ற என்புகளை கண்டுபிடித்த ஆய்வாளர்களுக்கு நன்றி.

# வயது முதிர்ந்த நாயின் சுயசரிதை

**R.டிலக்சனி , தரம் $6^C$**

நான் இப்போது வயது முதிர்ந்த ஒரு நாய் ஆவேன். நானும் எனது அம்மாவும் ஒரு பெரிய வீட்டில் ஒரு பெரிய கூட்டில் வாழ்ந்து வந்தோம். நாம் இருவரும் எப்படி அங்கு சந்தோசமாக வாழ்ந்தோம் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அங்கு என்ன நடந்தது தெரியுமா?

அவ்வீட்டிலுள்ள எஜமான் நல்லவராக விளங்கினார். ஆனால் அவரது மகன் ஒரு தொந்தரவுக்காரனாக காணப்பட்டான். எங்களது வாலை பிடித்து இழுக்கவும், காதைப்பிடித்து இழுக்கவுமாக எங்களுக்கு தொந்தரவு செய்தான் அந்த சிறுவன். அதனால் நாங்கள் இருவரும் அவர்களுக்கு தெரியாமல் வீட்டை விட்டு ஓடி விட்டோம். இனிமேல் எங்களுக்கு வாழ்வதற்கு வீடில்லை என்பதால் நாங்கள் இருவரும் தெரு ஓரமாக நடந்துக்கொண்டிருந்தோம். நாங்கள் பாதையை கடந்துகொண்டிருந்தபோது திடீரென்று பேருந்து ஒன்று வந்துவிட்டது. எனது அம்மா அந்த பேருந்தில் மோதி இறந்துவிட்டார். அந்நேரத்தில் எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. நான் மட்டும் இனி தனியாக வாழவேண்டும் என்று எண்ணினேன். நான் இனி ஒவ்வொரு நாளும் தனியாகவே உணவுத் தேடிச் செல்ல வேண்டும், தனியாகவே உறங்க வேண்டும். இவ்வாறே எனது வாழ்க்கை நடந்தது. எனது வாழ்நாளில் மறக்கமுடியாத இன்னுமொரு சம்பவம் நிகழ்ந்தது.

நான் இவ்வாறு தனிமையில், வழியில் சென்றுக்கொண்டிருக்கும்போது ஒரு சிறுமி என்னை கண்டாள். என்னைப்பார்த்து பரிதாபம் கொண்டாள். அவள் தனது வீட்டிற்கு என்னை கூட்டிச் செல்லவிரும்பினாள். ஆனால் அவளுடைய பெற்றோருக்கு என்னைப் பிடிக்கவில்லை. ஆனாலும் அந்தச் சிறுமியின் விருப்பத்திற்காக என்னை அந்தப் பெற்றோர்கள் ஏற்றுக்கொண்டனர். தற்போது நான் ஒரு வசதியான வீட்டில் வாழவில்லை. ஆனால் என் மீது அங்குள்ள அனைவரும் சிறிதளவாவது கவனம் கொள்கின்றார்கள். என்னையும் அந்த வீட்டின் ஒரு உயிராக நோக்குகின்றனர். அதனாலே எனக்கு மிகவும் சந்தோசமாக இருக்கின்றது. இவ்வாறே எனது வாழ்க்கையில் நேர்ந்தது. நான் இப்போது வயது முதிர்ந்த நாயாக வாழ்கின்றேன்.

*மோசமான தோல்வியை எதிர்கொள்ளும் தைரியம் உடையவர்களே மிகப்பெரிய வெற்றியைப் பெறமுடியும்.*
*கென்னடி*

*ஆண்டவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல, உன்னைப்போல சாதிக்கத் துடிக்கும் புத்திசாலிகளை மட்டுமே.*
*அப்துல் கலாம்*

*உனக்காக வாழ்கிறேன் என்று பிறர் சொல்வதைவிட உன்னால் வாழ்கிறேன் என்று ஒருவரைச் சொல்ல வை!*
*அன்னை தெரேசா*

# LET'S HELP THE AGED

**Yogeswaran Kavishkaa - 7C**

It is the nature of life growing old. Ageing is an unavoidable fact. Aged people have committed a commendable service to the country in their youth. The value of senior citizens can not be forgotten. They have rendered a yeoman service to the country in various fields in numerous ways.They have lots of life experiences that can be very useful to us. Hence it is our duty or the responsibility to look them after at their old age.

Before they grow old, at their young age they have worked for the country very well. They have contributed either mental or physical energy to the development of the country. When people grow old, they become helpless. During that age they need the assistance of others.Perhaps they will not be able to walk alone. If we meet such people we must help them to walk. Elders expect help from us. When old people travel standing by buses and trains we must offer our seats to them. That is one of the way that we can help and respect senior citizens. When aged people are waiting in long queues, it is our responsibility to give them the priority.

Some cruel and foolish people do not regard for aged ones. They do not think they have to face the same situation in future. If somebody help aged people today, there would be somebody to help him or her at the old age. This reminds us of the saying "One good turn deserves another" There for, lets help aged make their world beautiful.

# விஞ்ஞானமும் மனித வாழ்வும்

**S.துஷியந்தி, தரம் $07^B$**

இன்றைய யுகம் டிஜிட்டல் யுகம் எனப்படுகின்றது. மனித வாழ்க்கையோடு பிரிக்க முடியாத வகையில் தொடர்பு கொண்ட விஞ்ஞானம் சமூக முன்னேற்றத்திற்கு இன்று அடித்தளமாக அமைந்துள்ளது.

சமூகம் என்பது பெரும்பாலான சமூக அமைப்புகள் இனம், மொழி, பண்பாடு பழக்க வழக்கங்கள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது. இத்தகைய கூட்டத்தினர் ஓர் இடத்தில் கூடிவாழும் போது அவர்களை ஒரு சமூகத்தினர் என்றழைப்பர். இத்தகைய சமூகம் இன்று முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்வதற்கு விஞ்ஞானம் துணை செய்கின்றது. விஞ்ஞானம் இன்று மனித வாழ்க்கையுடன் பிரிக்க முடியாத வகையிலுள்ள இத்தொடர்பு நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகின்றது.

மனிதர்கள் நாகரிகமுற்று நல்ல பண்பாடுகளை கற்றுக் கொள்வதற்கு, விஞ்ஞானம் கண்டுபிடிப்புக்களே அவர்களுக்குத் துணை செய்தன எனலாம். நோய்களால் பாதிப்புற்றோருக்கும், வாழ்க்கை வசதிகளின்றி தவித்தோருக்கும் விஞ்ஞானம் வழிகாட்டியாக அமைந்தது. ஜென்னர் என்பவர் கண்டுப் பிடித்த அம்மைபால் ஏற்றும் பணியானது மனித குலத்தை கொடிய அம்மை நோயினின்றும் காப்பாற்ற உதவியது. தோமஸ் அல்வா எடிசன் கண்டறிந்த மின்சாரக் குமிழ் மக்கள் சமூகத்தை இருளிலிருந்து ஒளிமயமான உலகுக்குள் இட்டுச் சென்றது. லூயி பாஸ்டருடைய நுண்கிருமி தொடர்பான ஆய்வு, மேரி கியூரி அம்மையாரின் ரேடியம் தொடர்பான ஆய்வு எல்லாம் மக்கள் சமூகத்திற்குக் கிடைத்த அரிய பயன் தரும் விடையங்களாகும். மருத்துவ துறையை நோக்கின் விஞ்ஞானக் கண்டுப்பிடிப்புகளால் தொற்று நோய்கள் பல தடுக்கப்படுகினறன. குழந்தைக்கட்டு, முக்கூட்டு மருந்தேற்றுதல், போலியோ நோய்தடுப்பு சொட்டு மருந்தளித்தல் என்பவற்றை இதற்கு எடுத்துகாட்டாக கூறலாம்.

விஞ்ஞானக் கண்டுப்பிடிப்புகளில் ஒன்றான மின்சாரம் இன்று சகல தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு ஏதோ ஒரு வகையில் பயன்படுத்தப்படுகின்றது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் ஏற்பட்ட தொழில் நுட்பம் இன்று சமூக முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுகிறது. தொடர்பாடல் துறையில் மக்களுக்கு இன்று பெரிதும் பயன்படும் தொடர்பு சாதனங்களின் அதிகரிப்பும் விஞ்ஞானத்தின் விளைவே எனலாம்.

தொலைபேசி, திரைப்படம், வானொலி, தொலைகாட்சி, கணினி, இணையம், தொலைநகல், வீடியோ முதலியன கல்வி வளர்ச்சிக்கும், சமூக பயன்பாட்டிற்கும் உதவுகின்றன. போக்குவரத்து துறையில் விஞ்ஞான கண்டுப்பிடிப்புகளின் உச்சக்கட்ட பயன்பாட்டை இன்று மக்கள் சமூகம் பயன்படுத்தி வருவதைக் காணலாம். நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதன் பேறாக நீராவிக்கப்பல், நீராவிப்புகையிரதம் என்பவற்றின் மூலம் பயணம் செய்த மக்கள் இன்று அதன் துரித வளர்ச்சியினால் அதிவேகமாகச் செல்லும் “ சுப்பர் சொனிக், ஜெட்” விமானங்களில் பயணம் செய்யும்

வாய்ப்புக் கிட்டியுள்ளது. இவை எல்லாம் விஞ்ஞானக் கண்டுப்பிடிப்புக்களின் பயனேயாகும்.

மருத்துவத்துறையின். இதயமாற்றுச்சிகிச்சை, இரவல் சிறுநீர்ப்பை பொருந்துதல், ஸ்னேர், மூலம் நோய்களை கண்டறிதல், பரிசோதனைக்குழாய் மூலம் கருவை உண்டாக்குதல் போன்ற அதி நவீன முறைகளுக்கெல்லாம் விஞ்ஞானமே வித்திட்டுள்ளது. சமூகத்திற்குப் பயன்தரும் பல்வேறு மருத்துவப் பணிகளுக்கு விஞ்ஞானம் மூலக் காரணமாக விளங்குகின்றது.இவை மட்டுமன்றி புதியதோர் உலகினைக் காணவும், விண்வெளியில் உலா வரவும் விஞ்ஞானம் இன்று வழிகோலியுள்ளது. சந்திரமண்டலத்தியல்பு கண்டறியவும், செயற்கைக் கோள்களை விண்ணில் பவனி வரச் செய்யவும் விஞ்ஞானம் இன்று வலி காட்டுகிறது. விண்வெளி ஆய்வுகள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றமை, விண்வெளிக்கு மனிதன் சென்று வருவதும், வேறு கோள்களை பற்றி அறிந்துக் கொள்ளவும் விஞ்ஞானம் உதவுகின்றது.

சமூகத்தின் பயன்பாட்டுக்கு விஞ்ஞானம் இன்று பெரிதும் உதவுகின்றது. இணையம் மூலம் உலகமே ஒரு கிராமமாகச் சுருங்கிவிட்டது. முன்பின் தெரியாதவர்களைக்கூட இணையத்தின் மூலம் தொடர்பு கொள்ளக்கூடிய வாய்ப்பு விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் இன்று மக்கள் சமூகத்திற்குக் கிட்டியுள்ளது.

விஞ்ஞானத்தின் வியத்தகு முன்னேற்றம் மக்கள் சமூகத்திற்குப் பல்வேறு துறைகளில் பயன்தருகின்ற போதிலும் அதனால் ஏற்படும் பாதிப்புக்களும் சில உள்ளன. அணுசக்தியை கண்டுபிடித்த விஞ்ஞானி அதனை ஆக்கப்பணிகளுக்கென பயன்படுத்த விரும்பினார். ஆனால் அது இன்று அழிவு வேலைகளுக்கே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. இரண்டாம், உலகப்போரின் போது அமெரிக்கர்கள் ஹிரோசிமா நாகசாகி ஆகிய யப்பானிய நகரங்களின் மீது அணுகுண்டுகளை போட்டு பல்லாயிரம் மக்களைப்பலி கொண்டதை நாம் மறக்க முடியாது. இன்றும் அணுசக்தி ஆயுதங்களைத் தயாரிப்பதில் வல்லரசாக போட்டி போட்டுக் கொண்டு செயற்படுகின்றன. இவை எல்லாம் விஞ்ஞானத்தால் சமூகத்திற்கும் ஏற்பட்ட பாதிப்புகளாகும். இத்தகைய அழிவு வேலைகளுக்கு அணுசக்தியினைப் பயன்படுத்தாது ஆக்கவேலைகளுக்கு அதனைப்பயன்படுத்துமாறு மக்கள் சமூகம் இன்று குரல் கொடுத்து வருகின்றது.

சுருங்கக் கூறின் விஞ்ஞானத்தால் மக்கள் சமூகம் பெறும் நன்மைகள் பலவாயினும் தீமைகள் சிலவும் உண்டென்பது தெளிவாகின்றது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி எதிர்காலத்தில் மக்கள் சமூகத்தின் உயர்வுக்கு பயன்படவேண்டும்.

## உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவோம்

**K.அம்சவேணி தரம் 7D**

பண்பாட்டின் ஒரு கூறாக விழுமியம் அமைகின்றது. உலகிலுள்ள எல்லாமதங்களையும் நோக்குமிடத்து அவை வலியுறுத்தும் முக்கிய அறமாக பிற உயிர்மீது அன்பு செலுத்தல் அமைகின்றது. இதனையே திருமந்திரம் ‘‘அன்பே சிவம்’’ என்கின்றது. ‘‘அன்பின் வழியது உயிர்நிலை’’ என்பது வள்ளுவர் வாக்கு ஆகவே மனிதர் மட்டுமன்றி உலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்தும் அன்பினை அடிப்படையாக கொண்டுள்ளன.

பிற உயிர்களுக்கு அன்பு காட்டுதல், பேணுதல் அன்பே வடிவான கடவுளுக்கு பிரியமான தொண்டாக அமையும். உலகிலுள்ள அனைத்து செயற்பாடுகளும் அன்பினை அடிப்படையாக கொண்டுள்ளது. அதனால் அன்பினை உள்ளத்திலிருந்து எப்பொழுதும் நினைத்து செயற்படுத்தல் எமது கடமையாகும். உலகிலுள்ள அனைத்திலும் கடவுள் நிறைந்திருப்பதனால் எல்லா உயிர்களிடத்தும் அன்புகாட்டல் அவசியமாகும். தமிழர்கள் ஆகிய நாம் எல்லா பொழுதுகளிலும் ஜீவகாருணியம் மிக்கவராக இருக்க வேண்டும்.
அதன் பொருட்டு வீட்டில் வளர்க்கும் பசு, ஆடு, நாய் முதலிய செல்லப்பிராணிகளுக்கு உணவளித்தல், அவற்றை ஒரு உயிராக மதித்து செயற்படுதல், வறியவர்களுக்கும் இல்லாதோருக்கும் இன்முகத்துடன் உணவளித்தல், பிறருடன் இனிய வார்த்தைகளால் அன்புடன் உரையாடுதல் போன்றன செய்தல் வேண்டும்.

உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவதன் மூலம் அவசியத்தை உணர்த்தும் பல வரலாற்று சான்றுகளும் எடுத்தியம்புகின்றன. அவ்வாறு நோக்கினால் முற்காலத்தில் தமிழ் நாட்டில் குமணன் என்ற குறுநில அரசன் வாழ்ந்தான். அவன் தம்பி இலக்குமனன் அவனை கொன்றுவிட்டு ஆட்சியை கைப்பற்ற சூழ்ச்சி செய்தான். இதனால் குமணன் காட்டில் மறைந்து வாழ்ந்தான். அப்போது அவனைப்பார்க்கச் சென்ற புலவர் வறுமையால் துன்பப்படுவதை உணர்ந்த குமண வள்ளலின் உள்ளம் குமுறியது. இதனால் புலவர் மீது அன்பு கொண்டு தன் தலையை தன் தம்பியிடம் கொடுத்து அதன் மூலம் புலவருடைய துன்பத்தை போக்கிக்கொள்ளுமாறு குமணன் வேண்டினான்.

மேலும் தியாகமும் அன்பும் கொண்ட சிவி மன்னன் புறாவுக்காக தன்னுடலை அறிந்து கொடுத்தான். எனவே அக்காலத்தில் சமுதாய நன்மைக்காக தன் துன்பத்தையும் பாறாமல் பிறர் மீது அன்பு செலுத்துவதை வழக்கமாக கொண்டிருந்தனர். ஆகவே இடமும் காலமும் பாறாமல் பிறர்மீது அன்பு செலுத்தும் பண்புடையவர்கள் தன் நலத்தையும் மறந்து பிறர் நலத்திற்காகவே வாழ நினைக்கிறார்கள் என்பது வெளிப்படயாக தெரிகின்றது.

அன்பு இல்லாத வாழ்வை என்புதோல் போர்த்த உடம்பு என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். ஆகவே அன்பு செலுத்துதல் உலகில் உயரிய பண்பாக விளங்குகின்றது. பிறருக்காக ஒருவன் சாவது மேலுவகை தருமென கம்பன் கூறுகின்றார். இவ்வாறு நோக்குமிடத்து நாமும் எல்லா உயிர்கள் மீதும் அன்பு செலுத்தி ஜீவகாருணியம் மிக்கவராக வாழ வேண்டும்.

# மனித வாழ்வில் விஞ்ஞானம்

**R. கிஷோஷிகா, தரம் 07A**

பால்வீதியில் காணப்படும் ஞாயிற்றுத் தொகுதியில் உயிர்கள் வாழக்கூடிய ஒரே ஒரு கோள் புவி ஆகும். இது விஞ்ஞானமயமாகி வருகிறது. விஞ்ஞானம் என்றால் என்ன என்பதை அறிய முற்படும் போது ஐம்புலன்களாலும் மனிதன் சூழலை அவதானித்து, புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் என்று கூறலாம். இவ்விஞ்ஞானமானது மனிதனை நன்றாக சிந்திக்க வைக்க தொடங்கியுள்ளது.

எமது மூதாதையர்கள் இறைச்சி வகைகளை எடுத்து செல்லும் பையில் ஆணி, வெள்ளைப்பூடு என்பவற்றை இட்டு செல்லும்படி கூறுவர், அதனை ஆராய்ந்து பார்க்கும் போது அவர்கள் கூறியது உண்மை என புலப்படுகின்றது. காரணம் சூழலில் உள்ள நச்சுவாயுக்கள் ஆணி, வெள்ளைப்பூடு என்பவற்றின் ஊடாக உறிஞ்சப்படுவதனால் எமக்கு நன்மையை அளிக்கிறது. ஆனால் எமது மூதாதையர்கள் விஞ்ஞான ரீதியாக சிந்தித்துள்ளதை அறியவில்லை. இவ்வாறு விஞ்ஞானமானது எமக்கு பல அனுகூலங்களை அளித்துக்கொண்டிருக்கின்றது. உதாரணமாக மின் விசிறி, தொலைகாட்சி வானொலி போன்றவற்றை குறிப்பிடலாம்.

விஞ்ஞானம் எங்கே, எப்போது தோன்றியது என ஆராய முற்படும்போது இது ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் விளைவாக, பல விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் உருவாகின என்பதை வரலாற்றை ஆராயும்போது தெரியவருகின்றது. இவ்வாறு ஆராய்ச்சிகளை நடத்திய விஞ்ஞானிகளினுள் நிக்கலஸ் கொப்பனிகஸ், கலிலியோ கலிலி, ஐசக் நியுற்றன் போன்றோரை உதாரணமாக குறிப்பிடலாம். அவர்கள் எமக்காக புவியீர்ப்பு சக்தியையும், தொலைநோக்கியையும் பற்றிய நிறைய புதுப்புது கருத்துக்களை முன்வைத்தனர்.

இயந்திரமயமான இவ்வுலகத்தில் விஞ்ஞான அறிவின்றி எவராலும் செயற்பட முடியாது. இங்கே புதுபுதுவாக கண்டுபிடித்தும், கண்டுப்பிடிப்பாளர்களும் பலர் காணப்படுகின்றது. அதாவது ஆள் பாதி ஆடை பாதி என்பது போல தற்போது மனித வாழ்வில் விஞ்ஞானம் முக்கியத்துவமாக இருக்கிறது. ஏனெனில் தற்போது முன்னேற்றமடைந்துவரும் இவ்வுலகில் புதிய புதிய கண்டுப்பிடிப்புகள் எம்மை ஈர்த்து செல்கின்றது. அதை பயன்படுத்துவதற்கு உரிய விஞ்ஞான அறிவு அவசியம் ஆகும். விஞ்ஞானத்தை கற்று மனித வாழ்வை நல்லதாக மாற்றுவோம். ஒவ்வொரு கண்டுப்பிடிப்பாளர்களும் முதலில் தோல்வியை ஏற்படுத்திய பின்னரே வெற்றியை எய்தனர். விஞ்ஞானம் மனித வாழ்வை பூரணப்படுத்தும். ஆகவே விஞ்ஞானமானது மனித வாழ்வுடன் தொடர்பாக அமைந்து உள்ளது என்பதை இக்கட்டுரையின் ஊடாக தெரிய வருகின்றது

## ஒற்றுமையே பலம்

**U. விஸ்ண ஹாசினி தரம் 7C**

''அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு'' என்பது எம்முடைய சான்றோர்கள் தொன்று தொட்டு வழங்கி வந்த மொழியாகும். சாதாரண அஃறிணை பொருளான அடம்பன் கொடி கூட ஒன்று சேர்ந்தால் வலிமை மிகுதியாக காணப்படுகின்றது. அதே போல மனித குலத்தின் மாண்புக்கு, வெற்றிக்கு, எழுச்சிக்கு உரிய மார்க்கம் ஒன்றுபட்டு எச்செயலையும் செய்தலே ஆகும். அதன் மூலம் எமது வலிமை பன்மடங்காக பெருகுவதுடன் திறம்படவும் காணப்படும் இதனையே பாரதியார்'' **ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு**'' என்றார்.

இந்த உலகில் இன்றைய சூழ்நிலையில் யாரும் தனித்து வாழ முடியாது சமூகத்தோடு ஒன்றுபட்டே வாழ வேண்டும். இன்றைய சமூகத்தில் உட்கட்டமைப்பு வாழ்வே உயர்ச்சியை தருகின்றது. இதற்கு '' தனிமரம் தோப்பாகாது'' என்ற சான்றோர் வாக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். ஒரு கை தட்ட ஓசை எழாது. இரு கையும் தட்டினாலேயே ஓசை எழுகின்றது. அதுபோல நாம் தனித்திருந்தால் எமக்கு வருகின்ற சவால்களை தகர்த்தெறிவது கடினம். ஆனால் கூட்டாக வாழ்ந்தால் அது மிகவும் சுலபமான காரியமாக அமையும்.

ஒன்றுபட்டு உழைப்பதன் மூலமே எதையும் சிறப்பாக சாதிக்க முடியும். '' கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'' என்பதற்கு இணங்க அஃறிணை உயிர்கள் கூட எடுத்துக்காட்டுக்களாக அமைகின்றன. சிற்றெறும்புகள் பல ஒன்றுசேர்ந்து பல உணவு பொருட்களை நகர்த்திச் செல்கின்றன. தேனீக்கள் ஒன்று சேர்ந்து தமக்கான கூட்டை அமைத்து தேனையும் சேகரிக்கின்றன. இவ்வாறான உதாரணங்கள் கூடி வாழ்வதால் ஏற்படும் சிறப்புக்களை எடுத்துக்காட்டுகின்றன. அதே போல கூட்டு பண்ணை, கூட்டுத்தொழில், கூட்டுக்குடும்பம், என்பன எல்லாம் கூட்டுறவின் அவசியத்தையே எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. கூடி ஒற்றுமையாக தொழில் செய்யும் போது காலம் மீதியாகின்றது. காரியம் எளிதில் கைகூடுகின்றது. விரல்கள் இணையும் போதுதான் கை செயலாற்றும் கருவியாகின்றது.

மனிதர்கள் ஒற்றுமையுடன் இணைந்தால் தான் உறுதியான பல செயல்கள் உருவாகின்றன. இன்று விஞ்ஞானத்தின் வளர்ச்சியானது பல துறைகளிலும் மாற்றங்களை கொணர்ந்துள்ளது. கட்டடங்கள், அணைகள், ஆலைகள் எல்லாம் வியத்தகு முறையில் உருவாகி உள்ளன. இவை எதுவும் தனி மனித முயற்சியினால் உருவானவை அல்ல மக்களின் ஒன்றுப்பட்ட உழைப்பின் மூலமே உருவானவை

உலகம் போற்றும் உத்தமர்கள், பெரியோர்கள் யாவரும் ஒற்றுமையை வலியுறுத்தியுள்ளனர். உதாரணமாக **கார்ல் மார்க்ஸ்** 'உலகத்தொழிலாளர்களே ஒன்று படுங்கள்'' என அழைப்புவிடுத்தார். சமாதானமே எங்களுக்கு வேண்டும் என மக்கள் குரல் எலும்புகின்றார்கள் அதுபோல இந்து முஸ்லிம் ஒற்றுமையை காக்க காந்தியடிகள்

போராடினார். அதற்காக அவரது உயிரையே அர்ப்பணித்தார். எல்லாத்தலைவர்களும் ஒற்றுமையே உயர்ந்ததென்றும், ஒன்றுபட்டே வாழ வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர். அவர்களது வாழ்வும் வாக்கும் “ ஒற்றுமையே பலம்” என்பதையே நமக்கு உணர்த்தி நிற்கின்றன.

உலகில் ஏற்பட்ட பெரும் புரட்சிகளை எண்ணிப் பாருங்கள்! இப்புரட்சிகள் எல்லாம் தனிமனிதனால் ஏற்பட்டவை அல்ல. மக்களின் ஒன்றுப்பட்ட எழுச்சியின் மூலம் ஒற்றுமையின் மூலமே ஏற்பட்டவை எனலாம். பிரிவு என்பது துன்பம் தரும். தனி மனித வாழ்வில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். கூடி வாழ வேண்டிய இருவர் பிரிந்தால் இருவருக்குமே துன்பம் பிறக்கும். பிரிவதால் இருவரின் பலமும், குன்றும் முன்னேற்றம் தடைபடும். ஒன்று பட்டு வாழ்வதன் மூலமே வாழ்வு சிறக்கும். குடும்ப வாழ்விலும் சரி, சமூக வாழ்விலும் சரி ஒற்றுமை உறுதியாக நிலைபெற வேண்டும். இதன்மூலமே மனித வாழ்வின் இலட்சியங்களை நிறைவேற்ற முடியும் உலக வரலாற்றில் இதற்கான சான்றுகள் பலவற்றை நாம் காணலாம்.

நாமும் வீடும் சிறக்க ஒற்றுமை வேண்டும். “ ஒற்றுமையே வெற்றிக்கு வழி” நாம் கற்றறிய வேண்டிய முதல் மொழி அது. சாதி மத பேதங்களை மறப்போம். சமத்துவம் நிலைத்திட ஒன்று பட்டு உயர்வு காண்போம். ஆகவே தனி மனிதர்களாகிய நாம் எப்போதும் ஒற்றுமையோடு வாழ்வோமாக!

நம்பிக்கை இழக்காதீர்கள், நம்மை ஆட்கொண்ட துன்பம் வேறொன்றுமில்லை., பேராசையின் விளைவுதான்

சார்லின் சாப்ளின்

விழாமலே வாழ்ந்தோம் என்பதல்ல, விழும் ஒவ்வொரு முறையும் மீண்டு எழுந்தோம் என்பதே வாழ்வின் பெருமை.

நெல்சன் மண்டேலா

எந்த ஒரு மனிதன் சுயநலமின்றி மக்களுக்காக போராடுகின்றானோ அவனே உண்மையான தலைவன்

சே குவேரா

அறிவு மட்டுமே போதுமானதல்ல,அறிந்ததை அனுபவமாக்கிட வேண்டும்.

ப்ரூஸ் லீ

தடம் பார்த்து நடப்பவன் மனிதன், தடம் பதித்து நடப்பவன்தான் மாமனிதன்.

பிடல் காஸ்ட்ரோ

# தொலைத்தொடர்பாடல் சாதனங்களின் பயன்பாடு

**U.லோகேஸ்வரநாத், தரம் 8D**

மனிதனானவன் ஒருவரோடு ஒவர் தொடர்பு கொள்வதன் ஊடாகவே அவனது வாழ்வு பூரணமடைகின்றது. மனிதன் பரிணாமம் அடைவதற்கு முன் தொடர்பு கொள்ள முயன்றதன் காரணமாகவே மொழிகள் தோன்றின. அம்மொழிகளைக் கொண்டே ஆதிகாலத்தில் பல தொடர்பாடல் முறைகள் தோற்றம் பெற்றன. பிற்காலத்தில் அறிவியல் தோற்றுவித்த பல அறிவியலாளர்கள் மூலம் தோற்றுவிக்கப்பட்ட பல உபகரணங்கள் ஊடாக பல நவீன தொடர்பாடல் முறைகள், தோற்றம் பெற்றன. உதாரணமாக தொலைகாட்சி, வானொலி, தந்தி, தொலைநகல், தொலைபேசி போன்றவற்றை குறிப்பிடலாம். இது போன்ற உபகரணங்களைக் கொண்டே இந்து 21ம் நூற்றாண்டில் தொடர்பாடல்கள் நடைபெறுகின்றன.

தகவல் தொடர்பாடல் வரலாற்றில் ஒரு புரட்சியை ஏற்படுத்திய சாதனமே வானொலியாகும். இது 1895 ஆம் ஆண்டு இத்தாலிய நாட்டைச் சேர்ந்த மார்க்கோனியால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வானொலியைக் கொண்டே ஆரம்ப காலத்தில் தொலைவில் நடக்கும் விடயங்களை அறியக்கூடியதாக இருந்தது. ஆரம்ப காலத்தில் பெரிய உருவமைப்பை கொண்டிருந்த வானொலி தற்போது உள்ளங்கையில் அடங்கும் அளவுக்கு மாறிவிட்டது. தற்போது தொலைகாட்சி, தொலைபேசி, தொலைநகல், என்று பல தொலைத்தொடர்பு சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் வானொலிக்கு தகவல் தொடர்பாடலில் தனி இடமுண்டு.

19ம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட சிறந்த கண்டுப்பிடிப்புகளில் தொலைபேசியும் ஒன்றாகும். இதன் மூலம் தூர இடங்களுக்கும் மிக விரைவாக செய்தியை அனுப்பலாம்,அல்லது பெறலாம். ஆரம்ப காலத்தில் காணப்பட்ட தொலைபேசியானது பல்வேறு உருவங்களில் பரிணாமம் அடைந்து தற்போது கடிகாரத்தில் தொலைபேசி உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆரம்பகாலங்களில் கம்பியினூடாகவே மின்கடத்தப்பட்டு கேட்பவரின் காதுகளை சொற்கள் சென்றடையும் தொலைபேசியே காணப்பட்டது. பின் கம்பியில்லா தொலைபேசிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக உலகின் எவ்விடத்திலிருந்தும் எந்நேரத்திலும் யாரோடு வேண்டுமென்றாலும் கதைக்கலாம். இன்றையக் காலக்கட்டங்களில் மனிதனுடன் தொலைபேசி ஒன்றிப்போய்விட்டதுஎன்றே கூறலாம்.

இன்றையக்காலக்கட்டத்தில் பெரும்பாலும் அனைவரது வீடுகளிலும் காணப்படும் சாதனமே தொலைகாட்சியாகும். இது 1940ம் ஆண்டு ஜோன் லொகிபெயாடர்ட் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒலியும் ஒளியும் சார்ந்த சாதனம் என்பதால் ஒரு செய்தியை ஒலி மட்டுமில்லாது காட்சியுடனும் பார்க்க முடியும். இதனூடாக ஓர் செய்தியை தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். இதுவும் ஏனைய தொலைத் தொடர்பாடல் சாதனங்களைப் போன்றே தற்போது புதிய வடிவங்களுடனும் நவீன இணைப்புகள், வசதிகளை கொண்டத் தொலைகாட்சிகள் உள்ளன. எவ்வாறாயினும்

தொலைகாட்சிக்கு தொலைத்தொடர்பாடல் வரலாற்றில் அழியாப்புகழ்பெற்றது போலவே எதிர்காலத்திலும் புகழ்பெறும் என்பதில் ஐயமில்லை.

தகவல் தொடர்பாடல் வளர்ச்சியில் ஒரு மைல்கல்லாகவே இணையம் உள்ளது. இந்த இணையத்தளத்தைக் கொண்டு தற்போது எந்த விடயத்தையும் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம். வரலாற்று ரீதியான தகவல்களை மட்டுமன்றி சற்று முன்னர் நடந்த தகவல்களை வரை அறியலாம். ஆரம்பக் காலங்களிலும் 21ம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலும் இணையம் கணினியில் மாத்திரமே பயன்படுத்தப்பட்டு வந்தது. எனினும் இன்றைய காலக்கட்டத்தில் தொலைபேசியிலும் இணைய இணைப்பு உள்ளது. இதனால் ஆரம்பகாலங்களைப் போன்று ஒரு தகவலை பெறவேண்டுமாயின் கணினியை தொடங்கி பெறவேண்டிய அவசியமில்லை. இப்போது எவ்விடத்திலும் விடயத்தை உடனடியாக பெறலாம். எனவே எதிர்காலத்தில் இணையத்திற்கு தகவல் தொடர்பாடலில் தனி இடமுண்டு என்பதை மறுக்க இயலாது.

எனவே தொலைத்தொடர்பாடல் சாதனங்கள் மனிதனோடு ஒன்றிப் போய்விட்டன. இதன் காரணமாக மனிதனின் கைகளில் உலகம் அடங்கிவிட்டது. எனவே தொலைத்தொடர்பாடல் சாதனங்களைப் பயன்படுத்தி பயன்பெறுவோமாக.

எந்த மனிதனும் தனது கடந்த காலத்தை திரும்ப வாங்கும் அளவிற்கு பணக்காரனாக இல்லை

ஆஸ்கார் வைல்ட்

பிறரைக் குறைத்து மதிப்பிட வேண்டாம். அது உங்கள் உள்ளத்தின் மதிப்பைக் குறைக்கும்.

.இங்கர்சால்

எழுதும் சொற்களைவிட பேசும் சொற்கள் வலிமை வாய்ந்தவை.

அடால்ஃப் ஹிட்லர்

அனுபவம் ஒரு கடுமையான வாத்தியார், அது சோதனையைத் தந்த பிறகுதான் பாடத்தை போதிக்கிறது.

ஜோர்ஜ் பெர்னாட்ஷா

பொறாமை மடமைக்கொப்பானது: போலித்தனம் தற்கொலைக்கொப்பானது.

எமேர்சன்

சிந்திப்பதற்கு நேரம் எடுத்துக்கொள்ளுங்கள், ஆனால் நடவடிக்கைக்கான நேரம் வரும்போது சிந்தனையை நிறுத்திவிடுங்கள்.

நெப்போலியன் பொனபார்ட்

# மகாத்மாகாந்தி

**Y. யுவநாத்ஷங்கர் , தரம் 8B**

இந்தியாவின் விடுதலைப் போராட்ட சரித்திரத்திலே முக்கியமான கதாநாயகன் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியடிகள். ஹிட்லர் ஆரம்பித்த யுத்தம் காலணி ஆதிக்க நாடுகளின் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்த மாற்றமே இந்திய விடுதலையின் வேகத்தை அதிகரித்தது என்று கூறலாம். அந்நியரின் ஆட்சியில் அடிமைப்படுத்தப்பட்டுக் கிடந்த பாரத தேசத்தை விடுவிக்கவும், பாரத அன்னையின் அடிமை விலங்கை ஒடிக்கவும் காந்தி நாட்டின் விடுதலைக்காக உழைத்ததோடு, சமூகத்தில் நல்ல விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியவர்.

இந்திய சுதந்திர போராட்டத்தில் அகிம்சையை தனது ஆயுதமாக எடுத்து போர்க்கொடி உயர்த்தினார். 1942 ஆம் ஆண்டு ஆவணி மாதம் பிரிட்டிஸ் ஏகாதிப்பத்தியத்திற்கு எதிராக சுதந்திர போருக்கு வித்திட்டவர் அண்ணல் காந்தியடிகளே. இவரின் தாயார் புத்திலிபாய். புத்திலிபாய் ஒரு பெண் குழந்தையும் மூன்று ஆண் குழந்தைகளையும் பெற்றெடுத்தார். இவர்களில் காந்தியடிகள் தான் கடைசிப்பிள்ளை. குஜராத் மாநிலத்தில் உள்ள போர்பந்தர் என்னும் ஊரில் வைசிகர் குலத்தில் 1869 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 2 ஆம் திகதி காந்தி பிறந்தார். காந்தியின் ஆரம்பக்கல்வி போப்பந்தரில் தான் தொடங்கியது. 7 ஆவது வயதில் தந்தையின் வேலை மாற்றத்தால் “ ராஜ்கோட்” என்ற ஊரில் அவரது படிப்பு தொடர்ந்தது.

எந்நேரமும் ஊக்கத்தோடு கல்வியைக் கற்றார். மிகுந்த கூச்ச சுபாவம் உடையவர். இவர் தமது 12 ஆவது வயதிலே பார்த்த அரிச்சந்திர நாடகமே அவரை மிகவும் கவர்ந்து சத்தியசீலராக விளங்கச்செய்தது. காந்தி அவர்கள் தமது 13 ஆவது வயதிலே கஸ்தூரிபாய் என்ற பெண்ணை மணந்து கொண்டார். இல்லறம் நல்லறமாக நடந்தது. காந்திக்கு 16 ஆவது வயது நிரம்பிய போது 1885 ஆம் ஆண்டு அவரது தந்தையார் இறந்து போனார். 1887 ஆம் ஆண்டு காந்தி பவநகர் கல்லூரியில் மாவ்ஜிதவே சித்தியடைந்தார்.

அவர்களது குடும்ப நண்பர் மாவ்ஜிதவே என்பவரின் உதவியினால் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் படிக்க பம்பாய் சென்றார். 18 வயதான காந்தி புரட்டாதி மாதம் 4 ஆம் திகதி இலண்டனுக்கு பயணமானார். இவன் இலண்டனுக்கு சென்ற பொழுது இவருக்கு ஒரு குழந்தை பிறந்திருந்தது. அதனைப் பிரிந்து போவது மனதுக்கு மிகவும் கஷ்டத்தை கொடுத்தது. 1948 ஆம் ஆண்டு தை மாதம் 30 ஆம் திகதி நடந்த பிரார்த்தனை கூட்டத்தில் கல்நெஞ்சம் கொண்ட நாதுராம் விநாயக கோட்சே என்ற இந்துத் தீவிரவாதியால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

# சூழல் பாதுகாப்பு

**C. பவதாரணி, தரம் 8C**

சூழல் என்பது எம்மை சுற்றியுள்ள அம்சமாகும். இயற்கையைப் போற்றி பயன்படுத்திக்கொள்ள மனிதன் கற்றுக்கொண்ட போதே நாகரிகம் தொடங்கிவிட்டது. நாகரிகம் நாள்தோறும் வளர்ந்துக் கொண்டே இருக்கின்றது. பண்பாட்டு பழக்க வழக்கங்களும் மாற்றம் பெறுகின்றன. அதனால் இயற்கைச்சூழல் மாற்றம் பெறுவதால், அதன் வளங்கள் குறைய ஏதுவாகின்றது. இறையருளால் கிடைத்த இயற்கை சூழலை மாற்றாமல் அதை உயிர் வாழ்வுக்கு ஏற்ப பயன்படுத்திக்கொள்ளும் திறமைகளே அறிவியலாக விரிவடைகின்றன. அறிவியலும், நாகரிகமும் வளர்ந்தாலும் பண்பாட்டும், பயனும் என்றும் நிலைத்திருக்கப் பாடுபடுவதே இயற்கையோடு இணைந்த வாழ்வாகும். இயற்கைச்சூழல் கெட்டால் வளமான வாழ்வு கேள்விக்குறியாகிவிடும். இயற்கை சூழலைப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

மலைகள், நீரோடைகள், தாவரங்கள் இவை அனைத்தும் சூழலில் காணப்படும் அம்சங்களாகும். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன பஞ்சபூதங்களாகும். காற்று இல்லாமல் எந்த அங்கியும் உயிர்வாழ முடியாது. சுவாசித்தலுக்கு தூய காற்று தேவை. ஆனால் இன்று காற்று அளவுக்கதிகமாக மாசடைகின்றது. தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் புகை, வாகனங்களிலிருந்து வெளிவரும் புகை இதன் காரணமாக காற்று மாசடைகின்றது. காற்று மாசில் கலந்துள்ள கரியை தாவர வகை எடுத்துக் கொண்டு பகலில் ஒளிச்சேர்க்கை மூலம் நமக்கு தேவையான உயிர் வளியை வெளிவிடுகின்றது. ஆகையால்தான் நிறைய மரங்களை வளர்க்க வேண்டும். மரங்கள் மழை பெய்யவும், காற்றை தூய்மைப்படுத்தவும் உதவுகின்றது. தூய்மையான காற்றே உயிர்களின் நல்வாழ்வுக்குச் சிறந்த துணையாகும். 'நீர் இன்றி அமையாது உலகு' என்றார் வள்ளுவர்.

உலக உருண்டையில் முக்கால் பாகத்திற்கு மேல் நீரால் சூழப்பட்டுள்ளது. உயிர் வாழ்க்கைக்கும், பயிர்களுக்கு தேவையான நீரை மழையினூடாகவே பெறுகின்றோம். அதில் சிறுபகுதியைதான் நாம் பயன்படுத்துகின்றோம். நீர் பலவகைகளில் மாசடைகின்றது. நீரில் கழிவுகளை கொட்டுதல், வாகனங்களை நீரில் கழுவுதல், விலங்குகளை நீரில் கழுவுதல் போன்றவையாகும். நிலம்தான் நமக்குத் தேவையான உணவுப்பொருள் உற்பத்தியை பெருக்க உதவுகின்றது.

மனிதன் தன் பேராசையால் வேதி உரங்களைப் பயன்படுத்தி உற்பத்தியை பெருக்கினான். போதாதற்குத் தொழிற்சாலைகளையும், பெரிய மாட மாளிகைகளையும் கட்டியதால், நல்ல விளைநிலங்களை இழந்து நிற்கின்றனர். அத்துடன் பெருகும் குப்பை கூழக்கழிவும், நீர்க்கழிவும், எஞ்சியுள்ள நிலத்தையும், ஆறுகளையும் மாசுப்படுத்தி உயிர்வாழ்வை கேள்விக்குறியாக்கிவிட்டன. ஆகாயத்தில் சூரியக் கதிர் வீச்சிலிருந்து உலக உயிர்களைக் காத்துவரும் ஓசோன் படலம் சிதைந்து வருகின்றது. இதற்கான

காரணம் மனிதன் நாகரிகத்தின் பெயரால் தன் வாழ்க்கைக்குப் பயன்படுத்தும் பல்வேறு சாதனங்கள் வெளியிடும் நச்சு, காற்று மண்டலத்தை மாசுப்படுத்தி மேலே சென்று ஓசோன் படலத்தை சிதைக்கின்றது. விவசாயத்தில் பண்டைக்காலம் போல் இயற்கை உரத்தையும், நச்சு கொல்லிகளையும் பயன்படுத்த வேண்டும். கால்நடைவளம் பெருக வழிவகைகளை உடனே கையாள வேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பதை நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இதை மாற்றி இயற்கையான எளிமையான வாழ்வைக் கடைப்பிடிப்பதால் மனித இனம் நிறைவான வாழ்வைப் பெற்று உயரும், இயற்கையோடு இணைந்த இனிய வாழ்வுக்கு நாம் நம்மைத் தயாரித்துக்கொள்ள முயற்சி மேற்கொள்வோமாக நாமும் வாழ்வோம். நம்மை சார்ந்துள்ள பறவைகள், விலங்குகள், செடி கொடி மர வகைகள் முதலியவற்றையும் பாதுகாத்து வாழ செய்வோம்.

உங்கள் நம்பிக்கையை வைத்து முழுமையாக வாழுங்கள், உலகத்தையே உங்களால் புரட்டிப்போட முடியும்.

ஹென்றி டேவிட் தொரேயு

மனித இனத்திடமுள்ள ஒரு உண்மையான பயனுள்ள ஆயுதம், சிரிப்பு.

மார்க் டுவெய்ன்

மனிதனுடைய திறமை பெரிதல்ல: கிடைக்கின்ற சந்தர்ப்பமே அவனைப் பிரகாசிக்கச் செய்கிறது.

கண்ணதாசன்

ஆடம்பரம் என்பது போலியான வறுமை, மனநிறைவு என்பது வற்றாத செல்வம்

சாக்ரட்டீஸ்

உணர்ச்சிக்கு முதலிடம் கொடுக்காமல் உழைப்புக்கு முதலிடம் கொடுத்தால் , வாழ்க்கை உன்னதமாக இருக்கும்.

தாமஸ் அல்வா எடிசன்

உலகில் மிகவும் தெய்வீகமானது, சக மனிதனிடம் நீங்கள் காட்டும் அன்பும் பரிவும்தான்.

வால்டேர்

எங்கள் நெற்றியில் இருந்து விழக்கூடிய வியர்வைத்துளிகள் உங்கள் தலையெழுத்தையே மாற்றி அமைக்கும் வலிமை பெற்றவை.

கலீல் ஜிப்ரான்

# விஞ்ஞானத்தின் விந்தைகள்

**R.நேகா நிலுக்சி 9A**

இந்த காலத்தில் விஞ்ஞானம் - ஸயன்ஸ் - என்ற சொல் ஒரு நாள் ஒரு பொழுதேனும் நம்முடைய காலத்தில் விழாமல் இருப்பதில்லை. விஞ்ஞானத்தை வளர்ந்தாலேன்றி விமோசனமில்லை என்று பெரியோர்கள் எல்லோரும் கூறி வருகின்றார்கள். நாள்தோறும் புதுப்புது விஞ்ஞான அற்புதங்கள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன.

சாதாரணமாக விஞ்ஞானம் என்று கூறும்போது நம்முடைய கண்முன்னால் சினிமா, ரேடியோ, தந்தி, டெலிபோன் போன்ற பொருள்களே வந்து நிற்கும். இன்னும் கொஞ்சம் சிந்தித்தோமானால் இஞ்ஜெக்சன், எக்ஸ்ரே போன்ற வைத்திய நுட்பவிடயங்கள் தோன்றும். மாணவர்களிடம் கேட்டால் பாடசாலையில் கற்கும் ஆரம்ப விஞ்ஞானச் சுவடியுள்ள விடயங்களைக் கூறுவார்கள்.

ஆதலால் விஞ்ஞானம் என்பது அறிவாளிகளுடைய விடயம் என்றோ அதை எல்லோரும் பயன்படுத்த முடியாது என்பதோ கருத்தல்ல. ஆகவே விஞ்ஞானம் என்பது அறிஞர்களுடைய சொத்தன்று. அனைவருக்குமுள்ள பிறப்புரிமையே விஞ்ஞானம். எப்பொழுதும் நம்முடைய மனத்திலிருந்து கொண்டு வேலை செய்யும் ஒரு சக்தியே என்று விஞ்ஞான சிகாமணிகளில் ஒருவராகிய தாம்ஸ் என்பவர் கூறுகின்றார்.

நாம் எப்போது முறையாக உபயோகிக்கின்றோமோ அன்றே அதை நாம் விஞ்ஞானம் என்று கூறுவோம் என்று விஞ்ஞானப் பெரும் புலவர் தாமஸ் ஹக்ஸ்லி கூறுகின்றார். வாளை உபயோகிக்கத் தெரிந்தவருக்கும் தெரியாதவருக்கும் உள்ள வித்தியாசமே விஞ்ஞான முறை அனுட்டிப்பவருக்கும் விஞ்ஞான முறை அனுட்டிக்காதவர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்றும் அவர் கூறுகின்றார்.

இப்பொழுது நாம் அறிவுச்சக்தியை உபயோகிப்பதற்கு எல்லோருக்கும் தெரிந்த ஓர் உதாரணமாக தீ எரிவதையும், புகை உண்டாவதையும் அறிவோம். இப்படி பலமுறை பார்ப்பதாகவும், அதைத்தனித்தனியாக தினசரிப்புத்தகத்தில் குறித்துக் கொள்வதற்காகவும் வைத்துக் கொள்வோம். இப்படி பலமுறை பார்த்தபின் விடயங்களைத் தனித்தனியாக எண்ணாமல் தீ உண்டானால் புகை உண்டாகும் என்று ஒரே விடயமாக முடிவு செய்து வைத்துக் கொள்வோம். அதன் பின் ஒரு நாள் புகையைப் பார்க்கின்றோம். உடனே அங்கே உண்டு என்று அனுமானிக்கின்றோம். அங்கே போய் பார்க்கும் போது தீ உண்டாகி இருக்கின்றது. அதைக்கொண்டு நாங்கள் முன்னால் செய்த முடிவு சரிதான் என்று எண்ணுவோம். ஆயினும் அதைக்கொண்டு மட்டும் சரி என்று சொல்லிவிடக்கூடாது என்று எண்ணி தானாக தீ உண்டாக்கி புகை உண்டாகிறதா என்று பார்க்கும் பொழுது புகை உண்டாகுமானால் எங்களது முடிவு சரிதான் என்று தீர்மானிக்கலாம். இதுதான் விஞ்ஞான முறையாகும்.

இந்த விதமாகவே நம்முடைய அறிவானது எப்போதும் வேலை செய்வதாகக் கூறினாலும் நாம் வேறு சில விடயங்களிலும் நம்முடைய மனத்தைப் பறிகொடுத்து இந்த முடிவைச் சரியாகக் கையாளாமல் இருந்து விடுகின்றோம். அப்படி நம்முடைய மனத்தைக் கொள்ளை கொண்டு உண்மையை அறிய வொட்டாமல் தடுப்பவை மூன்று.

ஏதேனும் ஒரு விடயத்தைப் பற்றிச்சிந்திக்கும் போது அதை மேற்கூறிய விஞ்ஞான ரீதியாக, அது சம்பந்தமான பொருள்களைத் தேடிச் சேகரிக்கவோ, சேகரித்து ஒரு முடிவு செய்து, அது சரிதானா என்று சோதனை பார்க்கவோ செய்யாமல் அநேக சமயங்களில் நாம் பெரியோர்கள் இந்த விதம் கூறியிருப்பதால் அதுதான் உண்மை என்று கண்ணை மூடிக்கொண்டு இருந்து விடுகின்றோம்.

சில சமயங்களில் நம்முடைய மனம் ஆனது விஞ்ஞான ரீதியாக வேலை செய்து உண்மையைக் கண்ட போதிலும் நாம் அதுவரை எண்ணிய கருத்துக்களுக்கு அது முரண்பட்டதாக இருப்பதால், நாம் அதை புறக்கணித்து விடுகிறோம். நம்முடைய கருத்து தவறு என்று கூறி விட்டுவிடத் துணிவதில்லை. இவ்வளவு காலமாக எண்ணிவந்த நம்முடைய கருத்து தவறாக இருக்குமா என்று எண்ண ஆரம்பித்து விடுகிறோம்.

இதுபோலவே சில சமயங்களில் விஞ்ஞான முறைகள் உண்மையாகவும் நம்முடைய பழக்க வழக்கங்களுக்கு மாறுபட்டதாகவும் இருக்கக்கூடும். அப்போதும் நம்முடைய மனம் பழக்க வழக்கங்களைவிட்டு உண்மை வழி செல்லப் பின் வாங்குவது அதனால்தான்.

நாம் நம்மிடம் இயற்கையாகவுள்ள அறிவுச்சக்திக்கு பயிற்சி அளித்து, பெரியோர் வாக்கு நம்முடைய கருத்து நாட்டின் பழக்கவழக்கங்கள் ஆகியவைகளைக் கண்டு மயங்காவண்ணம் உண்மையை நாட்டில் நாடிய உண்மைப்படி நடக்கவும் ஆற்றலும், பழக்கமும் உண்டாகும். மாறு செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதுதான் உண்மையில் நாம் அனைவரும் பெற வேண்டிய விஞ்ஞானக்கல்வியாகும்.

நீங்கள் ஒருவரின் குணத்தை சோதித்துப் பார்க்க வேண்டுமானால் அவரிடம் அதிகாரத்தைக் கொடுத்துப் பாருங்கள்.

ஆபிரகாம் லிங்கன்

சிக்கனமும் சேமிப்பும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இரு கருவிகள்.

ஜார்ஜ் ஹெர்பெர்ட்

பேச்சில் இனிமை, கொள்கையில் தெளிவு, செயலில் உறுதி ஆகிய மூன்றும் உள்ளவர் எல்லாவற்றையும் சாதிக்கலாம்.

தாமஸ் புல்லர்

எங்கு சமாதானம் இல்லையோ அங்கே மறுபடியும் மறுபடியும் சமாதானத்தைப் பற்றியே பேசுங்கள்.

இயேசு நாதர்

# விஞ்ஞானத்தின் விந்தைகள்

**N.ஷோபிகா, தரம் 9B**

ஆதி காலத்திலிருந்தே படிப்படியாக வளர்ச்சியடைந்துக் கொண்டு வரும் ஒன்றாக விஞ்ஞானம் காணப்படுகின்றது. தற்போதைய காலத்தில் உலகமயமாக்கல் காரணமாக உலகமானது மனிதனின் கையில் உள்ளடங்குகின்றது என்று சொல்லுமளவிற்கு சுருங்கி விட்டது. இதற்கு காரணமாக அமைவது விஞ்ஞான கண்டுப்பிடிப்புகளும், அதன் வளர்ச்சியுமே ஆகும். இதற்கு மேலாக மனிதனின் பரிபூரணத்துடன் கூடிய பரந்த அறிவுமே ஆகும்.

பல துறைகளில் வளர்ச்சியடைந்துக் கொண்டு வரும் விஞ்ஞானமானது மனிதனின் அன்றாட வாழ்வில் செய்யும் அனைத்து வேலைகளிலும் பயன்படுகின்றது. ஆதிகால மக்கள் விஞ்ஞானம் என்று அறியாமல் செய்த ஒவ்வொரு செயலிலும் விஞ்ஞானம் காணப்படுகின்றது. உதாரணமாக மஞ்சள் நீர் தெளிக்க வேண்டும் என்பது இந்து மக்களின் ஒரு சமயம் சார்ந்த செயலாக காணப்பட்டது. ஆனால் அதற்கு காரணமாக அமைவது மஞ்சள் நீர்த் தெளித்தால் கிருமிகள் அழிந்து விடும் என்பதேயாகும். இவ்வாறு காணப்பட்ட ஆதிகால மனிதர்களின் அறியாத விஞ்ஞானத்திற்கும், இக்கால மனிதர்களின் அறிவுப்பூர்வமான விஞ்ஞானத்திற்கும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றது. அக்காலத்தில் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு சிலேடை, மணல், குச்சி, கூரிய கற்கள் ஆகியவற்றை பயன்படுத்தினர். தற்போதைய காலத்தில் பேனை, பென்சில், புத்தகம், கணினி என்பவற்றை பயன்படுத்துகின்றனர். அக்காலத்தில் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கு புகை மூட்டல், புறாவின் காலில் கட்டி பறக்கவிடல், பாரிய ஒலியை எழுப்புதல் ஆகிய முறைகளை பயன்படுத்தினர். ஆனால் தற்போது தொலைகாட்சி, வானொலி, தொலைபேசி, கணினி, இணையம், மின்னஞ்சல் பத்திரிக்கைகள் ஆகிய சாதனங்களை பயன்படுத்துகின்றனர்.

இத்தொடர்பு சாதனங்கள் தகவல் பரிமாற்றுவதற்கு மட்டுமல்லாமல் மாணவர்களின் கல்வி செயற்பாடுகளிலும் முக்கிய இடம் வகித்து வருகின்றது. இவற்றுள் மாணவர்கள் கணனியை அதிகளவில் பயன்படுத்துகின்றனர். இதற்கு காரணமாக அமைவது கணினியில் காணப்படும் இணையம், முகப்புத்தகம், போன்ற புதிய விதமான கண்டுப்பிடிப்புகளே ஆகும். புதிய விடயங்களை கற்றுக்கொள்வதற்கும், குறைந்த நேரத்தில் இலகுவாக கற்பதற்கும், வீட்டில் இருந்துக்கொண்டே படிப்பதற்கும் கணிணி பயன்படுகின்றது. இதனால் மாணவர்களின் அறிவும் வளர்ச்சியடைகின்றது.

அதுமட்டுமல்லாமல் வெளிநாட்டில் உள்ளவர்களுடன் நேரடியாக முகம் பார்த்து பேசுவதற்கும் பயன்படுகின்றது. அக்காலத்தில் விவசாயம், கால்நடை வளர்ப்பு, பண்டமாற்று முறை ஆகியன காணப்பட்டன. தற்போது விஞ்ஞான வளர்ச்சியின் மூலம் கைத்தொழில்கள், புதிய வேலைவாய்ப்புகள், கணிணி தொடர்பான வேலைவாய்புக்கள், புதிய உற்பத்திப்பொருட்கள், பணமாற்று முறை என்பன காணப்படுகின்றன. அக்காலத்தில் நோய்களை குணப்படுத்துவதற்கு மூலிகைகள், பச்சைத்தாவரங்கள்

என்பவற்றை பயன்படுத்தினர். தற்போது வைத்தியசாலைகளில் புதிய மருந்து வகைகள், இலத்திரனியல் உபகரணங்கள் என்பவற்றை பயன்படுத்துகின்றனர். இதனால் தீர்க்க முடியாத நோய்களும் குணமடைகின்றன. அது மட்டுமல்லாமல் எமது விஞ்ஞானிகள் செவ்வாய் கிரகத்தில் சென்று வாழ்வதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இதற்கு மேலாக நனோ தொழிநுட்பம் மூலம் புதிய உற்பத்திப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல் தற்போது ரோபோக்கள் கண்டுபிடிக்கப்பட்டு வேலைப்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்ற போதிலும் எதிர்காலத்தில் மனிதர்களது வேலைகளை பூர்த்திசெய்வதற்கும், வீட்டுவேலைகளை செய்வதற்கும் ரோபோக்கள் உருவாக்குவதற்கான ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் ஈடுப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதன் மூலம் எமது நேரங்கள் மீதமடைவதுடன், இலகுவாக வேலைகளையும் செய்துகொள்ளலாம். விஞ்ஞான வளர்ச்சியின் மூலம் இவ்வாறான பல நன்மைகள் இருந்தாலும் பல தீமைகளும் காணப்படுகின்றது. மாணவர்கள் இணையத்தளம், முகப்புத்தகம் என்பவற்றை பயன்படுத்துவதனால் தீய விடயங்களில் ஈடுபடுகின்றனர். இதனால் எமது நாட்டில் நற்பிரசைகள் உருவாவதற்கான வாய்ப்புகள் இல்லாமற் போகின்றன. புதிய மருந்து வகைகள் மூலம் தற்போது அல்லாமல் எதிர்காலத்தில் மனிதர்களின் உடல் பாதிப்படைகின்றன.

எதிர்காலத்தில் விஞ்ஞானம் மேலும் வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்பட்டாலும் இவ்வாறான தீமைகள் காணப்படுவதால் விஞ்ஞான வளர்ச்சி வீழ்ச்சியடைவதற்கான வாய்ப்புக்களும் உண்டு. இதற்கு தீர்வாக நாம் விஞ்ஞான வளர்ச்சியினை சரியான முறையில் பயன்படுத்தினால் எமது விஞ்ஞான அறிவை மேலும் விருத்தியடையச்செய்யலாம்.

நிகழ்காலத்தில் கவனம் எடுத்துக்கொள் . எதிர்காலம் தன்னைத் தானே கவனித்துக் கொள்ளும்.

சாமுவேல் ஜான்சன்

நீ ஒழுக்கம் உள்ளவனாக இருந்தால் கவலையே வராது. நீ அறிவாளியாக இருந்தால் குழப்பம் வராது. நீ துணிவுள்ளவனாக இருந்தால் அச்சம் வராது.

கன்பூசியஸ்

நமது உதடுகளை அரண்மனை வாயிற் கதவகளைப் போல பாதுகாகக வேண்டும். நமது வாயிலிருந்து வெளிப்படும் ஒவ்வொரு சொல்லும் சாந்தமானதாகவும் இதமானதாகவும் இருக்க வேணடும்.

கௌதம புத்தர்

வாழ்க்கை ஒரு பாறை. உங்களிடம் அறிவு என்ற உளி இருக்கிறது. அழகாக சிற்பமாக வடித்து ரசிப்பதற்கு என்ன?

அறிஞர் அண்ணா

# DRUG ADDICTION

**S.Danishharan, Grade 9C**

Drug addiction falling prey to the dangerous habit of taking narcotics is spreading fast among young men all over the world. It is a veritable malody that, onces indulged in,gets in to bones and cannot be shaken off with the all the efforts. The result is that not only the young addict but his family is often doomed.

Various factors are at work for the spread of this infection. The commonest cause is a wide spread feeling among even tender – aged boys and girls, of deep depression and gloom. We live in anage of heightened tempo of fife. Domestic at mospgere and perantal relation today are not all that is desired. Often both father and mother go out to work out side, leaving the child uncared for. Thussb – conscious discontent is primarily responsible for the teenage going astray conwrong lines.

There are also drug traders around them, lying in wait to look for the possible victim. They have paid agents who tempt depressed and discontent ted boys. Tender – age boys and girls feel naturally attracted to anything novel ( strangely new) and unknown. So they are easily induced to take the drug for wich the agents of drugtraffickers initially pay. Drugs like hashish, marujiana,heroin,L.S.D cockaine contain high percentage of opium. Such a drug when taken, at first leads of temporary forget fullness with a kind of trans port into a pleasant dream land. Once initiaded is the habit is formed, the new addict must have it at the appointed our and cannot do without it for all the world. Soon he turns anti – social, resorts to all sorts of crimes to have the money to buy the drug and leads the life of a wreck with deadened sensation about the out side world and the cherished human velues. He is lost to the society and gradually glides to his grave. In this way the promising career of a large number of youths is blasted.

The sence of optimism is to be bread in them so that day can turn a new leaf of life and become useful and responsible members of the society. The adage is worth quoting ever sinner has a fulure just a saint has a past

# இணையத்தளத்தின் பயன்பாடு

**K. கபிஷாமிலி லதுஷிகா, தரம் 9B**

வளர்ந்து வரும் அறிவியல் முன்னேற்றத்தில் கணிணிப் பயன்பாடுகள் மிக இன்றியமையாத பங்கு வகிக்கின்றன. கணினிப்பயன்பாடு இல்லாத துறைகளே இல்லை. இன்று கிராமங்களில் கூட இணையப்பயன்பாடு மிக சாதாரணமாக உள்ளது. எனவே இணையம் அதிக வளர்ச்சியடைந்துள்ளது.

உலகளாவிய அளவில் பல்வேறு இணையத்தளங்கள் உலகத் தகவல் அனைத்தையும் நம் கண்முன்னே நம் இல்லத்திலேயே அள்ளித் தருகின்றது. இந்த இணையத்தளம் பொழுது போக்கிற்காக அமைக்கப்பட்டதாகும். இணையம் வழியாக அனைத்து வகை மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாக மாறிவிட்டன.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் ஈர்க்கும் வகையில் இந்த இணையத்தளம் அமைந்துள்ளது. இந்த இணையத்தளப் பயன்பாட்டில் பல தீமைகளும் உள்ளன. இந்த இணையத்தளப் பயன்பாட்டினால் பல குற்றங்களும் பெருகி வருகின்றன. பல்வேறு இணையத்தளங்கள் மக்களின் முன்னேற்றத்திற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த இணையத்தளங்களிலேயே முகநூல்( Facebook) எனப்படுவதும்,Twitter ஆகியன மிகவும் பிரபல்யமானவை ஆகும். கணினிகள் மட்டுமன்றி இப்போது நவீன வசதிகளுடன் கூடிய கையடக்க தொலைபேசிகளும் இணையத்தின் பயன்பாட்டிற்கு அதிகரித்துள்ளன. இப்போது நவீன வகையிலான கையடக்கத் தொலைபேசிகளும் அனைவரிடமும் காணப்படுகின்றது. இணையத்தளத்தின் மூலம் பல செய்திகள், புகைப்படங்கள், பதிவுகள், வாழ்த்துக்கள் என அனைத்தையும் இணையத்தளம் மூலம் பிறருக்கு அனுப்பலாம். புதிய புதிய சேவைகளை நாம் அனைவரும் இணையத்தளம் மூலம் அறிந்துக் கொள்ளலாம்.

இன்றைய சூழலில் தற்போது இணையத்தளங்களில் கணக்கில்லாதவர்கள் பல பெயர்களை பார்க்கக் கூடியதாக உள்ளது. நேரம் கிடைக்கும் போதெல்லாம் இணையத்தை பயன்படுத்தும் நிலைமாறி இணையத்தளத்திலே காலத்தை கழிக்கின்றார்கள்.

இணையத்தளங்கள் பொழுது போக்கிற்கு மட்டுமன்றி நமக்கு தேவையான முக்கிய விடயங்களையும் நமக்கு கொடுக்கின்றது. இணையத்தளம் எல்லா நாடுகளிலும் பயன்படுத்த கூடியதாக உள்ளது. இவ்வாறான இணையத்தளங்கள் சமூக பொருளாதார வளர்ச்சிக்கும், தகவல்களை பரிமாறிக் கொள்ளவும் உதவுகின்றது.

நாம் மற்றவர்களுடன் கதைப்பதற்கும் இணையத்தளம் பயன்படுகின்றது. தன் குடும்பத்தைசேர்ந்தவர்கள் அயல் நாடுகளில் வாழும் பலரும் இணையத்தள உதவியுடன் தங்களது கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்காக இணையத்தளம் பயன்படுகின்றது. இணையத்தளம் எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக பயன்படுகின்ற ஒரு நவீன சாதனமாக வளர்ச்சியடைந்து வருகின்றது.

# காட்டுவளத்தை பாதுகாப்போம்

**S.மதுசாலினி, தரம் 9C**

இயற்கை அன்னை எமக்களித்த இயற்கை வளங்களுள் காடுகளும் ஒன்றாகும். இந்தக் காடுகளை மக்கள் இப்போது வேகமாக அழித்து வருகின்றனர். காடுகளை அழிப்பதற்கான காரணங்களாக நாம் பலவற்றைக் குறிப்பிடலாம். அவற்றுள் முக்கியமானது சனத்தொகை அதிகரிப்பதாகும். அதிகரித்துவரும் சனத்தொகையினால் காடுகள் அழிக்கப்பட்டு வீடுகளும், நெடுஞ்சாலைகளும், திணைக்களங்களும், பாடசாலைகளும், தொழிற்சாலைகளும் அமைக்கப்படுகின்றன. விறகுத்தேவை, பலகைத்தேவை என்பவற்றிற்காகவும் காடுகளைக் கரிசனையின்றி அழிக்கின்றனர்.

காடுகள் அழிக்கப்படுவதனால் மண்ணரிப்பு ஏற்படுதல். மழைவீழ்ச்சிக்குன்றுதல், சூழற்சமநிலை கெடுதல், காட்டுவளம், அரிய உயிரினங்கள் அழிதல் முதலான தீய விளைவுகள் ஏற்படும். நாம் காடுகளை வெட்டுவதனால் மண்ணைப் பற்றிப் பிடித்திருக்கும் வேர்கள் மண்ணிலிருந்து வெளிப்படும். பின்னர் மழைப்பெய்யும் போது அந்த மண் நீரினால் அரித்துச் செல்லப்படும். அரித்துச் செல்லப்படும் மண்ணானது குளங்களில் சேர்க்கின்றது. குளத்தில் மண் அதிகரிக்க நீர் மட்டம் குறைவதுடன், குளமும் மூடப்பட்டுவிடும். இதனால் நீர்ப்பற்றாக்குறை ஏற்படும். மரங்களை வகைதொகையின்றி அழிப்பதால் மழை வீழ்ச்சி தடைப்படுவதுடன், நீரப்பற்றாக்குறையும் ஏற்படும். வளிமண்டலத்தில் காணப்படும் உயிர் வாயுவின் அளவும் குறைவடையும். அத்துடன் காபனீரொட்சைட்டின் அளவு அதிகரிக்கும். இதனால் சூழல் சமநிலைக் கெடும். இவ்வாறான பிரதிகூலங்கள் காடுகளை அழிப்பதால் ஏற்படும்.

காடழிப்பைக் குறைக்க வேண்டுமானால் வனபாதுகாப்பு அதிகாரிகளை நியமிக்கவேண்டும். மரநடுகை விழாவைக் கொண்டாட வேண்டும். ஒரு மரத்தை வெட்டும் போது இன்னுமொரு மரத்தை நடவேண்டும் என்ற புதிய சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். உத்தரவின்றி மரங்களை வெட்டுபவர்களுக்கு தகுந்த தண்டனை கொடுக்க வேண்டும். காட்டுக்கு பாதுகாப்பு அதிகாரிகளை நியமித்தால் அவர்கள் அனுமதியின்றி மரங்களை வெட்டுபவர்களைக் கைதுசெய்வர். மரநடுகை விழாவைக் கொண்டாடும் போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு மரத்தை நடுவர். இதன் மூலம் பல மரங்களை உருவாக்கி சூழலைப் பாதுகாக்கலாம்.

இலங்கையிலுள்ள காடுகளைப் பலவகையாகப் பிரிக்கலாம். அவற்றுள் உலர்வலயக் காடுகள், மத்திய கோட்டு ஈரவலயக் காடுகள், மலைநாட்டு ஈரவலயக்காடுகள், இடைவெப்ப வலயக் காடுகள் என்பன சிலவாகும். உலர் வலயக்காடுகளில் தேக்கு, பாரை போன்ற மரங்கள் வளரும். மத்திய கோட்டு ஈரவலயக்காடுகளில் ஹல்மில்ல, நாவல், கவிதார,கீனா,ஈரப்பலா முதலியவை வளரும். மலைநாட்டு ஈரவலயக்காடுகளில் தேயிலை, கோப்பி கொக்கோ ஆகியவற்றைப் பயிரிடுகின்றனர்.

இலங்கையிலுள்ள காடுகளுள் சிங்கராஜவனமே அதிக முக்கியம் பெறுகின்றது. இது ஆரம்பத்தில் 80% இற்கு மேல் காணப்பட்டது. காடுகள் அழிக்கப்பட்டமையால் படிப்படியாகக் குறைந்து தற்போது 10% மட்டுமே எஞ்சியுள்ளது. சிங்கராஜவனத்தில் இருந்த பலவகையான மரங்கள்,புல் இனங்கள் என்பன அருகிப் போயுள்ளன. இவ்வாறு காடுகளை வரையறையின்றி அழிப்பதனால் காட்டின் வளம் அருகிச் செல்கின்றது. “ நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யாதிரு” என்று கூறுவார்கள். அது போல நாம் மரங்களை நாட்டாவிடினும் அழிக்காமல் இருப்போம். நாம் நமது பிறந்த நாள் முதலான நல்ல தினங்களிலே ஒரு மரத்தை நட்டு நம் வாழ்க்கையை பயனுள்ளதாக அமைத்துக்கொள்வோம் ஆகவே காட்டுவளம் பேணி பாதுகாப்போம்..

*தீயவற்றின் உற்பத்தி சாலை இதயம். தீயனவற்றை விற்குமிடமே நாக்கு.*

*கன்பூசியஸ்*

*உலகில் பாவம் என்பதாக ஒன்று உண்டென்றால் அதுதான் ஒருவனின் பயமும் பலவீனமும்.*

*சுவாமி விவேகானந்தர்.*

வாய்ப்புக்காக காத்திருக்காதே உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக் கொள்

நீங்கள் உறங்கும் போது வருவது அல்ல கனவு உங்களை உறங்க விடாமல் செய்வதே கனவு

# தாய் சிறுகதை - ஒரு விமர்சன பார்வை

**T. திவ்யப்பிரியா, 12A கலைப்பிரிவு**

தமிழ் இலக்கிய சிறுகதை வரலாற்றில் பல்வேறுப்பட்ட தளங்களில் இருந்து சிறுகதைகளை படைக்கக்கூடிய ஒருவராக வ.அ. இராசரத்தினம் திகழ்கின்றார். மண்வாசைன மிக்க கதைகளை படைப்பதில் சிறப்புப் பெற்றவர். இவர் தெரிவு செய்யும் மண் வாசனைக்கு அமைவாக கதை கரு, கதைக்களம் என்பன அமையப்பெற்றிருக்கும். வெவ்வேறுப்பட்ட மண்வாசனை மிக்க கதைகளை படைப்புலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளார். அத்தகைய பண்புகளை உள்ளடக்கியதான கதை கருவினைக் கொண்ட சிறுகதையாக தாய் சிறுகதையானது விளங்குகின்றது. கதையின் கரு, களம், ஆசிரியரின் பாத்திர வார்ப்பு, மொழிநடை என்பவற்றுக்கிடையே எவ்வித முரண்பாடுகளுமின்றி கதையானது நகர்ந்து செல்கின்றது.

தாய் சிறுகதையானது ஏழைத்தாயின் மன உணர்வுகளையும் அவளின் வாழ்வியலையும் கதை கருவாக கொண்டமைந்துள்ளது. கிராமிய மக்களின் சமூக சூழலை மையப்படுத்தியே கதையானது உருவாக்கம் பெற்றுள்ளது. இச் சூழல் பின்னணிக்குட்பட்ட இக்கதையை நோக்கும் போது பாத்திரத்தின் மூலமாகவே கதை நகர்ந்து செல்கின்றது. அன்றாட போக்குவரத்து நடைபெறும் மல்லிகைத்தீவு கிராம பாதையில் ஆரம்பித்த கதையானது முடிவு வரை ஒரே தளத்திலே அமையப்பெற்றுள்ளது. இக்களமானது கதைக்கு கதாபாத்திரம் மூலமாக அறிமுகப்படுத்தப்படுவதுடன் பாத்திரங்களின் உரையாடல் மூலமாக ஊர், பற்றிய அறிமுகத்தை ஆசிரியர் கொணர்வித்துள்ளார்.

கதையில் கதாபாத்திரங்களுக்கடையிலான தொடர்பினை கதாசிரியர் துலலியமான முறையில் வெளிப்படுத்துகின்றார். கதையில் பிரதான கதாபாத்திரமாக தாய் பாத்திரத்தினை கொண்டு ஆசிரியர் கதையில் ஏனைய பாத்திரங்களை வெளிப்படுத்துவது சிறப்புக்குரிய விடயமாக காணப்படுகின்றது. கதையில் வருகின்ற ஆண் பாத்திரத்தை ஆசிரியர் சமூகத்தில் கௌரவமிக்க தொழிலை செய்யக்கூடிய ஆசிரியராக வெளிகாட்டியுள்ளார்கள். இப் பாத்திரம் தாய் மூலமாக கதையின் ஆரம்பப் பகுதியில் " என்னடா தம்பி, சுரிக்குள்ள மாட்டிக்கொண்டாயா?" கேள்வி எழுப்புவதன் மூலமாக அறிமுகம் செய்யப்படுகின்றது. அதனைப் போலவே கணவன், மகன், மகள் ஆகிய பாத்திரங்கள் தாய் பாத்திரத்தின் மூலமாகவே அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கதாசிரியர் மகள் பாத்திரத்தினை தாய் மூலமாக அறிமுகம் செய்யும் போது " கையால குத்தின பச்சரிசி தவிட்டு நிறம் ஆனா உதட்டெல்லாம் எப்பவும் அவளுக்கு சிவந்திருக்கும். நீளமா ஒடிசலா இருப்பா. நடக்கக்குள்ள இடுப்பு முறிஞ்சி போயிருமோ என்று நினைக்க வேணும்,ஆனா பெரு வெளிக்குளத்துக்குள்ள பொழுது படகுக்குள்ள கூம்பி நிக்கிற தாமரைப் பூவைப்போல அவள் தாவணிக்கு மேலால நெஞ்சு நிமிர்ந்திருக்கும்" என இளமையின் அழகை ஆசிரியர் வெளிப்படுத்துகின்றார்.

கதையினுள் ஒரு பெண்ணே மற்றைய பெண்ணை வியந்து கூறத்தக்க வகையில் ஆசிரியர் வடிவமைத்துள்ளார்.

கதையின் முழுமைத்தன்மைக்கு மகள் பாத்திரமானது பெரிதும் துணைப்புரியக் கூடியதாக உள்ளது. இப்பாத்திரமானது கதையின் முடிவில் ஒரு தாயின் வாழ்க்கைக்கு திருப்பு முனையாக விளங்குவதோடு ஒரு அகங்காரத் தன்மையுடைய பாத்திரமாக உருவகிக்கப்பட்டுள்ளது. படித்து முடித்து விட்ட திமிரானது இவளது அகங்காரத்தை வெளிப்படுத்துகின்றது. “ என்ர மகளும் படிச்சிட்டா அதனால கையகால ஆட்ட மாட்டா” என்பது மகளினுடைய அகங்காரத்தை வெளிகாட்டுகின்றது. தாய் பாத்திரமானது அன்புக்குரிய பாத்திரமாகவே கதையில் விளங்குகின்றது. பிள்ளையின் கல்வி செலவிற்கு கடன்பட்டேனும் பணம் அனுப்ப வேண்டுமென்ற மனநிலையானது தாயினுடைய பாசத்தை வெளிகாட்டுகின்றது. கதையின் இறுதியில் தாயின் எதிர்பார்ப்புக்களை மகள் உடைத்தெரியும் வகையில் பேசுவது தாய்க்கு ஏமாற்ற நிலையை ஏற்படுத்தக் கூடியதாயுள்ளது.

இச்சிறுகதையானது வாசனுக்கு சோர்வு நிலையை ஏற்படுத்தாது எதிர்பார்ப்புடனும் கதையை வாசிப்பதற்கு தூண்டக்கூடியதாயுள்ளது. ஒரு மனிதன் வெளிச்சமூக சூழலோடு தொடர்புபடும் போது அவனுக்கு ஏற்படக்கூடிய மனநிலையை ஆசிரியர் தெளிவுபெற எடுத்துக்காட்டியுள்ளார். உயிரூட்டமான முறையில் கதை நகர்ந்து செல்வதற்கு அளவுக்கதிகமான வர்ணனைகள் இன்றி கதைக்கேற்ற வர்ணனைகளை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். ஊர் பற்றிய சிறப்புக்களையும், வர்ணனைகள் மூலமாக வாசகனுக்கு புலப்படுத்துகின்றார். “ எங்க ஊர் மண் நல்ல பசையுள்ள மண் ,பசையுள்ள அரிசி சாப்பிட்டவனை பிரியவிடாது எங்கள் ஊர் அரிசி” என தாய் பாத்திரம் ஊரை பற்றிய அறிமுகத்தை கதையில் வழங்குவதனூடாக இயற்கை வளம் ததும்ப பெற்றதான, வயல் காணிகளால் சூழப்பட்ட கிராமம் என்பதனை வாசகனின் மனக்கண்முன் ஆசிரியர் கொண்டுவருகின்றார்.

இக் கதையினை அனைத்து பரப்புக்களிலும் நேர்த்தியான முறையில் கொண்டு செல்வதற்கு பிரதேச மொழி வழக்கினை ஆசிரியர் உத்தியாக கையாண்டுள்ளார். றோட்டு, ‘ராஜியார், கறாரா, றெயினிங், நோவு போன்ற சொற்கள் பிரதேச கிளை மொழியினை எடுத்துக் காட்டுகின்றது. தாய் சிறுகதையின் வெற்றிக்கு பிராந்திய மொழிநடை பிரதான காரணமாக அமைகின்றது. சுமூகமான முறையில் கதையினை வளர்த்து சென்ற ஆசிரியர் இறுதிப்பகுதியில் மகளின் ஏமாற்றம் தாய்க்கு ஏற்படுத்தி தருகின்ற ஏமாற்றமாக இருப்பதாக அமைத்துள்ளார். இது கதையின் திடீர் திருப்புமுணையாக விளங்குகின்றது. மகள் கேட்ட பணத்தை எடுத்துக் கொண்டு இன்முகத்தோடு அவளை காண சென்ற தாயை பார்த்து மகள் “எங்கம்மா இந்த வேலைக்காரிகிட்ட காசக் குடுத்து அனுப்பியிருக்கா” என்று கூறுவது கதையில் தாய்க்கு மட்டுமன்றி கதையை வாசித்த வாசகனுக்கும் மண அதிர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய

செய்தியாக மாறிவிடுகின்றது. ஏமாற்றத்துக்கு மத்தியில் தனித்துவிடப்பட்ட நிலையில் தாயானவள் ஊருக்கு திரும்புவதாக ஆசிரியர் கதையை வடிவமைத்துள்ளார்.

கதையின் இறுதிப் பகுதியை ஆசிரியர் சமூகத்திற்கும் எடுத்துக்காட்டாக வடிவமைத்திருப்பதோடு தாய் கதையில் ஆசிரியராக அறிமுகமாகிய ஆண்பாத்திரத்திடம் '' மகனே ஏன்டா உனக்கும் ஒரு அம்மா இருப்பா நீயும் ஒரு வாத்தியார் என்னைப்போல் உன்ர அம்மாவையும் நீ பைத்தியகாரியாக்கிவிடாதே போய் வாடா'' என கூறுவது சமூகத்தில் உயர்வான நிலையை ஒருவன் அடையும் போது எவ்விதத்திலும் தன்னை இந்நிலைக்கு மாற்றியவர்களை தாழ்த்திவிடக்கூடாது எனும் விடையத்தை புலப்படுத்தி நிற்கின்றது.

இதனடிப்படையில் வ.அ. இராசரத்தினம் அவர்களின் படைப்புலகிற்கு அறிமுகமாகிய படைப்புகளில் தனித்துவத்தை புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. இச் சிறுகதையின் மொழிநடை, ஆசிரியரின் கதை உருவாக்கத் திறன் என்பன வலுச்சேர்த்து வெற்றியினை உறுதி செய்கின்றது. தாய்மையின் உன்னதத்தை சிறுகதையானது புலப்படுத்துகின்றமை சிறப்புக்குரிய விடயமாகும்.

*நீங்கள் சூரியனைப்போல் பிரகாசிக்க வேண்டுமானால் முதலில் சூரியனைப்போல எரிய வேண்டும்.*

*நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும், எப்போதுமே மண்டியிடுவது இல்லை*

*சிந்திக்க தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவையில்லை*

# பரதநாட்டியம்

**J.ரசிகா, 12B கலைப்பிரிவு**

பரத நாட்டியம் தென்னிந்தியாவிற்குரிய சிறப்பாகத் தமிழ்நாட்டுக்குரிய நடனமாகும். இது மிகத் தொண்மை வாய்ந்ததும், இந்தியாவிலும், வெளிநாட்டிலும் பிரபல்யமாக காணப்படுகின்றது. இது பரத முனிவரால் உருவாக்கப்பட்டதினாலேயே இது பரதம் எனவும் பெயர் பெற்றதாக கூறப்படுகின்றது. பரதம் என்ற சொல் ப – பாவம், ர – ராகம், த – தாளம், என்ற மூன்றையும் குறித்து நிற்பதாகவும் சொல்லப்படுகின்றது.

“ப” பாவம் - வெளிப்படுத்தும் தன்மை

“ ர” ராகம் - இசை

“ த” தாளம் - தாளம்

பாவம் உணர்ச்சியையும், ராகம் இசையையும் குறிக்கும். இவற்றுடன் தாளம் சேர்ந்த நடனமே பரத நாட்டியம் ஆகும். இந் நடனக்கலையை புராண வரலாறு எனப் பாகுபடுத்தியுள்ளார்.

இந்தியாவில் தாணருவ, கந்தவர், அரக்கர், நாகர், தேவர் ஆகியோர் பிரம்மாவிடம் சென்று தமது பொழுது போக்கிற்காக கேட்பதும், பார்ப்பதுமான ஒன்றை ஆக்கி தர வேண்டுமென கேட்டதற்கிணங்க பிரம்மா நான்கு வேதங்களாகிய இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பவற்றிலிருந்து முறையே பாட்டியம், அபிநயம், இசை, இராகம் ஆகியவற்றிலிருந்து 5வது வேதமாகிய நாட்டியக்கலையை தோற்றுவித்தார். பிரம்மன் பரத முனிவருக்கு இந்நாட்டிய வேதத்தினை உபதேசித்தார். பரதர் அதனை கற்றுக்கொண்டு அதனை தமது நூறு பிள்ளைகளுக்கும், மனைவிகளுக்கும் உபதேசித்தார். சில கந்தவர்களுக்கும் கற்பித்தார். அவர்களை பயிற்சிவித்து சிவபெருமான் சந்நதியில் கைலாயகிரியில் அரங்கேற்றினார். நாட்டியத்தை கண்டு மகிழ்ந்த கைலாசபதி தனது கண தலைவன் தண்டு முனிவரை கொண்டு தாண்டவத்தை பரத முனிவருக்கு கற்பித்தார். பார்வதி தேவி பாணாசூரனுடைய மகள் உசைக்கு வாஸ்யத்தை கற்பித்தார். துவாரகையிலுள்ள பெண்களுக்கு கற்பிக்க அவர்கள் சௌராஸ்டிய தேச மக்களுக்கு கற்பித்தனர். இவ்வாறு இந் நாட்டியக் கலையானது பூலோகத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இவ் பரத நாட்டியத்தை உலகியல் வரலாறு படி நோக்குகையில், மனிதன் பூமியில் ஜனித்தலும் பாசை ஞானம் உண்டாகிவிடவில்லை. மனிதனும் மிருகங்கள் போல் உருமிக்கொண்டு பல விதமான ஓசைகளை எழுப்பிக் கொண்டும் இருந்தான். படிப்படியாக இந்த சத்தத்திலிருந்து பாசையை உண்டாக்கி கொண்டான். மனிதனுக்கு சந்தோசம் மிகுந்தால் குதிப்பதும், கூத்தாடுவதும் கோபம் மிகுந்தால் பரப்பரப்புடன் பேசுவதும், சத்தமிடுவதுமாக இருந்தான். இவ்வாறு குதித்தமை கூத்தானது, கூச்சலிட்டது இசையானது, கைகளை தட்டியது தாளமாகவும் மாறியது. இவ்வாறே இசை, கூத்து, தாளம் இவை மூன்றையும் மனிதன் தான் அறியாமலேயே கண்டுபிடித்தான்.

கூத்து பின்வருமாறு வளர்ந்தது. கூத்தாடுபவன் தன் சாமர்த்தியத்தினால் சபையோர்களின் மனநிலையை கவர்ந்து, நவரசங்களையும் அவர்கள் ரசிக்கும் படி செய்தான். இக் கூத்தே மனித நாகரிகத்துடன் போட்டிப் போட்டு பண்பட்டது இதுவே நாளாக நாளாக நாட்டியம் எனப் பெயர் பெற்றது. எனக் கூறப்படுகின்றது.

பரதநாட்டியம் தமிழ்நாட்டு கோவில்களில் தேவதாசிப் பெண்கள் ஆடிய சதிராட்டத்தின் நெறிமுறைக்குட்படுத்தப்பட்ட வடிவம் ஆகும். சைவத்தின் முதன்முதற் கடவுளாகிய சிவபெருமான் நடராஜன் வடிவமெடுத்து “ தாண்டவம்” என்னும் நடனம் ஆடுவதாக கூறப்படுகின்றது. சிவன் மகிழ்ச்சியில் இருக்கும் போதும், அழிக்கும் கடவுளாக உருமாறும் போதும் ஆடும் இத்தாண்டவம் ருத்ர தாண்டவம் என்றும் அழைக்கப்படுகின்றது. தாண்டவம் மொத்தமாக 108 தாண்டவங்கள் உள்ளன. அவற்றில் 7 தாண்டவங்கள் முக்கியமானதாகும்.

ஆனந்த தாண்டவம்

சந்தியா தாண்டவம்

ஸ்ருங்கார தாண்டவம்

திரிபுர தாண்டவம்

ஊர்த்துவ தாண்டவம்

முனி தாண்டவம்

காளிகா தாண்டவம்

சம்ஹார தாண்டவம்

இது ஆண்கள் மட்டும் ஆடக்கூடியவை என்று கூறினாலும் ஒரு சாரர் பெண்களும் ஆடலாம் என்று கூறுகின்றனர்.

மேன்மையான அசைவுகளின் மற்றும் பதங்களுடன் பார்வதி ஆடும் நடனம் லாஸ்மா என்று அழைக்கப்படுகின்றது. இது பெண்மையின் மென்மையை புலப்படுத்துவதாக அமைகின்றது.

பரதநாட்டியத்தில் உடல் அசைவுகளாலும், கை முத்திரைகளையும் சேர்த்து “ அடவு” என்று கூறப்படுகின்றது. பல அடவுகள் சேர்ந்து “ ஜதி” எனப்படுகின்றது. கடவுள் சுமார் 120 உள்ளன. இருப்பினும் கிட்டத்தட்ட எண்பது வரை தான் தற்போது பயன்பாட்டில் காணப்படுகின்றது. சிதம்பரம் மற்றும் மேலக்கடம்பூர் ஆலயத்தில் உள்ள சிற்பங்களில் இவை செதுக்கப்பட்டுள்ளது.

பரத நாட்டியக்கலை மூன்று ஆடல் முறைகளை கொண்டது. நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் ஆகியவையாகும். அத்துடன் நாட்டியத்தில் முக்கிய பங்களிப்பது “ அபிநயம்”

என்பது கருத்தையோ உணர்ச்சியையோ வெளிப்படுத்த உதவுவது ஆகும். அபிநயத்தின் மூலம் ஒரு செய்தியை மற்றவர்களுக்கு உணர்த்தலாம். பரத நாட்டியத்தில் 4 விதமான அபிநயங்கள் பயன்படும். ஆஹாரய அபிநயம், வாச்சிக அபிநயம், ஆங்கிக அபிநயம், சாத்திவ அபிநயம் என்பனவாகும். இப்பிரிவு அபிநயங்களுக்குள்ளும் பல பிரிவுகள் காணப்படுகின்றது.

நாட்டியத்தில் கை முத்திரைகள் முதன்மையாக கொள்ளப்படும். பரதத்தில் பாடலின் பொருளை கைமுத்திரைகள் காட்டும், கை முத்திரைகள் வழி கண் செல்லும், வழி மனம் செல்லும் மனம் செல்லும் வழி உள்ளத்தின் உணர்வு செல்லும் இதனை கம்பர்

“கைவழி நயணர் செல்லக்
கண்வழி மனமும் செல்ல
மனம் மனமும் செல்ல
மனம் வழி பாவமும்
பாவ வழி ரசமும் சேர்” எனக் குறிபிட்டுள்ளார்.

பரத நாட்டிய நிகழ்ச்சியில் தனிப்பட்ட நாட்டிய உருப்படிகள் உண்டு. ஒவ்வொரு உருப்படிக்கும் பெயர், தனித் தன்மை உண்டு. இவ் உருப்படி ஓர் ஒழுங்கு நிரலில் இருக்கும் பரதநாட்டிய நிகழ்ச்சி ஆரம்பிக்க முன் இறைவணக்கம் பாடுவது வழக்கம். பக்க இசையாளர் இதைப் பாடுவார். முதலில் நிருத்த வகை உருப்படிகள் அதன் பின் நிருத்திய வகை உருப்படிகள் அதன் பின் நாட்டிய வகை உருப்படிகள் தொடரும்.

1. அலாரிப்பு
2. ஜதீஸ்வரம்
3. சப்தம்
4. வர்ணம்
5. பதம்
6. தில்லானா
7. விருத்தம்
8. மங்களம்

பரத நாட்டியத்திற்கு பாடல் நட்டுவாங்கம் மற்றும் இசைக்கருவிகளின் துணை அவசியமாகும். வீணை, புல்லாங்குழல், வயலின், மிருதங்கம் ஆகிய இசைக் கருவிகளுடன் சில இசைக்கலைஞர்கள் மேடையில் ஒரு புறமாக அமர்ந்து இசைக்க நடனம் ஆடுபவர் நாட்டியத்திற்காக பிரத்தியேகமாக தைக்கப்பட்ட வண்ணப் பட்டாடைகள் அணிந்து இருப்பார். மேலும் பரத நாட்டியத்திற்கான நகைகளையும் காலில் சலங்கையும் அணிந்து ஆடுவர். பரத நாட்டியம் பயிற்றுவிப்பதில் பல்வேறு பாணிகள் உள்ளன. அவற்றில் சில “ பந்தநல்லூர் பாணி”“ வழுவூர் பாணி”“ தஞ்சாவூர் பாணி” : மைசூர்பாணி” : காஞ்சிபுர பாணி” ஆகியவை ஆகும்.

பரத நாட்டியம் 2ம் நூற்றாண்டை சேர்ந்தது. கி.மு 3ம் நூற்றாண்டில் பரத சாஸ்திரம் எழுதப்பட்டது எனவும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

# இந்திய வம்சாவழி மக்கள் அல்லது மலையக தோட்ட தொழிலாளிகள் என்றால் யார்?

**S.பிரதீப்ராஜ் 12A கலைப்பிரிவு**

மலையகமானது இலங்கையின் மத்தியில் பதுளை, இரத்தினபுரி, கண்டி, கேகாலை, மாத்தளை, நுவரெலியா, போன்ற மாவட்டங்களை உள்ளடக்கிய எழில் கொண்டு விளங்கும் ஒரு பகுதி ஆகும். புவியியல் ரீதியாக மிகவும் அரிதான இயற்கை வளங்களை கொண்டு விளங்கும் பிரதேசங்கள் மலையகத்தில்தான் காணப்படுகின்றன. உதாரணமாக ஆறுகள், ஓடைகள், நீர்வீழ்ச்சிகள், மலைத்தொடர்கள், சமவெளிகள் மேட்டு நிலங்கள் என்பவற்றை குறிப்பிடலாம். இலங்கை நாட்டின் ஏனையப் பிரதேசங்களை விட மாறுப்பட்ட கால நிலைமைகளையும், வானிலை நிலைமைகளையும் கொண்டமைந்த இப்பகுதி மிகவும் குளிரான பிரதேசமாகும். சுற்றுலா பயணிகளை ஈர்த்த ஒரு இடமாகவும் கருதப்படுகின்றது. இங்கு வாழும் மக்கள் யார்? அவர்களின் வரலாறு என்ன? இவர்களோ இன்று " இந்திய வம்சாவழி மக்கள்" மலையக பெருந்தோட்ட தொழிலாளிகள், மலையக தமிழர்கள் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றன.

இம்மக்கள் 1820 – 1840 காலக்கட்டங்களில் சிலர் மாத்திரம் தென் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு பிரித்தானியரால் தொழில் நிமித்தம் காரணமாகஅழைத்துவரப்பட்டனர். இன்னும் சிலர் 1860 – 1870 காலக்கட்டங்களில் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக கம்பனியும், பிரித்தானியரும் இணைந்து மலையகப் பிரதேசங்களில் பெருந்தொட்ட வர்த்தக பயிர்செய்கையை மேற்கொள்ள முற்பட்டபோது மனிதவளம் கிடைக்கப்பெறாத சூழ்நிலையில் தென்னிந்தியாவில் இருந்து பெருந்தொகை மக்கள் இலங்கையின் மன்னார் பகுதியில் வந்து இறங்கினர். இவர்கள் கால்நடையாகவே மலையகப் பகுதியில் வந்து குடியேறினர்.

இவர்களில் அனேகமானோர் பல இன்னல்களின் விளைவாக மாண்டனர். உதாரணமாக 1864 பெப்ரவரி 5ஆம் திகதி இத்தோட்ட கூலிகளை ஏற்றி சென்ற 150 தொன் நிறைக்கொண்ட "ஆதிலெட்சுமி" எனும் அரசாங்க கப்பல் திடீர் என்று ஏற்பட்ட புயலினால் தூக்கி வீசப்பட்டது. இதில் 16400 பேர் மாண்டனர் 7 பேர் மாத்திரமே உயிர தப்பினர், இன்னும் சிலர் வரும் வழியில் பல நோய்களினால் மாண்டனர். இச்செய்தி 1864 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியான "The Times of Ceylon" என்ற பத்திரிகையில் செய்தியாக வெளியிடப்பட்டது. இவ்வாறு பெரும்பாலானோர் மாண்டதன் பின்பு ஓரளவு செறிவான மக்களே மலையகத்தை வந்தடைந்தனர். இம்மக்கள் 18 ஆம் நூற்றாண்டில் இறுதிப் பகுதிகளில் கொக்கோ, சிங்கோணா, இறப்பர் போன்ற பயிர்களும், 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட கோப்பி, தென்னை, தேயிலை போன்ற பெருந்தோட்ட பயிர்செய்கைக்காக கொத்தடிமைகளாக தமிழ் நாட்டில் இருந்து அழைத்து வரப்பட்டனர்.

பிரித்தானியர் இம்மக்களை ஓர் அடிமை போன்ற நிலையில் வைத்து இருந்தாலும், தொடர்ந்து நடைபெற்ற அடக்கு முறைகளும் இம்மக்களின் வாழ்வு இலங்கையின்

ஏனைய சமுதாயத்துடன் ஒப்பிடுகையில் பின் தள்ளப்பட்ட நிலையிலேயே காணப்பட்டது. இதன் பின்னடைவு விதி விலக்காக இந்தியாவில் உள்ள தமது உறவுகளை கூட சந்திக்க முடியாத நிலைக்கு ஒரு சிலர் தள்ளப்பட்டனர். இவ்வாறு நிலையின்றி காணப்பட்ட மக்கள் அரசியல் ரீதியாக பலப்போராட்டங்களை கண்டப்பின் தான் மலையக இந்திய வம்சாவழி மக்களுக்கு வாக்குரிமை அல்லது பிரஜாவுரிமை கிடைக்கப்பெற்றது. இதற்கு பல இடதுசாரி கட்சி தலைவர்கள் கங்கணம் கட்டி பணி புரிந்ததாக வரலாறுகள் கூறப்படுகின்றது.

உதாரணமாக மலையக மக்களின் அரசியல் சிவில் உரிமைகளை வென்றெடுக்க 1940 ஆம் ஆண்டு செப்டம்பர் 7ஆம் திகதிகளில் கம்பளையில் “ நேருநகர்” இல் நடைபெற்ற போராட்டத்தில் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் கங்கனம் கட்டி கொண்டு பணி புரிந்ததாக வரலாறு சான்றுகள் கூறுகின்றனர். இதுவே மலையக மக்களுக்காக உத்வேகத்துடன் எடுத்த முதற் ஆரம்ப கட்டமாகும்.

இவருடைய தலைமையில் மலையகம் எழுச்சி கண்டது. இந்திய வம்சாவழி மக்களுக்கு குறிப்பாக மலையக தோட்டப்புற மக்களுக்கு பிரஜாவுரிமை, வாக்குரிமை போன்ற அடிப்படை உரிமைகள் பெறப்பட்டதன் காரணமாக இம்மக்கள் கூட்டம் “ நாடற்றவர்” என்ற பதத்தில் இருந்து விடுப்பட்டனர். மலையகமானது படிப்படியாக இருளை விட்டு நீங்க வழிப் பிறந்தது. இருந்தாலும் சிலருக்கு மாத்திரமே இவ்வடிப்படை உரிமைகள் கிடைக்கப்பெற்றன. இதன் காரணமாக மலையத் தோட்டப்புறங்களில் பல போராட்டங்கள் ஆங்காங்கே நடைபெற்றது. உதாரணமாக 1952 ஆம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எனும் கட்சி 7 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நடாத்திய மூன்று மாத சத்தியாகிரக போராட்டம் அன்றிருந்த அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்தது.

இவ்வாறு பல போராட்டங்களின் விளைவாக 1958 ஆம் ஆண்டு பிரஜாவுரிமை சட்டத்தின் பிரகாரம் பிரஜாவுரிமையை பெற்றவர்களை விட ஏனையோர்“ நாடற்றவர்களாக” கருதப்பட்ட இந்திய வம்சாவளினருக்கு பிரஜாவுரிமை வழங்கும் விசேட திட்டம் 1988 நவம்பர் 9ஆம் திகதி நிறைவேற்றப்பட்து. இதற்கு எல்லாம் மூலக்காரணம் 1931 டொனமூர் பிரபு (பிரித்தானிய ஆளுநர்) வால் இலங்கைக்கு வரையப்பட்ட டொனமூர் யாப்பின் மூலம் கொண்டு வரப்பட்ட சர்வசன வாக்குரிமை ஆகும்.

இம்மக்களின் பொருளாதார நடவடிக்கைகளில் தற்போது செல்வாக்கு செலுத்தி காரணியாக தேயிலை பறித்தல் முக்கிய மானதாகும். இதற்கு காரணம் ஜேம்ஸ் டெயிலர் என்பவர் “லுல்து கந்தாளவ” எனும் ஊரில் இலங்கையில் முதன் முதலில் தேயிலையை அறிமுகப்படுத்தியமை ஆகும். தற்போது இலங்கை நாட்டின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாய் இத்தோட்ட தொழிலாளர்களின் உழைப்பே மூலதனமாக விளங்குவது எவராலும் மறுத்தலிக்க முடியாது. ஆடை தொழிற்சாலைகளின் மூலம் கிடைக்கும் செலவானி தற்போது படிப்படியாக அதிகரித்து வந்தாலும் தேயிலை மூலமான அந்நிய செலாவணியே இலங்கை மணித் திருநாட்டின் பிரதான பொருளாதார மூல வளமாக இருக்கின்றது. இப் பொருளாதார மூலச்சக்தியாக இருக்கும் மலையக தோட்ட

தொழிலாளிகளை இலங்கை அரசாங்கம் புறக்கணித்தே வருகின்றது. " உணவு, உடை, உறையுள்" என்ற அடிப்படை வசதிகளை கூட நேர்த்தியாக பூர்த்தி செய்து கொள்ள முடியாத துர்பாக்கிய நிலையிலேயே மலையக தோட்ட தொழிலாளிகளின் ஊதியம் காணப்படுகின்றது.

"லயம்" என்று சொல்லப்படும் எந்தவிதமான அத்தியாவசியமான அடிப்படை வசதிகளும் இல்லாத குடியிருப்புகளே இன்னும் இவர்களின் வாழ்விடங்களாக இருக்கின்றன. முறையான வருமானம் இல்லாத காரணத்தால் இங்குள்ள இளம் தலைமுறையினர் கல்வியினை இடை விலகல் செய்து தற்போது தலைநகர் கொழும்பு உட்பட பிரபல வர்த்தக நகரங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் இடம் பெயர்கின்றார். நேர்த்தியான வழிகாட்டல் இல்லாமை இம் மக்கள் முறையற்ற வாழ்வியலுக்கு தள்ளப்படுகின்றனர். இதில் குறிப்பாக குடிபோதைக்கு அடிமையாதல் ஒழுக்கயீன செயற்பாடுகளில் ஈடுபடல் என்பவற்றை கூறலாம்.

இப்படியான இன்னல்கள் எத்தனையோ இருந்தாலும் முறையாக கல்வி பயின்று முத்திரைப் பதித்த பலரும் இங்கேயும் இருக்கவே செய்கின்றனர். தற்போது மலையகத்தில் வாழும் இந்திய வம்சாவழி மக்கள் இந்தியாவின் தமிழ்நாட்டு தமிழர்களின் தொப்புள் கொடி உறவு என்று தமிழ் நாட்டுக்கே தெரியவில்லை. யுத்தத்தினை அடிப்படையாக வைத்து தமிழர் விடுதலை சூளுரைகளை விதைக்கும் இந்திய தமிழ் நாட்டு அரசியல் பிரபலங்களின் வாயில் இதுவரை எந்தவிதமான எண்ணங்களும் வெளிவரவில்லை.

எனவே மலையக தமிழர்கள் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறு இவ்வாரே இலங்கை தேசத்திற்கு வந்து மலையகப்பகுதிகளில் குடியேறி இன்று வரை தனது வாழ்வியலை நடாத்தி வருகின்றன.

"அலறிக் கொண்டு சாகின்றவனைப் பார்த்து

கதறும் உலகம் அழுவதற்கு கூட

தெம்பில்லாமல் ஊமையாய் மரித்து கொண்டிருக்கும்

இந்த மலையக சமூதாயத்தைப் பற்றிய எந்தவிதமான கரிசனையும்

இல்லாமல் இருப்பது ஆற்றாயமாகின்றது"

# புராதன இலங்கையில் வங்கியற் செயற்பாடுகள்

**K.தனுசன் 12 B வர்த்தகப்பிரிவு**

சமூகத்தில் வாழும் மக்களிடையே தேவைக்கு அதிகமாக காணப்படும் பணத்தினை வாங்கி, அப்பணத்தினை சமூகத்தில் பல்வேறு பண தேவை உடையவர்களுக்கு பல்வேறு வடிவங்களில் முற்பணமாக வழங்கும் நடவடிக்கையினை மேற்கொள்ளும் நிறுவனம் வங்கி (Bank) என அழைக்கப்படுகின்றன. இதனை பிரிட்டனிக்கா பேரகராதி “Britanica Encycolopedia” வங்கி எனப்படுவது ஒரு நிறுவனமாகும். இது பணத்துடனும் அதன் பிரதியீடுகளுடன் தொடர்புடையதாகவும் உள்ளது. வங்கியின் வைப்புக்களை ஏற்று அவற்றை கடனாக்கம் செய்து வழங்குகின்ற வட்டி, ஈட்டுகின்ற வட்டி என்பவற்றில் ஏற்படும் வித்தியாசங்கள் மூலம் இலாபத்தினை ஈட்டுகினறன என்கிறது. ஒக்ஸ்போர்ட் (Oxford) அகராதி “ வாடிக்கையாளரால் வைப்பிலிடப்படும் பணத்தினை பயன்படுத்தி தேவையான பொழுதில் கடனாக்கம் செய்வதுடன் பரிமாற்றத்தையும் செய்வதாகும்” என வங்கிகளை குரித்துரைக்கின்றது.

“Bank” என்ற பதம் “Banque” என்ற கிரேக்க சொற்பதத்திலிருந்து தோற்றம் பெற்றதாக சிலரும் “Bancus” என்ற பிரான்சிய சொற்பதத்தில் இருந்து தோற்றம் பெற்றதாக வேறு சிலரும்,“Banca” என்ற இத்தாலிய சொற்பதத்திலிருந்து தோற்றம் பெற்றதாக இன்னும் சிலரும் குறிப்பிடுகின்றனர். இவ்வேளையில் “ இந்திய வங்கியியல் வரலாறு” என்ற நூலை எழுதிய பேராசிரியர் எஸ்.பரமசிவன் தனது நூலில் “Banque”,“Bancus”Banca” ஆகிய சொற்பதங்களிற்கு இணையான ஆங்கில் பதம் “Bench” (சிறிய மேசை) என்றும் ஆரம்ப காலங்களில் பண பரிமாற்ற நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் “Bench” எனப்படும் சிறிய மேசையில் அமர்ந்து இச்செயற்பாட்டை மேற்கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. “Bancus” “Banca” ஆகிய சொற்பதங்கள் மருவிக் காலப்போக்கில் “Bank” என அழைக்கப்பட்டிருத்தல் கூடும் என்கிறார்.

அதே வேளை கிரேக்க வரலாற்று ஆசிரியர்களும் “Bank means a banch or table for changing money” என குறிப்பிட்டுள்ளனர். இது பேராசிரியர் பரமசிவன் கருத்துடன் ஒத்ததாக உள்ளது. அதே வேளை தமிழிலக்கியங்களில் பேசப்படும் “ பண்டாரம்”,“ கருவூலம்” நிதி நிகேதனம் “ வைப்புழி” போன்ற சொற்பதங்கள் வங்கி செயற்பாடுகளை வலியுறுத்துவதாக இருந்த போதும், சமகாலத்தில் எம்மால் பயன்படுத்தப்படும் வங்கி என்ற சொற்பதம் ஆங்கிலத்தில் பயிலப்படும் Bank என்ற பதம் மருவியை “ வங்கி” என அழைக்கப்பட்டிருத்தல் கூடும். என எண்ணத் தோன்றுகின்றது.

உலகில் பயிலப்படும் அனைத்து துறைகளினதும் தோற்றம், வளர்ச்சி என்பன மனிதகுல நாகரிகத்துடன் பின்னிப்பிணைந்துள்ளமை நிதர்சனமாகும். அந்தவகையில் வங்கியியலின் தோற்றம் வளர்ச்சி என்பனவும், மனித குலத்தின் பரிணாம வளர்ச்சியுடன் சமாந்தரமாக

வளர்ச்சி பெற்று செல்வதை காணலாம்என்று நம் புழக்கத்திலிருக்கும் நாணயத்தாள்களோ அன்றி நாணயக்குற்றிகளோ புழக்கத்தில் இல்லாத காலத்தில் தானியங்களே பணத்தின் பிரதியீடுகளாக இருந்தன. புராதன மனிதனின் செல்வமாக விளங்கிய தானியங்களை பேணிப் பாதுகாப்பதற்கும், சேமிப்பதற்கும் பாதுகாப்பு வசதிகள் மிக மிக அரிதாகவே காணப்பட்டன. விசேடமாக அவற்றை பாதுகாக்கும் பெட்டக வசதிகளோ அன்றி களஞ்சியங்களோ இல்லையென்று சொல்லுமளவிற்கு இருந்தன.

அதனால் அக்கால மனிதன் தன்னிடமுள்ள தானியங்களை களவு, கொள்ளை, தீ, போன்றவற்றிலிருந்து பாதுகாக்க வேண்டிய நிலைக்குத்தல்லப்பட்டான். இக்காலத்தில் இயங்கி வந்த பல மத சார் நிறுவனங்கள் அக்கால மக்களின் விதை தானியங்களை சேகரித்துச் சேமித்ததாகவும், விவசாய உற்பத்தி முயற்சிகளுக்கு தேவையான விதை தானியங்களை மக்களிற்கு வழங்கியதாகவும், அறுவடையின் பின் அத்தானியங்கள் அந்நிறுவனங்களிடம் மீளலிக்கப்பட்டதாகவும், அறிகின்றோம். இதற்கான பதிவுகள் யாவும் மதகுருமார்களாலும் தேவ ஊழியம் செய்பவர்களாலும் மேற்கொள்ளப்பட்டதாகவும் அறிகின்றோம். இவையை வங்கியின் அடிப்படை செயற்பாடுகளான சேமிப்பு, கடன் போன்றன புராதான காலத்தில் நடைமுறைக்கமைய உறுதி செய்யமுடிகின்றது. இவையே இலங்கையில் வங்கி உருவாக்கத்திற்கான அடிப்படையாக கருதப்பகின்றது.

ஒருநாள் நிச்சயம் விடியும் அது உன்னால் மட்டுமே முடியும்.

சிக்கல்களை எதிர்கொள்ளும் போது கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.

உலகம் உன்னை அறிவதைவிட உன்னை உலகிற்கு அறிமுகம் செய்துக்கொள்

# “ தேரும் திங்களும்” ஒரு பார்வை

**கிருபாசினி 13 கலைப்பிரிவு**

“ தேரும் திங்களும் “ என்ற கவிதையை எழுதியவர் “ குறும்பா” எனும் இலக்கிய வடிவத்தை தமிழுக்கு அறிமுகப்படுத்தியதன் மூலம் தமிழில் புதிய புரட்சியை ஏற்படுத்திய து.உருத்திரமூர்த்தி என்ற இயற்பெயரைக்கொண்ட மஹாகவி ஆவார். இவர் தனது பதினாறாம் வயதில் கவிதையுலகில் காலடிப் பதித்தார். பண்டிதன், மாபாடி, புதுக்கம்பன் ஆகிய புனைப்பெயர்களை பயன்படுத்தி தனது கவிதைகளை எழுதினார். கவிதை, காவியம், இசைப்பாடல், வானொலிப் பாடல், நாடகம் போன்றவற்றை இயற்றினார். இவரது கவிதைகள் அடிமட்ட நிலையிலும் மக்களின் வாழ்வியலை சித்திரிப்பதாக காணப்படுகின்றன. எளிமை, இனிமை, மனிதாபிமானம் என்பன இவரது ஆக்கங்களில் மேலோங்குகின்றது. கற்பனைக்கு அதிக இடம் கொடுக்காமல் சாதாரணமாக உலா வருகின்ற பாத்திரங்களைக் கொண்டு, சமூகப் பிரச்சினைகளை யதார்த்தப் பண்புடன் வெளிப்படுத்துகின்றார். இவரது கவிதைகளில் நாம் விமர்சன பார்வையில் ஆராய எடுத்துக்கொண்டது “ தேரும் திங்களும்” ஆகும். இனி அதனை நோக்குவோம்.

சமுதாயத்தில் சாதி பாகுப்பாட்டினால் பல நன்மை, தீமைகள் ஏற்படுகின்றன. சமுதாயத்தின் கட்டுக்கோப்பு சிறப்பாக இருப்பதற்கு இந்தச் சாதிப்பாகுபாடு இன்றியமையாதது. சாதி அடுக்கமைவு இல்லாவிட்டால் ஒரு சமுதாயம் கட்டுக்கோப்புடையதாய் இருக்காது. எனினும் “ தேரும் திங்களும்” என்ற கவிதையில் மஹாகவி சாதி அமைப்பு முறையின் தீமைகளை மாத்திரமே எடுத்துக் காட்டுகின்றார். இக்கவிதை சாதிப்பாகுபாடு, தீண்டாமை என்பவற்றை மையமாகக் கொண்டது.

தாழ்த்தப்பட்ட மக்கள் சமவுரிமையோடு கோயில் திருவிழாவில் கலந்துக் கொள்வதையும், கோயிலுக்குள் பிரவேசிப்பதையும்,உயர் சாதியினர் எதிர்த்து அவர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிட்ட கொடுமைகளைக் கூறுகின்றது. மேலும் தீண்டாமையின் அபத்தமான, குரூரமான மனித உயர் விழுமியங்களுக்கு எதிரான தன்மையை விளக்குகின்றது. இக்கவிதையில் வரும் இளைஞன் என்பதை விட மனிதன் என்றே கூறத்தக்கவன். உயர்ந்த குண இயல்புகளும், சிறந்த மனித இலட்சியங்களும் உடையவன், ஒரு நூற்றாண்டு வாழப் பிறந்தவன், உடல் உறுதியும், உள உறுதியும் உடையவன், மிகுந்த உழைப்பாளி, மனித அறிவாற்றலின் இன்றைய வாரிசு, ஊரார் அனைவரையும் உறவினராய் பார்க்கும் பரந்த மப்பாங்குடையவன். இவ்வாறு உயர்ந்த பண்புகளையுடைய இந்த இளைஞனை சமுதாயம் கீழ் சாதியினன் என்று ஒதுக்குகின்றது. இது நியாயம்தானா? இங்கு சாதி முக்கியமல்ல. மாறாக அவன் கொண்டிருக்கும் பண்புகளே போற்றத்தக்கவையாகும்.

இக்கவிதையில் மன ஆவேச உணர்வு துல்லியமாகச் சித்திரிக்கப்படுகின்றது. இளைஞனின் இலட்சியங்களுக்கு நேர்ந்த கதியினைக் கவிஞர் சித்திரிக்கும் முறையினை

நோக்குகையில் இளைஞனின் உயர் இலட்சியம் குரூரமாக சித்திரிக்கப்படுவதை ஒரு அவல நாடகமாக கவிஞர் சித்திரிக்கின்றார்.

நில், நிறுத்து, புல், புலை, கொல், கொழுத்து என்ற கோபக் குறல்களும், அதைத்தொடர்ந்து நிகழும் வன்செயலும், அதன் குரூரமும், கல்லெறிதல், கழுத்து வெட்டப்படல், பல்லும் உதடும் சிதறிப் பறத்தல், சில்லென்று செந்நீர் தெறிதல், நிலம் சிவத்தல், மனிதர் கொலையுறல் இவையெல்லாம் நாடகப் பாணியில் சித்திரிக்கப்படுகின்றது.

இத்தகைய சாதி செயற்பாடுகளால் நாட்டில் சாதிக் கலவரங்களும், இன வன்முறைகளும், பல்வேறு போராட்டங்களும் நிகழ்கின்றது. இதனால் நாடு சீர்குலைகின்றது. “ ஓடும் உதிரத்திலும் வடிந்தொழுகும் கண்ணீரிலும் தேடிப்பார்த்தாலும் சாதி தெரிவதுண்டோ அப்பா” என ஆசிய ஜோதியில் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை கூறுவதனூடாக பிறப்பால் மனிதர் அனைவரும் சமமானவர்களே என்பது எடுத்துக் காட்டப்படுகின்றது.

கனவு காணுங்கள் கனவுகளிலிருந்து சிந்தனைகள் பிறக்கும் சிந்தனைகள் செயல்களாகும்.

கற்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பதே நல்லது. ஏனெனில் அறியாமைதான் தீவினையின் மூலவேர் - பிளேட்டோ

# வணிகமும் முகாமைத்துவமும்

**U.குமுதினி, 13 A வர்த்தகப்பிரிவு**

வணிகம் என்பது “ மனித தேவையையும் விருப்பத்தையும் பூர்த்தி செய்யும் எந்தவொரு பொருளாதார நடவடிக்கையும்” ஆகும். வணிகமானது அடிப்படையில் வாடிக்கையாளரை திருப்திப்படுத்துவதையே பிரதான நோக்காக கொண்டு இயங்குகின்றது. வணிகமானது கைத்தொழில் வர்த்தகம் எனும் பெரும் பிரிவுகளோடு மேலும் பல உப பிரிவுகளையும் கொண்டு இயங்குகின்றது. வணிகம் மேலும் “ இலாப மடைதல்” நீடித்து நிலைத்திருத்தல், சந்தைப் பங்கை உயர்த்துதல் போன்ற நோக்கங்களையும் கொண்டுள்ளது. மேற்போன்ற நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு வணிகமானது சிறந்த முகாமைத்துவத்தை கொண்டு காணப்பட வேண்டும்.

இங்கு முகாமைத்துவம் என்பது : வணிகமொன்றின் இலக்குகளையும் நோக்கங்களையும் அடைந்து கொள்வதற்கு அருமையாகவும் மனித பௌதீக வளங்களை வினைத்திறன், விளைத்திறன் மிக்கதொரு முறையில் திட்டமிடல் ஒழுங்கமைத்தல் , வழிநடத்தல், கட்டுப்படுத்தல் தொடர்பான செயற்பாடுகள் ஆகும். முகாமைத்துவமானது வணிகத்திற்கு தேவைப்பட பல காரணங்கள் உண்டு. அவற்றில் சில வருமாறு “ அதிகரித்து வருகின்ற போட்டி, முரண்பாடான பிரச்சினைக்கு முகங்கொடுத்தல், விரைவாக ஏற்பட்டு வருகின்ற மாற்றங்கள் விரயங்களையும், தவறுகளையும் திருத்தி கொள்ளல். அறிவு படைத்த நுகர்வோர் மற்றும் ஊழியரை கையாளல் என்பனவாகும்.

வணிக முகாமைத்துவமன்றி முகாமைத்துவமானது “ செயற்பாட்டு முகாமைத்துவ மனித வள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம் ,வணிக தகவல் முகாமைத்துவம் என பல்வேறாக காணப்படுகின்றது. வணிக முகாமைத்துவமானது வணிகத்திற்கு உள்ளேயும், வெளியேயும் முகாமை செய்யப்படலாம். இது“ சுவட்டு ஆய்வுக்கும் “ உட்படலாம். முகாமைத்துவத்தின் மையம் “ அமைப்பு” ஆகும்.

மனிதன் ஒழுங்கமைப்பைத் தொடங்கிய காலத்திலிருந்தே முகாமைத்துவ நுட்பங்களை பயன்படுத்தியுள்ளனர். இதனால் முகாமைத்துவ சிந்தனைக்கு நீண்ட கால சரித்திரமுண்டு. மனித நாகரீகங்களில் வளர்ச்சி நாளுக்கு நாள் அதிகரிக்கப்படுவதனால் முகாமைத்துவமும் விருத்தியடைகின்றதை இக்கால கட்டத்தில் காணக்கூடியதாக உள்ளது. உண்மையில் முகாமைத்துவமானது பிரயோக ரீதியிலமைந்த விடயமாகும். முகாமைத்துவத்தை செயற்பாட்டின் மூலமாகவே தெரிந்து கொள்ளவும் பயின்று கொள்ளவும் முடியும். முகாமைத்துவமானது வளப்பயன்பாடும் அதன் மூலமாக ஆக்கமொன்றை பெறுதலும் தொடர்பாக ஆராய்கிறது. முகாமைத்துவத்தற்கு காரணமாக அமைவதும் “ வள அருமை” ஆகும். வளங்களானது மனிதவிருப்பத்தை பூர்த்தி செய்ய போதுமானதாக காணப்படுமிடத்தே முகாமைத்துவம் முக்கியம் பெறமாட்டாது என்பதில் எதுவித ஐயமுமில்லை. உலக நாடுகள் அனைத்திலுமே நாளுக்கு நாள் சனத்தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப வள அருமையும் அதிகரிக்கின்றது. ஆகவே நம் நாட்டை போலவே ஏனைய நாடுகளிலும் முகாமைத்துவ தேவை அதிகளவில் உணரப்படுகின்றது. ஆகவே தான் பல்கலைக்கழகங்களிலும் கூட முகாமைத்துவத்தை ஒரு துறை கல்வியாக கற்று கொடுக்கின்றனர்.

முகாமைத்துவம் சிறப்பானதாக அமைய வேண்டுமாயின் “ திட்டமிடல்” ஒழுங்கமைத்தல், வழிநடத்தல், கட்டுப்படுத்தல், என்பன சிறப்பாக அமைதல் வேண்டும். வணிக சூழலின் விரைவான மாற்றத்துக்கேற்ப சவால்களும் போட்டிகளும் அதிகரிக்கின்றன. இச் சவால்களையும் போட்டிகளையும் எதிர்கொள்ள சிறந்த முகாமைத்துவ திறன் தேவைப்படும். சூழலிலுள்ள வளங்களின் அளவிலும் தரத்திலும் அதிக அக்கறை

காட்டப்படுதல் வேண்டும். தூர மேம்பாட்டு பிரச்சினைக்கும் முகாமைத்துவம் தேவைப்படுகிறது.

ஒரு வணிக நிறுவனத்தை பொறுத்த வரையில் வணிகத்தை முகாமை செய்து அதனை கொண்டு நடத்துவது உரிமையாளருக்கு இயலாத காரியமாகும். ஆயினும் சில நிறுவனங்களில் உரிமையாளரே முகாமையாளராகவும் காணப்படும். நாகரீக மற்றும் தொழிநுட்ப மாற்றத்துக்கேற்ப முகாமையாளர் எனும் ஒரு நபரை நியமிக்கின்றனர். சில வணிகங்களின் செயற்பாடுகளை இலகுப்படுத்த ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு முகாமையாளரை நியமிக்கின்றனர்.

இவ்வாறு நியமிக்கின்ற முகாமையாளர்கள் தந்திரோபாய திட்டங்களை திட்டமிடுபவர்களாகவும், இலக்கு நோக்கை வினைத்திறனுள்ள விதத்தில் அடைய மனித பௌதீக வளங்களை தொடர்புப்படுத்துவதாகவும், மனித பௌதீக வளங்கள் மீது செல்வாக்கை பிரயோகிப்பவர்களாகவும் திட்டமிட்டவாறு இலக்குகளும், நோக்கங்களும் அடைய பெற்றுள்ளதா அல்லது அதனை சீராக்கும் வல்லமை இருப்பவர்களாகவும் காணப்படல் வேண்டும்.

இக்காலக்கட்டத்தில் வணிகங்களை பொறுத்த வரையில் பல வகையான சவால்கள் ஏற்படுகிறது. உலக நாடுகளிலுள்ள எல்லா வணிகங்களுமே முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு சிறந்த முகாமைத்துவமின்மையே காரணமாகின்றது. இந்த அடிப்படையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை இலகுவாகவும், வினைத்திறனாகவும் தீர்த்து கொள்வதற்கும் முகாமையாளர்களை அல்லது முகாமை சார் ஊழியர்களை அதிகார அடிப்படை ஊழியர்கள் மற்றும் சிறப்பு தன்மை அடிப்படை ஊழியர்கள் தொடர்பாக நோக்குவோமாயின் அவர்கள் உயர்மட்ட முகாமையாளர் நடுத்தர முகாமையாளர், முன்வரிசை முகாமையாளர் என மேலும் பாகுப்படுத்தப்பட்டுள்ளனர். உயர்மட்ட முகாமையாளர்கள் நிறுவனமொன்றுக்கான கொள்கைகள், தந்திரோபாயங்கள் உருவாக்கல், இடைப்பட்ட முகாமையாளர்களை கண்காணித்தல் இவர்களது பணியாகும். நடுத்தர முகாமையாளர்களை பொறுத்த வரை இவர்கள் உயர்மட்ட முகாமையாளர்களால் விருத்தி செய்யப்பட்ட கொள்கை திட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்ற பணிகளில் ஈடுபடுவர். முன்வரிசை முகாமையாளர்களால் மேற்கொள்ளப்படும் பணி நடுத்தர முகாமையாளர்களின் கட்டளைகளை நிறைவேற்றலும் செயற்பாட்டு ஊழியர்களை மேற்பார்வை செய்தல், வழிநடத்தல் இவர்களின் பணியாகும். இரண்டாவது சிறபபு தன்மை அடிப்படை ஊழியர்கள், மனித வள முகாமையாளர், நிதி முகாமையாளர், சந்தைப்படுத்தல் முகாமையாளர், செயற்பாட்டு முகாமையாளர், செயற்றிட்ட முகாமையாளர், பொது முகாமையாளர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையாளர் என பாகுப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களும் தனது கடமையை செவ்வனே செய்வார்களாயின் முகாமைத்துவம் வெற்றி பெறும்.

முகாமைத்துவம் தொடர்பாக பல அறிஞர்கள் தத்தமது கருத்துக்களை முன்வைத்துள்ளனர். அவற்றுள் மகாத்மாகாந்தி மற்றும் றொபட் கேட்ஸ் போன்றோரின் கருத்து உலகில் அதி முக்கியம் பெறுகிறது. கல்வி கற்றல் தொடர்பான எண்ணக்கருக்களை முன்வைத்த மகாத்மாகாந்தியினால் முகாமைத்துவத்தை வெற்றிகரமானதாக மாற்ற முகாமையாளருக்கு தேவையான தகைமைகளை கூறுகிறது. இது “ 3ர் எண்ணக்கரு” எனப்படுகின்றது. இவ் எண்ணக்கருவானது முகாமையாளருக்கு “ அறிவு, திறன் நேர் மனப்பாங்கு தேவை என்பதை குறிப்பிடுகிறது. அறிவு திறன் நேர் மனப் பாங்கு கொண்ட முகாமையாளர்கள் வெற்றிகரமான முகாமையாளர் ஆவர்.

“றொபட் கேட்ஸ்” இன் கருத்தை பொறுத்த வரையில் முகாமையாளருக்கு எண்ணக்கருவாக்க திறன், மானிட தொடர்பு திறன், தொழிநுட்பத்திறன், காணப்பட வேண்டும். இங்கு முக்கியமாக எண்ணக்கருவாக்க திறன் அதிகளவில் உயர்மட்ட முகாமையாளருக்கு தேவை என்பது வலியுறுத்தப்படுகின்றது. அதே போல் தொழிநுட்ப

திறன் கீழ்பட்ட முகாமையார்களுக்கு மானிட தொடர்பு திறன் மூன்று மட்ட முகாமையாளர்களுக்கும் சமமான வீதத்தில் காணப்படுமாயின் வணிகமானது வெற்றிகரமானதாக மாற்றமுடியும் என கூறுகின்றார்.

மேற்படி ஒரு முகாமைத்துவம் சிறந்த முறையில் இல்லாவிடின் பின்வரும் பிரச்சினைகளுக்கு வணிகம் முகங்கொடுக்க நேரிடும். அதாவது எதிர்கால இலக்கு நோக்கு வீணடையும் வள வீண் விரயம் ஏற்படும். வினைத்திறன், விளைத்திறன் குன்றும் போட்டி மற்றும், சவால்களுக்கு முகங்கொடுக்க முடியாது போகும், முரண்பாடான பிரச்சினை தோன்றும். உற்பத்தியில் தரம் குன்றும் மற்றும் வணிக நிலைத்திருத்தலை உறுதிபடுத்த முடியாது. இப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் வணிகமானது சில நாட்களிலேயே சந்தையை விட்டு வெளியேரிவிடும்.

மாறாக முகாமைத்துவ செயற்பாடுகளை செவ்வனே கடைபிடிக்கும் இடத்தே எது வித பிரச்சினை மற்றும் முரண்பாடற்ற மனித தொடர்புடன் கூடிய சிறந்த வணிகத்தை கட்டியெழுப்பலாம். வணிகங்களின் இலக்குகளையும் எதிர்பார்த்த காலத்திற்குள்ளேயே அடைந்து கொள்ளலாம். இன்றைய முகாமையாளர் நேர முகாமைத்துவம் சிறந்த தீர்மானம் தொடர்பாடல் பூகோள மயமாக்கல் நெருக்கடி முகாமைத்துவம் போன்ற திறன்களை கொண்டிருந்தால் வெற்றி நிச்சயமானதுஎன ஆய்வுகள் கூறுகின்றது.

ஆகவே வணிகமும் முகாமைத்துவமும் ஒன்றிலொன்று தங்கிஉள்ள காரணிகளாகும். முகாமைத்துவம் இல்லாத வணிகம் வெறுமனே கூட இயங்க முடியாது. முகாமைத்துவமானது எல்லா துறைகளிலும் சிறந்ததாக காணப்பட வேண்டும். எனவே முகாமைத்துவமானது அமைப்பு அல்லது வணிகம் ஏற்படத்தியுள்ள நோக்கத்தை உயர்த்துவதற்கு உதவும் பொருட்டு உருவானது ஆகும்.

பெருமைக்காகத் தேடிப்பெறுவது அல்ல பெற்றதைக்கொண்டு
பெருமைத்தேடிக் கொள்வது தான் கல்வி

உன்னதமான ஒவ்வொரு வேலையும் முதலில் முடியாததாகவே தோன்றும்.

## நூல்களை வாசித்தல், பதிப்பித்தல் ஊடாக அறிவுசார் சொத்துக்களைப் பாதுகாத்தல்

N.பிரியாங்கனி 13 கலைப்பிரிவு

மனித சமுதாயம் பெறும் கல்வி அறிவு மட்டுமல்லாது பொது அறிவு, சமூக சிந்தனைகள், ஒழுக்க நெறிகள், நிகழ்கால தகவல்கள் மற்றும் கருத்துக்களையும் எழுத்துருவில் வடித்து வெளிவருகின்ற நல்ல நூல்கள் மனித சமூதாயத்தின் விலை மதிக்க முடியாத சொத்தாகும். அத்தோடு ஆரோக்கிய வாழ்வுக்கான அறிவுரைகள் உள்ளிட்ட எண்ணற்ற விழிப்புணர்வை எமக்கு ஏற்படுத்தும் சிறப்பம்சங்களை உள்ளடக்கிய தொகுப்புகளாக நூல்கள் விளங்குகின்றன.

இத்தகைய சிறப்புக்கள் நிறைந்த புத்தகங்களை வாசிக்கும் ஆற்றல் மக்களிடையே தற்போது குறைந்து வருவது பாரிய பிரச்சினைகளை தோற்றுவிக்கக் கூடியதாகும். இன்றைய சூழ்நிலையில் எழுத்தாளருக்குரிய முறையான களம் காணப்படாமை புத்தகங்களின் பதிப்பு குறைவடைந்தமைக்கு முக்கிய காரணமாகும். எனவே இவற்றை நிவர்த்தி செய்து பதிப்புரிமை ஊடாக அறிவுசார் சொத்துக்களை பாதுகாத்தல் போன்ற நோக்குடன் ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனமாகிய யுனெஸ்கோ நிறுவனம் வருடந்தோறும் ஏப்ரல் 23ம் திகதி சர்வதேச புத்தக தினமாக அனுஷ்டிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர உலக இலக்கியத் துறையின் வளர்ச்சிக்காக பாடுப்பட்ட இலக்கியவாதிகள் பலர் உள்ளனர். அவர்களில் ஷேக்ஸ்பியர், சேர்வண்டேஸ், இன்கா மற்றும் கார்சிலாசோ போன்ற உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர்கள், இலக்கியவாதிகளும் ஏப்ரல் 23ம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தனர். இவர்களை தவிர மேலும் சில எழுத்தாளர்களின் மறைவு நாள் மற்றும் பிறந்த நாளும் இத் தினத்திலேயே நிகழ்ந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. எனவே இலக்கியத்துறையில் இவர்களது பங்களிப்பை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு 23ம் திகதியை “ உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினம்” ஆக அனுட்டிக்கப்படுகின்றது. எனவும் சில சான்றுகள் முன்வைக்கப்படுகின்றன.

1995 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 25ம் திகதி தொடக்கம் நவம்பர் 16ம் திகதி வரை பெரிஸ் நகரில் யுனெஸ்கோ நிறுவனத்தால் நடைபெற்ற மாநாடு ஒன்றில் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டது. “ அறிவை பரப்புவதற்கும், உலகெங்கிலுமுள்ள பல்வேறு கலாசாரங்கள் பற்றிய விழிப்புணர்வை பெறுவதற்கும், புரிதல், சகிப்புத்தன்மை போன்றவற்றின் மூலம் மனிதர்களின் ஒழுக்கத்தினை மேம்படுத்தவும் புத்தகம் ஒரு சிறந்த கருவியாக வருடமும் ஏப்ரல் 23ம் திகதி உலக புத்தக தினமாகக் கொண்டாடப்படும்” என்ற தீர்மானமே அதுவாகும்.

இத்தினத்தை முன்னிட்டு நூலகச் சங்கங்கள் மற்றும் நிறுவனங்களின் அனைத்துலக கூட்டமைப்பு, அனைத்துலக பதிப்பாளர் சங்கம் ஆகிய சங்கங்கள் உலகம் எங்கிலும்

இயங்கும் யுனெஸ்கோவின் தேசிய ஆணையங்களுடன், இத்தினத்தை கடைபிடிக்க உதவுகின்றன. அதனையடுத்து உலகளவில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் இத்தினத்தை அனுஷ்டிக்கத் தொடங்கின.

புத்தகங்களை படிப்பதன் மூலம் கிடைக்கப்பெறும் மகிழ்ச்சியை இளைய தலைமுறையினரும் அனுபவபூர்வமாக உணர்ந்துக் கொள்ள வேண்டும் என்பதே நூல்களை வாசித்தல் மற்றும் நூல்களை பதிப்பித்தல் என்பவற்றின் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது.இன்றைய காலக்கட்டத்தில் விஞ்ஞான ரீதியில் நவீன தொழிநுட்பங்களின் வளர்ச்சியின் காரணமாக புராண, இதிகாச நூல்களை வாசிப்போரும்,எழுத்தாளர்களினதும் மற்றும் கவிஞர்களின் வருகை சற்று குறைவுற்ற நிலையில் காணப்படுகின்றது. இப் போக்கானது இலக்கியத்துறைக்கும், நூல்களுக்கும் பாரியபாதிப்பை ஏற்படுத்துகின்றது.

அத்தோடு இப் பதிப்புரிமை நாளின் ஆண்டு தோறும் இந்த தினத்தில் புத்தக கண்காட்சிகள், புதிய புத்தகங்களை வெளியிடுதல், அறிமுகம் செய்தல், சிறப்பு கலந்தரையாடல்கள் கூட்டங்கள் மற்றும் போட்டிகள் என பல்வேறுப்பட்ட வகையில் நிகழ்ச்சிகள் உலக அளவில் ஏற்பாடு செய்யப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன் சிறந்த புத்தகங்களை எழுதும் நூலாசிரியர்களைப் பாராட்டி கௌரவிக்கும், நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டு கௌரவிக்கப்படுகின்றனர்.

மேலும் உலக மக்களிடையே சகிப்புத்தன்மையை ஏற்படுத்துவதற்கு இலக்கியம் மூலம் பங்காற்றிய சிறந்த சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு யுனெஸ்கோ அமைப்பானது இத் தினத்தில் விருது வழங்கி கௌரவிப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

புத்தகங்களின் ஊடாக மனிதனின் வாழ்வினை சிறந்ததாக மாற்றவும் சமூகங்களின் உறுதியான அடித்தளத்தினை அமைக்கவும், கல்வயறிவின்மையை நீக்கவும், இலக்கியம், அறிவு சார்ந்த புத்தகங்கள் வாசித்தல் மற்றும் இளம் எழுத்தாளர்களை எழுதும் பழக்கத்திற்கு உள்ளாக்க வேண்டும் எனவும் யுனெஸ்கோ நிறுவனம் முனைப்பாகச் செயற்படுகின்றது.

புத்தகங்களை வாசிப்பதன் ஊடாக எமக்கு கிடைக்கும் பயன்களானது எமது அறிவு திறமையை மேம்படுத்திக் கொள்ளலாம். புத்கங்களில் தோன்றும் படங்கள் எவ்வித மாற்றமும் இன்றி எமது மனதில் பதிவாகுதல், புதிய மொழிகளை கற்றுக் கொள்ள முடியும். நாம் வாசிக்கும் விடயத்தையும் சூழலையும் எமது மூளை கற்பனை செய்யக் கூடியதாக இருத்தல். அத்தோடு இதிகாச மற்றும் இலக்கிய நூல்களை வாசிக்கும் போது அதில் தோன்றும் கதாபாத்திரங்களையும் அதன் தன்மைகளையும் உள் வாங்கி சிந்தித்து செயற்படத்தூண்டும்.

எனவே வாசிப்பதனால் மாத்திரமே மனிதனானவன் முழுமை பெறுகின்றான் என்பதை எமது மனதில் இருத்திக் கொண்டு, நல்ல நூல்களை வாசித்து அறிவுசார் சொத்துக்களைப் பேணி பாதுகாப்போம்

சர்வதேச புத்தக தினங்களுக்கான தொனிபொருட்கள்

1998 –வாசிப்பு ஓர் எளிமையான விடயம்

1999 – புத்தகம் ஒன்றைத் தாருங்கள்

2001 –மகிழ்ச்சியான மணித்தியாலங்கள்

2003 –வாழ்க்கைக்கான நண்பர்கள்

2004 –வாசித்தல் ஒரு முடிவில்லாத பயணம்

2005 –என்றென்றைக்கும் வாசித்தல்

2006 –கல்வியறிவு வாழ்க்கைக்கான மாற்றம்

2007 –வாசிப்பானது ஒரு திறப்பு

2008 –மொழிகளுக்கான சர்வதேச வருடம்

2009- தரமான கல்வி அபிவிருத்தி, பிரசுரிப்பு மற்றும் மனித உரிமைகள் இடையே இணைப்பு

2010 –கலாசார சீரழிவுகளை தடுப்பதங்கான சர்வதேச வருடம்

2011 –டிஜிட்டல் மூலம் எழுதுதல் புத்தக தயாரிப்பு பரிணாமம்

2012 – புத்தகங்களும் மொழி மாற்றமும்

2013– வாசித்தல், பதிப்பித்தல் மற்றும் பதிப்புரிமை மூலம் அறிவுசார் சொத்துக்களை பாதுகாப்போம்

2014 – புத்தகங்கள் வாழ்க்கையில் கம்பீரத்தினை ஏற்படுத்தல்

2015 – உலகத்தை தெரிந்து கொள்ளுங்கள்

# FASHION DESIGNING

**M.Rumeshinee 13 bio**

Fashion desing is the art of application of desing and aesthetics or natural beauty to clothing and accessories. Fashion design is influenced by cultural and social attitudes, and has varied over time and place. Fashion designing industry has become highly competitive today. This has made it important for ones pursving a carrer in this industry to work harder.

There are some education system followed to become a fashion designers. Most fashion designers have a bachelor's degree in a related field. Such as fashion design or fashion merchandising. There are a number of specialized design schools worldwild offer degree in fashion design and fashion design technology. Argentina, Australia, Bangaladesh, Canada, Denmark, France, Georgia, Germany, India, Italy, Japan, Pakistan,United states have best design schools.

Fashion designers work in a number of way in designing clothing and accessorices such as bracelets and necklace. Designers must at times anticipate changes to consumar tusts. Fashion designers may work full – time for one fashion house as gouse – designers Which owns the disigns. They may work alone or as part of team. A good fashion designer have a list of qualities. They have to be very creative and artistic, They need to have a good understanding of colour, texture and febric qulity and good computer skills.

There are somew careers related to fashion designers. The first one is art directors. The art directors are responsible for the visual style and images in magazine, newspaper, movie and television productions. Second one is floral designers. Floral designers also called florists. Cut and arrange live, dried,and silk flowers and greenery to make decorative display. They also help customers select flowers,robbons and other accessories. Third one is graphic designers They create visual concepts,using computer software or by hand. They develop the overall lagout and producing design for various applications. The fourth one is Industrial Designers. They develop the concept for manufactured products, such as car, home applications, and toys,and the jewelers and precious stone and metal workers are also a fashion designer. They also adjust repair and apprais gems and jewelery. The last one is models. Models pose for artists, customers or photographers to help advertise a varietics, food and appliances.

Fashion designing is the nuture young creative talents to take the lead of the global fashion and design industry in the future.

# DIFFERENTLY ABLED

**L.Anubama 13 Bio**

The world of today is quite different from the world of tomorrow. In other words we can say that the world changes with time. The trend of change may be partly good and partly bad. In that way nowadays a very big issue that takes place is the topic of "differently abled" we people have different opinions towards this term. In coming paragraphs I shall analys this deeply as I can.

One of the most controversial and fashionable issues today is the trend of differently abled in our society. This is because people accepted the role of the differently abled for centuries, and believed in the inequality found in society. For example it was a widely accepted belief that differently abled people didn't need education their role in life was to live in the corner of the house for all their life time. Today this belief has been challenged, and most societies including ours, function on the principal of equal rights for differently abled.

Recently when people spoke of the blind, the lame, the crippled, the deaf and the dumb,they used the words " handicapped" or " disadvantaged" Now the words differently abled disabled, disability and disabilities are used when discussing people with physical problems.

In srilanka, the amount of the disabled people are being increased. This is mainly because of the heredity. Yes today the more cruel diseased such as polio diabetes are being transfered by heredity. Because of this diseases sometimes people might have chances to lose the parts such as legs and arms of their body. This is not their fault to be worried for all their life

Another aspect of disabilities in the srilankan context, is the plight of the disabled soldiers. They are war heroes at one level, but in terms of daily life, our society is not geared to look after the disabled.

Worldwide men an women with disabilities have relatively better life – chances today than a decade or more age. For one thing , disability has come out into the open. Disabled persons have fought the practice of incarceration in residential homes and hospitals a " treatment" Which was legitimate not only in the middle East and Asia but also in the western world.

The public places such as the hospitals, schools, libraries and also the travelling boards too have special facilities to the disabled peoples. For example in some schools and hospitals they have special units for the disabled onces. Also in libraries they have special " brail letters" facilities to read books.

In transport section there are some special seats reserved for the disabled people in busses. This shows the development of our country and also peoples attitudes towords the disabled have been slow in changing.

The truth that in the public buildings in srilanka rarely have wheelchair access, unlike in developed countries, such as us, uk Where facilities for the disabled are legally enforced in public buildings give some negative aspects in the development facilities towards the disabled in srilanka.

In the development countries, there are some organization to help and develop disabled. The Lebanese sitting handicapped association ( LSHA) is involved in relief and emergency work. The International committee of the red cross (ICRC) appeal for " assistance for mine victims", Which has raised more than 11 million to develop the disabled.

The united nationas office for the coordination of humanitarian affairs (OCHA) helps to develop the disabled peoples life style.

We young people have to try to make these types of institutions in our country to develop our country.

The next point is that in the Olympic games there is also para Olympic games for the disabled people to praove their talents to the world.This is quite healthy to hear this. So that we people have to make equal facilitices to the disabled peoples as we normel people have.

Summing up, I can say that today in addition to focusing on the problems of people who are differently abled, researchers are also concentrating on the problems faced by disabled men and women. Who are perceived to be doubly disadvantaged first as men and women and secondly as disabled so the we people have torespect them as one of as.

# மனிதனும் மனிதமும்

**C.தர்சிகாமேனு, தரம் 13**

**(விஞ்ஞானப்பிரிவு)**

மில்லியன்கணக்கான பிரதான மூலக்கூறுகள் அதியுயர் மின்சக்தியால் இணைக்கப்பட்ட உலகின் முதலாவது உயிரங்கி உருவாகியது என்கிறது நவீன விஞ்ஞானம். இது ஒருவருக்கேனும் மறுப்பதில்லை. ஆனால் சற்றே நாம் நமது புராணங்கள் இதிகாசங்கள் வழிநோக்கிடுவோமாயின்

''புல்லாகிப் பூடாய் புழுவாகி மரமாகி பல்மிருகமாகி

பறவையாய் பாம்பாகி''

என நீண்டுக்கொண்டு போகும் திருவாசகத்தொடர் இறைவனின் சிரு'டியை எடுத்தியம்புகின்றது. இது இருக்க சாதாரண அமினோ அமிலங்களின் ( மிகச்சிறியப் புரதமூலக்கூறுகள்) சேர்க்கையால் உருவாகும் ஒரு சடப்பொருளுக்கு உணர்வுகளும், மனத்தாக்கங்களும் எவ்வாறு உருவாகின்றன என்பதே உலக விஞ்ஞானங்களின் தற்போதைய கேள்வி. இதுவே தற்போதைய விஞ்ஞான உலக சரித்திரதை உற்றுநோக்க வைத்துள்ளது. இதனைக்காட்டிலும் இவ்விடயத்தை ஆராயும்போது நம்மவர் இடையே உருவாகிடும் ஒரு கேள்வி மனிதமனம் என்பது யாது? இதுவே மனிதனையும், மனிதத்தையும் ஒருசேர ஆட்டிப்படைக்கின்றது. நம்மில் விஞ்ஞானிகள் பலருக்கு தெரியாத பல விளக்கங்களை தரவல்லன. புராண இதிகாசங்கள் இவை மனிதனுக்கு இறைவனின் கிருபை கிடைக்க வேண்டிய காலக்கட்டங்களில் உதித்தெழுந்தவை.

உதாரணமாக பகவத்கீதையில் அர்ஜீனனுக்கும், கண்ணனுக்கும் நடக்கும் சம்பா'ணையில் துணிவைப்பற்றி தரும் விளக்கத்தில் மனமானது சஞ்சலமுடையது என்றும் கலங்கவைப்பது எனவும், வலிமையுடைய அதே நேரம் அடக்கமுடியாதது எனவும், மேலும் அது காற்றை அடக்குவதை விட அதிகமான கடினத்தன்மையுடையது எனக்குறிப்பிப்படுகின்றது.

ஆகவே இவ்வாறு சஞ்சலப்படவைக்கும் மனமே இன்பத்திற்கும், துன்பத்திற்கும், நன்மைக்கும், தீமைக்கும், இருட்டுக்கும், வெளிச்சத்திற்கும், பாவத்திற்கும், புண்ணியத்திற்கும், அன்புக்கும், வெறுப்புக்கும் மனிதமனமே காரணம். இவ்வாறு சஞ்சலப்படுத்தபட்ட மனதின் முதலாம் அறிகுறியே ஆணவம் ஆகும். '' நம்மிடம் ஏதுமில்லை'' என்று நினைப்பது ஞானம்''' நம்மைத்தவிர ஏதுமில்லை'' என நினைப்பது ஆணவம். ஞானம் பணிந்து வெற்றிமேல் வெற்றியை பெறும். ஆணவம் தலை நிமிரந்து நின்று அடிவாங்குகின்றது. '' நான்'' எனும் எண்ணம் ஒருவனுக்குத் தோன்றுகின்றதென்றால், அவன் தோல்விகளை சந்திக்க தயாராகிக் கொண்டிருக்கின்றான் என்றுப் பொருள். இதற்கு எடுத்துக்காட்டுகளாக ராமகாவியத்தில் ராவணன் பாரதத்தில் துரியோதனன், இரணியன், கண்ணனால் கொல்லப்பட்ட சூரபத்மன் என்பவர்கள் ஆணவத்தின் அடையாளச் சின்னங்களாகும். இவர்களுடைய முடிவு கொடுமையானது எனக்காட்டி இந்து மதம் அவர்களை எச்சரிக்கின்றது.

இவ்வாறான கருத்துக்களை நாம் எடுத்துரைக்கும் போது இந்து தர்மங்கள் மாத்திரம் தானாக மனிதநலனை நாடுகின்றன எனக் கேள்வி எழலாம். ஆனால் இந்து மதம் பிறமதங்களை வெறுப்பதில்லை. சொல்லப்போனால் எல்லா மதங்களையும் தன்னோடு சமமாகவே கருதுகின்றது. மதத்துவே'ம் எக்காலத்திலும் இந்துக்களால் ஆதரிக்கப்பட்டதில்லை. அதன் பரந்தக்கரங்கள் அனைத்து மதங்களையும் அனைத்துக்கொண்டே வளர்ந்துள்ளது. ஓர் ஏரியின் நீரைப்போல் பரம்பொருளையும், அதில் இறங்குகின்ற பல படித்துறைகளையும் போல் எல்லா மதங்களையும் பரமஹம்சர் காணுகிறார். நிலம் என்பது மதம், வானம் என்பது பரம்பொருள் எனக்கொள்ளல் பங்குப்போடப்படுவது நிலம், பரம்பொருள் பங்குக்கொள்ளப்படமுடியாத வானம் போன்றது எனக் கூறப்படும்.

ஆனாலும் மனிதனுக்கும் மதம் கூறும் தன்மைகளை அறியாதவன் கூறுவதே நாத்திகம். ஆயினும் இது காலப்போக்கில் அற்றுப்போகின்றது. காரணம் இந்துமத சகிப்புத்தன்மை ஆகும். ஆகவே இதிலிருந்து நாம் விளங்குவது என்னவெனில் மனிதனுக்கு மனிதத்தை போதிப்பது மதங்களே, இது மறுக்கமுடியாததொன்று காரணம் மனிதத்தை இழந்த மனிதன் மிருகமாகின்றான். மிருகம் பகுத்தறிவற்றதாகின்றது. இதுவே மனிதனுக்கும் மிருகத்தனத்துக்கும் இடையிலான வேறுபாடாகும்.

இவ்வாறிருக்கையில் மனிதம் என்பதை உற்றுநோக்கிடுவோமாயின் ஆசாரங்கள் வகுத்துள்ள மனிதனுக்கும் உகந்த பழக்கவழக்கங்களை கடைபிடித்து வாழுதலே மனிதம் ஆகும். ஆசாரம் வழியே ஒழுகும் மனிதன் தெய்வத்தை நம்புகின்றான், பாவமாம் புண்ணியமாம் எந்த மடையன் சொன்னான்? சொர்கமாம் நரகமாம் எங்கே இருக்கின்றன. பாவமும் புண்ணியமும் பரலோகத்தில் தானே பார்த்துக் கொள்வோம் பின்னாலே இவையாவும் நமது பகுத்தறிவு உதிர்க்கும் பொன் மொழிகள், ஆனால் சற்றே சிந்திப்போம் எனில் இவ்வாறான வார்த்தைகள் நாகரிக இளைஞர்கள் வாழ்க்கையை ஒழுங்குப்படுத்தவே அமைந்தன.

" தெய்வம் மனுசரூபயனா " என்பது வட மொழி சுலோகம். பிறக்கும் போது குழந்தை வஞ்சுகம் அற்றதாகவே காணப்படுகின்றது. பின்பு ஏன் சிலக்குழந்தைகள் திருடர்களாகவும், சில குழந்தைகள் அறிஞர்களாகவும் வளர்கின்றனர் சற்றே உணர்வோமாயின் நிழலின் அருமை வெயிலிலே நின்றறிமின் என்கிறார்கள். நிழலை உணரவெயில் அவசியம். மழையை உணர வறட்சி அவசியம். மனிதத்தை உணர மிருகத்தனம் அவசியம்.தெய்வீகத்தை உணரவும் மனிதம் அவசியம். ஆகவே நடுவில் நிற்கும் மனிதனே உலக இயக்கத்தின் பிதாவாகின்றான். மனிதனைப் பார்த்தே தெய்வங்களும், மிருகங்களும் உணரப்படுகின்றன. அதனால்தான் மிருகத்திற்கும் தெய்வத்திற்கும் நடுவில் உள்ள மனிதனிடம் ஒரு அபிமானத்தை வளர்க்க இந்து மதம் முயற்சி எடுத்தது.

ஆகவே மனிதம் இன்றைய இளைஞர்களுக்குக்கு கூறவிளைவது என்ன? " ஆட்டுவித்தால் யாரொருவன் ஆடாதாரோ! " சாட்டை இல்லா பம்பரம் போல் ஆட்டி

வைக்கின்றான் இறைவன்'' உண்டு உண்டு என ஓடி பின் '' இல்லை இல்லை என்று ஏமாந்து எங்கே எங்கே என்று தேடி, இதோ இங்கே இங்கே என கண்மயங்கி அனுபவங்களை பெற்ற பின்புதான் உண்மை வெளிவருகின்றது. கல்வியும் ஒழுக்கமும் ஒரு மனிதனை பூரணப்படுத்துகின்றது. ''கற்க கசடற'' எனும் திருக்குறளானது நல்ல நூல்களை தேடிக் கற்க வேண்டியதன் அவசியத்தை மொழிகின்றது. கல்வியை பெறுகின்ற சமுதாயமே நாளைய உலகில் மனிதத்தை கடைபிடிக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

தேடுங்கள் கண்டைவீரர்கள் என்பது ஏசுநாதர் வாக்கு எங்கே மனிதம் இது தேடினால் காணமுடியாதது. அது உங்கள் உள்ளத்திலேயே ஒளிமயமாய் நிற்கின்றது. பாண்டவர்களும் வனவாசம் புரிந்தார்கள், ராமனும் வனவாசம் புரிந்தார், தேவரும் ஒளிந்து வாழ வேண்டி இருந்தது. கேட்பவருக்கு எல்லாம் வரம் கொடுத்த சிவபெருமானுக்கும் நிம்மதியற்ற காலம் இருந்தது. பணக்காரனோ அல்லது ஏழையோ வாழ்க்கைச் சக்கரத்தில் ஒருநாளேனும் தவறு புரிவார்கள். ஜீரணிக்க தெரிந்தவனுக்கு மலைகடுகளவு அது தெரியாதவனுக்கு கடுகு மலையளவு

வாழ்க்கையில் கொஞ்சம் அமைதியைக் கடைப்பிடியுங்கள். அதில் ஒருவகை நிம்மதி அடைகின்றது. நிம்மதி துளிர்விடும் போதுதான் மனிதம் எழுகின்றது. பகவத்கீதையில் ''சேஸ்த்திரம்"ே'த்திரங்கள் பற்றிக் குறிப்பிட்ப்படுகின்றது. கே'த்திரம் என்பது உடல் கே'த்திரக்ஞன் என்பது உயிர். எது நிம்மதி மனிதத்தை இழக்கும் என தேடுவோமாயின் கே'த்திரக்ஞன் காரணமாகின்றான்.

ஆகவே முடிவாக ஆன்மாவின் சொரூபத்தை உணர்ந்து அதன் இயக்கத்திற்கு ஒத்துழைப்பதுதான் ஆன்மாவின் நோக்கம் என்பதை அறிந்து ஒழுங்காக இயங்கினால் மனிதமே மாபெரும் சக்தியாக உருவாகும் என்பதில் ஐயமும் இல்லை

> பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவி சாய்த்தால் மகத்தான காரயம் எதையும் செய்ய முடியாது
>
> விவேகானந்தர்.

## Am I Disabled?

Although my needs may be special,
I may talk a little
Funny.
Although my needs may be special,
I love and want just like
You
Althuogh my needs may be special,
I may look a little
different.
Although my needs may be special,
Iam very happy because,
I am a useless….

**Ramathass Ackshiya**
**13 commerce**

**Even Me can do it**

I have no legs,
But I still have feelings.
I cannot see,
But I think all the time.
Although Iam a deaf,
I still want to communicate.
Why do people see me as
Useless thoughtless Talkess.
When Iam as capable as any,
For thoughts about our world

**Ramathass Ackshiya**
**13 commerce**

# வறுமையின் நிறம்…

**Y.ரிகாஸினி தரம் 12 கலைப்பிரிவு**

தினமும் காலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்து மும்பரமாக தனது வீட்டு வேலைகளை பார்க்க தொடங்கிய வண்ணம் தனது மூன்று பிள்ளைகளையும் எழுப்பி விடுவாள் வள்ளியம்மை. எழும்பி விட்டு சுட சுட மூன்று பிள்ளைகளுக்கும் சாயத்தை ஊற்றி கொடுப்பாள் அதை வாங்கி மட மடவென குடித்து விட்டு தமது வேலையான படிக்கும் வேலையை செய்ய ஆரம்பித்து விடுவர் மூவரும். அதிலே வள்ளியின் மூத்த மகளான கயல்விழி நன்றாக படிக்க கூடியவள் எல்லா வேலைகளையுமே செய்வதில் கெட்டிகாரி, வள்ளிக்கு கயல்விழிக்கு பின் ஒரு பெண்பிள்ளையும் ஒரு ஆண்பிள்ளையும் கடைக்குட்டி ராஜா மீது குடும்பத்திலுள்ள எல்லோருக்கும் அதீத பிரியம் .ஏதாவது வீட்டில் துரு துரு வென செய்து கொண்டே இருப்பதாலே என்னவோ ராஜாவை எல்லோருக்கும் பிடிக்கும்.

அன்றும் அவ்வாறே தான் நான்கு மணிக்கெல்லாம் எழும்பி வள்ளியம்மை தமது பிள்ளைகளுக்கு பாடசாலைக்கு கொடுத்து அனுப்ப சாப்பாடு செய்ய ஆரம்பித்தாள்.

“ அய்யோ கடவுளே புள்ளைகளுக்கு இப்ப சாப்பாடு செய்யனும் என்னத்த செய்றதுன்னு தெரியலையே ரொட்டி சுட கூட மாவு கொஞ்ச கூட இல்ல இப்ப என்ன செய்றது எப்புடி புள்ளைகளுக்கு சாப்பாடு குடுத்து அனுப்புறம் கடவுளே” இவ்வாறு புலம்பிய படி அடுப்பை ஊதி கொண்டிருந்தாள் வள்ளி திடிரென தன் அருகிலே யாரோ நிற்பதை போல் உணந்தவள் தலையை மெதுவாக தூக்கி பார்த்தாள். அருகிலே தன் மூத்த மகள் கயல்விழி நின்று கொண்டிருநதால்.

ஏம்மா கயல் என்னாச்சி ஏ இப்புடி வந்து நிக்கிற நா நல்லா பயந்துட்டன்” என்றாள் வள்ளி. அம்மா நா ஆண்டு பதினொன்னுக்கு வந்து ஆறு மாசம் ஆகிறிச்சி மத்த புள்ளைங்களெல்லாம் சனவரி மாசமே பாஸ் பேப்பர் பயிற்சி புக் எல்லா வாங்கிட்டாங்க நீ என்னா இன்னு ஒன்னு வாங்காம வந்து கிளாஸ்ல உக்காந்து இருக்குனு கிளாஸ் டீச்சர் எந்த நாளும் ஏசுறாங்க அம்மா எப்பம்மா பாஸ் பேப்பரும் பயிற்சி புக்கும் வாங்கி தருவீங்க ? எப்படியும் நா படிச்சி முடிஞ்சவுடனேதான் வாங்கி தருவிங்க போல” இப்படி எல்லாம் காலையிலே அந்த அடுப்பங்கரையிலே பலாக்கட்டையிலே உட்கார்ந்து கொண்டு தனது மனதிலுள்ள ஆதங்கங்களை எல்லாம் கண்ணீர் சொட்ட கூறி கொண்டிருந்தாள் கயல்விழி.

“ சரிம்மா இன்னு ஒரு வாரம் மட்டும் பொறுத்துக்க எப்படியாவது சம்பள பணம் வந்த உடனே உனக்கு நான் வாங்கி தாறேன் இப்ப போய் படிம்மா” எனக்கூறி தன் மகளை அனுப்பி விட்டு “ கடவுளே எஸ்டேட்ல வேலையும் இல்ல இந்த மனுசனும் எங்க போறாரு வாராருன்னு தெரியல குடிகுடின்னு வீட்டுல உள்ள எல்லா சாமானுங்களையும் தெரியாம கொண்டு போயிட்டு வித்துட்டு வந்துர்றா” இவ்வாறு தன் நிலைமைகளை கூறி கண் கலங்கினாள் வள்ளி.

காலை நேரம் சரியாக ஆறு மணியை காட்டியது. வள்ளியின் கணவர் சுந்தரம் எழுந்து பீலிக்கரைக்கு ஓட்டமும் நடையுமாக சென்று முகத்தை கழுவிக்கொண்டு வந்தார். வள்ளி வந்தவருக்கு சாயத்தை ஊற்றி கொடுத்தாள். சாயத்தை வாங்கி ஒரு வாய் குடித்தவர் “ அட என்னடி இது வெறும் சாயத்தை ஊத்தி கொடுக்குற கொஞ்சுண்டு சீனி போட கூடாதா?’ என அதட்டி கேட்பதை போல கேட்டார் சுந்தரம். “ ஆமா இதுக்கு சீனி ஒண்ணு மட்டுதா குறைச்ச மாசமாசம் லொறில லோடு லோடா கொண்டு வந்து சீனி, அரிசி மாவுன்னு கொடுக்குறாரு அதுதான் வாய் கிழிய காலையிலே கத மட்டும் கதைக்கிறாரு” என சுந்தரத்தை வாய் வலிக்க காலையிலே திட்டி தீர்த்தாள்.

மெதுவாக வீட்டு வாசல் படிக்கட்டிலே உட்கார்ந்து கொண்டு வள்ளி கூறும் எல்லா திட்டுக்களையும் வாங்கிக் கொண்டு “ நா என்னத்தா செய்ரது எஸ்டேட்ல கொழுந்தும் இல்ல ஒன்னு இல்ல இந்த மாசம் சம்பளம் வந்தாலும் ஐந்நூறுவா கூட வராது இதுல எப்புடி வீட்டு செலவெல்லாம் பாத்துக்கிட்டு எப்புடித்தான் புள்ளைங்க மூனையும் படிக்க வைக்க போறேனோ தெரியல என்னடா இது சோதனை?'' என்று சுந்தரம் தன் பாட்டிற்கு புலம்ப அந்த பக்கம் இருந்து வந்த சங்கர் அண்ணன்'' என்ன சுந்தர அண்ணன் காலங்காலத்தால புலம்பிக்கிட்டு இருக்கீங்க?'' என்னடா பண்ண ஏ நெலமைய நெனைச்சி பொலம்பி தள்றேன்டா பேசாம கொழும்பு பக்கோ வேலைக்கு போவ போறேண்டா என்று கூறி விட்டு சங்கர் கூட சுந்தரம் வேலைக்கு செல்ல ஆயுதமாக்கினாள்.

வள்ளிக்கும் வேலைக்கு போவதற்கு நேரம் சரியாக இருந்தது. பக்கத்து வீட்டு சரஸ்வதியிடம் ஒரு கோப்பை மாவு வாங்கி ரொட்டிய சுட்டு மூன்று பிள்ளைகளுக்கும் சின்ன சின்னதாக ஒரு ஒரு ரொட்டியை கொடுத்து அனுப்பி விட்டு தனக்கு பாதி ரொட்டியை எடுத்து கடித்து கொண்டு வேலையை பார்க்க கிளம்பினாள் வள்ளி.

தேயிலை செடிக்குள் சென்று இருந்த கொழுந்தை கிள்ளி தன் கூடைக்குள் போட்டுக்கொண்டு சரஸ்வதியிடம் கதைக்க தொடங்கினாள் வள்ளி “ என்ன இது சரஸ் மணி ஒன்பது கூட தான்டல வெயில் மண்டைய பொலக்குது'' “ ஆமா அக்கா இந்த வெயிலால கொழுந்தும் வளர மாட்டேங்குது பாருங்க கொழுந்து இல்லாம என்னா பாரு படுறோம்னு'' “ அது சரி சரஸ் எனக்கு இல்லன்னு சொல்லாம ஒரு வோதவி பண்ணுவியா?'' என மிகவும் தயக்கத்துடன் கேட்டாள் வள்ளி “ சொல்லுங்க அக்கா என்னால முடிஞ்ச வரைக்கும் ஒதவி பண்ண பாக்குறேன்' “ அது ஒன்னு இல்லடி மூத்த மக பதினொன்று படிக்குது அதுக்கு என்னமோ பாஸ் பேப்பரோ என்னமோ கேக்குறாங்களா எந்த நாளும் வந்து அந்த புள்ள வீட்டுல கேக்குது என்ன பன்றதுன்னு தெரியல ஓங்கிட்ட கொஞ்ச காசு இருந்தா தந்து வோதவி பண்ணு சம்பள சல்லி வந்து ஒடனே ஒனக்கு தரறே இந்த மாதம் சம்பள சல்லி வருமான்னு தெரியல நா என்னமாவது சமான அடகு வச்சாவது உனக்கு தரறேன்'' இவ்வாறு மிகவும் வருத்தத்துடன் தன் நிலைமையை சொல்லி முடித்தாள் வள்ளி.

“ ஐயோ அக்கா ஒரு ரெண்டு நாளைக்கு முன்னுக்கு கேட்டிருந்தீங்கனா தந்திருப்பேனே முந்தா நாளு தான் சித்ரா வந்து சாமா வாங்கனும்னு வாங்கிக்கிட்டு போனா'' இவ்வாறு சரஸ்வதி கூற வள்ளியின் முகம் வாடிய பூவை போல வாடி போனது என்ன செய்வதென்றே தெரியாமல் யோசித்து கொண்டே வீடு வந்து சேர்ந்தாள் வள்ளி.

இவ்வாறு நாட்கள் தொடர் பல இன்னல்களை சந்தித்தது வள்ளியின் குடும்பம் அவர்களின் இன்னல்களை கூட்டும் வண்ணம் வந்தது சம்பள நாள். சுந்தரம் தெரிந்துக் கொண்டு சொன்னாரோ அல்லது தெரியாமல் சொன்னாரோ ஆனால் அவரின் சம்பளமும் வள்ளியின் சம்பளமும் 500 ரூபா மட்டுமே வந்து சேர்ந்தது. குடும்பமே என்ன செய்வதென்றே தெரியாமல் யோசனையில் ஆழ்ந்தனர்.

எல்லாமுமாக பல இன்னல்களை வாரி தந்தது வள்ளியின் குடும்பத்துக்கு இதனால் கடைசியாக வேறு வழியில்லாமல் தவறான தீர்மானம் எடுத்தனர். மூத்த மகளான கயல்விழியை தன் குடும்ப வறுமைக்காக கொழும்புக்கு வேலைக்கு அனுப்பி விட்டனர். இரண்டாவது மகள் ராணியையும் தோட்டத்திலே வேலைக்கு அமர்த்தி விட்டனர். ராஜா மட்டும் தான் இப்போது படித்து கொண்டிருக்கின்றான். ராஜாவாவது படித்து குடும்பத்தை காப்பாற்றுவான் என நம்பி கொண்டிருக்கின்றது! வள்ளியின் குடும்பம் இனிமேலாவது வறுமையிலிருந்து மீண்டு வருமா?

## கானல் நீர் கனவுகள்

வை. பிரியங்கா – தரம் 13 கலைப்பிரிவு

“ ஏன்டா தம்பி கடைக்கு போய் அரிசி வாங்கிட்டு வாடானு சொன்னா வெறுங்கையோட வந்திருக்கியே, ராத்திரிக்கு கஞ்சிக்கு கூட வழியில்லையே” என்று தன் மகனின் வருகையை எதிர்பார்த்து வாசலில் காத்து நின்ற கண்ணம்மா கேள்வி கணைகளை தொடுத்தாள். “போயிட்டு தாம்மா வாரேன். போன மாச பாக்கியே குடுக்கல அதோட இன்னும் கடனா? தோட்டத்தில் தான் வேலையும் இல்லையே நான் எதை நம்பி கடன் தாரதுனு சொல்லிட்டாருமா முதலாளி” சொன்னவன் தன் தாயின் பதிலுக்கு காத்திராமல் பாய்ந்தோடி சென்றான்.

பந்தடிக்களம் பக்கம் “எத்தனை நாளாதான் பட்டினி கிடக்கிறது இன்னைக்கும் பெலாக்காதான் சாப்பாடு” என முனங்கியவாறு ஏமாற்றத்தோடு தோட்ட பக்கமாய் நடந்தாள் கண்ணம்மா.

கண்ணம்மா மூன்று பெண்களும் இரண்டு ஆண்களுமாய் சேர்ந்து ஐந்து பிள்ளைகளின் தாய். அவளுக்கு தன்னுடைய குழந்தைகளை தங்கத்தொட்டியில் ஆட்ட ஆசைதான். ஆனால் தன் வீட்டில் பழைய வேட்டித் தொட்டிக்கூட கிழிந்து விட்ட நிலையில் …… புருஷன் முத்தன் புலத்வத்தைக்கு வயல் வேலைக்கு சென்று விட்டான். வேலை முடிந்து வரும் போது கள்ளு குடித்துவிட்டு ஊர் வம்பு தும்பு எல்லாம் பேசி வீடு வர விடிஞ்சி போவும்.

தேயிலை தோட்ட தொழிலாளிகளுக்கு சம்பளத்தை அதிகரித்து தருமாறு கூறி கடந்த 20 நாட்களாக போராட்டம் நடக்கின்றது. ஏற்கனவே இவர்கள் மாதம் முழுவதும் வேலையில்லை என்பதால் இவர்களின் வீட்டு அடுப்புகளுக்கு வேலை இல்லை. இவர்களின் நிலைமை இதுதான். இருக்கிற வீடும் சொந்தமில்லை நாட்கூலியும் குறைவு இத்தோடு “ நாடற்றவன்” என்ற நாமத்தையும் சூடிக்கொண்டவர்கள்.

“ என்னாடி கமலம் எங்கே போயிட்டு வாற” என்று படிக்கட்டுக்களில் ஏறி வந்துக் கொண்டிருந்த கமலத்தை கேட்டாள் கண்ணம்மா. “ எங்க போக இருக்குது கண்ணம்மா அக்கா நாட்டுல ரட்பண்டா ஐயா வீட்டுல அரிசி குத்த வேலை இருக்குதுனு போனா அங்கேயும் ஐஞ்சாறு பேரு போட்டி” கமலம் தன் நிலையை நெஞ்சுருக கூறினாள். “ ஆமாடி அடுத்த மாதம் தீபாவளி இப்பவே பாதிப்பேர் வீட்டு அடுப்பே எரியலயே” கண்ணம்மா தனது ஆதங்கங்களை வார்த்தைகளால கொட்டிக் கொண்டால்.

“ பேச்சு வார்த்தை என்னாச்சாம்” என்று கமலம் கேட்க “ நம்ம கருப்பையா தலைவர் சங்க ஒப்பீசுக்கு போய் இருக்காராம் வந்தாதான் தெரியும், நெலம என்னானு” என்று கூறியவாறு பிலாக்காயுடன் வீடு நோக்கி நடக்க தொடங்கினாள் வரும் வழியில் தளதளவென வளர்ந்திருந்த தேயிலை செடிகளை நோட்டமிட்ட கண்ணமாவின் கண்களில் ஒரு ஏக்கம், அத்தேயிலைக்கொழுந்துகள் இவளைப்பார்த்து வா! வா! என அழைப்பது போல இருந்தது.

இந்த கோப்பி தோட்டத்திலே கொழுந்து பறிப்பதில் இதுவரை இவளை யாரும் மிஞ்சியதில்லை. கொழுந்து காசுக்கு வீட்டில் கிடக்கும் அலாரம் மணிக்கூடு ஒரு ஆதாரம். இரண்டு ரவுனு பிந்திப் போச்சி அநியாயம் என மனதுக்குள் முனங்கியவாறு நடந்தாள் மாலை நான்கு மணியிருக்கும் பிரட்டு களத்திலே கருப்பையா தலைவரைக் கண்ட உடன் அங்கொன்றும் இங்கொன்றுமாய் இருந்த ஆண்கள் அனைவரும்

கருப்பையா தலைவரை சுற்றி நின்றுக் கொண்டு சம்பள பிரச்சினைப் பற்றி விவாதிக்க தொடங்கினர்

என்ன? தலைவரே? சம்பளத்தை கூட்டித்தர ஒத்துக்கிட்டாங்களா என்றான் செல்வம் தனது முகத்தின் சவர்க்காரத்திற்காய் காத்திருககும் தாடியை தடவிக் கொண்டு இல்ல செல்வம் அந்த தொரமாறு ஏலாதுனுட்டாங்க ஆனாலும் நம்ப ஐயா விடுவாரா ஒரு நாளைக்கு 100 ரூபா கொடுத்தே ஆகனும் அதுவரைக்கும் வேலைக்கு போக மாட்டோமுனு சொல்லிப்புட்டாரு என்றார் தோட்ட தலைவர். அதுதானே பார்த்தேன் நம்ம ஐயா விடுவாரா என்ன? என்றான் இராசு. அதோட நம்ம ஐயா டிவியில இன்னைக்கு பேசுராரு எல்லோரும் போய் பாருங்க என சொல்லி விட்டு சிறிது தூரம் சென்ற தலைவர் சற்று திரும்பி எல்லோரும் நம்ம காட்டுர நன்றிக் கடன் என்று கூறி வீடு நோக்கி நடந்து சென்றார்.

மாலை 7 மணிக்கு ஒரு சில டிவி இருக்கிற வீடுகளிலெல்லாம் சனக்கூட்டம். சங்கத்தலைவர் ஐயா பேசத்தொடங்கினார். “ என் இனிய தோழர்களே! வணக்கம். எமக்கு 50 ரூபா சம்பளம் போதாது. அதனால் 100 ரூபா சம்பளம் கேட்டிருக்கின்றோம். இதில் இருந்து ஒரு சதம் கூட குறைய மாட்டோம். இதற்கு முதலாளிமார்கள் ஒத்து வருவதாக தெரியவில்லை. அதனால் நான் மக்களை கேட்டுக்கொள்வது ஓரணியில் நின்று அனைவரும் எங்கள் கரங்களை பலப்படுத்துங்கள்” என முழக்கமிட்டு ஒரு மணித்தியாலம் பேசி முடித்தார்.

“என்னடா இது காடு மலையேறி மழை வெயில் பார்க்காம வேலை செய்யிரோம் நாட்டுக்கே முதுகெலும்பு என்கிறாங்க. எமக்கு நியாயமான கூலி தர மாட்டேனுராங்க இந்த நாட்டுல கலங்கினாள் கண்ணம்மா.

அன்று இரவு பலர் வீட்டு அடுப்புகள் எரியாமலே உறங்கிப்போனது ஊர். மறுநாள் காலை செய்தி ஒலிப்பரப்பானது. தேயிலைத்தோட்ட தொழிலாளர்களுக்கான கூலி ஒரு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. தொழிற்சங்கத்தலைவர் மூன்று வருட காலத்திற்கு சம்பள உயர்வு கேட்க மாட்டோம் என ஒப்பந்தம் செய்தார். தோட்ட தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்குச் செல்லுமாறு மாண்புமிகு தலைவர் அவர்கள் கேட்டுக் கொள்கின்றார்.

ஒரு ரூபாய்கா 22 நாளா போராட்டம் செஞ்சோம் இதுக்காகவா காதுல கழுத்துல சொச்சமாய் இருந்ததை கூட அடகு வைச்சிட்டோம். கண்ணீர் துளிகள் கொட்ட கலங்கினால் கமலா பேசாமல் நம்ப வேலையை செஞ்சிருக்கலாம் தலைவருனு சொல்லிப்புட்டு நம்மை எல்லாம் காட்டிக்கொடுத்துப்புட்டார் ஏதேதோ வாங்கிட்டு வெளிநாடு பொயிட்டாராம் என்று மனம்வருந்தினார் மாஸ்டர் சின்னையா.

இது இன்னைக்கு நேத்தா நடக்குது, அவனவன் பிழைத்துக்கொள்ள நம்மல வைத்து பேரம் பேசியே பிழைப்பு நடத்துகின்றனர். நாமலா யோசித்து நடக்காவிட்டால் விடிவும் இல்ல விமோட்சனமும் இல்ல சூரியன் உதித்து வருகின்றான். இவர்கள் வாழ்வில் ஒளிந்தோடி பயணம் செய்யும் நாள் எதுவோ?

## இசையின் தவிப்பு

வெற்றிப் பிரபஞ்சத்தின்
விசிறப்படும் வீணை நரம்புகள்
தாகத்துடன் தாளம் போட்டு
தவிப்போடு இசைக்கின்றது...
நிஷப்தம்...
நிம்மதி...
உலகமே நின்ற உணர்வு...
தேவையில்லாமல் தேய்த்து விட்டேன்
பகலில்...
இடிந்ததைத்
தேடுகின்றேன்.
இரவின் கருப்பைக்குள்...
நினைத்துப் பார்க்கின்றேன்
வெறுமையால் கிடைக்கிறது...
கடுமையான போர்
வெற்றியின் இனிமை
பிறை தெரிகிறது
என்னுள்.....
பிறை கண்டவன் அல்ல
நெடிய பாதை
மலை உச்சியில்
என் இலட்சிய
நிலவு.

மாதத்தில் ஒரு
பௌர்ணமி.....
எத்தனை பௌர்ணமிகளை
முழுமையாய் இரசித்திருப்போம்
நிலவின் அழகு இரவு...
தீவிரம் அடையும் இரவில்
நுட்பமான கிரணங்கள்
சிலிர்க்கின்றன...
சீ...
என சபித்துக் கொண்டேயிருக்கிறான்
மனிதன்...
மூடுகிறேன் காதுகளை
ஒளிர்கிறது நிலா
இறுக
நிலவின் அழகு இரவு...
தீவிரம் அடையும் இரவில்
நுட்பமான கிரணங்கள்
சிலிர்க்கின்றன...
சீ...
என சபித்துக் கொண்டேயிருக்கிறான்
மனிதன்.
மூடுகிறேன் காதுகளை
ஒளிர்கிறது நிலா
இறுக மூடுகின்றேன் கண்களை...
இசை ஒலிக்கிறது...
சுதந்திரமாய் தாளம் போட்டு
நிம்மதியாய்
என்னுள்...

**S. மேர்லிஷா மியூரினி, 13 கலைப்பிரிவு**

**எங்கும் மனம்**

கூடை கொழுவிக் கொண்டு
கொழுந்து பறிக்கையிலே
மல்லிகாவின் மனமோ
மலைத்தாண்டி பாய்ந்ததம்மா
மணம் முடித்தோ ரெண்டாண்டு
மாமியாரின் கொடுமைகளோ பன்மடங்கு
பிறந்த வீட்டில் பெற்ற செல்வம்
புகுந்த வீட்டில் பெரும் போராட்டம்
பிள்ளையோ பத்துமாதம்
புருசனோ குடிகாரன்
வீட்டிலோ வறுமை
வீடு கட்ட ஆசை வேறு
என்னதான் செய்யவதம்மா
என் வாழ்க்கை தள்ளாடுதே...
ஊருக்கே ஒதுக்குப்புறம்
ஒன்பது காம்பராவுடன்
பல வர்ணம் தீட்டப்பட்ட
பங்களா போன்ற வீடங்கே
யாருடைய வீடு...?
யாரும் அறிந்ததுதான்
மருமகளைப் புகழ்பாடும்
மாரியம்மாவின் புதிய வீடு
மருமகளோ மகேஸிக்கு
மலை வேலைத் தெரியாதே
போனாளே வெளிநாடு
புரட்டினால் பலகாசு
பிள்ளையை வளர்க்க வேணும்
பெரிய வீடுகட்ட வேணும்
கொடுமையிலே விடுபடவே
வெளிநாடு போகவேணும்
ரெண்டாண்டு முடிவினிலே
எங்க வீட்டை புகழவேணும்.
மல்லிகாவின் மனமோ
மலைத்தாண்டி செல்கையிலே
பிடித்து வைக்க முடியுமா?
புரிந்து நடக்க முடியுமா?
மகேஸின் உதவியிலே
மலைத்தாண்டி புறப்படவே
நாடு விட்டு நாடு தாவி
நாளுக்காசு சம்பாரித்து
வறுமையெல்லாம் போக்கனுமே
வாழ்க்கைய நல்லா வாழனுமே

வெளியூரு சென்றதுமே
வெள்ளை தோலில் நாளு பேரு
நல்லா கதைக்கையிலே
நாக்கு நடுங்கும் ஆங்கிலமோ
நரம்பு கனத்து பேசுதம்மா
மாதம் ஒன்று கழிந்ததுமே
மடி நிறைய சாமானும்
கை நிறைய சம்பளமும்
கைத்துண்டு கடிதமுடன்
வீட்டுக்கு அனுப்பி வைத்தாள்
பதில் கடிதமும் எதிர்ப்பார்த்தாள்

வருடம் பல கழிந்ததுமே
வேலைப்பளு கூடியதே

தூங்கவோ நேரமில்லை

துக்கம் விசாரிக்க யாருமில்லை

கனவுகளோ பலக்கண்டு

கடந்த நினைவுகளோ

நடந்த தெல்லாம் கூறுதே

திடீரென ஒருநாள்

கடிதமொன்று கிடைத்ததம்மா

மாமியாரோ காலமானார்

மறுநாளே நாடு வா

முழுகாசும் பெறவில்லை

முழுநாளும் ஆகவில்லை

என்பிள்ளை தனிமையிலே

என்னையல்லோ எதிர்ப்பார்ப்பாள்

உரிமையாளரின் அனுமதியை

பெற்றதுமே

உடனே புறப்படணும்

ஊரை அடைந்ததுமே

வீட்டை சுற்றி சொந்தங்கள்

குடிபோதையிலே் கணவன்

கண்களோ பிள்ளையைத் தேட

மாமியாரின் உடலருகே

மண்டியிட்டு என் குழந்தை

'என்னம்மா செத்துட்டாளே...'

என ஓலமிட்டு

என்னை நோக்கினாள்

யாரடி நீ... என்று

**தி. சோனியா பிரியா**
**12 கணிதப்பிரிவு**

**உள்ளக் குமுறல் ...**

கூட்டமாக புது முகங்கள்
கும்பிடு போட்டு வந்தாங்க
பிரதிநிதி தம்பிமாரும்
சேர்ந்துதான் வந்தாங்க
வாசல் வந்து நின்னு – சில
வாக்குறுதியும் தந்தாங்க

ஆட்சிக்கு வந்தவுடன் உங்க
அமைச்சரய்யா நான் தானுங்க
பிராதுகளை சொல்லிடுங்க உங்க
பிரச்சினையை தீர்ப்போமுங்க
என்றெல்லாம் பேசிபுட்டு
ஏமாத்தீட்டு போயிட்டீங்க

ரோட்டு போட்டு தாரமுங்க
வோட்டர் சப்ளையும் தாரமுங்க
படிச்ச புள்ள யாரும் இருந்தா
வேல போட்டு தாரமுங்க
பள்ளிக்கூட மாஸ்டர் -பதவி
வேனும்னா சொல்லிடுங்க

போன முறை தேர்தல் அப்ப
பல பேரு வந்தாங்க
அனன்னக்கு போனவுங்க
இது வரைக்கும் திரும்பலங்க
காத்திருந்த எங்க சனம்
ஏமாந்ததுதான் மிச்சமுங்க

வாழ வந்த ஏழை நாங்க
சீர் குழஞ்சி போனமுங்க
எங்களுக்கு நியாயம் கேக்க
ஊரில் யாரும் இல்லேங்க
பாவப்பட்ட ஜனங்க நாங்க
பரிதவிச்சு போனமுங்க

காலம் காலமா இதயே கேட்டு
காதும் புளிச்சு போச்சுதுங்க
மனசு நொந்து சொல்றோமுங்க
மறு ஜென்மம் எமக்கு வேணாமுங்க
அப்படியே பொறந்தா நீயும்
அ.்.றிணையா ஆவனுங்க
நாய் பொழப்பு பொழக்கிறானுங்க

**M. கமலினி**
**தரம் 10 C**

## வெறுத்திடுவோம் சீதனத்தை

நவ நாகரிகம் என்ற பெயரில்
தலை தூக்கிய சீதனமே!
உன்னைத்தான் கூறுகின்றேன்
நன்றாகக் கேட்டுக் கொள்!

பெண்ணினத்தின் பெருமைகளை
தந்திரமாய் விழுங்கி விட்டு
வேடிக்கை பார்க்கும் சீதனமே
உன்னைப் போ என வெறுக்கின்றேன்.

துரோகிகள் போல் வந்து
பெண்ணினத்தின் பொறுமைகளை
குடித்து விடும் சீதனமே!
உன்னைப் போ என வெறுக்கின்றேன்

நீ கேட்கும் சீதனத்தால்
பெண்ணைப் பெற்ற மனம்
வயிறெரிய அழுகின்றது.
சீரழிந்த சீதனமே!

பெண் கூட்டம் கண்ணீரில்
மூழ்கும் காட்சியை
மனம் குளிர ரசிக்கும் உன்னை
யார் தானோ அறிமுகம்
படுத்தியதோ?

ஆறாத் துயரில் பெண்ணை
பெற்ற மனம் துடிக்கின்றது

இத்தனை பாவ செயல்களை
செய்த நீ

இத்தனையும் அறிந்திட்ட போதிலும்
ஏன் எம்மை வாட்டுறாய்?
உருவாக்கிய மாந்தர்களே?
எங்கு ஓடி விட்டீர்கள்.

வீட்டிற்கு விளக்கேற்றுவோளை
வீதி வரை அழையவிடும்
சீதனமே உன்னை
மனதார வெறுத்திடுவோம்!...

**கிரிசாலினி**
**12 கலைப்பிரிவு**

# தரம் 6 – 9 வரையான வகுப்பு மாணவர்கள் மத்தியிலான இடைவிலகல்

**இரா.சிவலிங்கம். MPhil**

பெருந்தோட்டப் பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில் புலமைப் பரிசில் பரீட்சைக்குப் பின் வருகின்ற தரம் 6 – 9 வரையான வகுப்புக்களில் இவர்களின் கற்றல் நடவடிக்கைகளானது, மந்த நிலையில் செல்வதைக் காணலாம். இதன் காரணமாக தரம் 11 இல் நடைபெறுகின்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற முடியாதுள்ளனர். அநேகமான மாணவர்கள் தாய் மொழியில் கூட சித்தியடையத் தவறி விடுகின்றனர். சிலர் அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெறத் தவறிவிடுவதை பல பாடசாலைகளிலும் காணலாம். 2015 ஆம் ஆண்டு பரீட்சைப் பெறுபேறுகளின் படி 11000 மாணவர்கள் கணிதப்பாடத்தில் சித்தியடையவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு பல்வேறு மட்டங்களிலிருந்தும் பல காரணங்கள் வருடாந்தம் சுட்டிக்காட்டப்படுகின்றன.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு மிகவும் கரிசனையுடனும், அர்ப்பணிப்புடனும் மாணவர்களை தயார்படுத்தும் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களின் சேவையானது பாராட்டத்தக்கது. இன்றைய காலக்கட்டத்தில் பெரும்பாலும் இவ்வாசிரியர்கள் பல்வேறு மட்டங்களிலிருந்தும் (பாடசாலை, பெற்றோர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசியல் பிரதிநிதிகள், சமூக நலன் விரும்பிகள், சங்கங்கள், மன்றங்கள், வங்கிகள், பழைய மாணவர்கள்) பாராட்டப்படுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

புலமைப்பரீட்சைக்குப் பின்னர் இம்மாணவர்கள் தரம் 6–9 வகுப்புக்களில் ஆரம்பத்திலிருந்த கவனிப்பும், ஊக்குவிப்பும், தயார்படுத்தும் நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக சகல பாடசாலைகளிலும் நடைபெறுகின்றதா? எனப்பார்த்தால் இதில் பல குறைபாடுகளும், தவறுகளும், பல்வேறு மட்டங்களிலும் காணப்படுகின்றன என்பதை அவதானிக்கலாம். இவ்வகுப்பு மாணவர்களிடம் இக்காலத்தில் இயல்பாக ஏற்படுகின்ற பருவ மாற்றங்கள், உடலியல் மாற்றங்கள், போன்றன இவர்களை புதிய உலகிற்கு இட்டுச்செல்கின்றது. இவ்வாறான சூழ்நிலையில்தான் கவனிப்பும், பாதுகாப்பும், வழிகாட்டல் ஆலோசனையும் மிக அதிகமாக தேவைப்படுகின்றன. எனவே இவ்வகுப்பு மாணவர்களின் நடத்தை பிறழ்வாக அமையாதபடி ஆலோசனை வழிகாட்டல் வழங்க வேண்டியது பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் கடமையாகும்.

இப்பருவத்திலேயே அதிகமான சகபாடிகள் தொடர்பும், சினிமா, தொலைக்காட்சி, வானொலி, எதிர்பாலார் கவர்ச்சி, புதிய விடயங்களில் ஈடுபாடு, இன்டர் நெட் பாவனை, பேஸ் புக், வட்ஸ் சப் பாவனை போன்றன ஏற்படுகிறன. இதனால் இவர்களை கல்விசார் செயற்பாடுகளுக்கு கொண்டு வருவது சற்று கடினமான காரியமாகும்.

இன்றைய வாழ்க்கை செலவு போராட்டத்தில் பெருந்தோட்ட பெற்றோர்களே மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களிடம் பொதுவாக காணப்படும் பிரச்சினைகளாக பின்வருவனவற்றை வரையறுக்கலாம். வறுமை, பொருளாதாரப் பிரச்சினை, மேலதிக வருமானம் இன்மை, வீட்டு வசதியின்மை, வீட்டுச் சூழல் (லயன் -அமைப்பு முறை), மின்சார வசதியின்மை, போக்குவரத்துப் பிரச்சினை, சிறந்த ஆலாசனை வழிகாட்டல் இன்மை, கற்றலில் போட்டியின்மை, அறிவு வறுமை காரணமாக பிள்ளைகளை வீட்டு வேலைகளுக்கு அனுப்புதல், குறிப்பாக பெண் பிள்ளைகளைப் பிள்ளை பராமரிப்பிலும், வீட்டு வேலைகளிலும் ஈடுபடச் செய்தல், பூப்பெய்தும் காலத்தில் நீண்ட நாட்களுக்கு பாடசாலைக்கு அனுப்பாத நிலை, இதனால் பாடசாலை வரவு குறைவடைதல், பிள்ளைகளின் போசனை குறைபாடு, சுயமாக பிள்ளைகளைப் படிப்பதற்கு தூண்டாமை, சிறுவர்களின் அடிப்படை உரிமைகள் பெற்றோர்களாலும், ஆசிரியர்களாலும் மீறப்படுகின்றமை, ஆசிரியர்களின் கற்பித்தல் குறைபாடுகள் போன்ற பல பிரச்சினைகளை முன் வைக்கலாம்.

இருப்பினும் இவற்றிலிருந்து இம் மாணவர்களை மீட்டெக்க வேண்டும். இது ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் கைகளிலேயே தங்கியுள்ளது. என்பதை யாரும் மறுக்க முடியாது. பெற்றோர்களுடைய கவனிப்பு மிக அதிகமாக இப்பருவத்திலேயே தேவைப்படுகின்றது. பிள்ளைகளை தொடச்சியாக கவனிக்க வேண்டும்.

பாட ஆசிரியர்களோடு தொடர்புகளை வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு கற்றலில் ஈடுபாடு அதிகரிக்கக் கூடிய வகையிலான செயற்பாடுகளை பாட ஆசிரியர்களும், வீடுகளிலும் வழங்க வேண்டும். உதாரணமாக சுய ஆக்கச் செயற்பாடு, விளையாட்டு, கனணி, வரைதல், கலை நிகழ்ச்சி, இசை, எழுத்து, வாசிப்பு, ஓவியம், பொழுது போக்கு, வீட்டுத் தோட்டம் அமைத்தல், அலங்கார தாவரங்கள் வளர்த்தல், செல்லப் பிராணிகள் வளர்த்தல் போன்ற துறைகளில் ஈடுபடச் செய்வது மிகச் சிறந்தது ஆகும். இம்மாணவர்களின் இடை விலகலுக்கு மாணவர்களிடத்திலும் சில குறைபாடுகள் காணப்படுகின்றன.

உதாரணமாக தேடுதல் குறைவு, கற்றலில் ஆர்வமும் முயற்சியும் குறைவு, வீட்டுக்கும் பாடசாலைகளுக்குமிடையிலான அதிக தூரம், வீட்டுச் சூழல், பெற்றோர்கள் வெளிநாட்டில் இருத்தல், போட்டியான ஒரு சூழல் தோட்டப் பிரதேசத்தில் இன்மை, பெற்றோர்களின் வறுமை நிலை, போசனைக் குறைபாடு, தேவையான கற்றல் உபகரணங்கள் கிடைக்காமை, பாடசாலை வரவு குறைவு, வீட்டில் தொடர்ந்து படிக்காமை, பாடத்திற்கான துறைசார் ஆசிரியர் பற்றாக்குறை, வகுப்பில் பாடத்தில் கவனமின்மை, பாடசாலை கவர்ச்சிகரமாக இன்மை, வகுப்பறைச் சூழல் போன்ற விடயங்களை மாணவர்கள் பக்கம் குறிப்பிடலாம்.

தரம் 6 – 9 வரையான காலப்பகுதியில் மாணவர்களின் இடைவிலகலுக்கான காரணங்களை அனைத்து பக்கமும் பார்க்க வேண்டும். குறிப்பாக மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலைச் சூழல், வகுப்பறைச் சூழல் என வகுத்து

நோக்க முடியும். பெற்றோர்கள், மாணவர்கள் பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளதால் இங்கு ஆசிரியர்கள் பற்றி குறிப்பிட வேண்டும்.

புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்தும் ஆசிரியர்களுக்கும், க.பொ.த. சாதாரண தரம், க.பொ.த உயர் தரம் போன்ற வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கப் பெற்றோர்கள் மத்தியிலும், சமூகத்திலும் ஓர் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்தும் ஆசிரியர்களுக்குப் பாராட்டு விழா நடைபெறுகின்றது. இதேபோல் தரம் 11, தரம் 13 வகுப்பாசிரியர்களுக்கும் ஏதோ ஒரு வகையில் பாராட்டுக்களும், ஊக்குவிப்புக்களும் வழங்கப்படுகின்றன. ஆனால் தரம் 6 – 9 வரையான வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இக்காலப்பகுதியில் அங்கீகாரம் வழங்கக்கூடிய திட்டமெதுவும் இதுவரை காலமும் காணப்படாமை ஒரு பாரிய குறைபாடாக உள்ளது.

தரம் 6 – 9 வரையான வகுப்புக்களுக்கு அரசாங்கப் பொதுப்பரீட்சைகள் எதுவும் நடத்தப்படுவது இல்லை. இதுவும் மாணவர்களின் அடைவு குறைவுக்கு ஓர் காரணமாகும். எனவே தேசிய ரீதியில் ஒரு பொதுப் பரீட்சை நடத்தப்பட்டு சகலபாடங்களிலும் 40 க்கு மேற்பட்ட புள்ளிகளை பெறும் மாணவர்களை தெரிவு செய்து மேல் வகுப்புக்களுக்கு அனுமதிக்க வேண்டும். மாணவர்களின் இடைவிலகல்களைக் குறைக்கக் கூடிய வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஆசிரியர்கள் வழிகாட்டல் ஆலோசனைகளை மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் வழங்க வேண்டும். வகுப்பறைச் சூழலானது மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். 6 – 9 வரையான வகுப்புக்கள் அநேக பாடசாலைககளில் ஒரு திறந்த வகுப்பறையாக உள்ளது. (மண்டபத்தில்) இதனால் ஆசிரியர்கள் கற்பிகும் போது பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

ஆசிரியர்கள் எதிர்கால தேவையை உணர்ந்து தியாக சிந்தனையோடு வேலை செய்ய முன் வர வேண்டும். இடை விலகும் மாணவர்கள் மீண்டும் இச்சமூகத்திற்கே செல்வதால் இச்சமூகமானது பின்தள்ளப்படுவதற்கு இது ஒரு காரணமாக அமைந்து விடுகின்றது. இவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமையாமைக்கு இந்த குறிப்பிட்ட வகுப்புக்களில் விடும் தவறுகளும் பிழைகளும் கூட வாய்ப்பாக அமைந்து விடலாம்.

ஆர்வத்தோடு வந்து கற்றக் கூடியவாறு பாடசாலைச் சூழலும் அமைய வேண்டும். ஆசிரியர்களின் திறமைக்கு ஏற்ப ஊக்குவிக்க வேண்டும். ஆசிரியர் தொழிலுக்கான அங்கீகாரமும் , சலுகைகளும், ஊக்குவிப்புக்களும் வழங்கப்படும் போது ஆசிரியர்களது சேவையானது, மிகப் புனிதத்தன்மையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஓர் ஆசிரியரால் உருவாக்கப்பட்ட பலர் இன்று பொருளாதார ரீதியாக நல்ல நிலையிலும் மிக உயர்ந்த தொழில்களிலும் இருக்கின்றார்கள். குறிப்பிட்ட ஆசிரியர் மட்டும் தொடர்ந்து அதே நிலையில் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

# Be Yourself

**Mrs.M.Pathmanathan Vice Principal / Teacher & English**

**You are the unchanging you. You are the same you that you were when you were a child and the same you will be on your last day.**

**And yet you can only be your best as you are now. Not as you will be in twenty years.**

**You can only be your best as yourself, not in imitation of someone else not by following someone else's standards only by fulfilling your own.**

**Be yourself, not what other people want or need you to be.**

**Wherever you can be yourself is the place you are supposed to be. You cannot be your best where you do not feel like yourself.**

**The person you should be with is the person in whose presence you feel most like your best.**

**When you have to give up part of yourself to be with another person, you always miss the part that you sacrificed in order to be together, and you hold the other person hostage for the part of yourself you miss.**

**When you are lonely it is always for that missing part of yourself.**

**Your work should be about you. It should mirror your best and capture your desire. You should be able to find yourself by losing yourself in your wrok.**

**When you are bored, you are not living your own life.**

**You don't ' t have to try, you just have to be.**

**Be yourself where you are right now.**

**Every part of your life should tell your lie story, for if you own yourself fully, you possess the world.**

**I seek myself in everything I do**

**I find myself**

**I dream my draem wherever I go**

**I become myself**

# பிள்ளை நேயப் பாடசாலைகள்

**V. சசிகலா** M.A , M.ED
**ஆசிரியர்**

தேசிய கல்விமுறைமையானது தனி நபருக்கும் சமூகத்துக்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்கு உதவி செய்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்தகாலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனி நபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனிதவிருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய இலக்குகள் என தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டு எட்டு இலக்குகளைக் குறிப்பிட்டுள்ளது. ஆரம்பநிலைக் கலைத்திட்டம் முதன்மைநிலை ஒன்று, இரண்டு, மூன்று என வகுக்கப்பட்டாலும், வாழ்க்கைக்கு பொருத்தமற்றதும், நவீன உலகின் சவால்களுக்கு ஈடுகொடுக்க முடியாததுமான ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரீட்சையின் மிகையான ஆதிக்கம் முதன்மை நிலை ஒன்றிலேயே ஆரம்பித்து விடுகின்றது.(ஜெயராசா.சபா.2008)

"குழந்தையின் முதல் ஆறு ஆண்டுகளின் வாழ்க்கையை என்னிடம் ஒப்படையுங்கள் அதற்குப்பிறகு அதன் வாழ்க்கை அமைப்பை எப்படிப்பட்டவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதைப் பற்றி எனக்கு கவலையில்லை" எனக் கல்வியியலாளரான பெஸ்டலோசி கூறுகின்றார். (சந்தானம் 1987) ஆரம்பக்கல்வி அடைவு மட்டங்களை நோக்கும் போது கல்வியின் தரம் தொடர்பான சில பிரச்சினைகள் காணப்படுகின்றமை தெளிவாகின்றது. NEREC (2009) ஆய்வு அறிக்கையின் படி 4ஆந் தர மாணவர்களின் கணித, மொழி பாட அடைவு இடப்பெறுமானம் சிங்கள மொழி மூல மாணவர்களுக்கு 77.4%, 75.5 % மாகவும் தமிழ்மொழி மூல மாணவர்களுக்கு 62.3%, 63.3%மாகவும் பதிவாகியிருந்தன. இத்தகைய அடைவுமட்ட வேறுபாட்டுக்கு பாடசாலை அடித்தள கட்டமைப்பு வசதிகளில் காணப்படும் வேறுபாடு, ஆரம்ப கல்வியில் பயிற்சி பெற்ற ஆசிரியர் பற்றாக்குறை, மாற்றங்களை உள்வாங்காத வகுப்பறைகள், ஆரம்ப வகுப்பொன்றில் இருக்கவேண்டிய உச்ச மாணவர்தொகை தொடர்பான ஒரு உறுதியான நிலைப்பாடின்மை, கற்றல் உபகரணத் தட்டுப்பாடு, மாணவர்களின் போசாக்கு, ஆரோக்கிய நிலை, காப்பு தொடர்பான விடயங்களில் கவனமின்மை போன்ற விடயங்கள் செல்வாக்கு செலுத்துகின்றன.

மிலேனியத்திற்கான அனைவருக்கும் கல்வி இலக்குகளில் அனைவருக்கும் ஆரம்பக்கல்வி என்பதன் கருத்து நன்கு தரம் வாய்ந்த இலவச, கட்டாய ஆரம்பக் கல்வியை சகல சிறார்களுக்கும் குறிப்பாக சிறுமிகள், இக்கட்டான சூழ்நிலைகளில் வாழ்பவர்கள், சிறுபான்மையினர் போன்றோர் 2015 அளவில் பெற்றிருத்தல் வேண்டும் என்பதாகும். "தரம்"என்பதனால் கருதப்படுவது கணித, எழுத்தறிவு மற்றும்

அத்தியாவசிய வாழ்க்கைதிறன்களில் ஏற்கப்பட்டதும் அளவிடப்படக்கூடியதுமான கற்றல் பேறுகளினால் சகலரது திறமைகளையும் உறுதிப்படுத்தலும் கல்வித்தரத்தின் சகலஅபிலாசைகளையும் மேம்படுத்தலும் என்பதாகும். (அனைவருக்கும் கல்வி, நடுத்தசாப்த கணிப்பீட்டு அறிக்கை, இலங்கை)

2000ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐ.நா.சபையின் உச்சிமாநாட்டில் கவனக்குவிப்பு எட்டு இலக்குகள் (MDGS) முன்வைக்கப்பட்டன. இவற்றை ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவநாடுகளில் 149 நாட்டுத் தலைவர்கள் கையொப்பமிட்டு உறுதி செய்துகொண்டதுடன் 2015ஆம் ஆண்டளவில் இவ்விலக்குகளில் வெற்றி காண்பதாகவும் தீர்மானம் மேற்கொண்டனர்.

ஐ.நா சபையின் MDGS- 2000

இலக்கு 1 வறுமையையும் பட்டினியையும் ஒழித்தல்

இலக்கு 2 உலகளாவிய ரீதியில் ஆரம்பக் கல்வியில் வெற்றிக்காணல்.

இலக்கு 3 பால்நிலைச் சமத்துவமும் பெண் வலுவுட்டல் விருத்தியும்

இலக்கு 4 குழந்தை இறப்பு வீதத்தைக் குறைத்தல்

இலக்கு 5 தாய் நலம் பேணலில் விருத்தி காணல்

இலக்கு 6 HIV/AIDS மலேரியா போன்ற நோய்களுக்கெதிராகப் போராடல்

இலக்கு 7 சுற்றாடல் பாதுகாப்புக்கு உத்தரவாதமளித்தல்

இலக்கு 8 அபிவிருத்திக்கான உலகளாவிய பங்காளர்களை விருத்தி செய்தல்

இவ்விலக்குகளில் இலக்கு 02, இலக்கு 03, இலக்கு 5 இலக்கு 6, இலக்கு7 ஆகியவை குறிப்பாக சிறுவர் நட்புறவுப் பாடசாலைகள் என்ற எண்ணக்கருவைக் கட்டியெழுப்புவதற்கு மூலாதாரமாக அமைந்தன என்று கூறமுடியும். அத்துடன் ஆரம்பக்கல்விக் காலத்தில் மாணவர்களிடையே உரிய தேர்ச்சிமட்டத்தை அவர்கள் அடையமுடியாத தடைகளும் வளப்பற்றாக்குறையும் ஆசிரியர் பற்றாக்குறையும் பயிற்சிக் குறைபாடுகளும் இந்த எண்ணக்கரு விருத்திப் பெறக் காரணங்களாக அமைந்தன. இவற்றைவிட ஆரம்பக்கல்வி விருத்தியில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள கவனக்குவிப்பும் முக்கியமானதாகும்.

இனிமையான பிள்ளை பருவத்தை நல்ல பயனுள்ள அனுபவங்களோடு கூடிய மகிழ்ச்சி நிறைந்த கற்றல் சூழலை வ்ழங்குதல் பிள்ளையின் வாழ்நாள் முழுவதுமான அடிப்படையாகவும் அத்திபாரமாகவும் அமையும். ஓவ்வொரு பிள்ளையும் விசேடமான பிள்ளையே. அவர்களது தனித்துவமான ஆற்றல்களை உச்ச அளவில் விருத்தி

செய்வதற்கும் நாட்டின் அபிவிருத்திக்கு தேவையான மனிதவளங்களை விருத்தி செய்துநாட்டிற்கு பங்களிப்பு செய்யும் பாரிய பொறுப்பினை நிறைவேற்றுவதற்கும் முன்னின்று உழைக்கும் பாடசாலையே சிறுவர் நேய பாடசாலையாகும். இத்தகைய பின்னணியில் யுனிசெப் அனுசரணையுடன் கல்வியமைச்சினால் செயற்படுத்தப்படுத்தப்பட்டு, நடைமுறையில் இருக்கும் வேலைத்திட்டமே சிறுவர் நேய பாடசாலையாகும். 2002 ஆம் ஆண்டு வடமேல் மாகாணத்தில் 124 பாடசாலைகளில் முதற்கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டு அன்று நாடளாவிய ரீதியில் ஏறத்தாழ 1400 பாடசாலைகள் சிறுவர் நட்புறவு பாடசாலைகளாக செயற்பட்டு வருகின்றன. (செயலாற்றுகை அறிக்கை - 2012)

சிறுவர் நேய பாடசாலை என்பது சர்வதேச சிறுவர் உரிமைகள் பிரகடனத்தின்படி சகல பிள்ளைகளினதும் சகல உரிமைகளையும் செயல்ரீதியாக நிறைவேற்றும் பாடசாலையாகும். இது மிகவும் விருப்புக்குரிய பாதுகாப்பான, கவனிப்பு காணப்படுகின்ற ஒவ்வொரு பிள்ளையினதும் உச்ச ஆற்றல் விருத்திக்கு பங்களிக்கின்ற ஓர் இடமாக அமைவதும் இதில் பாடசாலை சமுதாயத்தின் உச்ச பங்களிப்பும் ஈடுபாடும் அடங்கும். சிறுவர் நேயப் பாடசாலை ஒன்றில் சகல மாணவர்களினதும் உள்ளார்ந்த திறன்களை உச்சஅளவில் விருத்தி செய்வதற்கு தேவையான சூழல் வசதிகளை அமைத்துக் கொடுத்தல் வேண்டும். உலக சனத்தொகையில் கணிசமான தொகையினர் சிறுவராவர். இலங்கை சனத்தொகைப் புள்ளிவிபரங்களின்படி 1995 இல் 27.7 % சிறுவராவார். சிறுவர் என்பது இலங்கை சிறுவர் சாசனப்படி 18 வயதுக்குக் கீழ்பட்டவராவர். 1939 இன் சிறுவர் , இளைஞர் கட்டளைச் சட்டம் சிறுவர் 14 வயதுக்கு கீழ்ப்பட்டவர் என்றும் இளைஞர் 14 – 16 என்றும் வற்புறுத்துகின்றது. 1989இன் வயது வந்தவர் திருத்த சட்டத்தின்படி சிறுவர் 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவராவர். பொதுவாக 14 வயதுவரை என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

இத்திட்டத்தின் வெற்றிகரமாக செயற்படுத்தும் முகமாக பல்வேறு வேலைத்திட்டங்களும் நிதி ஒதுக்கீடுகளும் கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

1. சிறுவர் நட்புறவுப்பாடசாலைகள் தொடர்பான விளக்கமும் செயற்திட்டத்தை அமுல்படுத்த மாகாணங்களுக்கு ஒருமில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.
2. சுத்திகரிப்பு வசதிகள், குடிநீர் வசதிகள் யுனிசெவ் நிறுவனத்தால் வழங்கப்படும்.
3. மதிய உணவு வழங்கும் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
4. சுகாதார விழிப்புணர்வு மாணவர்களுடன் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும்.
5. வாசிப்புத்திறனை மேம்படுத்துவதற்காக ருபா 50,000 வீதம் வழங்கப்பட்டுள்ளன.
6. சிறுவர் நட்புறவு சாரணிய வளர்ச்சிக்கான செயற்பாடுகளுக்காக மாகாணங்களுக்கு ரூபா 1.5 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.
7. பாடசாலைகளை அடிப்படையாக கொண்ட ஆசிரியர் பயிற்சிக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (கல்வி அமைச்சு - அறிவும் பண்பும் கொண்ட எதிர்கால சந்ததியினர் -2007-2008)

இதனோடிணைந்ததாக சிறுவர்களுக்கான சிறந்த பாதுகாப்பான சூழல், பண்புசார் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், சிறுவர்களின் சிறந்த சுகாதார வசதிகள், சிறுவரின் மகிழ்ச்சி தொடர்பான செயற்பாடுகள், பெற்றோர் சமுகத்தினர் உதவிகளைப் பெறல் ஆகிய ஐந்து துறைகள் பண்புசார் விருத்தித்திக்கூடாக செயுற்படுத்தப்படுகின்றன. மகிந்தோதயா ஆயிரம் பாடசாலைகள் மற்றும் 5000 இடைநிலை பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள 4758 பாடசாலைகள் சிறுவர்நேய பாடசாலைகளாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 500,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் யுனிசெப் வழிகாட்டலோடு அபிவிருத்தி செய்யப்பட்டுவருகின்றது. (கல்வி அமைச்சு – 2016)

அறிவுசார் பொருளாதாரததில் நீங்கள் எங்கு வாழகின்றீர்கள் என்பதை விட உங்களுக்கு என்ன தெரியும் என்பது மிக முக்கியமானது. அவ்வாறாயின் எமது ஆற்றலை எவ்வாறு பேணிக் கொள்ளலாம்? முதலில், தொடக்கத்திலிருந்தே ஒவ்வொரு மாணவருக்கும் தரமான கல்வியை வழங்குதல் வேண்டும். அப்போது பிரதான எழுவினாக்களான கல்வி வாய்ப்பு, அதனைப் பெறுவதற்கான ஆற்றல், வகைகூறும் தன்மை, தராதரம் என்பன கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். மாணவர்களை அவர்களுடையஎதிர்காலம் நோக்கி ஆயத்தம் செய்வது ஒரு தார்மீக, பொருளாதார கடப்பாடாகும். அறிவு என்பது அனுபவம், சூழமைவு, வியாக்கியானம், பிரதிபலிப்புஎன்பவற்றோடு சேர்ந்த தகவலைக் குறிக்கும். **(Newsweek International, December 2005 – February 2006)**

இதன் அடிப்படையில் சிறுவர் நேய அணுகுமுறையானது சிறுவர்களை மையமாகக் கொண்ட கற்றல் என்ற கோட்பாட்டை அனுசரிக்கிறது. இதன் மூலம் பாடசாலையின் வளர்ச்சியில் பிள்ளையின் சிறந்த ஆர்வங்களைப் பேணிப் பாதுகாப்பதில் பிள்ளைகள், பெற்றோர், சமூகத்தவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோருக்கும் வகிபாகங்கள் வழங்கப்படுகின்றன. பிள்ளைகள் புதுப்புது விடயங்களைத் தொடர்ச்சியாகக் கண்டுபிடிக்கும். செயலூக்கம் மிக்க முகவர்களாவர். அவர்களைப் பொறுத்தவரையில் பல்வேறு சூழ்நிலைகள் இதுவரை அறியாத சவால்களாக அமைவதனால். அவர்கள் கற்பதற்கும் காரணம் அறிவதற்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் சுயகௌரவத்தைக் கட்டியெழுப்பி மற்றவர்களை மதிக்கப் பழகுவதற்கும் ஆசிரியர்கள் வழிகாட்டுவதுடன் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதும் அவசியம்.

சகல கற்றல் அனுபவங்களும் தமது சொந்தக் கற்றல் நடைமுறையில் பிள்ளைகளைச் செயலூக்கமான முகவர்களாக மையப்படுத்த வேண்டும். சிறுவர்-நேயப் பாடசாலைகள் பயனுறு விதத்திலான கற்றல் நிகழக்கூடியதொரு பாதுகாப்பான, வரவேற்கத்தக்க பின்னணியை உருவாக்குகின்றன. பாடசாலையொன்றின் சிறுவர் நேயத் தன்மையை விருத்தி செய்தல் என்பது ஒரு கூட்டான செய்முறையாகும். நாட்டினது அபிவிருத்தியின் அடிப்படையாகிய தரமான கல்வியை மென்மேலும் உயரிய மட்டத்தில் பிள்ளைகளுக்கு வழங்குவதற்காக அமுலாக்கப்படும் ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்துடன் இணைந்ததாக பாடசாலையில் முறைமையில் சிறுவர் நேய

பாடசாலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பிள்ளை நேய அணுகுமுறை ஆறு பரிமாணங்களை உள்ளடக்கி காணப்படும்.
அவையாவன:

1.உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட செயல் ரீதியான உட்படுத்தல்

2.ஆண், பெண் சமூக நிலைப்பாட்டுக்குத் துலங்கல் காட்டுதல்

3.பிள்ளைகளின் கற்றற் பேறுகளை விருத்தி செய்தல்

4.பிள்ளைகளின் சுகாதாரப் பாதுகாப்பையும் காப்பையும் உறுதிப்படுத்தல்

5.பிள்ளைகளின் குடும்பங்களும் சமுதாயத்தினரின் செயல் ரீதியான பங்களிப்பும்

6.சிறுவர் நேய முறைமைகள், கொள்கைகள், ஒழுங்கு விதிகள் மூலம் உதவி பெறல் (சிறுவர் நேய அணுகுமுறை தொடர்பான ஆலோசனை வழிகாட்டி – கல்வியமைச்சு)

யுனிசெப்பின் உதவியோடு சமீபத்தில் இலங்கை கல்வியமைச்சினால்(MOE) இலங்கையில் உள்ள கல்வி கற்கும் வாய்ப்பற்ற சிறுவர்கள் பற்றிய ஆய்வொன்று அடிப்படைக் கல்வி துணை நிகழ்ச்சித்திட்டம் (BESP),லங்கைச் சூழலுக்கு மிகப் பொருத்தமாகக் காணப்படுவதாக மதிப்பீட்டாளர்கள் இனங்கண்டுள்ளனர். ESDFP 1 , ESDFP 2 என்பவற்றோடு நெருங்கிய தொடர்புடையது. CFA மற்றும; PSI ஆகிய வித்தியாசமான செயற்றிட்ட மாதிரிகளை சமாந்திரமாக நடைமுறைப்படுத்தும்போது பிரதான பிரச்சினை ஒன்று எழுந்தது. CFA மற்றும; PSI அடிப்படையில் வேறுபாடுடையன. எனினும் இரண்டு அணுகுமுறைகளினால் கட்டியெழுப்ப ஒன்றுக்கொன்று துணை செய்யவேண்டும் என்பதை மதிப்பீட்டாளர்கள் முன்மொழிந்தார்கள். (டேவிட் கிளார்க், சுபாசினி விஜயசுந்தர, பிரசாத் சேதுங்க 2016)

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் பிள்ளைகள் கற்பதற்கும் உரிய பாதுகாப்பை பெறுவதற்கும் தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கும் வழியமைத்து பிள்ளைகளின் ஆற்றலை உயா்மட்டத்திற்கு அபிவிருத்தி செய்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்கி சுயகற்றலை மேம்படுத்துவதும் கற்றவற்றை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்வதும் வாழ்க்கை திறன்களை விருத்தி செய்து எதிர்காலத்தை சுபீட்சமாக அமைத்துக்கொள்வதற்கான சிறந்த அனுபவங்களை பெற்றுக்கொடுப்பதும் இதன் மூலமாக தனக்கும் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் நன்மை பயக்கக்கூடிய அறிவு, திறன் மனப்பாங்கு விருத்தியடைந்த ஆளுமைமிக்க எதிரகால சந்ததியினரைக் கட்டியெழுப்பி கல்வியில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்துவது சிறுவர் நேயப்பாடசாலைகளின் எதிர்பார்ப்பாக உள்ளமையை அறிய முடியும்.

# ஆரம்பக்கல்வியில் வாசிப்பு

**R.கலைச்செல்வி B.ed**

**ஆசிரியர்**

இன்று மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகிவருகிறது. தொலைக்காட்சி பார்ப்பதிலும் கனணியில் விளையாடுவதிலும் அதிகநேரத்தை செலவிடுகின்றனர். இதனால் அவர்களது கல்வி பெரிதும் பாதிக்கப் படுகிறது. கற்கவேண்டியநேரம் வீண் விரயமாகிறது.இது ஒரு பயனற்றபொழுது போக்காக எதிர்கால சந்ததியினரை வீணடிக்கின்றது. ஒரு கட்டிடத்திற்கு அத்திபாரம் மிக முக்கியமானது. அதேபோல் கல்விக்கு அத்திபாரம் ஆரம்பகல்வி ஆகும். ‘‘இளமையில் கல்’’என்ற கூற்றிற்கிணங்க ஆரம்பக்கல்வி மாணவர்களிடையே வாசிப்புப்பழக்கத்தை வளர்க்க வேண்டியது ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் தலையாய கடமையாகும்.

எழுத்தில் உள்ளவற்றை கண்களால் பார்த்து வாயால் உச்சரித்துச் சொல்லி பொருள் உணர்த்துவது வாசிப்பு என்கின்றோம். எழுத்துக்களை காணும் நிலை வாசித்தலின் தொடக்கமாகும். கண்ணால் காணுவதை மூளை அறிந்து பொருளுணரும்போது வாசித்தல் நிகழுகின்றது. வாசித்தலின் போது இரு உளவியற் செயல்கள் நடைபெறுகின்றன. மூளை கண்ணுக்கு சொல்லுதல் கண் மூளைக்குசொல்லுதல் ஆகியவையே அவ்விரு செயல்களாகும். வரிவடிவத்தில் உள்ள சொற்களை ஒலிவடிவமாக மாற்றி உச்சரித்து உறுப்புகளையும் சொற்களையும் நோக்கும் கண்ணும் ஒத்துழைத்தால் தான் வாசித்தல் சரியாக நடைபெறும்.

எனவே வாசித்தலில் சொற்களை இனங்காணுதல், உச்சரித்து பொருளுணர்தல் என்பன உள்ளன. இவை நடைபெற கண்,காது, மூக்கு, நா,குரல் உறுப்புக்கள் அத்தனையும் ஒத்துழைக்க வேண்டியநிலை வாசிப்பிற்கு மட்டுமே உண்டு. வாசிப்பு மொழித்திறன்களில் மூன்றாவதாக வைக்கப்பட்டுள்ளது. அதாவது செவிமடுத்தல், பேச்சு, வாசிப்பு என்றவாராக அமைகிறது. ‘‘வாசிப்பு மனிதனை பூரணமாக்குகின்றது’’ என்றார் அறிஞர் பேக்கன். அவரது கூற்றிற்கமைய இன்றைய காலட்டத்தில் வாசிப்பு முக்கிய இடம் வகிக்கின்றது. ஒவ்வொரு கணப்பொழுதிலும் மாறிவரும் இவ்வுலகில் வளர்ந்து வரும் தொழிநுட்பமானது மனிதனை வாழ்வில் எதிர்நீச்சல் போட்டாலே வாழமுடியும் என்ற நிலைக்கு உட்படுத்தியுள்ளது. இதிலெல்லாம் ஈடுகொடுக்க மனிதன் தனது அறிவை பரந்ததாக வைத்துக் கொள்ளவேண்டும். அதற்கு வாசிப்பின் பங்கு முழுமையானதாக உள்ளது.

ஆரம்பகல்வி மாணவர்களிடையே வாசிப்பை வளர்க்க படத்தை பார்த்து வாசித்தல், படத்துடன் சொல்லை வாசித்தல், படமின்றி சொல்லை வாசித்தல், சொல்லுக்குரிய எழுத்தை எழுதுதல், விடுபட்ட எழுத்தை எழுதுதல் என்பதோடு இடமிருந்து வலமாக கண்நகர்வுப் பயிற்சியையும் வழங்குதல் வேண்டும். அத்தோடு எழுத்துக்களை வாசித்தல், சொற்களை வாசித்தல், வாக்கியம் வாசித்தல், பந்திவாசித்தல் என வாசிப்பு பயிற்சியை கொண்டு செல்லவேண்டும். எதைவாசித்தாலும் அதை கிரகித்து வாசிக்கச் செய்தல் மிக

முக்கியமாகும். அதற்காக புத்தகத்தை தலைகீழாக பிடித்து வாசித்தலும் ஒருவழியாகும். வாசிக்கும் போது இடையிடையே வினாகேட்டல், தொடர்பு கூறச்செய்தல், பந்தியல் உள்ள மையக்கருத்தை கேட்டல் போன்றவற்றினூடாகவும் கிரகித்தலை வளர்க்கலாம். இக்கிரகித்தலே போட்டிப் பரீட்சைகளிலும் உள்ளது.

வாசிப்பினூடாக பல்வேறு தகவல்களை ஞாபகத்தில் வைக்கவேண்டியது அவசியமாகும். ‘‘நூல் பல கல்’’ ன்றார் ஔவையார். எவ்வளவு நூல்களை வாசிக்கின்றோமோ அவ்வளவுக்கு அறிவுபெருகும். ‘‘கண்டது கற்க பண்டிதன் ஆவான்’’என்பது ஆன்றோர் வாக்கு. ரஸ்கின் என்ற ஆங்கில அறிஞர் ‘‘புத்தகங்களை போன்ற சிறந்த கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்கமுடியாது’’என கூறுகிறார்.

வாசிப்பின் மூலம் அறிவு விருத்தியடைகிறது. மேலதிக அறிவை பெற்றுக் கொள்ளமுடிகிறது. புதிய தகவல்களை தெரிந்துகொள்ளவும் கிரகித்துகொள்ளவும் திறனக்ளை வளர்த்துக் கொள்ளவும் முடிகிறது. வாசிக்கும் போது தலைப்புகள், உபதலைப்புகளை வாசித்தல் அவசியம். அத்தோடு அதில் வரும் படங்கள், அட்டவணைகள் ஆகியவற்றை அவதானிக்கவேண்டும்.

பந்திகளை வாசிக்கும்போது ஒவ்வொரு பந்தியாக வாசிக்கும் போது அதனை புரிந்துகொள்ள வேண்டும். பின்பு முற்றாக வாசித்து முடித்தலும் பந்தியிலுள்ள முக்கியவிடயங்களை அசைப்போட்டு பார்த்து தகவல்களை குறிப்பெடுத்துக் கொள்ளவேண்டும். இவ்வாறாக மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கவேண்டும். பயனுள்ள பொழுதுபோக்கிற்கு வித்திடும் வாசிப்பானது சுயகற்றலை விருத்தி செய்கிறது. இன்றைய உலகில் சுயகற்றலே ஆதிக்கம் பெற்றிருக்கும் இவ்வேளையில், ஆசிரியர் கற்பிக்கும் நேரத்திலும் பார்க்க மாணவர்கள் சுயமாக கற்றல் செயலில் ஈடுபடும் நேரமே அதிகரிக்கும் செயற்பாட்டினை ஆரம்பகல்வியிலேயே வழிப்படுத்துவது அவசியமாகின்றது.

ஆரம்பக்கல்வி மாணவர்களில் அதிலும் குறிப்பாக தரம் ஐந்து வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்கள் எமதுநாட்டில் தேசிய ரீதியில் அமைந்த புலமைப்பரிசில் பரீடசைக்கு முகம் கொடுப்பவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு பல்வேறு துறைகளிலும் அமைந்த சமகால அறிவு பொதிகளை திரட்டுவதற்கான வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்வது பேருதவியாக அமைகின்றது. ஓய்வு நேரத்தை புத்தகங்கள் வாசிப்பதில் செலவிடவேண்டும். இளமை முதல் நூல்கள் வாசிக்கும் பழக்கத்தை வழக்கப்படுத்திக் கொண்டால் நாளடைவில் அறிவும் பண்பும் ஆற்றலும் மிக்கோராக வாழ்வதற்கு அது வழிகாட்டும். வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறியினை அறிந்திடமுடியும் என மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும்.

பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப கருத்துப்புலப்படும் வகையில் திருத்தமாக வாசிப்பார் என்ற தேர்ச்சியை அடைவதற்கு ஆறு தேர்ச்சி மட்டங்களை

அடையவேண்டும் என ஆரம்பகல்வி ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி எடுத்து இயம்புகிறது. இது ஆரம்பக்கல்வி மாணவர்களின் வாசிப்புதிறனை அதிகரிக்க கையாளும் உத்திகள் ஆகும். ஆறு தேர்ச்சி மட்டங்களை பார்ப்போமாயின்,

- வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.
- கிரகித்தலுக்காக வாசிப்பார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பார்.
- தொடர்பாடலுக்காக வாசிப்பார்.
- இரசனைக்காக வாசிப்பார்.
- கற்றலுக்காககற்கவாசிப்பார்.

இவையனைத்தும் முதன்மைநிலை மூன்றில் மாணவர்களுக்கு கொடுக்கவேண்டிய விடயங்களாகும். ஆரம்பகல்வி புலத்தில் எதிர்பார்க்கப்படும் மொழிசார்ந்த தேர்ச்சிகளில் வாசிப்பு தேர்ச்சியானது,

- அன்றாட தேவைகளுக்காகச் செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல் எழுதுதல் ஆகிய தொடர்பாடல் திறன்களை வெளிப்படுத்துவார்.
- கவிதை, பாடல், கதை ஆகியவற்றை கேட்டும் வாசித்தும் இரசிப்பார்.
- எழுத்துக்களை சொற்களை சரியாக உச்சிரித்து உரத்துவாசிப்பார்.
- செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதுல் தொடர்பான நல்ல பண்பினை வெளிப்படுத்துவார்.
- புத்தகங்களைவாசித்துவிளங்கிக் கொள்வார் இரசிப்பார்.
- கற்றலுக்காக கற்பார்.

இத்தேர்ச்சிகளை அடையச் செய்வது ஆசிரியரின் கடமையாகும். நூல்களை வாசிக்கும் பழக்கமுடையவர்கள் தனிமை உணர்வை ஒருபோதும் பெறுவதில்லை. கல்வி பெருஞ் செல்வத்தை வழங்குவன நூல்களேயாகும. வாசித்தல் சிறந்தபொழுது போக்காகும். இது மகிழ்வைதந்து அறிவை பெருக்க உதவும். நூல் பல கற்போம் நுண்ணறிவு பெறுவோம் என ஆரம்பக்கல்வி மாணவர்களை வித்திட்டு விருட்சமாக வளர்ப்போம்.

# HOW CAN A TEACHER RAISE A MORAL CHILD

**Mrs S.N. Samuel (English Teacher)**

Monitor your own behaviour and values .Treat other people with respect .empathy, compassion and justice .Take an honest look at how you solve conflicts, both at home and at work . Are you open-minded ? A good listener? Do you search for fair solutions to conflicts , or is winning and being right the most important thing? Do you yell , use violence or aggression, or coerce people with intimidation or guilt ?

Talk with your children about Feelings. Give them words to identify emotions . Help your children understand that feelings are different than actions.it's OK for them to feel whatever they're feeling; what matters is how they act.

Boys, especially, need to learn that having feelings is normal and even positive . All children need help learning to express anger without physically or psychologically wounding other people . Show compassion for your child's feeling. Even when they differ from your own. Let your children know from an early age that you respect their feelings.

Talk with your children about how their behaviour affects other people . "I think Anna was sad when you wouldn't give her a turn to play."E ncourage your child to remember how he felt in a similar situation,or to think about how he would feel under similar circumstances.

Use news stories ,movies ,TV shows, books, and daily life events as a platform for talking about moral issues.

Encourage your children to express their own opinions. To think about what they might do and say in various situations, and to try to put themselves in the shoes of victims of injustice. Avoid using the following words which can hurt a child .

**Threats can scare.**

If you don't behave im going to send you out of the class.

**Words can lower self-esteem**

stupid ,lazy , bad

**Rejection**

I don't like you, go away ,get out .

**Put –downs**

what's wrong with you ?, can't you do anything right ?, you will be a failure when you grow up.

Maybe you didn't mean it .maybe you'll soon forget it. But your child won't forget what you said. Think before you speak!

# உள வளத்துணை ஓர் அறிமுகம்

**V.Vijayakumar (Counsellor)**

**(Guidance & Counselling)**

இன்று நவீன கற்றல் - கற்பித்தல் முறைகளில் வெகுவாக செல்வாக்கு செலுத்தம் கற்றல் - கற்பித்தல் முறைகளில் ஒன்றாக விளங்குவது உளவளத்துணையாகும். உளவளத்துணையினை பல்வேறு வகைகளில் குறித்துக்காட்டலாம். அவ்வாறே பவ்வேறு துறையினர்கள் மற்றும் எனைய அனைத்து தரத்தினரும் பயன்படுத்துகின்றனர். கல்வித்துறையில் பொறுத்தவரை பாடசாலை மட்டத்தில் ‘‘பாடசாலை கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும்’’ என்ற பரப்பில் பாடசாலை ஆசிரிய உளவளத்துணையாளர (School Teacher counsellor) கற்றல் - கற்பித்தல் முறைகள் இடம் பெறுவது மிக்க பயன்வுள்ளதாக இருக்கின்றது மாணவர்களின் குடும்பம் சூழல், பாடசாலை சமூகம்,சமுதாயம் என்வற்றில் செல்வாக்கு செலத்துகின்றது. இவற்றினூடாக மாணவர்களின் மனவெழுச்சி தனிப்பட்ட பிரச்சினைகள் போன்ற இன்னோரன்ன விடயங்கள் உளவளத்துணையின் குறிகாட்டியாக அமைகின்றன.

இத்துறைக்கு உளவளத்துணை, ஆற்றுப்படுத்தல். சீர்மியம் போன்ற பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றது. உளவளத்துணையாளர்கள், மனநல வைத்திய நிபுணர்கள், பல்வேறு வரைவிலக்கணங்களை கூறுகின்றனர். இலங்கையினை பொறுத்தவரை தமிழ் மொழியில் வித்திட்டவர்களாக தயா சோமசுநந்தரம், கணேசன், கடம்பநாதன், சிவதாசன், சிரிதரன் அருட்தந்தை அருட்பிரகாசம், அருட்தந்தை டேமியன் போன்றோரும் இன்னும் சிலரையும் குறிப்பிடலாம். அந்தவகையில் அறிஞர்களின் வரைவிலக்கணங்களிலிருந்து உளவளத்துணையை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தமுடியும்.

“பிரச்சினைகளோடு வருபவரை ஏற்று, மதித்து கசப்பான அனுபவங்களை முழுமையாக பகிர உதவி, அவரது உணர்வுகளுக்குள் புகுந்து அவரது ஏக்கங்களையும், தேவைகளையும், ஆசைகளையும் அறிந்து.அவரது பிரச்சினையின் உண்மை நிலையை அவர் அறியச் செய்து அவரே அப்பிரச்சினைக்கு தீர்வுகாண தீர்மானித்து, தீர்மானத்தை செயற்படுத்துவதில் வெற்றி பெறுகிறாரா என்று உளவளத்துணையாளரோடு இணைந்து சோதித்து, பிறரோடு நல்லுறவை கட்டியெழுப்பி அவரது ஆற்றலை உணர்ந்து முழுமை வாழ்வு வாழச் செய்யும் கலையை உளவளத்துணை எனலாம்”.

ஒருவர் தனது உளவளங்களின் முழுமையான விருத்தியை நோக்கிச் செல்கின்ற பயணத்தில் அவர் சந்திக்கின்ற தடைகளை வெற்றி கொள்ள அவருக்கு அளிக்கும் ஒரு தொடர் செயற்பாட்டு உதவியேயாகும். என்று அமெரிக்க உளநலச் சங்கம் வரைவிலக்கணம் கூறுகின்றது.அந்தவகையில் உளவளத்துணையினை மாணவர்களுக்கு பின்வரும் படிமுறைகளில் வழங்கப்படுவது அவசியமாகும்.

01.ஆதரவு வழங்குதல்
02.உடனிருத்தல்
03.அப்படியே ஏற்றுக் கொள்ளல்.
04.பிரச்சியையினை முடிவுக்கு கொன்டுவர உதவதல்
05.தன்னையே உணரவைத்தல்.
06.பிரச்சினையினை ஏற்று வாழ ஆரம்பித்தல்
07.பிரச்சினையினை ஏற்றுக்கொள்ளல்.

என்பது மட்டுமல்லாது உளவளத்துணையில் மாணவர்களிடத்தே அவர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் இருக்கதக்கதாக இருப்பதோடு செய்யக்கூடாத விடயங்களும் இருக்கின்றன. அவையாவன.

01.ஆலோசனை வழங்குவதை தவிர்த்தல்
02.மனப்பாங்கினை மாற்றுதல்.
03.பயமுறுத்தல் செய்தல்
04.மறைமுகமான மாற்றம்
05.மத நம்பிக்கையினை மாற்றுவித்தல்
06.மதிப்பிடுகளை கொடுப்பதை தவிர்த்தல்
07.எச்சரிக்கை செய்தல்
08.தகவலை கொடுத்தல்

இவ்வாறு குறிப்பிடப்படம்போது இம்முறைகளில் முக்கியமாக 3 விடயங்கள் பின்பற்றப்படுகின்றன.

01.உதவி பெற வருபவர் (உளவளத்துணை) Counselee
02.உதவியாளர் (உளவளத்துணையாளர் ) Counsellor
03.உதவி செய்யும்முறை Counselling

இப்பிரிவுகளைக் கொன்டு மாணவரிடத்தே கொண்டடுள்ள முக்கியவத்தினை கொள்ளக்கூடிதாகவுள்ளது.

01. பலமாணவர்களின் உடல், உளநோய்களுக்குக் காரணமான மன அழுத்தத்தைக் குறைக்க உதவும்.
02. மாணவர்களிடத்தே இருக்கின்ற பதகளிப்பைக் குறைக்க உதவும்.
03. உளவளத்துணையின்போது உடல், உளநலம் மேம்படுத்தப்படும்.
04. ஆளிடைத் தொடர்புகளை வளர்த்துக் கொள்ள உதவும்.
05. சுயமதிப்பீடு, சுயஅடைவைக் கட்டியெழுப்ப உதவும்.
06. உளவளத்துணையின் மூலம் நேர்த் தன்மையான மனப்பாங்குகளை ஊக்குவித்தல்
.

07.பொருளாதாரம் முதல் ஆன்மீகம் வரை அனைத்துவகை வினைத்திறன்களையும் வளர்க்க உதவுதல் .

08.உளவளத்துணையின் மூலம் மனித நடத்தைகள் ஒழுங்குபடுத்தப்படும் நெறிப்படுத்தப்படும்.

09. யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள உதவும்.

10. மாணவர்களிடத்தே நாடியினுள் மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொணர உதவும்.

இவ்வாறே உளவளத்துணனயாளர் பாடசாலை மட்டத்தில் மாணவர்களிடத்து இருக்கின்ற உடல் உள திறமைகள் மற்றும் ஆற்றலை வெளிக்கொனர்வதற்கும் கற்றல் கற்பித்தல் விடயங்களில் ஊக்கப்படுத்துவதற்கும் சமூக உறவினை கட்டியெழுப்புவதற்கும் இன்னோரன்ன விடயங்களை மேம்படுத்துவதற்கு உளவளத்துணையானது இன்றியமையததாக இருக்கின்றது.

“நீ சந்தோசமாக இரு மற்றோரை சந்தோசப்படுத்து” என்ற சிந்தனைக்கமைய நாட்டின் விலைமதிக்கமுடியாத செல்வங்களான மாணவர்களை வளமான வாழ்விற்கு இட்டுச் செல்வோம்.

அனுபவம் தான் அறிவு பெறுவதற்கான ஒரே வழி

# போதைபொருட்களும் மலையக மாணவர்களும்

திருமதி.K.விஜிதா நவமணி B.A.,PGDE

இன்றைய நவீன உலகம் விஞ்ஞான கண்டுபிடிப்புக்களின் வளர்ச்சியினால் உள்ளாங்கையில் அமர்ந்து மனிதன் வாழக்கூடிய வேறு கோள்கள் ஞாயிற்று தொகுதியில் உண்டா என ஆராய்ச்சி பண்ணும் அளவிற்கு வளர்ந்து செல்கின்றது.மனிதனின் அபரீதமான அறிவாற்றல் ''ஆகாயத்தில் கோட்டை கட்ட நினைக்காதே'' என்பதை தாண்டி ஆகாயத்திலும் ஆராய்ச்சி நிலையங்களை கட்டி தாவரம் வளர்த்து உண்ணும் அளவிற்கு வளர்ந்து செல்கின்றது.ஒருபுறம் இவ்வாறான வளர்ச்சி வளர மறுபுறம் மனிதன் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி வாழ்வைத் தொலைத்து தானும் நாசமாகி தன் குடும்பத்தையும் நாசமாக்கி தன் சமூகத்தையும் நாசமாக்குகின்றான்.மிகவும் இக்கட்டான நிலமை மிகவும் வேகமாக பரவி சீரழிகின்றது.

இன்று சமூகத்திற்கு சவாலாக அமைவது இந்த போதைப் பொருள் பாவணையே கடந்த காலங்களில் பிரபல நகர் பகுதிகளில் பரவியிருந்த போதைப்பொருள் பாவனை நிகழ்காலத்தில் மலையகத்தில் பரவி மலையக மாணவர்களின் எதிர்காலத்தை சீரழிக்கின்றது.

இன்றும் அன்றாட வாழ்க்கைக்கு தினக்கூலி வாழ்க்கை நடாத்தி சொற்ப சம்பள உயர்வுக்கேனும் போராட்டம் நடாத்தி அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு தேவைகளுக்கும் உடல் உழைப்பால் உழைத்து அதிகரித்து வரும் விலைவாசிகளுக்கு மத்தியில் தம் பிள்ளைகளை கல்விகற்க வைக்கின்றனள்எம் பெற்றோர். மாதமாதம் குடும்ப வரவு செலவு திட்டம் துண்டு விழுந்தாலும் வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி பிள்ளைகளை கல்வி கற்க அனுப்பும் பெற்றோர்களுக்கு பிள்ளை கொடுக்கும் பரிசு போதைப் பொருள் பாவனையாக அமைகின்றது.

மலையகத்தை சேர்ந்த வர்த்தகர்கள் மற்றும் ஏனைய பெரும் புள்ளிகள் தன் சுய இலாபத்திற்காக சகல அரச கட்டுப்பாடுகளையும் தாண்டி சட்டத்தில் காணப்படும் ஓட்டைகளினூடாக போதைப்பொருட்களை கொண்டுவந்து கல்லூரி மாணவர்களை குறி வைத்து விற்கின்றனர். மற்றும் தலை நகரை நோக்கி தொழிலுக்காக செல்லும் ஏனைய நபர்களும் அடங்கும்.

பாடசாலை நேரங்களில் இவ்வாறான மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் ஏனைய மாணவத் தலைவர்களின் கண்களை கட்டிவிட்டு போதைப்பொருள் பாவித்து வகுப்பறைகளில் பிறழ்வான நடத்தையை காட்டுகின்றனர். பாட விடயங்களிள் அவதானிப்பு இன்மை, ஏனைய மாணவர்களுக்கு இடையூறு, வகுப்பறை செயற்பாடுகளுக்கு இடையூறு, கொடூரமான நடத்தைகள், விகாரமான உருவ மாற்றம் போன்ற அவதானிப்புகளை இவர்களிடம் காணமுடியும்.

இவ்வாறான மாணவர்களை இனங்கண்டு இவர்களை சரியான வழிக்கு கொண்டு செல்லும் பொறுப்பில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் முக்கியஸ்தர்களாக இருக்கின்றனர்.மாணவர்களை அடையாளம் கண்டு பெற்றோர்களிடம் முறையிடும் போது பெரும்பாலான பெற்றோர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. தம் பிள்ளை மீது கொண்டுள்ள அளவற்ற நம்பிக்கையும் பாசமும் அவர்களின் கண்ணை மறைக்கின்றன.''ஆசிரியர் வீண் பழி சுமத்திவிட்டார்''என வாதம் புரிகின்றனர். பிள்ளை மீது பாடசாலை எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக சிறுவர் உரிமைஇ மனித உரிமை என செல்கின்றார்களே தவிர தம் பிள்ளைகளை திருத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை பாடசாலை காலங்களில் பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் மாணவர்ளின் முழு கவனத்திற்குமான பொறுப்பு பெற்றோர்களையே சாறும். இந்த நேரங்களில் எத்தனை பெற்றோர்களின் கவனிப்பு தம் பிள்ளைகள் மீது படிந்துள்ளது என நோக்கினால் மிக மிக குறைவு என்பதே உண்மையாகும்.

மேலும் பெற்றோர்கள் தம் சொந்த கௌரவத்திற்காக பிள்ளைகளை விட்டுக்கொடுக்காமல் பேசுவதும் அவர்கள் மீது அவதானிப்பு பார்வையை வீசாமல் இருப்பதும் சம்பந்தப்பட்ட மாணவனுக்கு மேலும் உற்சாகத்தை கொடுக்கின்றது.இவர்கள் சிறுவர் உரிமைகள்இ மனித உரிமைகள் போன்ற உரிமைச்சட்டத்தின் ஊடாக மாணவர்களை தொடர்ந்தும் பாடசாலைகளில் அனுமதிக்கும் போது ஏனையோருக்கு ஏனைய பாடசாலை மாணவர்களுக்கும் இக்கட்டான நிலமைஏற்படுகின்றது.

இது இவ்வாறு இருக்க போதைப்பொருட்கள் பாவனையிலிருந்து எவ்வாறு மாணவர்களை மீட்கலாம் என யோசித்தால் போதைப்பொருளை வளர்க்கும் சமூகக் காரணி போதைப் பொருளின் ஆரம்ப உற்பத்தி புள்ளி மையம் என்பவற்றை ஆராய்ந்து விழிப்புணர்வுடன் கூடிய பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய போராட்டம் ஒன்றினூடாக முற்றிலுமாக ஒழிக்கமுற்படுவதே சிறந்த பலனை கொடுக்கும்.

இங்கு ஆரம்ப உற்பத்தி புள்ளி மையக் என்னும் போது புகையிலை <u>மற்றும்</u> மதுபானம் <u>என்பன அரச உயர் மட்டத்தில் உள்ளவர்களாயே உள்நாட்டின் உற்பத்தி செய்யப்படுகின்றது. விற்பனையும்</u> செய்யப்படுகின்றது. இதனை கருத்தில் கொண்டு சட்டங்களை மக்களுக்கு அமைவாக கல்விச் சாலைகள், வழிபாட்டுத் தலங்கள், சிறுவர்கள் அதிகம் கூடும் பிரதேசங்களுக்கு அண்மையில் எல்லாவகையான மதுபானம் புகையிலை பொருட்கள் விற்பனை மையங்களை அனுமதிக்காத வகையில் இயற்றும் நோக்கோடு போராட்டங்களை ஒழுங்குப்படுத்தி கொள்ள வேண்டும்.

போதைபொருள் பாவனையினால் ஏற்படும் தீங்குகளை பெற்றோர்களுக்கு எடுத்துகாட்டி விழிப்புணர்வைஏற்பட செய்து அவதானிப்புடன் இருக்கவும் போதைப்பொருள் விற்பனை இடங்களை அடையாளம் கண்டு ஒன்று திரண்டு போராட்டங்களை மேற்கொண்டு விற்பனை நிலையங்களை அகற்றவும் முன்வர வேண்டும்.

போதைப் பொருள் பாவணையிலிருந்து மீண்ட பாவணையாளரின் உதவியினைகொண்டு போதைப்பொருட்களால் ஏற்படும் இழப்புக்களையும் எடுத்துக் கூறி அவ் இழிந்த வியாபாரங்களினையும் உற்பத்திகளையும் கைவிட கோருதல் வேண்டும்.

போதைப்பொருள் பாவணையாளர்களை விழ்ப்புணர்வின் ஊடாக திருத்தி இயல்பு வாழ்க்கைக்கு திருப்பி அவர்களின் உதவிகளின் ஊடாக உதவிகளை பெற்று சமூக கட்டமைப்பை சீர் திருத்தும் முயற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும்.

இந்நடவடிக்கை பெற்றோராலும் சமூக நலன் விரும்பிகளாலும் மேற்கொள்ள வேண்டியதாகும். மேலும் பாதுகாப்பு பிரிவினர்,சமூக உரிமைகள் அமைப்புக்கள் சீரழியும் மாணவர்களின் நலன் கருதி தாம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் ஆக்கப்பூர்வமாக அமையும் படி பார்த்துக் கொள்ளலாம். ஆக மொத்தத்தில் பெற்றோர்கள்இ ஆசிரியர்கள், சமூக நலன் விரும்பிய அமைப்புக்கள், பாதுகாப்பு பிரிவினர்கள் போன்றோர்களின் கூட்டு ஒத்துழைப்பு காணப்பட்டால் மாத்திரமே இன்றைய இளைஞர்களையும் அடுத்த பரம்பரையினரையும் நற் பிரஜைகளாக்க முடியும் என்பதுதிண்ணம்.

''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு''

உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும்
உனக்குள்ளேயே உள்ளன

# உட்படுத்தற் கல்வியும் பாடசாலை கடமைகளும் (Inclusive education)

**திருமதி.மா.யூகேஸ்வரி, DIP IN TEACH, BA, PGDE, DSM**

1960 ஆம் ஆண்டு தொடக்கம் மனித உரிமை அமைப்புக்கள், சிறுவர் உரிமை அமைப்புக்கள், கல்வியியாளாளர்கள் கல்வி உளவியலாளர்கள் போன்றோர் மத்தியில் பேசப்பட்டு வந்த உட்படுத்தற் கல்வி எண்ணக்கருவானது இன்றைய உலகில் கல்வி புலத்தில் பரவலாக பேசும் அளவில் மாற்றமடைந்துள்ளது. உட்படுத்தல் கல்வி என்பது விஷேட கல்வியின் மறுபெயர் அல்ல என்பதை தெளிவாக அறிதல் அவசியமாகும். விஷேட கல்வி தேவையுள்ள பிள்ளைகள் தாம் வாழும் சூழலிலுள்ள தம்முடைய சகோதரர்கள், சமவயது குழுவினர் கல்வி கற்கின்ற பாடசாலையிலேயே அவர்கள் கற்கின்ற வகுப்பறைகளியே கற்பதற்கும் அவர்கள் பயிலும் கலைத்திட்டத்தையும், மதிப்பீட்டு முறைகள் மற்றும் பொது பரீட்சைகளில் தோற்றவும், கல்விக்கான உரிமைகள் சலுகைகள் போன்றவற்றை பெறுவதற்கான சூழல் அமைக்கப்படுவதே உட்படுத்தல் கல்வி எனப்படும்.

கற்றலில் இடம்பெறுகின்ற விஷேட தேவையுள்ள பிள்ளைகள் தங்களுடைய விஷேட தேவைகளை நிவர்த்திச் செய்யும் வகையிலான சாதனங்களை இணைத்து கொண்டு பாடசாலைகளில் காணப்படுகின்ற சாதாரண வகுப்பறைகளில் இருந்து ஆரம்பக்கல்வி முதல் பல்கலைக்கழக கல்வி வரையான கற்றலில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்கும் செயல்முறையாகும்.

விஷேட தேவையுள்ள பிள்ளைகளின் உரிமைகளை இழந்து வீடுகளில் முடங்கி கிடந்த வேளைகளில் இவர்களை தங்கள் சமவயது பிள்ளைகளை போல கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த உலகில் முக்கிய பிரகடனங்கள் எழுந்துள்ளன.

- சிறுவர் உரிமை பிரகடனம் 1989
- ஐக்கிய நாடு சபையின் சகலருக்கும் கல்வி பிரகடனம் 1990
- ஐக்கிய நாடு சபையின் இயலாமை உடைய பிள்ளைகளுக்கான கல்வியில் சம வாய்ப்பு பிரகடனம் 1993
- சலமன்கா பிரகடனம் 1994
- இயலாமையுடைய பிள்ளைகளுக்கான கல்வி கொள்கை பிரகடனம் 1995

சமூக சூழலிலும் கல்வி புலத்திலும் பெற்றோராலும் கூட புறக்கனிக்கப்பட்டு மூலைகளில் தேங்கி கிடந்த இப்பிள்ளைகள் ஏனைய மாணவர்களைப் போல் பாடசாலை செல்லும் வாய்ப்பு கிட்டியுள்ளமை போற்றத்தக்க விடயமாகும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இம்முறைமைகள் சிறப்பாக காணப்படுகின்ற போதிலும் வளர்முக நாடுகளில் மந்த கதியிலான வளர்ச்சி போக்கு காணப்படுவது அந்நாடுகளின் பொருளாதார காரணியின் தாக்கமே காரணமாகும்.

இலங்கை வளர்முக நாடுகளில் ஒன்று என்ற வகையில் அதன் பொருளாதார பின்னணிக்கு ஏற்ற வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. அந்த வகையில்

- கல்வி உயர்கல்வி அமைச்சின் விஷேட கல்வி பிரிவ
- தேசிய கல்வி நிறுவக உட்படுத்தற் கல்வி துறை
- மாகாண கல்வி திணைக்கள விஷேட கல்வி பிரிவு
- இலங்கை திறந்த பல்கலைகழக விஷேட கல்வி பிரிவு
- வலயக் கல்வி பணி மனைகளில் விஷேட கல்வி பிரிவு

ஆகியன உட்படுத்தற் கல்வி திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன.அத்தோடு இலங்கையில் உட்படுத்தற்கல்வி அபிவிருத்திக்கான பொறுப்பு கூறும் உத்தியோக பூர்வமான நிறுவன அமைப்புகள்.

- ❖ தேசிய கல்வி நிறுவகம்
- ❖ உயர்கல்வி அமைச்சு
- ❖ மாகாண கல்வி திணைக்களம்
- ❖ வலயக் கல்வி திணைக்களம்
- ❖ பாடசாலைகள்

உட்படுத்தற் கல்வியை நடைமுறைப்படுத்துவதில் பொறுப்புள்ளவர்கள்

- ❖ பாடசாலை அதிபர்
- ❖ வகுப்பாசிரியர்
- ❖ பெற்றோர்கள்
- ❖ விஷேட கல்வி ஆசிரியர்
- ❖ விஷேட கல்வி ஆசிரிய ஆலோசகர்
- ❖ விஷேட கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர்
- ❖ ஆரம்பக் கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர்
- ❖ வலயக் கல்வி பணிப்பாளர்
- ❖ வைத்தியர்கள்
- ❖ அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், உத்தியோகஸ்தர்கள்

பாடசாலையே கல்விக்கான பிரதான இடத்தை வகிக்கின்றது. உட்படுத்தற்கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்துவது பாடசாலையின் பிரதான பங்குகள் யாதெனின்

01. பிள்ளைகளை ஏற்றுக்கொள்ளுதல்(Acceptance)

ஐந்து வயது நிரம்பிய பிள்ளையை பாடசாலையில் அனுமதித்தல், அதிபர், பிரதி அதிபர்,வகுப்பாசிரியர்,ஏனைய ஆசிரியர்கள்,விஷேட கல்வி ஆசிரியர்கள், மாணவ தலைவர்கள்,பாடசாலை மாணவர்கள், சமவயது குழுவினர்,ஏனைய மாணவர்களின் பெற்றோர்கள்,பாடசாலை சிற்றூழியர்கள் ஆகியோர் உட்படுத்தற் கல்விக்கான கொள்கைகளை ஏற்று நடைமுறைப்பத்தல்.

02. ஆயத்த நிலை (Readiess)

- பிள்ளையை பயப்படாது வகுப்பறைக்கு பிரவேசிக்க உதவுதல்
- வகுப்பறையில் உள்ள மாணவர்களுக்கு இயலாமை உடையோர் தொடர்பான அறிவூட்டல் செய்தல்.
- ஏனைய ஆசிரியர்களுக்கு இயலாமை உடைய தொடர்பான அறிவூட்டல் செய்தல்
- ஏனைய பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு அறிவூட்டல் செய்தல்
- பிள்ளையின் வித்தியாசமான செயற்பாடு தொடர்பாக ஏனையோருக்கு அறிவூட்டல்

03. விஷேட உபகரணம் பெற்றுக் கொடுத்தல்(Obtaining materials)

பிள்ளைக்கு தேவையானவற்றை அறிந்து உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல் இதற்கான நலன் விரும்பிகள் அரச சார்பற்ற நிறுவன உதவிகளை பெற்றுகொடுத்தலுடன் குணநல வள உள்ளீட்டையும் பயன்படுத்தலாம். இவர்களுக்கான உபகரணங்களான மூக்கு கண்ணாடி,கேட்டல் உபகரணம், சக்கர நாற்காலி, ஊன்று கோல், வெள்ளை பிரம்பு போன்றன.

04. பிரதேச வசதிகள் (Accessibitities)

இது இரு பிரிவுகளை கொண்டுள்ளது.

- உடல் ரீதியானது
- கலைத்திட்ட ரீதியானது

உடல் ரீதியான வசதி என்னும் போது மலசலகூட வசதிஇ நீர் அருந்தும் வசதிஇ விளையாட்டு மைதான வசதி, ஆய்வுக்கூட வசதி,நூலக வசதி போன்றவற்றுடன் சக்கர நாட்காலியில் செல்லக்கூடிய உள்ளக பாதை அமைப்புகளும் இவர்களின் உடல்ரீதியான சௌகரியங்களை ஏற்படுத்தும்.

கலைத்திட்ட பிரவேசத்தை அவதானிப்போமாயின் இயைபாக்கம் (சமவயதினரும் செயற்பட உதவுதல்) பிரேல்,சைகைமொழி உபயோகம்,பேசும் புத்தகம்,பேசும் நூலகம் போன்றவற்றை ஏற்படுத்தல்.

05. ஆசிரியர் பயிற்சி(Teacher Training)

உட்படுத்தல் கல்வி பிள்ளைக்கான கற்றல் கற்பித்தல் பயிற்சியை மேற்கொள்ளும் போது ஆசிரியர் விஷேட பயிற்சிகளை பெற்றிருப்பதுடன் விஷேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் உதவியையும் பெற்றுகொள்ள முடியும் இதற்கான விஷேட பயிற்சிகள்

- பிரேல்(Braille)
- சைகை மொழி(Signlanguage)
- நடமாடல் பயிற்சி(Mobrtinty Training)
- மொழிதல் பயிற்சி(Speech Therapy)
- Aurrism Training
- இயக்க மருத்துவம் (Physiotherapy)
- கலைத்திட்ட இயைபாக்கம் (Curricum adaptation)

போன்ற விடயங்களை பாடசாலை மேற்கொள்வதன் மூலம் உட்படுத்தற்கல்வி அபிவிருத்தியை பேண முடியும். உட்படுத்தற்கல்வி அபிவிருத்தியை மேற்கொள்பவர்களில் பாடசாலையின் அதிக பொறுப்பு விஷேட கல்வி ஆசிரியரை சார்ந்திருக்கும் அந்த வகையில் விஷேட கல்வி ஆசிரியரின் வகிப்பாகங்கள்

- மாணவர்களின் இயலாமை நிலை இணங்காணல் அவரின் விஷேட கல்வித் தேவைகளை கணிப்பீடு செய்தல்
- பெற்றோர், ஏனைய ஆசிரியர்கள் நலன் விரும்பிகளின் சேவைகளை கொடுத்தல்.
- உட்படுத்தற கல்வி பிள்ளைகளுக்கான ஆலோசனை வழங்கலும் திசைமுக பயிற்சிகளை வழங்களும்.
- பிள்ளைகளுக்கான பௌதீகச்சூழல் அபிவிருத்தி செய்தல்.மகிழ்ச்சிகரமான பாடசாலை சூழலை கட்டியெழுப்புதல்.
- கலைத்திட்டம் நேர அட்டவணை மதிப்பீட்டு முறைகளை என்பவற்றை புனரமைக்கப்படல்.
- தனியாள் பாடத்திட்டத்தை தயாரித்தல்.
- பிரவேச வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்.
- இணைப்பாடவிதான செயற்பாடுகளின் பங்குபெறச் செய்தல்.
- தொழில் பயிற்சிகளை பெற்றுக்கொடுத்தல்.
- விஷேட கல்வி வள நிலையத்தை வளப்படுத்தல்.
- உக்கிர இயலாமை உடையோருக்கு விஷேட கற்பித்தல்முறைகளை உபயோகித்தல்.(சைகை,பிரேல்)
- வாழ்க்கை தேர்ச்சிகளை வழங்குதல் போன்ற அம்சங்களுடன் மாகாண அமைச்சினால் வழங்கப்படும் நிதி உதவிகளை பெற்று கொடுப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.
- இலங்கை உட்படுத்தல் கல்வி மேலும் வளப்படுத்த சில முயற்சிகளை எடுக்க வேண்டிய தேவையுள்ளதுடன் பாடசாலை சமூக மனப்பாங்கிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

**“EDUCATION FOR ALL”**

# மன அழுத்தத்தினை முகாமை செய்தல் (Stress Management )

திரு. ரா.சந்திரகுமார் B.A. PGDE. Dip.In.Coun

**ஆசிரியர்**

வெளிப்புற, உட்புறகாரணிகளின் தூண்டலினால் உடல் உளநடத்தை மகிழ்ச்சியற்று இருத்தல் மன அழுத்தம் எனப்படும். ஒருவருக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு அல்லது நிலைமைகள் சந்தர்ப்பங்கள் சவால்களுக்கு முகம் கொடுக்கமுடியாத அல்லது முறையாக கையாளமுடியாத நிலைமையின் போது தோன்றுகின்ற உடலியல், உளவியல் மற்றும் நடத்தை ரீதியான மாற்றங்களே மனஅழுத்தம் எனப்படும்.

எனினும் மனஅழுத்தம் என்பது ஒரு பொருளின் மீது மற்றொரு பொருள் ஏற்படுத்தும் தாக்கமாகும். மன அழுத்தத்தை மூன்று வார்த்தைகளால் கூறமுடியும் அவை மன இறுக்கம், மனபாரம், மனஅழுத்தம் ஆகியனவாகும். இதன் நுண்மையான பொருள் என்னவெனில், மற்றவர்கள் மூலம் ஏற்படும் தாக்கமே மனஅழுத்தம் ஆகும். மனஅழுத்தம் என்பது வித்தியாசமானதும் இது தனிப்பட்ட மனிதரின் மூளையின் ஆற்றல்களை குறையச் செய்து அல்லது பழுதடையச்செய்து அதனால் சிந்திக்கவோ செயற்படவோ முடியாமல் செய்துவிடுகின்றது.

நோய்களை உண்டாகக்கூடிய உடல் அல்லது மனரீதியான பதட்டம் அளிக்கும் எந்தவொரு உடலியல் இரசாயன அல்லது மனவியல் காரணிகளை மனஅழுத்தம் எனக் கருதலாம்.

குறைவான அளவில் மனஅழுத்தம் அல்லது பதட்டம் சில நேரங்களில் பயனுள்ளதாக அடைகின்றது. உதாரணமாக ஒரு திட்டத்தை செயல்படுத்தும் போது ஏற்படும் அழுத்தம் காரணமாக நாம் சிறப்பாக கவனம் செலுத்தி அதிக ஆற்றலுடன் அந்த வேலையை செய்கின்றோம். இரண்டு வகையான அழுத்தங்கள் உள்ளன.

நேர்அழுத்தம் (positive stress) மற்றும் சவால்கள் அல்லது அதிக பளு என பொருள்படும். எதிர்மறை அழுத்தம் (negative stress),மனஅழுத்தம் அதிகமாகும் போதும் சரியாக நிர்வகிக்கப்படாமல் இருக்கும் போதும் எதிர்மறை விளைவுகள் ஏற்படுகின்றன. ஆயினும் மன அழுத்தம் என்பது ஒரு உளநோயாக கொள்ளப்படாதபோதும் இது ஏனைய பல உடல் உளநோய்களுக்கு காரணமாக அமைவதால் மனஅழுத்தம் என்பது Usilent killer என்று அழைக்கப்படுகின்றது.

மன அழுத்தம் இல்லாத வாழ்வை கற்பனை செய்துபார்க்க இயலாது. ஒரு அளவுவரை மன அழுத்தம் இருப்பது சீரான வளர்ச்சிக்கு தேவைப்படவும் கூடும். எனினும் அழுத்தம் அதிகமானால் மனநோயை தூண்டி மன உளைச்சலை அதிகரிக்கும். குறிப்பிட்ட காரணங்கள் அறியப்படாவிட்டாலும் மனஅழுத்தத்திற்கும், மனநோய்க்கும் முக்கிய சம்பந்தம் இருப்பது உண்மையே. அநேககுறைபாடுகள் மற்றும் பதட்டம் ஆகியவை ஏற்பட மனஅழுத்தம் ஒரு காரணமாக விளங்குகின்றது.

**நடத்தை ரீதியான விளைவுகள்**

பாதிக்கப்பட்ட நபர் எவ்வாறு செயல்படுகின்றார் என்பதில் வெளிப்படுகின்றன. அதிகமாக புகைப்பிடித்தல், நரம்பியல் தூண்டல்கள், அதிகமான மது அல்லது போதைப்பொருள் பயன்படுத்தல், பற்களை கடித்தல், முடிகளை இழுத்தல் போன்ற பழக்கங்கள், ஞாபகமறதி, விபத்துக்குள்ளாகுதல், முரட்டுத்தனமான வன்முறை செயல்களுக்கு தூண்டப்படுதல்.

நடத்தை ரீதியான விளைவுகள் அபாயகரமானவை மற்றும் சமூக தனிமனித உறவுகளை பாதிக்கக்கூடியவை தனிமை, வறுமை, சோகம், அழுத்தம், விலக்கி வைக்கப்படுதலால் ஏற்படும் விரக்தி போன்ற விளைவுகள் நீடித்து இருப்பது மட்டுமன்றி சாதாரண சளி முதல் எயிடஸ் வரையான வைரஸ் தாக்குதல்களுக்கெதிரான நோய் எதிரப்புத்திறனையும் குறைக்கின்றன. முக்கிய வினை ஊக்கிகள் உடல் செயல்பாடு ஆகியவற்றை சிலவகை மனஅழுத்தம் உண்டாகுகின்றன.

**மன அழுத்தம் தொடர்பான சில நோய்கள்**

வயிற்று நோய்கள், ஆஸ்துமா, களைப்பு, படப்படப்பு, தலைவலி, இரத்தஅழுத்தம், தூக்கமின்மை, வயிற்று ஜீரணகோளாறுகள், இதயநோய்கள், மனநிலைபாதிப்பு, உடலுயிர் செயல்பட இயலாமை, படைஅரிப்பு, உணர்ச்சியற்ற தோல் போன்ற தோல் வியாதிகள்

**மன அழுத்தத்தினை முகாமை செய்தல்** (stress management)

மனஅழுத்தம் என்பது ஒரு உளநோயாக கொள்ளப்படுவதில்லை. ஆயினும் பல உளநோய்களுக்கு இட்டுச் செல்லக்கூடிய அபாயத்தை தோற்றுவிப்பதாக மனஅழுத்தம் காணப்படுகின்றது.

மனஅழுத்தத்தினை குறைப்பதற்கு அல்லது தீர்ப்பதற்கு பிரதானமாக இரண்டு வழிகள் கையாளப்படுகின்றன.

- மனஅழுத்தக் காரணிகளை அறிந்துமனஅழுத்தத்திற்குள்ளானவரை அதிலிருந்து விடுவித்தல்
- சிறப்பாக முகம் கொடுக்கக்கூடியவாறு மன அழுத்தத்திற்குள்ளானவரின் ஆளுமையினை அபிவிருத்திசெய்தல்

இவ்விருவழிகளுமே மன அழுத்தத்திற்குள்ளானவரை அதிலிருந்துமீட்க கூடியதாக இருக்கும்.

எனினும் மனஅழுத்தத்திற்கு சாதகமான முறையில் முகம் கொடுக்க கூடியவாறு ஒருவரின் ஆளுமையை விருத்தி செய்வதும் மனஅழுத்த நிலைமைகளை சரியானமுறையில் கையாளப் பழக்குவதும் அதற்கான தன்னம்பிக்கையை கட்டியெழுப்புவதும் பிரதானமாக கொள்ளப்படுகின்றது.

## மன அழுத்தத்திற்கான காரணங்கள்

மனஅழுத்ததிற்கான காரணங்கள் பல்வேறு காணப்படுகின்றன. சிக்கலான சமூக, குடும்ப மற்றும் உயிரியல் காரணிகளால் உண்டாகும். உதாரணமாக பாலியல் தொல்லைகள், உடலியல் தொல்லைகள், மனோரீதியான தாக்கங்கள், குடும்பத்தில் வன்முறைகள், தாக்குதல்கள் போன்றன குழந்தை அல்லது கட்டிளமைப்பருவங்களில் ஏற்படும் கோளாறுகள் மனஅழுத்தம் ஏற்படக் காரணமாகியுள்ளன. மேலும் இழப்புக்கள், எதிர்காலம் பற்றிய கவலைகள், அதிகரித்த வேலைப்பளுவும் ஓய்வின்மையும், நடிப்பான முரண்பாடுகளும், எதிர்பாரா சம்பவங்கள் போன்றவற்றில் ஒருவரிடத்தில் மனஅழுத்தம் தோன்றலாம். எனினும் பொதுவாக குடும்பம், சமூகம், தொழில், சமயம், அறிவு போன்ற விடயங்களில் ஏற்படுகின்ற சமநிலையற்ற தன்மை காரணமாகவே மனஅழுத்தம் ஏற்படுகின்றது ஏன குறிப்பிடப்படுகின்றது.

மனஅழுத்தத்திற்கு உள்ளானவரை இனங்காணல் மனஅழுத்தத்தை கண்டறிய உதவும் முக்கிய அறிகுறிகளாக தூக்க தொந்தரவுகள், பசியின்மை, குறைவான கவனம் ஞாபகமறதி, குணத்திற்கு மாறான தவறுகள் தாமதங்கள், கோபம், வன்முறையான அல்லது சமூகத்துக்கெதிரான நடவடிக்கைகள், மனவியல் ரீதியான வெளிப்பாடுகள், மது அல்லது பிற போதைப்பொருள் பயன்பாடு ,படப்படப்பான நடவடிக்கைகள் மனஅழுத்தத்தால் ஏற்படும் விளைவுகள், உடலியல், உளவியல் நடத்தைரீதியான விளைவுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அடையாளம் காணலாம்.

## உடல் ரீதியான விளைவுகள்

பெரும்பாலும் நரம்பு சுரப்பிகள் மற்றும் நோய் எதிர்ப்புத்திறன் தொடர்பாக வெளிப்படுகின்றன. எந்தவகை காரணியால் மனஅழுத்தம் ஏற்பட்டாலும் உடல் ஒரேமாதிரியான அறிகுறிகளை வெளிப்படுத்துகின்றது. படப்படப்பு, அதிகரிக்கும் இதயதுடிப்பு, அதிகரிக்கும் மேலோட்டமான மூச்சுவாங்குதல், நடுக்கம், குளிர் அல்லது வேர்த்து வழிதல்,ஈரமான புருவப்பகுதி, இறுக்கமான தசைகள், வயிற்றுப்பகுதி தசைகள் இறுகுதல், முறுக்கிய கைகள், பற்களைக் கடித்தல், வயிற்று உபாதைகள், அடிக்கடி சிறுநீர் கழித்தல், முடி கொட்டுதல்

## உளவியல் ரீதியான விளைவுகள்

சரியான முறையில் சிகிச்சை பெறாதபோது பலவிதங்களில் வெளிப்படுகின்றன. நீக்கப்படாத உளவியல் பிரச்சினைகள் உளநிலையையும் பிறகுஉடல் நிலையையும் பாதிக்கும். கவனம் செலுத்துவதில் சிரமம்., முடிவெடுப்பதில் சிரமம், தன்னம்பிக்கை இழத்தல், அடக்கமுடியாத ஆசைகள், தேவையற்ற கவலைகள், படபடப்பு, அதீத பயம், பயத்தால் பாதிப்புகள், குணாதிசயத்தில் அடிக்கடி மாற்றங்கள்

இதன் காரணமாகவே மனஅழுத்தத்தை தீர்த்தல் என்பதை விட மனஅழுத்தத்தை முகாமைத்துவம் செய்தல் அதற்கான வழிவகைகளுக்கு முக்கியத்துவம் அளித்துச் செயற்படல் என்பன சிறப்பானதாக கொள்ளப்படுகின்றது.

மன அழுத்த முறையை, அழுத்தங்களை தவிர்த்தல், அழுத்தங்களை குறைத்தல் என இரு வகையாக நோக்கலாம். மன அழுத்தங்களை தவிர்க்கும் நுட்பமுறைகளாவன
சிறந்த நேரமுகாமைத்துவம்,
குழுவாகச் செயற்படுதல்,
பங்குபற்றும் முகாமைத்துவம்,
சிறந்ததொடர்பாடல்கள்,
பங்கேற்பு தீர்மானம் மேற்கொள்ளல்,
உடன்பாடான மனப்பாங்குகளை வளர்த்தல்,
ஆரோக்கியமான வாழ்க்கைமுறை பகுத்தறிவுடன் சிந்தித்தல்,
முன்னெச்சரிக்கையோடு இருத்தல்

**மன அழுத்தங்களை குறைக்கும் சுய நுட்பமுறைகளாவன:**
ஓய்வு எடுத்தல், யோகதியானம் பிரார்த்தனைகள், சிறந்த வாழ்க்கைமுறை, மற்றவர்களிடம் பேசித் தீர்ப்பது, மனதுக்கு பிடித்த புத்தகங்களைப் படித்தல், இசையை இரசித்து கேட்டல், பலம் மற்றும் பலவீனத்தை அறிதல், மாற்றத்திற்கு தயாராக இருத்தல் போன்ற முறைகளை குறிப்பிடலாம். இதன்போது மனஅழுத்த நிலைமைகளுக்கு தீர்வாக உளவளத்துணை என்பது மிக பிரதானமான ஒன்றாக காணப்படுகின்றது.

உளவளத்துணையின் போது மனஅழுத்த நிலைமையினை முகாமை செய்துகொள்வதற்காக அதற்குரிய கோட்பாடுகள் (theories),அணுகுமுறைகள் (approach),திறன்கள் (skills), நுட்பங்கள் (techniques) என்பன காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

உதாரணமாக மன அழுத்தநிலைமையினை முகாமை செய்வதற்கு stephen R covey யின் 90/10 என்ற கோட்பாடு பிரதானமாகப் பயன்படுத்தப்படுவதை குறிப்பிடலாம். மேலும் இதற்கான அணுகுமுறைகளாவன நிர்வாக அணுகுமுறை, சுகாதார அணுகுமுறை, வாழ்க்கைத் தத்துவஅணுகுமுறை, உளவியல் அணுகுமுறை போன்ற அணுகுமுறைகள் பரவலாக கையாளப்படுவதைநாம் காணலாம். இதைத்தவிர உளவளத்துணையின் போது கையாளப்படுகின்ற பொதுவான திறன்கள் நுட்பங்கள் பெரும்பாலும் கையாளப்படுகின்றமையினை குறிப்பிடத்தக்கதாகும்.

# இந்துசமய சடங்குகளும் சம்பிரதாயங்களும்

திருமதி.ந.நளினாதேவி
ஆசிரியர்

இந்துமதம் என்பது ஒரு புதிரான மதமாகும். என்னில் அடங்கா சடங்குகள், மரபுகள் மற்றும் சம்பிரதாயங்கள் இந்த நம்பிக்கையின் பின்புலமாக அமைகின்றது. இவ்வகையான சடங்கின் அவசியம் என்னவென பலரும் கேள்வி கேட்க நேரிடும், இந்த நவீன உலகில் எப்படி பொருத்தமாக அமையும் எனவும், மூட நம்பிக்கை எனவும், ஒதுக்கி வைத்துவிடுகின்றோம். ஆனால் அவை எல்லாம் பழங்காலந் தொட்டு பின்பற்றப்பட்டு வருவனவேயாகும். இவை மூட நம்பிக்கையா? இதற்கான விடை உங்களுக்கு ஆச்சரியத்தை கொடுக்கும்.

நமஸ்காரம் செய்வது மரியாதை அளிக்கும் செயலாகும். ஆனால் நமஸ்காரம் செய்யும் போது இரண்டு கைகளையும், ஒன்று சேர்க்கும்போது விரல் நுனி அனைத்தும் ஒன்று சேரும் அழுத்தபுள்ளி செயல்படத் தொடங்கும். இதனால் ஞாபகசக்தி அதிகரிக்கும். இதனாலேயே இறைவழிபாடு கட்டாயமானதொன்றாக கருதப்படுகின்றது.

திருமணமான இந்து பெண்கள் மெட்டி அணிவது அழகிற்கு மட்டுமல்ல பெருவிரலுக்கு அடுத்த விரலில்தான் மெட்டி அணிவார்கள். இந்த விரலிலிருந்து செல்லும் நரம்பு கர்ப்பப்பையை வலுவடைந்து மாதவிடாய் ரத்தஓட்டத்தையும் சீராக்கும்.

ஒவ்வொரு பெண்ணும் நெற்றியில் குங்குமம் இடுவது வழக்கம். நெற்றியில் தான் ஆத்மஞானசக்கரம் இருப்பதாக கூறப்படுகின்றது. நெற்றியில் பொட்டு இடும்போது இந்தச் சக்கரம் தானாக செயல்பட தொடங்கிவிடும். இது உடலிலுள்ளஆற்றல் திறன் இழக்கவிடாமல் செய்யும் புத்தி ஒழுங்கு முறைப்படுத்தலை மேம்படுத்தும்.

திருமணத்தில் மருதாணி இடுவது வழக்கம். மருதாணி சக்திவாய்ந்த மருத்துவ மூலிகையாகும். திருமணங்கள் அழுத்தத்தை உருவாக்குவதால் மருதாணி தடவிக்கொண்டால் நரம்புகள் குளிரசெய்யும் அதன் காரணமாக மருதாணி இடுகின்றோம்.

தோடு அணிவது மூலையின் செயல் திறன் அதிகரிக்கும் கண்பார்வைத் திறன் கூடும். நெற்றிசுட்டி அணியும்போது தலைவலி, சைனஸ் பிரச்சினை சரி செய்யப்படுகின்றது. மோதிரம், காப்பு, கைக்கடிகாரம், கைசெயின் என்பன அணிவதால் பாலுறுப்புக்களை தூண்டும் செயல்பாட்டை செய்கின்றது. செயின், நெக்லஸ் அணியும்போது உடலுக்கும், தலைக்கும் இடையே உள்ள சக்திஓட்டம் சீராகும்.

இடுப்பில் இறுக்கமான அணிகலன் அணியும்போது அல்லது கயிறு அணியும்போது உடலில் இரத்தவோட்டம் சீராகி பதற்றம், படபடப்பு, பயம் குறைகின்றது. மார்பக புற்றுநோய் வருவது தவிர்க்கப்படுவதாக ஆய்விலே உறுதிப்படுத்தப்படுகின்றது.

மணிக்கட்டில் இருந்து முழங்கைக்கு மேல் வளர நெருக்கமாக வளையல்கள் அணிவதால், மார்புப்பகுதியின் இரத்தஓட்டம் சீராக வைத்திருக்க உதவுவதுடன் மார்பக புற்றுநோய் தவிர்க்கப்படுகின்றது. வளையல்கள், அந்தபகுதியின் புள்ளிகளை அழுத்துவதன் மூலம் வெள்ளைஅணு உற்பத்தி உடலில் அதிகரிக்கின்றது. முக்கியமான ஓமோன்கள் சீராக செயல்படுகின்றது. இதன்மூலம் தாயிற்கும் சேயிற்கும் நோய் எதிர்ப்பாற்றல் கூடும்.

மூக்குத்தி அணிவதால் மூக்கில் உள்ள சில புள்ளிகளுக்கும், குடல், சிறுகுடல், சம்பந்தமான நோய்கள் குணமாகும். சளி, ஒற்றைதலைவலி, மூக்குகோளாறு, பார்வைகோளாறு சரிசெய்யப்படுகின்றது.

கொலுசு அணிவதனால் கல்லீரல், மண்ணீரல், பித்தப்பை, சிறுநீரகம், சிறுநீரகப்பை, வயிறு போன்ற மிக முக்கிய உறுப்புக்களின் செயல் திறனை தூண்டும் தடிப்பான கொலுசு அணிவது கர்ப்ப இறக்க பிரச்சினையை தீர்க்கும். மூக்கு, காது குத்துவது, துளையிடுவது உடலில் உள்ள வாயுவை வெளிநேற்றும்.

கோயில் வெளிபிரகாரத்தை 51, 101 தடைவை வெறும் பாதத்தில் சுற்றிவர உடல் அக்குபஞ்சமுறை ஆரோக்கியம் பெறும். ஏனெனில் உடல் உறுப்பின் அனைத்து நரம்பும் பாதங்களில் சேர்கிறது ஆரோக்கிமானதாகும். இப்போது நாம் பேசும் பகுத்தறிவு அவர்கள் கால் தூசுக்கு ஈடாகாது. நம் முன்னோர்களின் பழக்கவழக்கத்தை நம்மால் நடைமுறைபடுத்த முடியாவிடினும் கேலி செய்யாதிருந்தால் போதும்.

உலகில் பாவம் என்பதாக ஒன்று உண்டென்றால் அதுதான் ஒருவனின் பயமும் பலவீனமும்.

சுவாமி விவேகானந்தர்.

அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகின்றது. அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கின்றது. அதிகம் செயல்படுபவனையே கைகூப்பித் தொழுகிறது.

# கலை – அறிமுகம்

திருமதி. M.சக்தியகலா B.FA

ஆசிரியர்

## கலை

இன்று உலகம் இயந்திரமாகிக் கொண்டிருக்கின்றது. அதன் வேகத்திற்கேற்ப மனிதன் இயந்திரமாகிக் கொண்டிருக்கின்றான். மனிதர்களாகிய எமக்கு கிடைக்கும் ஓய்வு நேரமோ குறைவானதாகவே காணப்படுகின்றது. இவ்சொற்ப நேரத்திலே அவன் இன்ப சுவைகளை நுகர்வதனூடாக தனது பொழுதை கழிக்கின்றனர். இவ்வகையில் இன்று கலையியலாளர்களிடையே கலை பற்றிய தேடல் அதிகரித்துள்ளது.

கலை என்னும் தமிழ் சொல்லானது வட மொழியில் உள்ள ''**கலா**'' என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது ஆகும். ''**கலா**'' என்பதன் பொருள் ''**தினமும் வளர்வது**'' என்பதாகும். எனவே வடமொழியின் அடிப்படையில் கலை என்பதற்குரிய விளக்கமானது. தினமும் வளர்வது கலையாகும் என அமைகின்றது. ''**நுண்கலை**'' (Fine Arts) எனும் போது அதில் சகல விதமான கலைகளும் உள்ளடங்குகின்றன. அதாவது சிற்பம், ஓவியம், கட்டடம், புகைப்படம், நடனம், சங்கீதம் என்பனவாகும்.

''**லலிதா விஸ்தர்**'' என்ற நூலானது கலைகள் 72 எனக் கூறுகின்றது. (இது பௌத்த நூலாகும். அதாவது சிங்களவரின் கலை பற்றி கூறப்படும் நூலாகும்.) தமிழ் கலை வரலாற்றில் கலைகளை 64 ஆகப் பிரித்துள்ளனர். இதனை மேலும் விரிவாக கூறுவதாயின் ''**ஆயக் கலைகள் அறுபத்து நான்கினையும்**'' என்ற சரஸ்வதி அந்தாதியில் காணப்படும் அடியை குறிப்பிடலாம்.

## கலையும் மொழியும்

இவ் கலை எனும் தமிழ் சொல்லிற்குரிய ஆங்கில பதம் ''**ART**'' என்பதாகும். இவ் ''**ART**'' எனும் சொல்லானது இலத்தீன் சொல்லான ''**ARS**'' என்பதன் பொருள், மனித திறன் அல்லது மனித ஆற்றல் என்பதாகும். எனவே, ஆங்கில மொழியியல் அடிப்படையில் கலை என்பதற்குரிய விளக்கமானது ''**மனித ஆற்றலால் உருவாக்கப்படுவதே கலை என அமைகின்றது**''.

திறன் அடிப்படையில் மனிதனால் உருவாக்கப்படுபவை (Human Skills) மனிதனின் திறன் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் கலை காணப்படுகின்றது. உதாரணமாக ஓவியம் (Painting), சிற்பம் (Sculpture) போன்ற கலைப் படைப்புக்களைக் கூறலாம்.

இயற்கையால் உருவாக்கப்படுபவை கலை அல்ல. இக் கூற்றிற்கு விடை தேடுவோமாயின் உதாரணமாக கடற்கரை அழகானது அதில் காணப்படும் அலை காற்றினால் மெருகூட்டப்பட்டு அசைவதைப் போல இசை எழுப்புவது அப்படியே

கலைஞன் எனப்படுபவனால் அவனுடைய ஆற்றலால் உருவாக்கப்படுகின்றது. அதாவது மனிதனால் படைக்கப்பட்டவையே கலை இயற்கையால் படைக்கப்பட்டவை அல்ல. **ART** என்பது உற்பத்தி சம்பந்தமாக காணப்படுகின்றது. **ART** என்பது ஆக்குதல், புதிதாக ஒன்றினை புனைதல் எனப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணம் சிந்தனையைக் கொண்டது. சிந்தனை அடிப்படையில் கலைகள் உருவாக்கப்படுகின்றன.

இவ் கலை பற்றிய வரைவிலக்கணங்கள் 18ம் நூற்றாண்டு வரை அழகியல் என்ற பதமானது கலை மெய்யியலாளர்களின் உரையாடலில் இடம்பெற்றிருக்கவில்லை. 1750ல் மெய்யியலாளரான பவும் கார்தேன் (Bavmgarten) என்பவரே கலை பற்றி மெய்யியலைச் சுட்டுவதற்கும் Aesthetics என்ற சொல்லைப் பயன்படுத்தினார். Aesthetics என்பது கிரேக்கச் சொல் புலக்காட்சியைச் சுட்டும்.

இக் கலை பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள் சில பின்வருமாறு :

- Beards (பியேட்ல்லி) - புலக்காட்சிப் பொருளே கலையென கூறுகின்றார்.
- நெல்சன் குட்மன் (Nelson Good Man) - இன்றைய கலையியலாளர்கள் பெரிதும் ஏற்றுக்கொள்வது நெல்சன் குட்மனுடைய வரைவிலக்கணமே ஆகும்.

"**கலை என்றால் என்னவென வரைவிலக்கணம் கூறமுடியாது. ஆனால் ஒரு பொருள் எப்போது கலையாகின்றது என கூறமுடியும்.**" அவ்வகையில்,

1. குறித்த பொருள் மனிதனால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.
2. திரும்பத் திரும்ப உருவாக்க முடியாததாக இருக்க வேண்டும்.
3. அழகியல் பண்புடையதாக இருக்க வேண்டும் என்கின்றார்.

மொரிஸ் விட்ஸ் (Morris Weits) கலை எனும் பதத்தால் சுட்டியழைக்கப்படும் பொருட்கள் அனைத்தும் வெளிப்படையான "**சாயலொற்றுமையே**" கொண்டுள்ளன எனக் கூறும் இவர். எவ்வகையானவற்றைக் கலையென சுட்டியழைக்கலாம் என எவராலும் நிச்சயமாகக் கூறமுடியாது என்கின்றார். கலையை வரைவிலக்கணப்படுத்த முடியாது இருப்பதே ஆக்கத்திறனுடைய கலையின் சிறப்பியல்பென "**மொரிஸ் விட்ஸ்**" அபிப்ராயப்படுகின்றார்.

மண்டல் பேம் (Mandel Baum) கலை பற்றி கூறும் கருத்தாவது கலைஞர்களால் படைப்பொன்றிலிருந்து உணரப்படுவது எதுவோ அதுவே கலையின் கூறுகளென கூறுகின்றார். இக் கலைகளினை அவற்றின் அடிப்படையில் நாம் பிரதானமாக இரண்டாக வகைப்படுத்தலாம்.

அவை பின்வருமாறு அமைகின்றது :

1. பயன் கலைகள் அல்லது பயன்பாட்டுக் கலைகள்

2. நுண் கலைகள்

பயன்பாட்டுக் கலைகள் அவை தொழில்களைக் குறிப்பிடுகின்றது. அதாவது பயன்பாட்டை நோக்கமாகக் கொண்டது. (உதாரணம் - மேசை, கதிரை) நுண்கலைகள் என்னும் போது அழகியலோடு இணைந்த கலைகளைக் குறிக்கின்றது. அதாவது அழகு அனுபவத்தை தருவதும் அழகானதும் ஆகும். (உதாரணம் - நடனம், சித்திரம்)

## நுண்கலைகள்

நுண்கலைகள் என்னும் போது அழகியலுடன் இணைந்த கலைகள் எனவம் அவை அழகியல் கலைகள் அல்லது உருகியல் கலைகள் எனவும் அழைக்கப்படுகின்றன.
இக் கவின் கலைகளின் எண்ணிக்கை தொடர்பாக பல்வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. ‘‘லலித விஸ்தர’’ எனும் பௌத்த மத நூல் 72 கலைகள் எனக் கூறுகின்றது. எனினும் 64 கலைகளே உள்ளன எனும் கருத்து நிலைப்பாடு காணப்படுகின்றது. இதனை சரஸ்வதி அந்தாதி எனும் நூலில் வரும் பாடலடியும் ‘‘ஆயக் கலைகள் அறுபத்து நான்கினையும்’’ எனும் பாடலும் அப்பரது தேவாரப் பாடல் ‘‘எட்டெட்டிரு கலையும் கண்டாய்’’ எனும் பாடல் அடியினையும் ஆராய்கின்றபோது கலைகள் 64 என உணரமுடியும்.

நுண்கலைகள் பாகுபடுத்தும் பொழுது அழகியலுடன் இணைந்தவை இசைக் கலை, நடனக் கலை, ஓவியக் கலை, கட்டடக் கலை, சிற்பக் கலை, இலக்கியக் கலை, இலக்கியக் கலை, ஒளிப்படக் கலை, நிழற்படக் கலை எனக் கொள்ள முடியும். அழகு அனுபவத்தைக் கொண்டதும் அழகானதும் நுண்கலைகள் (Fine Arts) ஆகும். பயன் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது பயன் கலைகள் (Use full Arts) ஆகும். எதனை மீளுருவாக்கம் செய்ய முடியுமோ அது கைவினையாகின்றது. இந்த வகையில் எதனை மீளுருவாக்கம் செய்ய முடியாதோ அது கலையாகின்றது.

*அரிய சாதனைகள் அனைத்தும் வலிமையினால் செய்யப்பட்டவையல்ல:*
*விடாமுயற்சியினால் தான்*

# உயிர்ப்பான பாடசாலை...

**திரு.எஸ்.யோகேஸ்வரன்**
அதிபர் சேவை தரம் 3

ஒரு நாள் காலை 07.30 மணியிருக்கும். ஒரு பாடசாலையினுள் நுழைவாயில் நுழைகின்றேன். மாணவர்களோ ஆசிரியர்களோ இல்லை. காரியாலயத்திற்கு செல்கின்றேன். அங்கே வரிசையாக ஆசிரியர்கள் நிற்கின்றனர். என்ன விடயமென்று உள்ளே நுழைகின்றேன். ஆசிரியர்கள் அனைவரும் வரிசையாக பாடத்திட்டம், பாடக்குறிப்பு என்பவற்றை அதிபர், உப அதிபர்களிடன் சரிபார்ப்பதற்காக வரிசையாக நிற்கின்றனர். சிலர் முதல்நாள் இடர்பட்ட மாணவர்களுக்கான விசேட செற்பாடுகளை உப அதிபர்களுடன் கலந்துரையாடுகின்றனர். காலை 07.45 மணியிருக்கும். மாணவர்கள் அமைதியாக மைதானத்தில் அமைதியாக உடற்பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆண் பிள்ளைகள் தலை முடியை நேர்த்தியாகவும் பெண் பிள்ளைகள் நேர்த்தியான உடையில் காணப்படுகின்றனர். காலைக் கூட்டத்தில் மாணவர்கள், ஆசிரியர் ஒருவர் நற்சிந்தனையை வழங்க அதிபர் தரமான கல்வி மாணவர்களுக்கு தினமும் கிடைக்கும் என்ற தொனிப் பொருளில தனது உரையினை நிகழ்த்துகின்றார். காலைக் கூட்டம் நிறைவில் மாணவர்கள் வகுப்பறைகளுக்கு செல்கின்றனர். அவர்களின் பின்னே வகுப்பாசிரியர்களும் சென்று நேரத்திற்கு பாடத்திற்கு சென்று தனது கற்றல் கற்பித்தல் பணிகளில் ஈடுபடுகின்றனர். இரண்டாம் பாடம் தொடங்குவதற்கு முன்பாக சிற்றூழியர் ஒருவர் வருகை தராத ஆசிரியர்களுக்கான பதில் கடமைக்கான வேலைத்திட்டங்களை குறிப்பிட்ட சில ஆசிரியர்களுக்கு வழங்குகின்றார்.

அதே வேளை சுற்றுச் சூழலை சற்று அவதானிக்கின்றேன். ஆஹா!எத்தனை அழகு. எங்கும் பூத்துக் குழுங்கும் பூஞ்செடிகள், பசுமையான சுற்றுச் சூழல், சுத்தமான புற் தரைகள் எல்லாம் என்னை கண்ணைக் கவர்ந்தன. எங்குமே சிறிதளவான கடதாசிகளோ காணக்கூடியதாக இல்லை. மாணவர்கள் சிறிதளவான கடதாசி துண்டுகளை வீட்டிற்கே எடுத்துச் செல்கின்றனர்..

வகுப்பறைகளை அவதானித்தபோது மாணவர்களின் புத்தகப்பைகளை வைப்பதற்கான தனித்தனி இராக்கைகள் காணப்படுகின்றன. மாணவர்கள் உணவருந்தும் போது தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மலசல கூட வசதிகள் போதுமான அளவு காணப்படுவதுடன் மிகவும் சுத்தமாக காணப்படுகின்றன. அங்கே சுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது. முறையான நேரசூசியுடன் பெற்றோர்களின் உதவியுடன் இச்செயற்பாடு மிக நேர்த்தியாக செயற்படுத்தப்படுகின்றது.

பிரதி அதிபர்களும் உப அதிபர்களும் கோவைகளை கையில் வைத்துக் கொண்டு மேற்பார்வைக்கு செல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. மேற்பார்வையின் பின் ஆசிரியர்களுக்கு ஆலோசனையும் வழங்கப்படுகின்றது. ஆசிரியர்களினதுமட் மாணவர்களினதும் அனைத்து கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் செயற்திட்ட வடிவில் பேணப்படுவதுடன் அவை பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு முன்னேற்றகரமான செயற்பாடுகளை நோக்கி செல்லப்படுகின்றது.

இசை, நாடகம், நடனம், சித்திரம், கணணி, சதுரங்க விளையாட்டு, மேசைப்பந்து, பூப்பந்து போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளுக்காக தனியறைகள் காணப்படுகின்றன. இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காக முக்கியத்துவம் வழங்கப்படுவதும் சிறப்பம்சமாகும். பாடசாலையுடன் தொடர்புடைய அனைத்து அமைப்புக்களுடனும் சிறப்பான தொடர்பும் காணப்படுகின்றது.

காரியாலய கோவைகளையும் காட்சிபடுத்தப்பட்ட அட்டவணைகளையும் பார்க்கும் போது பாடசாலையின் முன்னேற்றகரமான செயற்பாடுகளை ஒரே பார்வையில் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. துடிப்பான ஆசிரிய குழாம் நேர்மனப்பாங்குடைய அதிபர் ஆகியோரின் செயற்பாடுகளால் இன்னும் சொற்ப காலத்தில் பாடசாலை அப்பிரதேசத்தில் ஒரு பேசப்படக் கூடிய பாடசாலையாக காணப்படும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

முன்நோக்கி செல்லும்போது கனிவாயிரு. ஒருவேளை பின்நோக்கி வரநேரிட்டால் யாராவது உதவுவார்கள்.

எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உள்ளன. ஒன்று காலம், இன்னொன்று மௌனம்

நேற்றைய பொழுதும் நிஜமில்லை: நாளைய பொழுதும் நிச்சயமில்லை: இன்றைக்கு மட்டுமே நம் கையில்.

# கற்பித்தலை குவியப்படுத்திய அதிபரின் சில முகாமைத்துவ அடிப்படைகள்

**செல்லையா துரையப்பா**
**ஆசிரியர்**

அறிவியல் எண்மப் புரட்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இவ்வுலகின் கல்விமுறைமையின் சமூகப் பரிமாணங்களையும் இலக்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் பாடசாலை என்ற நிறுவனத்தினூடாக நிறைவேற்றப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இந்த கணம் வரை வலுப்பெற்றுக் கொண்டே வருகின்றது. கால மாற்றத்திற்கும், அறிவியல் தொடர்பாடல் தொழிநுட்ப மாற்றத்திற்கும் ஏற்ப கல்வி இலக்குகளிலும் மாற்றம் ஏற்படுகின்றது. இவற்றை முன்னெடுக்கும் வகையிலும், நிறைவுசெய்யும் நோக்கில் பாடசாலைச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படல் வேண்டும். இப்பணியில் பாடசாலைச் சமூகத்தை ஒன்றிணைத்து செயற்படுவதில் அதிபர் முதன்மையானவராக காணப்படுகின்றார்.

இன்றைய பாடசாலை கல்விச் சூழலானது மிக மோசமான நெருக்கடிகளையும், பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்கி வருகின்றது. இவ்வாறான நிலைமைகளுக்கு முகங்கொடுத்து இவற்றை வெற்றிக் கொள்ள அதிபரானவர் முனைப்புடன் செயலாற்ற வேண்டியவராக இருக்கவேண்டும். பாடசாலைகளை முகாமைத்துவம் செய்தல் என்பது வெறும் சிந்தனை, கோட்பாடு, அறிக்கைகள் மற்றும் எண்ணக்கருவாக மட்டுமின்றி பொருத்தமான செயல்வடிவம், நடைமுறை சாத்தியப்பாடு உடையதாகவும், பொறிமுறை ரீதியில் செயற்படக் கூடியதாகவும் இருக்கவேண்டியது அவசியமாகின்றது.

இன்றைய பாடசாலைகள் அதிக கவனயீர்ப்பிற்குரிய இடமாகவும் நிறுவனமாகவும் காணப்படுகின்றது. ஊடகங்கள், சமூக நிறுவங்கள், அரசியல் கட்சிகள், உதவி வழங்குபவர்கள் என பலராலும் விமர்சிக்கும் நிலை மேலோங்கி காணப்படுகின்றது. கல்விக்காக அதிக நிதியை ஒதுக்கீடு செய்யும் அரசாங்கமும், பெற்றோர்களும் கூட பாடசாலையின் செயற்பாடுகள் அதன் வெளியீடுகள் வினைத்திறன் வாய்ந்ததாக இல்லை எனவும், சமூகத்தின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை எனவும் குற்றம் சாட்டுகின்றனர்.

ஒரு பாடசாலையினுடைய வெற்றி அப்பாடசாலையின் அதிபரின் தலைமைத்துவத்தின் செயலாற்றுகையை அடிப்படையாக கொண்டே மதிப்பிடப்படுகின்றது. இன்று பாடசாலையும் அதனோடு இணைந்து கற்றல், கற்பித்தல் செயன்முறைகளும் பலராலும் குறைக்கூறுவனவாக மாறியுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளுக்கு பாடசாலையின் வினைத்திறனின்மையும் முறையான முகாமைத்துவமின்மையும் காரணமாகின்றது.

எந்தவொரு நிறுவனத்தினதும் வெற்றிக்கும், விளைதிறன் மேம்பாட்டுக்கும் தலைமைத்துவம் மிக முக்கியமானது. நிறுவனங்கள் மட்டுமல்லாது ஒரு குடும்பத்தின் மேம்பாட்டுக்கும், ஒரு தேசத்தினுடைய வெற்றிக்கும் கூட தலைமைத்துவமே பங்களிப்பு வழங்குகின்றது. இது பாடசாலைக்கு மட்டும் விதிவிலக்கல்ல. இங்கும் பாடசாலையின் வெற்றி, விளைதிறன் என்பவற்றுக்கு தலைமைத்துவம் அவசியமாகின்றது. *(தனராஜ்.தை. 2008)*

நாட்டின் தேசிய இலக்குகள், பாடசாலை இலக்குகள் என்பவற்றை தெளிவாக விளக்கி அவ்இலக்குகளை அடையும் விதத்தில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்குசெய்தல் தலைமைத்துவத்தின் பிரதான பணியாகும். இவற்றை அதிபர்கள் நன்கு விளங்கி செயற்படுவார்களாயின் கலைத்திட்ட அமுலாக்கங்களை சிறப்பாக அவர்களால் செய்யமுடியும்

பாடசாலையினை வினைத்திறன் வாய்ந்ததாகவும் விளைதிறன் உடையதாகவும் முகாமை செய்வதற்கும் அதற்கு தேவையான திட்டமிடல்களை ஒன்றிணைக்கவும், பல்வேறுப்பட்ட குழுக்களை ஒன்றிணைத்து செயலாற்றவும், ஆசிரியர்களின் செயலாற்றுகையை மேம்படுத்தவும் அதிபர்கள் பல்வேறு திறன்களை உடையவராக இருத்தல் முக்கியம். அந்த வகையில் மேற்பார்வை, கலைத்திட்ட அமுலாக்கல், ஆசிரியர் அபிவிருத்தி, முகாமைத்துவம் போன்றன முக்கியமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
ஆசிரியர்கள் இலக்கை அடைய பாடசாலைகள் வளமானதாக இருக்கவேண்டும். அதிபர் ஆசிரியர்களுடன் ஒத்துழைத்து செயற்படுவதோடு ஆசிரியர்களுக்கான புதிய கற்பித்தல் முறை தொடர்பாக ஆலோசனைகளை வழங்கி ஆசிரியர்கள் தங்களது இலக்கை அடைய உதவுபவராக செயற்படுவார். அத்துடன் ஆசிரியர்கள், மாணவர்களின் எதிர்பார்ப்பை அறிந்து அதற்கு ஏற்றாற்போல் தனிப்பட்ட விதத்திலும், குழுவாகவும் தனது ஆலோசனைகளை வழங்கி பாடசாலையின் இலக்கினை அடையவேண்டும்.

**பாடசாலை அதிபரின் மேற்பார்வை தலைமைத்துவம்**

நாம் ஒரு வேலையை ஏன் செய்கின்றோம்? எவற்றை செய்கின்றோம்? அதனை செய்வதன் மூலமாக எவ்வாறு இலக்கினை அடையலாம்? எனும் வினாக்களுக்கு ஒரு அதிபர் சரியான விடை காண்பாரெனின் அவர் மேற்பார்வை தொடர்பான ஆற்றல் கொண்டவரென கொள்ளலாம். ஒரு பாடசாலை பயன் தரும் பாடசாலையாக அமைவதற்கு அதிபரின் மேற்பார்வை தொடர்பிலான தலைமைத்துவம் அவசியமானதொன்றாகும். கல்வி மேற்பார்வை என்பது கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் தொடர்பான எல்லாக்காரணிகளையும் விருத்தி செய்வதற்குரிய நிபுணத்துவ சேவையாகும் (Ovivia– *1976*), Sir marks Jr stoops, E Stoops, Jr 1978 என்பவர்கள் தரமான மேற்பார்வை, கற்றல் கற்பித்தல்

செயன்முறையின் வினைத்திறனை உயர்த்தும். இதனூடாக மாணவர்களின் அடைவுமட்டம் உயரும் எனக் குறிப்பிடுகின்றனர். மேலும் சிலர் ஆசிரியர்களிடம் குறைகாணல், கல்வித் திணைக்களங்களுக்கு மேற்பார்வை தொடர்பான விபரங்களை சமர்ப்பித்தல், ஆசிரியர்களை கண்காணித்தல், வகுப்பறைகளுக்கு செல்கின்றனரா என்று நோட்டமிடுதல் போன்ற செயற்பாடுகளையே மேற்பார்வையென கருதி செயற்படுகின்றனர்.

இவ்வாறான நிலையிலிருந்து மாறி அதிபர்கள் ஆசிரியர்களுடன் இணைந்து ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் செயன்முறையின் வினைத்திறன் தொடர்பாக ஆசிரியர்களுக்கு வி'ேட கூட்டங்களை ஏற்பாடு செய்து அதில் கலந்துரையாடுதல், ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகளை தனது திட்டமிடப்பட்ட அட்டவணையின் பிரகாரம் திட்டமிடலுடன் சென்று அவதானித்தல், ஒவ்வொரு மதிப்பீட்டு செயன்முறையின் பின்பும் தேவையான பின்னூட்டல்களை ஆசிரியர்களுக்கு வழங்குதல், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் விளைதிறனை மேம்படுத்துவதற்காக தேவையான வளங்களை (பௌதீகவளம், நிதிவளம், மனிதவளம்) ஒழுங்குபடுத்துதல், பாடக்குறிப்பு, தவணைக்குறிப்பு என்பவற்றை மேற்பார்வை செய்து, அதற்கு ஏற்ப கற்பிக்க ஊக்குவித்தல், நவீனகற்றல் கற்பித்தல் முறைகள், உபாயங்கள் மற்றும் நவீன கற்றல் கற்பித்தல் சாதனங்கள் என்பவற்றின் அவசியம் உணர்ந்து அதனை ஆசிரியர்களுக்கு உணர்த்துதல் போன்ற விடயங்களினை ஆசிரியர்களுக்கிடையிலும் முகாமைத்துவத்திற்கிடையிலும் முரண்பாடுகள் தோன்றாதவாறு மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியம்.

**பாடவிதான அபிவிருத்தி தலைமைத்துவம்**

பாடசாலையின் இலக்கினையும், நோக்கினையும் அடைவதற்கும் அதன் மூலம் ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் அதிபர் பாடவிதானம் தொடர்பில் சிறந்த தலைமைத்துவத்தை கொண்டிருத்தல் வேண்டும். பாடவிதான அபிவிருத்தி, கலைத்திட்ட அபிவிருத்தி என்பவற்றை அதிபர்கள் நன்கு விளங்கி அது தொடர்பான புதிய சிந்தனைகள், தோற்றப்பாடுகள் என்பவற்றை உடனுக்குடன் ஆசிரியர்களுக்கு பெற்றுக் கொடுக்கவேண்டும். நற்பழக்கங்களை மாணவர்களுக்கு வழங்குவதற்கு ஆசிரியர்க்கு வழிகாட்டுதல், பிள்ளைகளிடம் மறைந்திருக்கும் திறனைக் கண்டறிந்து அவற்றை வளர்க்க ஆசிரியர்களுடன் வழிவகைகளை ஏற்படுத்தல், கலைத்திட்ட செயற்பாடுகள் மூலம் பாடசாலையை உயிர்த்துடிப்புள்ளதாகத் தொடர்ந்து வைத்திருப்பதில் கருத்தைச் செலுத்தல், நாட்டின் சமூக பொருளாதாரத் தேவைகளில் விளக்கம் பெற்றிருத்தல், பாடவிதானத்தை அடைவதனை உறுதிப்படுத்துதல், அதற்கான செயற்பாடுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல், மதிப்பிட்டு இறுதி இலக்கை நோக்கி

முன்னெடுத்தல் என்பன போன்ற விடயங்களை தொடர்ச்சியாக செயற்படுத்துபவராக அதிபர் இருத்தல் அவசியம்.

**ஆசிரியர் அபிவிருத்தி தலைமைத்துவம்**

ஆசிரியர்களின் செயற்பாடுகளுக்கு தன்னுடைய ஒத்துழைப்பை வழங்கவேண்டும். மேலும் திட்டமிடல், ஆர்வத்தை ஏற்படுத்தல், மேற்பார்வை, மதிப்பிடல், உதவிசெய்தல், கலந்துரையாடல்கள், பாடசாலை மட்டத்தில் ஆசிரியர் அபிவிருத்தியை மேம்படுத்தல் என்பன தொடர்பிலான அதிபரின் செயற்பாடுகள் இதில் அடங்குகின்றன. பாடசாலைகளில் பணியாற்றுகின்ற பல்வேறுப்பட்ட ஆளணியருக்களுக்கிடையில் ஆசிரியர்கள் மிக முக்கியமானவர்கள். அவர்கள் பாடசாலைகளில் மிகவும் முக்கியமானவர்கள். அவர்கள் பாடசாலையில் மகிழ்ச்சிகரமாக பணியாற்றக்கூடிய சூழலை அதிபர் உருவாக்கவேண்டும். ஆசிரியர்கள் சாதாரண மனிதர்கள். அவர்களும் சுய தேவைகளும் இலட்சியங்களும் கொண்டவர்கள். சில பலவீனங்களும் பிரச்சினைகளும் அவர்களுக்கும் உண்டு. அவர்கள் தம் சுய முன்னேற்றத்திற்கும், குடும்ப முன்னேற்றத்திற்கும், தாம் சார்ந்த சமூக முன்னேற்றத்திற்கும் உரியவலுவையும் வசதிகளையுடம் தேடவே பாடசாலைக்கு வருகின்றனர். எனவே அதிபர் அவர்களின் தனியாள் வேறுபாடுகளை அனுசரித்து அவர்களுடன் இணைந்து பணியாற்ற முன்வருதல் அவசியமானதாகும்.

**பாடசாலை முகாமைத்துவம் தொடர்பிலான தலைமைத்துவம்**

பாடசாலையின் தரம் என்பது அதிபரின் அறிவுறுத்தலின் தரத்திலேயே தங்கியுள்ளது. பாடசாலையின் ஒட்டு மொத்த விளைவுகளையும் வினைத்திறனான வகையில் விளைதிறன் சார்ந்த பெறுபேறுகளை அடைவதற்கு சகல திட்டமிடல்கள், செயற்றிட்டங்கள் உள்ளடங்கியதாக பணிக்கூற்று மற்றும் தொலைநோக்கு என்பவற்றை நோக்கி பயணித்தலை குறிக்கும்

அதிபரை குவியப்படுத்திய பாடசாலை முகாமைத்துவமானது பொருத்தமான பாடஒதுக்கீடுகள், நேரஅட்டவணை மாற்றங்கள், இணைக்கலைத்திட்டப் பொறுப்புக்கள், பாடசாலை வேலைகள் என்பவற்றை பகிர்ந்தளிக்கும்போது தனிப்பட்ட முறையில் ஆசிரியர்களிடம் காணப்படுகின்ற அறிவு, ஆற்றல், தகைமைகள் தேர்ச்சிகள், நாட்டங்கள் என்பவற்றை பகுப்பாய்வு செய்து பொருத்தமான முறையில் அவர்களுக்கான பகிர்வுகளை மேற்கொள்ள வேண்டும். அதிபரானவர் பக்கச்சார்பான முடிவுகளை மேற்கொள்வதை தவிர்ப்பதால் நேர்மையான முகாமையாளராக செயற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் காணப்படும். அதிபர் சுய ஒழுக்கம், கட்டுப்பாடு, வகைக்கூறல், நம்பிக்கை போன்றவற்றை உடையவராக காணப்படுவாராயின் பாடசாலைச் சமூகத்தினரிடம் முரண்பாடுகளை தவிர்த்து சுமூகமான முறையில் பாடசாலையை வழிநடத்திச் செல்லமுடியும்.

# இலட்சியப்பாதை

**A.ஸ்ரீமதி,**
ஆசிரியர்.

வாழ்வது தான் வாழ்க்கை பிறந்தோம் … இறந்தோம்…. போனோம் என்பது வாழ்க்கையாகாது வெற்றிகரமான வாழ்க்கைக்கு நம்பிக்கையே அச்சாணியாக இருக்கிறது முதலில் எமது வெற்றிக்கான வழியை உள்மனதில் விதைத்திட வேண்டும். உங்கள் இலக்கினை உள்மனதிற்கு சொல்லிவிட்டீர்கள். இனி என்ன? இலட்சியத்திற்கான எந்தவொரு விஷயத்தையும் தவறவிடாமல் ஒவ்வொரு அடியாகக் கடக்க வேண்டியது தான் . ஒவ்வொரு பயணத்தின்போதும் இடையிடையே முட்டுக்கட்டைகள் முளைப்பது உறுதி. நம் இலட்சியப்பயணத்தில் எல்லோருக்கும் முதலில் தடையாக வந்து நிற்பது பயம். ஒன்று இறந்தகாலம் பற்றியது, மற்றொன்று எதிர்காலம் பற்றியது. இவைகளின் கதவுகளை சாத்திவிட்டு நிகழ்காலத்தின் அறைக்குள் வாருங்கள் நிகழ்காலத்தில் நாம் செய்கின்ற செயல்களை தொடர்ந்து செய்ய முடிகிறதா என்றால் அது சந்தேகம் தான். செய்யவிடாது தடுப்பது ஆர்வக்குறைவு (Boring)

அடுத்தது இலக்கை நோக்கிய உற்சாக நடையை தொடங்கும் போது இடையில் தோன்றுகின்ற தடைக்கல்லில் தாழ்வுமனப்பான்மை முக்கியமானதொன்று. தன்னால் இது முடியாது என்று நினைத்து ஒதுங்குகிற மனப்பான்மை மற்றது தன்னைவிட அதிக பலம் வாய்ந்தவர்களுடன் தன்னை ஒப்பிட்டு விலகி ஒதுங்குகின்ற மனப்பான்மை நம்மிடம் இருப்பதை ஏற்றுக்கொண்டு நேர்மையான வழியில் எப்படி முன்னேறலாம் வெற்றியை அடையலாம் என்பதை யோசிக்க வேண்டும். அதுவே உண்மையான மகிழ்ச்சி தரும். மாற்ற முடிந்தவைகளை மாற்ற முயற்சிக்கலாம். மாற்ற முடியாதவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். பிறரோடு உங்களை ஒப்பிட்டு உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்கின்றீர்கள். தினமும் நிறைய அனுபவங்கள்…… அந்த அனுபவங்கள் நமக்கு ஒரு படிப்பினையாக அமைய வேண்டும். நம் அனுபவங்கள் நமக்கு படிப்பினையாக பயனளிக்க வேண்டுமென்றால் சந்திக்கின்ற ஒவ்வொரு நிகழ்வுகளிலும் நம் “ கவனம்” இருக்க வேண்டும்.

வாழ்வில் சிறந்தவொரு வெற்றியாளனாக வர வேண்டுமெனில் சமயோகிதபுத்தி மிகமிக அவசியமாகும் ( Presence of mind) எங்களை சுற்றி நடக்கின்ற ஒவ்வொரு நிகழ்வுகளிலும் முழுகவனமுடன் இருக்க வேண்டும். எனக்கு எல்லாம் தெரியும் என்ற மிதப்பில் இல்லாது இருப்பது நன்று. ஒரு நிகழ்ச்சியின் வளைவை பல கோணங்களில் சிந்தித்து செயற்பட வேண்டும். எந்தவொரு செயல்களிலும் காலம் தாழ்த்தக் கூடாது.

உனக்கு ஒரு புதுமையான சிந்தனை தோன்றினால் அதை உடனடியாக செய்து முடி, ஏனென்றால் உனக்கு தோன்றிய அதே சிந்தனை வேறொருவருக்கும் தோன்றலாம். “ வெற்றி” என்பது முந்திக்கொள்பவர்களுக்கு மட்டுமே.

இலட்சியம் மிக உயர்ந்ததாக இருக்கும்போது தோல்விகளின் எண்ணிக்கையும் அதிகமாகவே இருக்கும். அந்த தோல்விகளின் போது துவண்டு போகாமலிருப்பது மிகமிக அவசியம். வெற்றியின் உயரத்திற்கு போக தோல்வி ஒரு ஏணி எனவே தோல்வி நிரந்தரமற்றது. நம் வாழ்வில் Positive thinking,Na thinking இரண்டையும் விட சிறந்தது Authentic thinking . வெற்றி பெற விரும்புவன் சூழ்நிலையை தனக்கு சாதகமாக்கிக் கொள்வது மிகமிக அவசியம்.

உலகம் அதன்படி இயங்கிக்கொண்டிருக்கின்றது. அதன் இயக்கம் அல்லது நிகழ்வுகள் நல்லதாகத் தெரிவதும், கெட்டதாகத் தெரிவதும் நாம் அவற்றைப் பார்க்கும் உண்மைப் பார்வையில் தான் இருக்கின்றது. நிஜத்தை ஏற்றுக்கொள்வோம். உண்மைப் பார்வை பார்ப்போம்.

மனிதனிடத்தே திட்டமிட்ட நிர்வாகம் இருக்க வேண்டும். முதலாவது நம்மை நாமே நிர்வகித்துக்கொள்வது ( Self Management) அடுத்தது மற்றவர்களை நிர்வாகம் செய்வது ( Management over Others). வாழ்க்கை ஓட்டத்தில் நாம் நம்மை நாம் நிர்வகித்துக் கொள்வது எப்படி அவசியமோ அதுபோலவே அடுத்தவரை நிர்வாகம் செய்வதும் ஆகும். கடின உழைப்பால் மட்டுமே ஒருவன் முன்னுக்கு வந்துவிட முடியாது. சரியான திட்டமிடலுடன் கூடிய உழைப்பே ஒருவனை முன்னேற்றி விடும்.

வெற்றியை நோக்கி செயற்படும் போது அது பற்றியான பூரண அறிவு இருக்க வேண்டும். அடுத்தது பேராசை கொள்வது வேறு. பேராசை கொள்ளும் போது ஆழ்ந்து சிந்திப்பது அறுப்பட்டுப் போகின்றது. துரித முடிவுகள் எடுக்கின்றோம். அது நமக்கு எதிர்மறையான விளைவுகளைத் தந்து விடுகின்றது. புதிய வெற்றிகள் கிடைப்பதற்கு பதிலாக ஏற்கனவே இருந்த வெற்றிகளையும் அள்ளிக்கொண்டு போய் விடுகிறது. பேராசை ஆசைப்படுங்கள். அது இலட்சியமாகட்டும் அதனை அறிவுப்பூர்வமாக பொறுமையாக அடைய முயற்சியுங்கள்.

வாழ்வில் வெற்றிக்கொள்ள ஆசைப்படும் அத்தனை பேரும் முக்கியமாகக் கற்றுக்கொள்ள வேண்டியது பிறரை உளமாறப் பாராட்டுவது, பாராட்டு என்பது வேறு முகஸ்துதி என்பது வேறு. பாராட்டுவது உள்ளத்திலிருந்து வருவது முகஸ்துதி உதட்டிலிருந்து வருவது முகஸ்துதி தன் காரியத்தை சாதித்துக் கொள்ள மட்டுமே. பாராட்டு என்பது பாராட்டுபவர்க்கும் பாராட்டுபவர்களுக்கும் ஊக்கத்தை தரவல்லது.

சந்தோஷம் மூன்று வகைப்படும் ஒன்று “ இன்பம்” இரண்டாவது “ மகிழ்ச்சி” மூன்றாவது “ ஆனந்தம்” “ இன்பம்” என்பது நாம் உண்ணும் உணவு , பெண், வீடு, பணம், சொத்து இவை குறிப்பிட்ட அளவற்கு அதிகமானால் திகட்டும்.

“ மகிழ்ச்சி” என்பது நல்ல இலக்கியம் படிப்பது, நல்ல சங்கீதம் கேட்பது, இவைகளை குறிப்பிட்ட இடைவேளை கொடுத்து தொடர்ந்து ரசிக்கலாம். “ ஆனந்தம்” முதலில் சொன்ன இரண்டையும் விட உன்னதமானது. நாம் பிறருக்கு செய்யும் உதவிகளால் பெறுவதே ஆனந்தம். பிறருக்கு உதவும் மனம் எப்படி வரும் என்றால் பிறர் மீது அன்பு காட்ட வேண்டும். பிறர் நம்மீது காட்டும் அன்பு நமக்கு வெற்றியைக் தருகிறது. நம்மீடு அவர்கள் அன்புகாட்ட என்ன வழி என்றால் அவர்கள் மீது பதிலுக்கு நாம் அன்பு காட்டுவதே ஆகும்.

ஒரு குடும்ப அங்கத்தவர்களிடையே நிலவும் உண்மையான அன்பு அந்த குடும்பத்தை வெற்றியடையச் செய்கிறது. ஒரு ஊரிலுள்ள மக்களிடையே நிலவும் உண்மையான அன்பு அந்த நாட்டையே வெற்றியடையச் செய்கின்றது. இந்த உலகின் மொத்த மக்களிடையே நிலவும் உண்மையான அன்பு முழு பிரபஞ்சத்தையே வெற்றியடையச் செய்கின்றது. ஆக பிரபஞ்சம் முழுவதையும் வென்று தருவது அன்பு மட்டுமே .அன்பு மட்டுமே வாழ்வை வெற்றியடைய செய்யாது. அன்புடன் கூடிய புரிதலும் அவசியம், மற்றவர்களின் உணர்வுகளை புரிந்து, மதித்து செயற்பட்டோமேயானால் வெற்றி நிச்சயம்.

## E - தகவல் தொழிநுட்பம்

திருமதி R.மாலினி B.Com, B.Ed

கணனிக்குள்ளே ஓர் கருவறை கண்டோம் - அதில்
மென்(வன்) பொருள் ஏற்றி ICT வென்றோம்...
LINK ஆல் நாமும் உலகமயம் ஆனோம் - புத்தி
ஜீவிகளாய் இனிமேல் புதுயுகம் படைப்போம்...

SELPHONE கொண்டு சேவை பெருக்கும் - எம்
SELFI கூட்டம் தொடர்ந்து சேரும்....
SOCIETY எங்கும் தொலைபேசி - மோகம்
தொடர்ந்து பெருகும் SAMSUNG GALAXY பாரும்...

NATIONAL பக்கம் போயி பாரு - நம்
GOOGLE search அ மீறி ஏது...
WEBSITE ஒன்னு CREATE பண்ணி - உன்
ORAL WROTE I ONLINE பண்ணு

WHATSAPP, VIBER, FACEBOOK - பக்கம்
வசதி உண்டு வாழ்க்கை காணு....
QUICKER, TWITTER.COM - பக்கம்
QUICK ஆ விற்போர் E.BAY SALES அ பாரு

YOUTUBE DOWNLORD நீயும் செய்து - உன்னை
புதிதாய் கொஞசம் UPDATE பண்ணு
E-BUSINESS வழியே உள்ளே சென்று - உன்
EARNING SECRET அதனை எமக்கும் சொல்லு

FAX ம் TELEX ம் MAIL ம் - சேர்த்து
அவசர தகவல் அதனை TELEMAIL அனுப்பு...
தொலை தூரம் பிரிந்து வாழும் - உறவை
SKYPE ஐ கொண்டு நொடியில் உன் பக்கம் சேரு

ATM அட்டை எங்கும் எடுத்து - ANY
TIME MONEY ஆய் PURSE ஐ நிரப்பு...
BANK ன் பாதை நீயும் மறந்து - வீட்டில்
இருந்தே HOME BANKING நடத்து...

22ம் சீர்திருத்தம் சொல்லும் - இலங்கை
தகவல் அறியும் உரிமை பற்றி...
E. தக்ஸலா வழங்கும் - இலங்கை...
கல்வி தொழிநுட்ப சேவை பிரிவும் வெற்றி...

**எமது பாடசாலையின் வருடாந்த சஞ்சிகை வெளியிடுவதற்கு உதவிய உங்களுக்கு எங்களின் இதயபூர்வ நன்றிகள்**

| | | |
|---|---|---|
| *01.* | திரு.A. ஜெயராஜன் | வூட்டன் A கொட்டகலை |
| *02.* | திரு. மகாலிங்கம் | கொழும்பு |
| *03.* | திரு. K.கலைச்செல்வன் | கொழும்பு |
| *04.* | திரு. C. மகாலிங்கம் | கொட்டகலை |
| *05.* | Dr. பிரதீபா Ultra medicals | Colombo |
| *06.* | திரு. இராஜமணி பிரசாந்த் | C.W.C கொட்டகலை |
| *07.* | பழைய மாணவர் ஒன்றியம் | கொட்டகலை த.ம.வி |
| *08.* | ஸ்ரீ ரிஷிகேஷ் மண்டபம் | கொட்டகலை |
| *09.* | அபான்ஸ் | கொட்டகலை |
| *010.* | Enrichh | Colombo |
| *011.* | Devi Jewelers | Colombo |
| *012.* | S.P.Logistics | Colombo |
| *013.* | Colonial Engineering | Colombo |
| *014.* | Aruna | Nuwara Eliya |
| *015.* | Rich Lanka | Colombo |
| *016.* | Vivaha Saree Mandir | Colombo |
| *017.* | Chennai Silks | Colombo |
| *018.* | SGS Exports | Colombo |
| *019.* | Yogas | Colombo |
| *020.* | New Saravanas | Kotagala |
| *021.* | New Balendra Communication | Kotagala |
| *022.* | New Higher Education Centre pvt Ltd | Kotagala |
| *023.* | T.K.S. Trade Link | Colombo |
| *024.* | Rich Fachion | Colombo |
| *025.* | Balas Tes | Colombo |
| *026.* | Mr.K.Thiruchelvam | Colombo |
| *027.* | Thaba ceramic | Talawakelle |
| *028.* | லதீஸன் டிரான்ஸ்போர்ட் | கொட்டகலை |
| *029.* | STG Goat Farm | Kotagala |
| *030.* | ABC Communication | Kotagala |

# புதிய கண்டுபிடிப்புகள்

**L.பூமாண்ய பிரதீபா , தரம் 10D**

எமது உலகமானது பல்வேறு பட்ட தொழிநுட்ப்பங்களின் அடிப்படையில் இயங்கிவருகின்றது.

அந்த வகையில் சிறுவர் முதல் பெரியோர்கள் வரை அனைவராலும் விரும்பி பயன்படுத்தப்படுகின்ற தொழிநுட்ப சாதனங்கள் நாளுக்கு நாள் வளர்ச்சியை காண்கின்றன.

Light hand Phone






ஒளியினது உதவியுடன் இயங்கும் கையடக்க தொலைபேசியாகும். Light Phone இன் கொள்வனவின் போது மின்சூழ் போன்ற அமைப்புடனான பேனை ஒன்றை வாங்கினால் போதும்......

அதனை எம் கைகளுக்கு முன்னால் வைத்து ஆளியிடுதல் மாத்திரமே எமது வேலை. தொலைபேசி ஒன்றில் உள்ள அனைத்து அமைப்புகளும் எமது கையில் தோன்றும்.

வெறும் கையை செவிக்கு புறத்தே வைத்து தொலைபேசியால் உரையாடுவது போல பாவனை செய்யும் எம்மவர்களுக்காகவே கண்டுபிடிக்கப்பட்டது போலும்.....

இருப்பினும் ஒரு பேனையின் விலை கோடிக்கணக்காயிற்றே......

Curved Phone



இதுவரை காலமும் நாம் பார்த்த தொலைபேசிகள் எப்படியானவை? முன்னர் காலத்தில் பெரிய அளவிலான தொலைபேசிகள் பயன்படுத்தப்பட்டன. காலப்போக்கில் அவற்றை அளவில் சுருக்கியதோடு, தொடுதிரையாகவும் மாற்றினர். தற்காலத்தில் மீண்டும் பெரிதாக்கி வருகின்றனர்.

இவ்வாறு அளவுகளை கூட்டி குறைத்து கொண்டு வந்த வேளையில் அவற்றை வளைத்தும் உள்ளனர் நம் மேதைகள் …. இதுவேcurved phone என உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

Apple app watch






நாம் எதற்கு கடிகாரத்தை பயன்படுத்துகின்றோம்? நேரம் பார்க்க தானே! ஆனால் புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு எல்லாமே கைக்கடிகாரம் தான் போலும் தொலைபேசியினுள் நேரத்தை கொண்டு வந்த காலம் மாறி கடிகாரத்தில் தொலைபேசியினை புகுத்தியுள்ளனர்.


இக்கடிகாரத்தில் MP3player,phone book, Internet, Camara, Weather report, Calender, Alarm, Recorder, Messages என பல வசதிகள் கைக்கடிகாரத்தில் எவ்வாறு அழைப்பை மேற்கொள்வது எப்படி Selfie எடுப்பது? கற்பனையே கலங்கடிக்கின்றதே?

## Nano Shirt Nano Frock



“ கந்தையானாலும் கசக்கிக் கட்டு “ என்ற பழமொழியை இன்றைய இளைய தலைமுறையினர் மாற்றி அமைத்துள்ளனர். இந்த ஆடையை சலவை செய்ய வேண்டிய அவசியம் இல்லை செய்யவும் முடியாது. எந்த விதமான துணிக்கையும் படியாத வகையில் Nano Technology மூலமான தயாரிப்பாகும். எம்மவர்களுக்கு அவசியமான ஒன்று…..

## Nano robots



கூடிக்கொண்டே வரும் உயிரிழைப்பை குறைக்க அறிய வழி இந்த Nano Robots.

இவற்றை உடலினுள் செலுத்தினால் போதும் அவை அனைத்தும் பகுதிக்கும் சென்று நோய் நிலைமையை சீராக்கும்.

பெருகி வரும் கண்டுபிடிப்புக்கள் சரியானவையோ தவறானவையோ!

இருந்தாலும் அவை உலகம் முழுவதும் பேசப்படுகின்றன….

கண்டுபிடிப்பாளர்கள் சாதனையாளர்களாக மிளிர்கின்றனர். அன்றாட வாழ்வில் மேற்கொள்ளும் பல வேலைகளை இலகுவாக்க செய்யப்படும் புத்தாக்கங்கள் மிக பெரிய அளவில் பிரபலமாகின்றன.

இவற்றை மேற்கொள்வோர் யார்? எம்மிலிருந்து உருவான மாணவர்களே?

ஆகவே மாணவர்களாகிய நாம் எம்மால் முடியும் என்ற தொனியின் கீழ் செயலாற்றினால் சாதிக்கலாம்……

எமது சாதனையை பற்றி பேசுபவர்கள் “ மொழியினில் வழியில்லை” என திகைக்கும் அளவில் காணப்படவேணடும்.

சாதனையை நோக்கி புறப்படுவோம்…..

## “மாணவன் மனது வைத்தால்”



ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கை வண்ணத்தில்

M.சுஜேசன், தரம் *01* A




S.தர்ஷிகா, தரம் *01* B



S.லக்ஷன்யா, *தரம் 01* C



P.ஹரிதீஷன், *தரம் 01* D



P.டிருக்ஷா, தரம் 02 A




S.யனுஷன், தரம் 02 B




P.கனிஸ்கா, தரம் *02* C





J.நேயாகிரேஞ்சல், தரம் *02* D






Photography by-S.Jeevithra



Photography by-S.Jeevithra




## இப்பாடசாலை சகல துறைகளிலும் மேழெழுச்சிக் கொள்ள உளமாற வாழத்துகிறேன்





மத்திய மாகாணத்தில் பெருந்தோட்ட மாணவர்களின் கனவு பாடசாலையாக தன்னை அடையாளப்படுத்தி கொண்டு இருக்கின்ற கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயமானது கல்வி, கலாசாரம், விளையாட்டு, இசைநாடகம் என பல துறைகளிலும் தனக்கென்ன இடத்தை பதித்து வளர்ந்து வந்து கொண்டு இருக்கின்றது. இவ்வேளையில் இப்பாடசாலையின் 2016ம் ஆண்டுக்கான வருடாந்த பரிசளிப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற பாடசாலை சஞ்சிகைக்கு வாழ்த்து செய்தி வழங்குவதை நான் பெருமையாகவும் கௌரவமாகவும் கருதுகின்றேன்.

எனது குடும்பத்தினரால் நடாத்தப்படும் இந்த இப்பாடசாலை இன்று இலங்கையில் பெயர்கூறி பேசப்படுகின்ற பாடசாலையாக திகழ்வதை எண்ணி நான் பெருமிதம் கொள்கின்றேன். இப்பரிசளிப்பு விழாவிற்கு சஞ்சிகை வெளியிடும் ஆசிரியர், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

A.ஜெயராஜன்
உரிமையாளர்
ஊட்டன் A தோட்டம்
கொட்டகலை
0773069449


இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்
இ.தொ.கா இளைஞர் அணி

WITH BEST COMPLIMENTS FROM :

# NEW HIGHER EDUCATION CENTRE (PVT) LTD

## G.C.E A/L RESULTS - 2015

### Name of Students for Eligeble to University

| No | Name | Results | Z-Score | Rank | University |
|---|---|---|---|---|---|
| 01 | W.Joel Mark | AAA | 1.7377 | 09 | Colombo |
| 02 | S.Vithusha | AAA | 1.3713 | 21 | Jayawardanapura |
| 03 | V.Karthiga | AAB | 1.5824 | 27 | Wayamba |
| 04 | S.Reshanie | AAB | 1.5262 | 34 | Wayamba |
| 05 | R.Satheeshkumar | AAA | 1.5245 | 35 | Wayamba |
| 06 | F.Florensaly | AAB | 1.4899 | 48 | Wayamba |
| 07 | J.Vinusha | AAB | 1.4641 | 54 | Eastern |
| 08 | T.Sujeevan | AAB | 1.4618 | 56 | Jaffa |
| 09 | K.Chithravani | AAB | 1.4557 | 59 | Eastern |
| 10 | R.Sabilashaa | AAB | 1.3910 | 76 | Eastern |
| 11 | S.Nidhusa | AAB | 1.3307 | 92 | Jaffna |
| 12 | R.Kirushanthanie | AAB | 1.3290 | 94 | Eastern |
| 13 | M.Sathees Kanna | AAB | 1.2949 | 102 | Jaffna |
| 14 | N.Gowshiyan | AAB | 1.2482 | 124 | Jaffna |
| 15 | N.Mothiram | AAB | 1.2160 | 141 | Vavuniya |

The HEC Institution Proudly Appreciate
the students, who enterd
the faculty of Management

Management whole heartedly
wishes then fabulous future



Director - HEC
**P.SATHIVEL BBA (spe) PGDE, PGDSNE, DSM,M.Ed (Reading)**

N/KOTAGALA T.M.V

WITH BEST COMPLIMENTS FROM :

SPL

# S.P.LOGISTICS

**CUSTOM HOUSE AGENT CLEARING & FORWARDING**


106, 5/3, Leader Complex,
1st Cross Street,
Colombo - 11.
Sri Lanka.


Tele : +9411 2430408|2322408
Mobile : +940777 595 020
E-mail : jegan@splogistics.lk
Web : www.splogistics.lk



# COLONIAL ENGINEERING (PVT) LTD.

SPECIALIST IN ALL KIND OF PIPES, VALVES, FITTINGS & HARDWARE ITEMS





138, Sri Sumanatissa Mawatha,
Colombo - 12, Sri Lanka

Tel : 2334197, 2472639-40-41, 4610545, 4610302
Hotline : 4724811, 4724810, 4724808,2387583
E-mail : coloneng@sltnet.lk | Web : www.colonialeng.com




# NEW BALENDRA

COMMUNICATION

No: 051 7911285 Fax: 051 2244069

# வாழ்த்துகிறேன்

வருடாந்த பரிசளிப்பு நிகழ்வை ஒட்டி வெளிவரும்
கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் சஞ்சிகைக்கு
வாழ்த்து கூறுவதில் உளம் பூரிப்படைகின்றேன்.
மாணவர்களின் ஆக்கங்களை தாங்கி வெளிவரும் இம்மலர்
சிறப்பாக அமைய எனது நல்லாசிகள் உரித்தாகட்டும்.



கலாபூஷணம் C. மகாலிங்கம்
(மொழிவரதன்)

முன்னாள் அதிபர் கொட்டகலை த.ம.வி
முன்னால் கோட்டக்கல்வி பணிப்பாளர்.
எழுத்தாளர் கவிஞர் ஆய்வாளர்
தலைவர் கொட்டகலை தமிழ் சங்கம்
தலைவர் கொட்டகலை சமூக பட்டதாரிகள் அமையம்

34/20, மொழி அகம், கணபதிபுரம், கொட்டகலை.


ABC Communication

*Dealers in Communication & Stationery*

No. 143, Main Street, Kotagala

Tel : 051 2244101 Fax : 051 2244781

email : abccom143@gmail.com

**PHILIPS**

**Bulb Agency**




# THEEVRA PATHMA AGENCIES

No - 09, Kanapathypuram, Kotagala.



077 1634500 | 0779284948

Dharmesh Navaratnam

என் கலைக்கோயில் உயர்ச்சி பெற
உளமார வாழ்த்துகிறேன்.





# STG AUTO SERVIC

96, Main Street, Kotagala.



# STG FARM HOUSE

Kotagala

# STG GOAT FARM

Drayton D.T. Kotagala

***(Breading) Reg by Department of Animal Production and Health - CP/23126907***

உங்களுக்கு தேவையான சாணன், ஜமுனாபாரி மற்றும் கலப்பின ஆடுகள், கோழிகள் என்பவற்றை வளர்ப்பிற்காகவும் இறைச்சிக்காகவும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

Tel: 051 2244437 | 0728353055 | 0772629445

Naveen Ceramic

N ANOGRESS
Porcellanato

ITALY ROCK NATURAL
TEXTURE & COLOUR




**Naveen Ceramic (Pvt) Ltd**

Head Office 297/12, George R.De Silva Mawatha, Colombo - 13.
Tel 11 2325406 / 2345197 /2345198 Fax 11 2335637
www.naveen.lk info@naveen.lk
www.facebook.com/naveenceramic

Showrooms
104, Nawala Road, Nugegoda. Tel 11 5535530 Fax 11 2818171
250, Nawala Road, Nawala. Tel 11 5851539/5855995
117, Massenger Street, Colombo - 12. Tel 11 5360536

Also At
Kiribathgoda | Thihariya | Vavuniya | Jaffna

THABU CERAMIC



Dealers in - Lanka Tile, Rosal Tile
Import Bathroom Sanitary Ware,
Bathroom Accessories, PVC Fittings
ASand, Mattel, Brick & Cement Blocks.

No - 100/8, Nuwara Eliya Road, Talawakelle.
Tel : 076 6534243 | 072 5905003 | 077 9702602


WITH BEST COMPLIMENTS FROM :

SRI RISHIGESH

WEDDING & RECEPTION HALL







No - 59, Hatton Talawakelle Road, Kotagala.
Tel : 051 2244243 | Mob : 077 1316181, 077 9929792

# Rich Lanka



Wholesale & Retail Dealers in
Indian Sarees Specialist in
Wedding Sarees.

Aslam Trade Centre, Ground Floor,
188 - 1/D, Keyzer Street, Colombo - 11. Tel : 2323630
Mobile : 0777 848039 E-mail : richlanka.84@gmail.com

# (Y)

# YOGAA'S



Wholesale & Retail Dealers in Textiles

No - 261/11, Main Street, Colombo - 11. Sri Lanka.
Tel : 011 2445878, Fax : 011 2452874

# Rich FASHION

GENTS WEAR, LADIES WEAR & BABY WEAR

SPECIALIZED IN WEDDING SAREES & SHALWARS

WHOLESALE & RETAIL



No - 184/A, Main Street, Pundaluoya

Tel : 051 2233386 | Mobi : 0777 531725

E-mail : richfashion@gmail.com

# BALA'S TEX




WHOLESALE DEALESRS IN SAREES

SPECIALIST IN WEDDING SAREES

No - 172 - 3/19, Commercial Plaza, Keyzer Street, Colombo - 11.

Tel/Fax - 011 2394880 | Mobile : 0777 762677


Latheeseen
Transport
15, 17 New Rosita Bazaar, Kotagal
Contact - 077 6622972

# SGS EXPORTS
# UNILINK IMPEX

Exporters & Importers, Dealers in Textiles & Hardware



Tel: 25249415 | Mob: 9381019397 / 9841098155

Old No - 16 New No - 33 Armenian Street, IInd Floor, Mannady,
Chennai - 600 001. E-mail : sgsexpo@yahoo.com

# T.K.S. TRADE LINK

Importer's & Exporters of Textiles and Hardware

68, Sri Kathiresan Street,
Colombo - 13,
Sri Lanka.



Tel: 011 2322079
mob: 077 6799593 / 0773051432


E-mail: tksimpo@gmail.com

WITH BEST COMPLIMENTS FROM :

Consulting Hours : 5.30 pm - 9.30 pm
(Open Everyday)

No - 276, Madampitiya Road, Colombo - 14
011 3131535

# ULTRA MEDI CARE



WITH BEST COMPLIMENTS FROM :

# franfay

## The Shalwar Boutique

...just what you wanted.



No:30, Hampden Lane,
Wellawatha,
Colombo - 06.
Sri Lanka.
+9411 2367778

No:55, Hill Street,
Srimath DB Jayathilake Mw,
Dehiwal , Mount Lavania,
Sri Lanka.
+9411 5629562

FULL OPTION

# VAN FOR HIRE



No - 27/2, Sea Beach Road, Colombo - 11.
E-mail : manoruhan1804@gmail.com

0711 514 131 | 07 70 70 70 73

# MANI COOL SPOT



No - 271/2, Sea Street, Colombo - 11

*Tel : 071 1514131*



ENRICHH

Photography & Designing

No - 12 main Street kotagala


071 576 4342 | 072 573 8366



Weddings | Birthdays | Puberty Ceremonies Photography & Album making

Graphic Designs | Digital Prints & More...

Follow us 072 486 4452 Gmail enrichdesignss@gmail.com




44, Main Street
Kotagala
051 5677007

01, Circular Road,
Hatton
051 2224940

Abans

WITH BEST COMPLIMENTS FROM :

# Aruna

SINCE 1987

WESTERN UNION® MONEY TRANSFER

PERMIT NO : ECD/MC157



## JEWELLERY

Dealers in 22K Gold and Silver Jewellery

*Forexc (PVT) Ltd*

*Authorised Money Changer*

22, New Bazaar Street, Nuwara Eliya, Sri Lanka.
Phone: +94525672369 | Tel/Fax: +94 5222222165 | E-mail : arunajewellery_22@yahoo.com

# NEW SARAVANAS

Dealers in Groceries & Indian Items



No - 135, Main Street, Kotagala | Tel : 051 2244034

N/KOTAGALA T.M.V

WITH BEST COMPLIMENTS FROM :

# Vivaha

## Saree Mandir



Specialist in Wedding, Homecoming
& All kind of Party Wear Sarees

No - 147, 2nd Cross Street,
Colombo - 11.
Mob : 077 8502154 | 077 3577852
Tel : 011 2448217




# New Chennai Silk

WHOLESALE & RETAIL DEALERS IN TEXTILES
SPECIALIST IN WEDDING & COTTON SAREES

No - 123/12, 2nd Cross Street, Colombo - 11.
Mob : 077 1551166 | Tel : 011 2438722




# MANOJ IMPEX

## Textiles and Clothings

*Importers & Exporters*





No -173,
Main Street,
Kotagala,
Mob : 077 6799593

Office:
No - 68,
Sri Kathiresan Street,
Colombo - 13, Sri Lanka.
Tel : 011 2322079

E-mail : KPmS173@gmail.com